பழுவூர்

அரசர்கள்-கோயில்கள்-சமுதாயம்



இரா.கலைக்கோவன்

பழுவூர்

அரசர் - கோயில்கள் - சமுதாயம்

மருத்துவர் முனைவர் **இரா. கலைக்கோவன்**
எம்.பி.பி.எஸ்., டி.ஓ., எம்.ஏ., பிஎச்.டி.

இலக்கியப் பீடம் பதிப்பகம்
'இலக்கியா' - புது எண் : 3 (ப எண்: 2)
ஜெயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.
(✆ : 3712485)

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	பழுவூர் அரசர்-கோயில்கள்-சமுதாயம்
வகை	:	வரலாற்று ஆராய்ச்சி நூல்
ஆசிரியர்	:	டாக்டர் இரா. கலைக் கோவன்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு - 2002
உரிமை	:	ஆசிரியருக்கு
நூல் அளவு	:	1X 8 டெம்மி
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	:	299+ 9 = 308

விலை : ரூ. 75-00

லேசர் முறை அச்சு	:	லதா கிராபிக்ஸ் சென்னை - 600 087. ✆ : 24864135
மேலட்டை	:	சிவகுமார்
அச்சிட்டவர்	:	இளங்கோ அச்சகம் சென்னை - 600 014.
தயாரிப்பு	:	கலைமாமணி விக்கிரமன்
வெளியிட்டோர்	:	இலக்கியப்பீடம் பதிப்பகம் சென்னை - 600 033.

முன்னுரை

'பழுவூர்ப் புதையல்கள்' என்ற என் முதல் நூல் பழுவேட்டரையர்களின் வரலாற்றில் மிகுந்த ஈடுபாடு காட்டி விளைந்தது. அவர்தம் கலைப்படைப்புகள் அந்நூலில் அறிமுக அளவிலேயே அமைந்தன. தொடர்ந்த பயணங்களும், பட்டறிவும அப்படைப்புகளின் நுட்பங்களை விரிவுபடுத்தி எழுதும் ஆர்வத்தைத் தோற்றுவித்தன. அதன் விளைவே இந்த இரண்டாம் நூல்.

பழுவூர்ப் பயணங்களின்போது பேராசிரியர்கள் முனைவர் மு. நளினியும் முனைவர் அர. அகிலாவும் என் ஆய்விற்கு உற்ற துணைகளாய் இருந்து உற்றுழி உதவினர். அவர்தம் உழைப்பும் ஆற்றலுமே இந்நூல் வடிவம் பெறக் காரணிகளாய் அமைந்தன. கல்வெட்டு வாசிப்பில் ஆழ்ந்த பயிற்சியுடைய் அவர்தம் தேடலின் விளைவாய்ப் பல புதிய கல்வெட்டுகள் பழுவூர்க் கோயில் வளாகங்களிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டன. குறிப்பாகப் பூபபலகைக் கல்வெட்டைச சுட்ட வேண்டும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்தக் கல்வெட்டு சேரர், சோழர் நட்புறவிற்குக் காலம் காத்துத் தந்திருக்கும் அரிய சான்றாகும்.

விமானங்களின் மேற்பகுதிகளையும் அங்குள்ள சிற்பங்களையும் ஆராய உயரங்களைக் கருதாது உடன்வந்த பேராசிரியர்தம் துணிவு பாராட்டற்குரியது. பேராசிரியர் நளினியின் நோக்காற்றலும் பேராசிரியர் அகிலாவின் குறிப்பெடுக்கும் வல்லமையும் ஆய்வை வெளிப்படுத்தின. கருத்துரையாடல்களில் அவர்கள் காட்டிய ஈடுபாட்டின் விளைவாய்க் கிடைத்த தரவுகளே இந்நூலில் பரக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுருங்கச் சொல்வதாயின் பேராசிரியர்கள் நளினியும், அகிலாவும் இந்நூல் விளைய நீரும் ஒளியுமாய் இருந்தனர்.

பழுவூர்க் கோயில்கள் அனைத்துமே பாதுகாப்பற்ற சூழலில் உள்ளன. அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்திலும் பகைவிடை ஈசுவரத்திலும் அவ்வப்போது பாம்புகள் படையெடுப்பதுண்டு. தென்வாயில் ஸ்ரீகோயில் தாங்குதளப்

பகுதியில் அமர்ந்து கல்வெட்டு வாசித்துக் கொண்டிருந்த பேராசிரியர் நளினி, ஓரிரு நிமிட ஓய்வுக்காக எழுந்து வந்தபோது, எங்கிருந்தோ சீறிவந்த கட்டுவிரியன் ஒன்று அவர் அமர்ந்திருந்த குமுதத்திலிருந்த இடைவெளி வழியே கட்டுமானத்திற்குள் நுழைந்து மறைந்தபோது எங்கள் உயிர் எங்கள் கையில் இல்லையென்றே சொல்லவேண்டும். பகைவிடை ஈசுவரத்திலும் இந்த அநுபவம் ஏற்பட்டது. என்றாலும், பாம்பைவிட அங்குக் 'குடி' மக்களின் தொல்லை தான் மிகுதி. எங்கள் பின்னால் நின்றபடி குடிமயக்கத்தில் ஊர்க் கதைகளைப் பிதற்றிக்கொண்டிருந்த அந்த 'வேதனைகளை' வெளியேற்ற அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்துக் காவலர் திரு. கணேசன் பேருதவியாக இருந்தார். பாம்புகளுடன் வாழ்ந்து பழகிவிட்ட காரணத்தால் அவருக்கு எதுவும் எளிதாக இருந்தது.

அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகம் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் தொடர் பராமரிப்பில் (!) இருந்து வருகிறது. ஏறுவதற்கு எந்தவிதத்திலும் தகுதியற்ற ஓர் ஏணியே அத்துறையின் தனிப்பெருஞ் சொத்தாக அக்கோயில் வளாகததில் இருந்தது. கோயில் காவலர் திரு. கணேசன் அந்த ஏணியின் உதவியினால் திறனார்ந்த 'பார் விளையாட்டுக்' காரராக மாறியிருந்த அதிசயம் நாங்கள் கள ஆய்வுக்குச் சென்றபோதெல்லாம் பார்த்த காட்சியாகும். அவருடைய ஊக்கமும், மன உறுதியும் எங்களையும் அதுபோன்ற பார் விளையாட்டுகளில் துணிவுடன் ஈடுபட வைத்தன. அந்த ஏணிக்கு மாற்று ஏணி பெறத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் சென்னை அலுவலகம் வரை நான் படையெடுத்தும் பயன் விளையவில்லை. ஆனால் என் படையெடுப்பினால் திரு. கணேசனுக்கு நெடுநாளாக வர வேண்டியிருந்த பணிஉயர்வு மாற்றம் வந்தது. நல்லவேளை யாக அதற்குள் அந்த அற்புதமான ஏணியின் உதவியுடனேயே நாங்கள் எங்கள் 'உயர் (!)' ஆய்வுகளை முடித்திருந்தோம்.

திருஆலந்துறையார் கோயிலில இளவயது பித்தர் ஒருவர் இருந்தார். எப்போது அங்கே சென்றாலும் வந்துவிடுவார். அவரது 'மழலைகள்', ஆய்விற்குப் பெரும் இடையூறாக இருந்தன. நல்லவேளையாகக் கோயில் குருக்களால் அவரைக் கட்டுப்படுத்த முடிந்தது. சிவபெருமானின் அருளால் பாம்புகள், குடியர்கள், பித்தர்கள், தொல்பொருள் ஆய்வுத்துறையின்

ஏணி (!) ஆகியவற்றையெல்லாம் மீறிப் பழுவூர் ஆய்வுகள் பெரும் பயன் தந்தன. பல புதிய கண்டுபிடிப்புகளைப் பழுவூர்க் கலைமுறையாக அடையாளம் காணவும் முடிந்தது.

ஏறத்தாழ மூன்றாண்டுகள் எண்ணற்ற இடையூறுகளுக் கிடையேயும் பெரும் பொருட்செலவிலும் தொடர்ந்த ஆய்வுப்பணி, பண்பாட்டுக் காவலர் கலைமாமணி டாக்டர் விக்கிரமன் அவர்களின் அன்பான அரவணைப்பால் நூலாக வடிவம் கொண்டுள்ளது. பழுவேட்டரையர்களின் வரலாறு பழுவூர்ப் புதையல்கள் என்ற என் நூலில் விரிவாக ஆராயப் பட்டிருப்பதால், இந்நூலில் குறிப்புக் காட்டி நிறுத்தியுள்ளேன். பழுவூர்ப் பழங்கோயில்கள் விரிவாகப் பதிவாகியுள்ளன. கல்வெட்டுகள் புதிய தரவுகளுடன் சமுதாயப் படப்பிடிப்பாக இடம்பெற்றுள்ளன.

இந்நூல் உருவாகக் காரணமாக இருந்த என் வாழ்வரசியார் மருத்துவர் க. அவ்வைக்கு என் உளமார்ந்த நன்றி. பழுவூர்ப் பயணங்களின்போது உணவளித்து எங்களை உற்சாகப் படுத்திய திருமதி பாப்பா வெங்கடாசலம், திருமதி விசாலம் அரங்கசாமி ஆகியோருக்கும், ஆய்வுகளின்போது திருமாலே துணைக்கு வந்தாற்போல் உடனிருந்து அனைத்துத் துன்பங் களிலிருந்தும் எங்களைக் காத்த காவலர் திரு கணேசனுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரியது. ஆய்வுப் பணிகளுக்குத் துணையாயிருந்த ஆலந்துறையார் கோயில் நிர்வாக அலுவலர், அறங்காவலர்கள், சிவாச்சாரியார்கள், கோயில் அலுவலர்கள் ஆகிய அனைவரும் நன்றிக்குரியவர்கள்.

பழுவேட்டரையர்களின் வரலாற்றையும அவர்தம் படைப்பாற்றலையும் அக்காலச் சமுதாயத்தையும் படம் பிடிக்கும் இந்நூல், வரலாற்றையும் மொழியையும் உளமார நேசிக்கும் ஒரு மாணவனின் எளிய முயற்சி. குறைகள் இருக்கும்; எழுதுங்கள். திருத்திக் கொள்வது என் கடமை. நிறைகள் தென்படின் பழுவேட்டரையர்களைப் பாராட்டி வாழ்த்துங்கள். அவை அவர்தம் கொடை.

அன்புடன்,

இரா. கலைக்கோவன்

பதிப்புரை

வரலாறு எழுதுவதற்குப் பல சான்றுகள் தேவை. செப்பேடுகள், கோயில் கல்வெட்டுகள், இலக்கியச் சான்றுகள் பெரிதும் பயன்படும். சோழர்கள் வரலாற்றில் பழுவேட்டரையர்கள் பங்கு மகத்தானது. தமிழ்நாட்டு வரலாற்றைப் பற்றி நாம் அதிகக் கவலைப்படுவதில்லை.

பாடபுத்தகங்களை எடுத்துக் கொண்டால் பல்லவர்கள் பற்றிய பகுதியில் மகேந்திர வர்மன், நரசிம்ம வர்மன், 'மகாபலிபுரம்' என்று குறிப்பிடுவதோடு நின்றுவிடுவார்கள். நந்திவர்மன், உதயசந்திரன் பற்றிச் சிறப்புப் பகுதிகளில் ஒருவேளை காணலாம்.

சோழர்களைப் பற்றி இராஜராஜன், இராஜேந்திரன். பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் இவ்வளவு தான்.

சோழர்களின் ஏற்றத் தாழ்வுகள், அவர்களுடைய படைத் தளபதிகள், பிரதமர்கள் பற்றி எல்லாம் எங்கே சொல்கிறார்கள்?

அமரர் கல்கி சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் எழுதிய பிறகுதான் நம் முன்னோர்கள் சிறப்பை ஓரளவுக்கு அறிய முற்பட்டோம்.

பழுவேட்டரையர்கள், கொடும்பாளூர் வேளிர், மலையமான், இராட்டிரகூடர்கள், வாதாபி என்று தேடிப் பிடித்துப் படிக்கத் தொடங்கினோம்.

சோழர்கள் வரலாற்றில் பழுவேட்டரையர்கள் பங்கு மகத்தானது என்பதை உணர்வோம். பழுவூர் எங்குள்ளது? பழுவூரைப்பற்றியும், பழுவேட்டரையரைப் பற்றியும் எங்காவது நூல்கள் கிடைக்குமா என்று தேடலானோம். எங்கே இருக்கிறது? நானே படிக்க விரும்பினேன்.

டாக்டர் கலைக்கோவன் கல்வெட்டுகளைப் படித்துப் புதுப் புதுச் செய்திகளைத் தெரிவிப்பதில் தம் முழுநேரத்தைக் கழிப்பவர். இராஜமாணிக்கனார் பண்பாட்டு மையம் மூலம் அவர்கள் பல வரலாற்றுப் 'புதையல்களை' வெளிப்படுத்தி யுள்ளார்.

அவரை நான் சந்திக்கும்போது - பழங்காலக் கல்வெட்டு களைப் பற்றிய எழுத்துப் பிரதிக்குப் பரிசு தரவேண்டும் என்று 'இலக்கியப் பீடம்' - காலாண்டு இதழ் மூலம் முடிவு செய்தபோது - 'பழுவேட்டரை'யரைப் பற்றிய எழுத்துப் பிரதி கிடைத்தது.

பழுவூர் - அரசர்களைப் பற்றி, அவர் கட்டிய கோயில்கள் பற்றி - சமுதாயம் பற்றி விரிவாக டாக்டர் கலைக்கோவன் அந்த எழுத்துப் பிரதியில் குறிப்பிட்டிருந்தார்.

வள்ளல் கலசலிங்கம் கல்வித் துறையில் ஆற்றி வரும் பணிகள் மகத்தானவை. அவர் வழங்கும் பரிசு தக்க நூலுக்குக் கிடைப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

நூல் வடிவில் வெளியிட்டு, வரலாறு படிப்பவர்களுக்கு 'இலக்கியப்பீடம்' உதவியாக இருப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

பழுவூர் ஆராய்ச்சியின்போது பேராசிரியர்கள் முனைவர் மு. நளினியும், முனைவர் அர. அகிலாவும் உற்ற துணையாக இருந்தார்கள் என்ற தகவல் பெருமையாக இருக்கிறது.

தமிழக வரலாற்றிற்கு வெளிச்சம் காட்டும் இந்த நூல், தமிழ் மக்கள் ஆதரவைப் பெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

'இலக்கியப்பீடம்' விருதும், பரிசும் கொடுத்தால், மற்ற பரிசுகள் பெறுவதற்குத் தடை இருக்கக்கூடாது என்பது என் எண்ணம்.

தமிழக வரலாற்று ஆய்வு நூல்களுக்கு லட்சம் ரூபாய் பரிசு தரப்படவேண்டும். அதுதான் என் அவா.

கலைமாமணி விக்கிரமன்

இலக்கியப்பீடம் பதிப்பாளர்

கல்வி வள்ளல்

திரு. கலசலிங்கம்

வழங்கிய

ரூ.10,000 பரிசும்

'இலக்கியப்பீடம்'

விருதும்

இந்நூலுக்கு

வழங்கப்பட்டன.

பழுவூர்-அரசர்கள், கோயில்கள், சமுதாயம்

1. பழுவூர் அரசர்கள்

தமிழகத்தில் கி.பி. 880இல் நிகழ்ந்ததாகக் கருதப்படும்[1] திருப்புறம்பியம் போர் சோழப் பேராட்சிக்கு அடிகோலியது. விசயாலயர், முதலாம் ஆதித்தர், முதலாம் பராந்தகர் போன்ற சோழ வேந்தர்கள் ஆட்சி எல்லைகளை விரிக்கும் பணியில் முனைந்து ஈடுபட்டனர். அப்பணியில் அவர்கட்கு உறுதுணையாய் இருந்து உதவிய அரச மரபினர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பழுவேட்டரையர்களாவர்.

திருச்சிராப்பள்ளி செயங்கொண்டம் சாலையில் திருச்சிராப்பள்ளியிலிருந்து ஐம்பத்து நான்கு கிலோமீட்டர் தொலைவில் பழுவூர் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் மன்னுபெரும் பழுவூர்,[2] அவனிகந்தர்ப்பபுரம்,[3] சிறுபழுவூர்[4] என்றழைக்கப்படும் பழுவூர் மண்டலத்தின் பகுதிகள், இந்நாளில் முறையே மேலப்பழுவூர், கீழையூர், கீழப்பழுவூர் என்று அறியப்படுகின்றன. இப்பழுவூர் மண்டலத்தை ஆண்டவர்களே பழுவேட்டரையர்கள். முதலாம் ஆதித்த சோழரின் (கி.பி. 871-907)[5] காலத்தில் முதல்முறையாக வரலாற்றுப் பார்வைக்கு வரும் இவர்கள் முதலாம் இராசேந்திரரின் (கி.பி. 1012-1044)[6] ஆட்சிக்கால முதற்பகுதியில் வரலாற்றுத் தொடரற்றுப் போய்விடுகிறார்கள்.

ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகளுக்கும் சற்றுக் குறைவான கால அளவில் பழுவூர்ப் பகுதியை ஆண்ட

---

1. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, ப.30.
2. S.I.I. Vol. XIX, Ins. No. 308.
3. S.I.I. Vol. XIII, Ins. No. 208.
4. மேலது., Ins. No. 209.
5. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, ப.25.
6. மேலது., ப. 145.

இப்பழுவேட்டரையர்கள் கேரளத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஜி.வி. சீனிவாசராவ், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் ஆகியோர் கருதுகின்றனர்.[7]

பழுவேட்டரையர்களின் கால வரலாற்றை அறிய அன்பில் மற்றும் உதயேந்திரம் செப்பேடுகளும் பழுவூர்க் கல்வெட்டுகளும் பெருமளவு உதவுகின்றன. இரண்டாம் பராந்தகரான சுந்தர சோழரால் (கி.பி. 957-970)[8] வழங்கப்பெற்ற அன்பில் செப்பேடு, மன்னரின் மரபுவழி கூறுமிடத்து முதலாம் பராந்தகரின் திருமணத்தைப் பற்றிய இரண்டு முக்கியமான தகவல்களைத் தருகிறது.[9] கேரள அரசரான பழுவேட்டரையரின் மகளை முதலாம் பராந்தகர் மணந்தார். அவர்கள் இருவருக்கும் பிறந்தவரே அரிஞ்சய சோழர். இரண்டாம் பிருதிவீபதியால் முதலாம் பராந்தகரின் பதினைந்தாம் ஆட்சியாண்டில் வழங்கப்பெற்ற உதயேந்திரம் செப்பேடும் கேரள அரசரின் மகளைப் பராந்தகர் மணந்துகொண்ட செய்தியைத் தருகிறது.[10] இவ்விரண்டு செப்பேடுகளும் குறிக்கும் கேரள இளவரசியின் பெயர் அருமொழிநங்கை என்பதைத் திருச்சென்னம்பூண்டி திருச்சடைமுடி மகாதேவர் கோயிலில் காணப்படும் முதலாம் பராந்தகரின் பதினேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறிகிறோம்.[11]

1 ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி(பன்)மற்கு யா

2 ண்டு 17 ஆவது இடையாற்று நாட்டு தி[ருச்சடை]முடி[ம]

---

7. G.V. Srinivasa Rao, S.I.I. Vol. XIII, Introduction, pp.V-VI; K.A. Nilakanta Sastri, The Colas, p.134.

8. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, ப.70.

9. E.I. Vol. XV, p.68.

10. S.I.I. Vol. II, Ins. No. 76, P.379.

11. S.I.I. Vol. VII, Ins. No. 520.

3 [ஹ]ாதேவர்[க்*]கு சந்திராதி[த்*]தரளவும் ஒரு முழுத் திருவிளக்கினு[க்கு] பழுவேட்ட

4 ரையர் மகளார் நம்பிராட்டியார் அருமொ[ழிந]ங்கையார் பரி[வார]ம் குணவன்

5 சூரதொங்கி வைத்த பொன் [ப்]தின் அறு கழஞ்சு பொன்னாலும்

6 இரவும் பகலும் [நொன்]தா விளக்கு [எ]ரிவதாக...[12]

பழுவேட்டரையர்களுக்கும் சோழர்களுக்கும் இடையில் நடந்த முதல் திருமண உறவாக இதைக் கொள்ளலாம். வளரும் அரசுக்கு, சுற்றிச் சூழ்ந்துள்ள சிற்றரசுகளின் அரவணைப்பு மிகத் தேவை என்பதைக் கருத்தில் கொண்டே, சோழர்கள் இது போன்ற மணவினைத் தொடர்புகளைத் தொடக்கத்திலிருந்தே மேற்கொண்டனர். புராந்தகர் மணந்துகொண்ட அருமொழிநங்கையின் தந்தையான பழுவேட்டரையர் யாராக இருக்கக்கூடும் என்பதையறியக் கல்வெட்டுகள் உதவுகின்றன. பழுவேட்டரையர்களைப் பற்றிய முதல் செய்தியைத் திருவையாற்றிலுள்ள பஞ்சநதீசுவரர் கோயிற் கல்வெட்டொன்று தருகிறது.[13] இராசகேசரிவர்மரின் பத்தாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டிருக்கும் இக்கல்வெட்டே பழுவேட்டரையர்களைப் பற்றிய முதல் வரலாற்றுக் கீற்றாய் அமைந்துள்ளது. நீலன் நாராயணன் திருவையாற்றுத் திருக்கோயிலுக்குத் தந்த நிலத்தின் எல்லைகளைக் கூறுமிடத்தில், பழுவேட்டரையர் குமரன் கண்டனின் நிலம்

---

12. இக்கல்வெட்டு பதினைந்து வரிகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் பத்து வரிகள் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி ஏழில் கல்வெட்டு எண். 520இன் கீழ்ப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய ஐந்து வரிகள் களஆய்வின்போது கண்டறியப்பட்டுப் படியெடுக் கப்பட்டன.

13. · S.I.I. Vol. V, Ins. No. 523.

கிழக்கெல்லையாகவும் வடக்கெல்லையாகவும் குறிக்கப் படுகிறது. இக்கல்வெட்டிற்குரிய இராசகேசரிவர்மரைக் கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு முதலாம் ஆதித்தராகக் கொள்ளலாம்.

பழுவேட்டரையர் குமரன் கண்டன்

திருவையாற்றுக் கல்வெட்டு குறிக்கும் பழுவேட்டரையர் குமரன் கண்டனைப் பழுவூர் அவனி கந்தர்ப்ப ஈசுவர கிருகத்துத் தென்வாயில் ஸ்ரீகோயிலின் தென்புறச் சுவரிலுள்ள இராசகேசரிவர்மரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் குறிப்பிடுகிறது.[14] கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இக்கல்வெட்டுக்குரிய இராசகேசரியும் முதலாம் ஆதித்தரே எனக் கொள்ளலாம். முதல் கல்வெட்டில் நில உரிமையாளராகக் குறிக்கப்பட்ட குமரன் கண்டன், இக்கல்வெட்டில் 'குமரன் கண்டன் பிரசாதத்தினால்' என்ற சிறப்புக் குறிப்புடன் இடம்பெறுகிறார்.

1 ஸ்வஸ்திஸ்ரீ கொவிராஜகேசரிபர்ம்மற்கு யாண்டு 12ஆவது

2 குன்ற கூற்றத்து அவனிகந்த[ர்*]ப்ப ஈச்வர க்ருஹத்து மக[ா*]தேவர்[க்*]கு இன்னாட்டு பழுவூர்

3 பகைவிடை ஈசுவரத்து தேவநார் மக[ன்*] நக்கன் பூதி பழுவேட்டரையன் குமரன் க[ண்]

4 டன் பிரஸாதத்தினால் அருளிச் செய்ய இத்தளி தேவதாநம் உரகன்குடி அபோஹ

5 னங்கிடந்த பூமியை கல்லி இரண்டு பூவும் விளைய மசக்கி குடு

14. S.I.I. Vol. III, Ins. No. 235; கல்வெட்டுத் தொகுதியில் ஆட்சியாண்டு பதின்மூன்று என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது.

6 த்த நிலம் எட்டு மா இப்பூமியில் போந்த போகங்கொண்டு இரண்டு தளி[யி*]

7 லு[ம்*] ஒரொ நொன்தா விளக்கு இரவும் பகலும் எரிக்க கடவோம் இத்தளி பட்

8 டு உடையோம் எழுவோம்

இக்குறிப்பு முதலாம் ஆதித்தரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் பழுவேட்டரையர்கள் பழுவூர் ஆட்சியில் அமர்ந்துவிட்டதை உறுதிப்படுத்துகிறது.

பழுவேட்டரையர் குமரன் மறவன்

திருவையாற்றுப் பஞ்சநதீசுவரர் கோயிலில் உள்ள முதலாம் ஆதித்தரின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் பழுவூர் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்திலுள்ள முதலாம் ஆதித்தரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் பழுவேட்டரையர் வரலாற்றின் முதல் மன்னராகக் குமரன் கண்டனை வெளிப்படுத்துகின்றன. இவருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவராகப் பழுவேட்டரையர் குமரன் மறவனைக் கல்வெட்டுகள்[15] காட்டுகின்றன. அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்துத் தென்வாயில் ஸ்ரீகோயிலின் தென்புறச் சுவரில் இக்கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன.

கல்வெட்டெண் - 1

1 *... ஸரிபம்மற்கு யாண்டு இருபத்திரண்டாவது

2 ... து அவநிகந்தர்ப்ப ஈச்ᵒவர க்ᴣருஹத்து மஹாதேᴣவர்க்கு செ

3 ... ஸ்த மஹறிஷி வம்சᵒத்து க்ஷத்ரியன் பொதுகள பெருமாள்

4 ... டியுட பழுவேட்டரையன் குமரன் மறவன் பிரஸா

---

15. S.I.I. Vol. XIII, Ins. No. 298; A.R.E. 355 of 1924.

* கல்வெட்டு வரிகளின் தொடக்க எழுத்துகள் கட்டடப்பகுதியில் சிக்கியுள்ளன.

5 ... ஹநங் கிடந்த பூ,மியைக் கல்லி எட்டு மாச் செய் நீர்

6 ... லில் போகங் கொண்டு இரண்டு தளிஇலும் ஒரொ நந்

7 ... கொண்டோம் இத்தளிப் பட்டுடைஓம் எழுவோம் இவ்வி

8 ... ந்தற்புரத்து நகரத்தார் இத்தர்ம்மம் ரக்ஷிப்பாரடி எந்

9 ....

கல்வெட்டெண் - 2

1 ஸ்வஸ்திஸ்ரீ கொவிராஜகேசரிபர்ம்மக்கு யாண்டு யிருபத்திரண்டாவது குன்றக் கூற்றத்து

2 அவநிகந்தர்ப்ப ஈச்வர கரத்து** மகாதேவற்கு பொய்கைக் குறுவிடத்து வெட்டக் குடான்

3 வடுகன் ம[ா*]தவன் பழுவேட்டரையன் குமரன் மறவன் பிரஸா

4 தத்தினாலருளிச் செய்ய இத்தளித் தேவதானம் உரகன்குடி அபோகனங் கிடந்

5 த பூ,மியைக் கல்லி இரண்டு பூவும் விளைய மசக்கிக் குடுத்த நீர் நிலம் எட்டு மா இப்

6 பூமியில் போந்த போகங் கொண்டு இரண்டு தளிஇலும் ஒரொ நந்தா விளக்கு இர

7 வும் பகலும் எரிப்போமானோம் இத்தளிப் பட்டுடையோம் எழுவோம் இவ்விளக்கு

8 ரக்ஷிப்பார் அமநிகந்தப்பபுரத்து நகரத்தாரடி யென்றலை மேலன

** இருகத்து என்று படிக்கவும்.

இராசகேசரியின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள இக்கல்வெட்டுகள் குமரன் மறவனை, பழுவேட்டரையன் குமரன் மறவன் பிரசாதத்தினால் என்று சிறப்புச் செய்து குறிக்கின்றன. இந்தச் சொல்லாட்சி குமரன் கண்டனுக்கும் பயன்படுத்தப்பட்டிருப்பது நினைக்கத் தகுந்தது.

இதனால் பழுவூர் அரச மரபின் முதல் மன்னராகக் குமரன் கண்டனும் இரண்டாம் மன்னராகக் குமரன் மறவனும் இடம்பெற்றனர் எனலாம். இவர்கள் இருவர் பெயரிலுமுள்ள குமரன் என்ற முதற் பெயர் இவர்தம் தந்தையைக் குறிப்பதாகலாம்.

இக்குமரன் மறவனைக் குறிக்கும் பிற கல்வெட்டுகள் திருப்பழனத்திலொன்றும் லால்குடி சப்தரிஷீசுவரர் கோயிலில் ஒன்றும் திருவையாற்றுப் பஞ்சநதீசுவரர் கோயிலில் மற்றொன்றுமாய் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் திருவையாற்றுக் கல்வெட்டு முதலாம் ஆதித்தரின் பத்தொன்பதாம் ஆட்சியாண்டிற்குரியது.[16] இக்கல்வெட்டு இவரைப் பழுவேட்டரையர் நம்பி மறவனார் என்று குறிப்பிடுகிறது. முதலாம் ஆதித்தரின் பத்தொன்பதாம் ஆட்சியாண்டில் குமரன் கண்டன் பழுவூர் அரியணையில் அமர்ந்திருந்தமையால், பஞ்சநதீசுவரர் கல்வெட்டு குமரன் மறவனை, நம்பி மறவன் என்று அழைத்துள்ளது. நம்பி, பிள்ளையார் போன்ற சொற்கள் இளையோரைக் குறிக்க அக்காலத்தில் பயன்பட்டவையாகும். லால்குடியில் கிடைக்கும் முதலாம் பராந்தகரின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[17] குமரன் மறவனை அடிகள் பழுவேட்டரையர் குமரன் மறவன் என்று பெருமைப்படுத்துகிறது. திருப்பழனத்திலுள்ள முதலாம் பராந்தகரின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு,[18] 'திருப்பழநத்து மஹா

16. S.I.I. Vol. V, Ins. No. 537.
17. S.I.I. Vol. XIX, Ins. No. 146.
18. மேலது., Ins. No. 172; இரா. நாகசாமி, யாவரும் கேளிர், ப.122.

தேவர்க்கு இரவும் பகலும் சந்திராதித்தவற் ஒரு நொன்தா விளக்கு எரிப்பதற்குப் பழுவேட்டரையர் குமரன் மறவனோடு தீப்பாஞ்ச அழகியான் மறவன் வைத்த பொன்' பற்றிய தகவலைத் தருவதன் மூலம் குமரன் மறவனின் காலம் முடிந்துவிட்டதைக் குறிப்பிடுகிறது.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்
2 மற்கு யாண்டு 6ஆவது மிறை
3 க் கூ[ற்ற*] த்து இஷப நாயற்றுத் தேவதா
4 நன் திருப்பழநத்து மஹாதே,வர்க்கு இர
5 வும் பகலும் சந்திராதி,த்தவற் ஒருெ
6 நான்தா விளக்கு [எரி]ப்பதற்கு [ப]ழு[வேட்ட]
7 ரையர் குமரன் மறவனோடு தீப்பாஞ்ச
8 அழகியான் மறவன் [வை*]வத்த பொன்[ங]ய
9 இப்பொன் கொண்டு விளக்கெரிப்போமா
10 னோம் அணியமங்கலத்து ஸபையோம்
11 எங்கள் ஆறு மாவும் விற்றுக் குடுத்தோ
12 ம் அணியமங்கலத்து ஸபை,யோம் இ
13 து பன்மாஹேச்ᵒவர ரக்ஷை.

பழுவேட்டரையர் கண்டன் அமுதன்

குமரன் மறவனின் மறைவுக்குப் பிறகு பழுவூர் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவர் கண்டன் அமுதன் ஆவார். இவர் பெயரின் முதற்பகுதி மிகத் தெளிவாக இவர் குமரன் கண்டனின் மகன் என்பதைச் சுட்டுகிறது. குமரன் கண்டனின் ஆட்சிக்காலம் முடிவுற்றபோது கண்டன் அமுதன் சிறுவனாக இருந்திருக்கவேண்டும். அதன் காரணமாகவே குமரன் கண்டனின் இளவலான குமரன் மறவன் ஆட்சிப் பொறுப்பேற்றார்.[19] குமரன் மறவன்

---

19. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், கழக வெளியீடு, ப. 31.

கி.பி.893இல் இருந்து கி.பி.913 வரை ஆட்சியிலிருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.[20] கி.பி.913இல் குமரன் மறவன் மறைந்த பிறகு கண்டன் அமுதன் அரியணை ஏறியதாகக் கருதலாம்.

பழுவேட்டரையர் கண்டன் அமுதனைக் குறிப்பிடும் கல்வெட்டுகள் இரண்டு மட்டுமே கிடைத்துள்ளன. ஒன்று கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயிலிலும் மற்றொன்று திருவையாற்றுப் பஞ்சநதீசுவரர் கோயிலிலுமாய்க் கிடைத்துள்ளன. கீழப்பழுவூர்க் கல்வெட்டு முதலாம் பராந்தகரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் (கி.பி.919) வெட்டப்பட்டுள்ளது.[21] வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக்கல்வெட்டினால், முதற் பராந்தகருக்கும் பாண்டியர் இராசசிம்மருக்கும் இடையில் நடந்த வெள்ளூர்ப்போரில் பழுவேட்டரையர் கண்டன் அமுதன் பங்கேற்றுப் பராந்தகருக்காய்ப் போரிட்டு வெற்றி பெற்ற செய்தி கிடைக்கிறது. இப்போரில் இராசசிம்மப் பாண்டியரும் அவருக்குத் துணையாக வந்த ஈழப் படையினரும் தோற்றோடினர்.[22]

1 ஸ்வஸ்திஸ்ரீ
2 மதுரை கொ
3 ண்ட கோப்பர
4 கேசரிபந்மற்
5 கு யாண்டு 1
6 2ஆவது இவ்
7 வாண்டு பெருமான
8 டிகளோடு பாண்டியனார் ஈழப்படை
9 குணந்து வெள்ளூர் அஸ்தி கடை செய்

20. S.I.I. Vol. XIII, Ins. No. 298; S.I.I. Vol. XIX, Ins. No. 172.
21. A.R.E. 231 of 1926.
22. K.A. Nilakanta Sastri, The Colas, p.123-124.

10 நான்று பழுவேட்டரையர் கண்டன் அ
11 முதனார் வீரஸ்ரீ உண்டாவதென்று பொய்
12 கை குறுவிடத்து பரதூருடையான் படைப்படுவ
13 ராயன் நக்கன் சாத்தன் குன்றக் கூற்றத்து சிறுபழுவூர்த்
14 திருவாலந்துறை மஹாதே₃வர்[க்*]கு சந்த்₃ராதி₃த் யவல்
15 இரவும் பகலும் ஒரு திருவிளக்கு
16 எரிய நிசதப்படி நாராயத்தால் உழக்கு நெ[ய்*]க்கு வை
17 த்த சாவா மூவாப் பேராடு 90ம் அயன ஸங்கிராந்தி (நா)
18 டோறும் ஆடியருள நெய் அஞ்ஞாழிக்கு வைத்த ஆடு
19 10ம் பழுவேட்டரையர் கண்டன் அமுதனார் திருந
20 க்ஷத்திரி[யை] புணர்பூசத்தி நான்று திங்கள்டோ
21 றும் இரு நாழி நெய் ஆடியருள வைத்த
22 ஆடு 24ம் கார்த்திகை கா[ர்*]த்திகை நான்று ஆடி அ
23 ருள நெய் நாழிக்கு வைத்த ஆடு 4ம் கார்த்திகை
24 விளக்கு எரிய வைத்த நெய். .* க்கு வைத்த ஆடு
25 அஞ்சும் இது பந்மாஹேச்வர
26 ரக்ஷை

கண்டன் அமுதனைக் குறிக்கும் மற்றொரு கல்வெட்டு திருவையாற்றுப் பஞ்சநதீசுவரர் கோயிலில் முதலாம் பராந்தகரின் பதினான்காம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ளது.[23] திருவையாற்று மகாதேவர்க்கு நந்தா

---

*. நெய்யின் அளவு குறியீட்டில் தரப்பட்டுள்ளது.

23. S.I.I. Vol. V, Ins. No. 551.

விளக்கொன்றெரிக்கத் தொண்ணூறு ஆடுகளைப் பழுவேட்டரையர் கண்டன் அமுதன் கொடையாகத் தந்த தகவலைத் தரும் இக்கல்வெட்டு, வெள்ளூர்ப் போரிலிருந்து கண்டன் அமுதனார் வெற்றியோடு திரும்பியதற்குச் சான்றாய் நிற்கிறது. சில வரலாற்றறிஞர்கள் கண்டன் அமுதன் வெள்ளூர்ப் போரில் இறந்து விட்டதாகத் தங்கள் கட்டுரைகளில் குறிப்பிட்டிருப்பது[24] சரியல்ல என்பதை இக்கல்வெட்டு நிறுவுகிறது.

கி.பி.913இல் அரியணை ஏறிய பழுவேட்டரையர் கண்டன் அமுதனின் ஆட்சிக் காலம் எதுவரை நீடித்திருந்தது என்பதை அறிந்துகொள்ள எவ்வகைச் சான்றுகளும் கிடைக்கவில்லை. இவரையடுத்து ஆட்சிக் கட்டில் ஏறுபவர் பழுவூர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப்பெறும் மறவன் கண்டனாவார். இவர் பெயரிலுள்ள மறவன், இவரது தந்தையான குமரன் மறவனைக் குறிப்பதாகலாம். கண்டன் அமுதனுக்கு வாரிசு இல்லாமல் போனமையால் குமரன் மறவனின் மகனான மறவன் கண்டன் ஆட்சிக்கு வந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.[25]

முதலாம் பராந்தகரின் ஆட்சிக் காலத்தில் பழுவூர் அரியணையில் இருந்தவர்கள் குமரன் மறவனும் கண்டன் அமுதனுமே ஆவர். இவ்விருவருள் ஒருவரே முதலாம் பராந்தகரின் தேவியான அருமொழிநங்கையின் தந்தையாக இருத்தல் வேண்டும்.

பழுவேட்டரையர் மறவன் கண்டன்

கண்டன் அமுதனைத் தொடர்ந்து பழுவூர் அரியணையேறிய பழுவேட்டரையர் மறவன் கண்டனைக் குறிக்கும் முதற் கல்வெட்டு இராசகேசரிவர்மரின் ஐந்தாம்

---

24. வை. சுந்தரேச வாண்டையார், பழுவேட்டரையர், கட்டுரை, ப. 125; இல. தியாகராசன், கிழப்பழுவூரில் பள்ளிப்படைக்கோயில் கண்டுபிடிப்பு, கட்டுரை, தினமலர், 27 டிசம்பர் 1987.
25. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப.40.

ஆட்சியாண்டில் கிடைக்கிறது.[26] இந்த இராசகேசரிவர்மரை வரலாற்றாசிரியர்கள் 'சுந்தர சோழராக ஏற்றுக் கொள்கிறார்கள்.[27] கீழையூர் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகம், கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயில், கீழப்பழுவூர் மறவனீசுவரம், கோவிந்தப்புத்தூர் கங்கசடாதரர் கோயில், திருவிசலூர்ப் பிச்சதேவர் கோயில் ஆகிய கோயில் களிலிருந்து இம்மன்னரைக் குறிக்கும் பதின்மூன்று கல்வெட்டுகள் இதுகாறும் கிடைத்துள்ளன.[28] இக்கல்வெட்டுகள் மறவன் கண்டனின் கொடை, ஆட்சிமுறை, வரியமைப்புகளில் இம்மன்னர் மேற்கொண்ட செயல்முறைகள் ஆகியவற்றைத் தெளிவாக்குவதுடன் இம்மன்னரின் அரசு அலுவலர்கள் சிலரையும் அறிமுகப்படுத்துகின்றன.

பழுவேட்டரையர் மறவன் கண்டனின் காலத்தில்தான் கீழப்பழுவூர் திருஆலந்துறையார் திருக்கோயில் கற்றளியாக மாற்றப்பட்டது. இப்பணி குறித்து ஆலந்துறையார் கோயிலின் இரண்டு கல்வெட்டுகள் பேசுகின்றன. 'ஸ்ரீகோயில் எடுப்பிச்ச பழுவேட்டரையர் மறவன் கண்டனார் அருளால் எடுப்பித்த மாறபிரான்' என்னும் கல்வெட்டு வரிகள், இக்கோயிலை மறவன் கண்டனார் காலத்தில் மாறபிரான் என்பார் கட்டிய தகவலைத் தருகின்றன.[29] டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தால் படியெடுக்கப்பட்ட புதிய

---

26. S.I.I. Vol. V, Ins. No. 679.
27. வெ. பாலாம்பாள், பழுவேட்டரையர்கள், ப.26; M.S. Govindasamy, The Role of Feudatories in Later Chola History, p.34.
28. S.I.I. Vol. V. Ins. Nos. 679 and 682; S.I.I. Vol. XIII, Ins. Nos. 208, 215, 229, 236 and 344; S.I.I. Vol. XIX, Ins. Nos. 237, 238, 273 and 384; மாலை முரசு, 24 ஜனவரி 1988; பதின்மூன்றாவது கல்வெட்டு திருவிசலூர்ப் பிச்சதேவர் கோயிலில் களஆய்வு மேற்கொண்டபோது கண்டறியப்பட்டது.
29. S.I.I. Vol. XIX, Ins. No. 384.

கல்வெட்டொன்று[30] இதே செய்தியை மேலும் விரிவாகக் கூறுகிறது.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்ப
2 ரகேஸரிபர்ம்மக்கு ய
3 ாண்டு 9ஆவது அ
4 டிகள் பழுவேட்டரய
5 ர் மறவன் கண்டனா
6 ர் கன்மி அடிகள் அ
7 ரிளிச் செய்ய சிறுப
8 ழூவூர் திருவாலந்துறை
9 ற திருக்கற்றளி மேனாய
10 கமா நின்று செய்வித்த
11 மங்கல நாட்டு மங்கலத்து
12 கவிசியன் நக்கன் மாறபி
13 ரானான நம்பியாரூரன் திருவ
14 ாலந்துறை மகாதே₃வர்க்கு
15 மூன்று சந்திக்கும் வைத்த
16 தயிரமுது நாராய நாழி
17 யால் நாடுரி நாடுரிக்கு
18 ம் வைத்த சாவா மூவாப்
19 பேராடு இருபது இது
20 பந்மாஹே
21 ச்₂வர ரகைஷ

இக்கல்வெட்டு உத்தம சோழரின் ஒன்பதாம் ஆட்சியாண்டிற்கு முன்னரே திருவாலந்துறைத் திருக்கோயில் கற்றளியாக்கப்பட்ட உண்மையை உணர்த்துகிறது.

30. இரா. கலைக்கோவலன், பழுவூர்ப் புதையல்கள், ப.எண். 296, 297.

மறவன் கண்டனின் ஆட்சிக் காலம் இரண்டாம் பராந்தகரான சுந்தர சோழரின் ஐந்தாம் ஆட்சியாண்டில் தொடங்கி உத்தம சோழரின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் நிறைவுபெறுகிறது.[31]

பழுவேட்டரையர் சத்ருபயங்கரன்

மறவன் கண்டனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். கண்டன் சத்ருபயங்கரன், கண்டன் சுந்தர சோழன், கண்டன் மறவன் என்னும் இம்மூவரில் கண்டன் சத்ருபயங்கரன் ஒரே ஒரு கல்வெட்டில் மட்டுமே குறிக்கப்பெறுகிறார். உடையார்குடி திருவனந்தீசுவரர் திருக்கோயிலில் உள்ள உத்தம சோழரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[32] சத்ருபயங்கரனுக்காக அவர் தமையன் கண்டன் சுந்தர சோழன், இக்கோயிலில் ஐந்து அந்தணர்களை உண்பிக்கவும் நந்தா விளக்கொன்று எரிக்கவும் வாய்ப்பாக நிலம் வாங்கிக் கொடையளித்த செய்தியைத் தருகிறது. உத்தம சோழரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டிற்குப் பிறகு கண்டன் சத்ருபயங்கரன் பற்றிய தகவலேதும் கிடைக்காமையாலும் கிடைத்திருக்கும் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் வரிகள் தரும் பொருளார்ந்த குறிப்பாலும் கண்டன் சத்ருபயங்கரனின் வாழ்வு உத்தம சோழரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டிற்கு முன்னரே முடிந்துவிட்டதாகக் கொள்ளலாம்.

பழுவேட்டரையர் கண்டன் சுந்தர சோழன்

மறவன் கண்டனின் மற்றொரு மகனான கண்டன் சுந்தர சோழன் உத்தம சோழரின் பன்னிரண்டாம், பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளில் பழுவூர் மன்னராகக் குறிப்பிடப்படுகிறார். 'அடிகள் பழுவேட்டரையன் கண்டன் சுந்தர சோழன் அருளால்' என்னும் கல்வெட்டு வரிகள் இதை மெய்ப்பிக்கின்றன. இவரது இளவலான கண்டன் மறவன், உத்தம சோழரின் பதினைந்தாம் ஆட்சியாண்டில் பழுவூர்

---

31. S.I.I. Vol. V, Ins. No. 679; S.I.I. Vol. XIX, Ins. Nos. 237 and 238.
32. S.I.I. Vol. XIX, Ins. No. 305.

அரியணை ஏறுவதால், அதற்கு முன்னரே கண்டன் சுந்தர சோழரின் ஆட்சி முடிந்ததாகக் கொள்ளலாம். மறவன் கண்டனின் கல்வெட்டுகள் உத்தம சோழரின் ஒன்பதாம் ஆட்சியாண்டுடன் நின்று விடுவதையும் கண்டன் மறவனின் கல்வெட்டுகள் உத்தம சோழரின் பதினைந்தாம் ஆட்சியாண்டிலிருந்து கிடைக்கத் தொடங்குவதையும் பார்க்கையில், இந்த இடைப்பட்ட காலத்தில் பழுவூர் அரியணையில் இருந்தவர் கண்டன் சுந்தரசோழனே என்பது தெளிவாகிறது. இவரைச் சுட்டும் மூன்று கல்வெட்டுகளுள் ஒன்று, இவர், தம் தம்பி சத்ருபயங்கரனுக்காக உடையார்குடி அனந்தீசுவரர் கோயிலில் நிறுவிய அறக்கட்டளைகளைக் குறிக்க,[33] இரண்டாம் கல்வெட்டு கீழப்பழுவூர் திருவாலந்துறையார் கோயிலில் இவர் அளித்த விளக்குக் கொடையைச் சுட்டுகிறது. இக்கல்வெட்டின் மூலம் திருவாலந்துறையார் கோயிலில் ஆடவல்லார் திருமேனியை ஊசலாட்ட வாய்ப்பாகச் செம்பொற்கூடம் ஒன்றினை இவர் அமைத்துத் தந்த தகவலையும் பெறமுடிகிறது.[34] கல்வெட்டு வழி ஆடல்வல்லான் என்ற பெயரை முதல்முதலாக வரலாற்றுக்கு அறிமுகப்படுத்திய பெருமையைக் கண்டன் சுந்தர சோழன் பெறுகிறார். இம்மன்னரைக் குறிக்கும் மூன்றாவது கல்வெட்டு, கண்டன் சுந்தர சோழன் அருளால் ஸ்ரீகார்யம் ஆராய்கின்ற நாவலூருடையான் கண்டன் தேவடி இக்கோயிலில் திருவிழாவிற்காக எழுந்தருளுவித்த கணபதியையும் அதற்கான தளத்தையும் திருவாசியையும் சுட்டுகிறது.[35]

பழுவேட்டரையர் கண்டன் மறவன்

இவரையடுத்து ஆட்சிக்கு வந்தவர் கண்டன் மறவன். இவரைப்பற்றிய வரலாற்றுத் தகவல்களைப் பதினேழு[36]

---

33. S.I.I. Vol. XIX, Ins. No. 305.
34. S.I.I. Vol. V, Ins. No. 681.
35. S.I.I. Vol. XIX, Ins. No. 327.
36. S.I.I. Vol. V. Ins. Nos. 667, 668, 670, 671, 672, 676 and 677; S.I.I. Vol. XIII, Ins. Nos. 98, 171 and 201; S.I.I. Vol. XIX, Ins. Nos. 378 and 403; A.R.E. 363 and 384 of 1924; பு.க. எண்கள். 2,4,5.

கல்வெட்டுகள் வழி பெறமுடிகிறது. இவற்றுள் நான்கு கல்வெட்டுகள் உத்தம சோழரின் பதினைந்தாம், பதினாறாம் ஆட்சியாண்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.[37] பன்னிரண்டு கல்வெட்டுகள்[38] முதலாம் இராசராசரின் மூன்றாம் ஆட்சியாண்டிலிருந்து பதினைந்தாம் ஆட்சியாண்டு வரையிலான காலகட்டத்தில் பொறிக்கப்பட்டவை. எஞ்சிய ஒன்று ஆட்சியாண்டற்றது.[39]

முதலாம் இராசராசரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, கொடும்பாளூரையாண்ட இருக்குவேளிர் குலத்திற்கும் பழுவூர்ப் பழுவேட்டரையர் குலத்திற்கும் இடையில் ஏற்பட்ட மண உறவைத் தெரிவிக்கிறது.[40] இதே மன்னரின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால், பழுவேட்டரையர் கண்டன் மறவனின் வீரர் குழாமொன்று இளைய இரணமுகராமன் படை என்ற பெயரில் இயங்கி வந்தமையை அறியமுடிகிறது.[41]

முதலாம் இராசராசரின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மேலப்பழுவூரில் கண்டன் மறவன் ஒரு கோயில் எடுப்பித்த செய்தியைத் தருகிறது.[42] 'கண்டன் மறவனேன் எடுப்பித்த ஸ்ரீகோயில் திருத்தோற்றமுடையார் கோயில்', என்று கண்டன் மறவனே கூறுவதுபோல் இக்கல்வெட்டின் வரிகள் அமைந்திருப்பது சிறப்புடையதாகும். இத்திருத் தோற்றமுடையார் கோயில் இந்நாளில் காணுமாறு இல்லை.

முதலாம் இராசராசரின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிற்குப்[43] பிறகு கண்டன் மறவன் பற்றிக் கூறும்

---

37. S.I.I. Vol. XIII, Ins. No. 201; S.I.I. Vol. XIX, Ins. Nos. 378 and 403; புக. 4.
38. S.I.I. Vol. V, Ins. Nos. 667, 668, 670, 671, 672, 676 and 677; S.I.I. Vol. XIII, Ins. Nos. 98 and 171; A.R.E., 363 and 384 of 1924; பு.க. 2.
39. பு.க. 5.
40. S.I.I. Vol. V. Ins. No. 671.
41. மேலது., Ins. No. 670.
42. S.I.I. Vol. XIII. Ins. No. 98.
43. A.R.E. 363 of 1924.

கல்வெட்டுகள் எதையும் பழுவூர்ப் பகுதிகளிலோ பழுவூருக்குப் பக்கத்திலுள்ள பிற கோயில்களிலோ காணமுடியவில்லை. கீழப்பழுவூர்த் திருவாலந்துறை மகாதேவர் திருக்கோயிலில் காணப்படும் முதலாம் இராசேந்திரரின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு,[44] பழுவேட்டரையரின் பணிப்பெண் வீராணன் ஒற்றியூர் இக்கோயிலுக்களித்த கொடைகளைக் கூறுகிறது. ஆனால் இக்கல்வெட்டில் பழுவேட்டரையரின் பெயரோ அவரது ஆட்சியுரிமை குறிக்கும் சொற்களோ இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. இதனால், முதலாம் இராசேந்திரரின் எட்டாம் ஆட்சியாண்டில் பழுவூரை ஆண்டுகொண்டிருந்த பழுவேட்டரையர் யாரென்பது உறுதியாகத் தெரியவில்லை. வேறு சான்றுகள் ஏதுமற்ற நிலையில் இவரைக் கண்டன் மறவனாகவே கொள்ளலாம். உத்தம சோழரின் பதினைந்தாம் ஆட்சியாண்டில் பழுவூர் மன்னராக ஆட்சிப் பொறுப்பினை ஏற்று, முதலாம் இராசராசர் காலத்தில் மன்னுபெரும் பழுவூரில் திருத்தோற்றமுடையார் கோயிலைச் செங்கல் திருப்பணியாய் எடுப்பித்து, முதலாம் இராசேந்திரரின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுடன் வரலாற்று நீரோட்டத்திலிருந்து மறையும் கண்டன் மறவனுடன் பழுவேட்டரையர் மரபும் ஒரு முடிவுக்கு வருகிறது.

முதலாம் ஆதித்தரின் பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி881) பழுவூர் அரசராகப் பழுவேட்டரையர் குமரன் கண்டனோடு தொடங்கும் பழுவேட்டரையர் ஆட்சி முதலாம் இராசேந்திரரின் எட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி.1020) பழுவேட்டரையர் கண்டன் மறவனை இறுதி மன்னராய்க் காட்டி முற்றுப் பெறுவதாகக் கருதலாம்.

சோழ - கேரளத் தொடர்புகள்

முதலாம் ஆதித்தர் காலத்தில் தொடங்கிய சோழ, கேரளத் தொடர்புகள்[45] தொடர்ந்து வலிமை பெற்று

44. S.I.I. Vol. V, Ins. No. 665.
45. S.I.I. Vol. III, Ins. No. 89.

வந்தன. இதற்கான பல சான்றுகள் கல்வெட்டுகளில் கிடைக்கின்றன. அரிஞ்சயரின் சேர மனைவியான ஆதித்தன் கோதைப் பிராட்டியும்[46] சுந்தர சோழரின் சேர மனைவியான பராந்தகன் தேவியம்மனும்[47] சேர, சோழ மணவினைகள் தொடர்ந்து நிகழந்தமைக்குச் சான்றுகளாய் அமைகிறார்கள்.

ஆலந்துறையார் கோயிலில் களஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டொன்று, சேர மன்னரின் கைக்கோமாணி மாதேவன் பரமேசுவரன் அக்கோயிலில் கொல்லிப் பெரியான் என்ற பெயரில் திருச்சுற்றாலை எடுப்பித்ததுடன் இறைவனுக்குப் பூப்பலகையொன்றும் கொடையளித்ததாகக் கூறுகிறது. இக்கல்வெட்டு குறிப்பிடும் சேரமானார், பழுவேட்டரையர் மகளான அக்காரநங்கையை மணந்திருந்தமை அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்திலுள்ள இரண்டு கல்வெட்டுகளால் தெரியவருகின்றன.[48] இம்மூன்று கல்வெட்டுகளும் இராசகேசரியின் நான்காம் மற்றும் ஆறாம் ஆட்சியாண்டுகளுக்கு உரியவை. இந்த இராசகேசரியைச் சுந்தர சோழராகக் கொள்ளலாம். மணவினைகளாலும் தொடர்ந்த நட்புறவாலும் வளர்ந்த சோழ, கேரளத் தொடர்புகள் சிக்கலாகத் தொடங்கியது முதலாம் இராசராசரின் மூன்றாம் ஆட்சியாண்டிற்குப் பிறகுதான். காந்தளூர்ச் சாலைப் போரே சோழர், சேரர் நட்புறவை முறித்த முதல் நிலை என்பதைத் திருக்கோவலூரிலுள்ள கல்வெட்டொன்றால்[49] உறுதிப்படுத்தலாம். தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்திலுள்ள முதலாம் இராசராசரின் கல்வெட்டு[50] 'மலைநாட்டுச் சேரமானையும் பாண்டியர்களையும் எறிந்து' என்று இராசராசரின் சேர

46. S.I.I. Vol. III, Ins. No. 225.
47. S.I.I. Vol. V, Ins. No. 723.
48. S.I.I. Vol. XIII, Ins. Nos. 153 and 154.
49. S.I.I. Vol. VII, Ins. No. 863.
50. S.I.I. Vol. II, Ins. No. 59.

வெற்றியைக் குறிப்பிடுகிறது. கொல்லத்தையும் கொடுங்கோளூரையும் சோழர்கள் வெற்றிகொண்டனர்.[51] முதலாம் இராசராசர் காலத்தில் தொடங்கிய இச்சோழ, கேரளப் போர்கள் முதலாம் இராசேந்திரர் காலத்தில் உச்சத்தையடைந்தன. இராசேந்திர சோழரின் ஆறாம்,[52] ஏழாம்[53] ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள், இப்பேரரசரின் சேரநாட்டுப் படையெடுப்பைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. சேரரின் முடியையும் செங்கதிர் மாலையையும் இராசேந்திரர் கைப்பற்றிக் கொண்டதுடன், பழந்தீவையும் பிடித்துக் கொண்டார். இதுபோன்ற தொடர்ந்த போர்களால் சோழ, கேரளத் தொடர்புகள் முற்றிலுமாய் நலிவுற்றன. முதலாம் ஆதித்தர் காலந்தொட்டு உத்தம சோழர் காலம்வரை சோழர்க்கும் சேரர்க்கும் இடையில் நிலவி வளர்ந்த நட்புறவு, இராசேந்திரரின் படையெடுப்புகளால் முழுவதுமாய் அழிந்து பகையாய் வளர்ந்தது.

இந்த வரலாற்றுப் பின்னணியுடன் பழுவூர் மரபின் தொடக்கத்தையும் முடிவையும் நோக்குகையில் ஓர் உண்மை தெளிவாகின்றது. சோழ, கேரளத் தொடர்புகள் வலிமையுடன் இருந்த காலத்தில் பழுவூர், பழுவேட்டரையர்களின் ஆட்சியில் செழித்திருந்தது. இச்சோழ, கேரள நட்புறவு போர்களால் பகையான நிலையில், பழுவூர் மரபும் ஆட்சியிழக்கிறது. பழுவேட்டரையர்கள் கேரள வழியினர் என்பது வரலாறு புலப்படுத்தும் உண்மையாகும். கேரள வழியினரான பழுவேட்டரையர்களைத் தங்கள் உறவினர்களாகவும் நண்பர்களாகவும் கொண்டிருந்த சோழர்கள், கேரள நட்புறவு சிதைவுற்றதால் விலக்கத் தொடங்கினர். கேரளத்துடன் பகை ஏற்பட்ட சூழலில் தம் நாட்டிற்குள்ளேயே அக்கேரள வழியின் ஒரு சாரார் ஆட்சியாளராய் இருப்பதை இராசராசர் விரும்பாமல்

---

51. A.R.E. 1912, Part II, Para 22, p.59
52. S.I.I. Vol. V, Ins. No. 578.
53. S.I.I. Vol. II, Ins. No. 82.

இருந்திருக்கலாம். இதுவே பழுவேட்டரையர்களின் ஆட்சி முடி வுற்றமைக்கு முதன்மைக் காரணமெனக் கொள்ளலாம். கண்டன் மறவனுடன் பழுவூர் மரபு முடிவுற்றதற்கு மற்றொரு காரணமாய், அம்மரபு வாரிசில்லாமல் போனதைக் குறிப்பிடலாம். கண்டன் மறவனுக்கு ஆண்மக்கள் இல்லாமையால், பழுவூர் ஆட்சியைத் தொடரவோ, சோழர் உறவு மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவோ வகையில்லாமல் போனது. அதனால்தான் முதலாம் இராசேந்திரரின் எட்டாம் ஆட்சியாண்டிற்குப் பிறகு ஆட்சியுரிமையுடன் கூடிய பழுவேட்டரையர் கல்வெட்டுகளைத்[54] தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் காணமுடியவில்லை.

நூற்று முப்பத்தொன்பது ஆண்டுகளாய்த் தமிழகத்தின் மையப்பகுதியில் சோழர்களின் எழுச்சியோடு இணைந்து, வளர்ந்து, செழித்து, அவர்களோடு மணவினைத் தொடர்புகளும் கொண்டு வாழ்ந்திருந்த பழுவூர் மரபு, அரியணை இழந்து, ஆட்சியிழந்து போனாலும் அவர்கள் விட்டுச் சென்றிருக்கும் கலைப் படைப்புகள் காலம் உள்ளளவும் பழுவேட்டரையர் மரபின் பெருமைகளைப் புலப்படுத்தி நிற்கும்.

---

54. முதலாம் இராசாதிராசரின் முப்பத்தைந்தாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்றும் மூன்றாம் இராசராசர் காலத்தனவான கல்வெட்டுகள் இரண்டும் முறையே பழுவேட்டரையர் என்ற பெயரில் அமைந்த கையெழுத்தாளர் ஒருவரையும் கொடையாளிகள் இருவரையும் குறிக்கின்றன. இவர்கள் பழுவேட்டரைய மரபின் பின்தோன்றல்களாகலாம். A.R.E. 127 of 1929; A.R.E. 90 of 1911; அர. அகிலா, மு. நளினி, கல்பாளையம் கல்வெட்டு, ஆவணம் 1, அக்டோபர் 1991, ப.13.

2. பழுவூர்க் கோயில்கள்

திருச்சிராப்பள்ளி ஜெயங்கொண்டம் சாலையில், திருச்சிராப்பள்ளியிலிருந்து 55 கி.மீ. தொலைவிலுள்ள மேலப்பழுவூர், அதையொட்டி அமைந்துள்ள கீழையூர், அதற்கு அண்மையிலுள்ள கீழப்பழுவூர் என்னும் இம்மூன்று பகுதிகளிலும் பல கோயில்கள் உள்ளன. இவற்றுள் கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் கட்டப்பட்ட கோயில்களே பலவாக உள்ளன. பிள்ளையார், பிடாரி மற்றும் ஊர்க்காவல் தெய்வங்களுக்காக எடுக்கப்பட்ட சிறிய கோயில்கள் தவிர இப்பகுதிகளில் ஆறு பெருங்கோயில்கள் காணப் படுகின்றன. இவற்றுள் இரண்டு கீழையூரிலும் மூன்று கீழப்பழுவூரிலும் ஒன்று மேலப்பழுவூரிலும் அமைந் துள்ளன.

கீழையூரில் அமைந்துள்ள கோயில் வளாகத்தை இங்குள்ள கல்வெட்டுகள் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகமென்று குறிக்கின்றன.[1] இவ்வளாகத்துள் இரண்டு மையக்கோயில்களும் ஓர் அம்மன் கோயிலும் ஐந்து சுற்றாலைத் திருமுன்களும் உள்ளன. வளாகத்தின் வடபுறமுள்ள மையக்கோயில், கல்வெட்டுகளில் வடவாயில் ஸ்ரீகோயில் என்றும் தென்புறமுள்ள மையக்கோயில் தென்வாயில் ஸ்ரீகோயில் என்றும் அழைக்கப்படுகின்றன. முதலாம் ஆதித்த சோழர் காலத்திலிருந்து வெட்டப் பட்டிருக்கும் கல்வெட்டுகளைக் கொண்டிலங்கும் இக்கோயில் வளாகம் தற்போது தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ்ப் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக விளங்குகிறது. இங்குள்ள கட்டு மானங்களில் பெரும்பான்மையானவை பழுவேட்டரையர் காலத்தவை (முற்சோழர்) என்பது குறிப்பிடத்தக்கது.

---

1. S.I.I. Vol. XIII, Ins. No. 235 and 298.

மேலப்பழுவூரில் அமைந்துள்ள கோயில் இன்று சுந்தரேசுவரர் திருக்கோயில் என்று அழைக்கப்படுகிறது. கோபுரவாயிலாலும் அதைத் தொடரும் திருமதிலாலும் சூழப்பட்ட இக்கோயில் வளாகத்திற்குள் சோழர் காலக் கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் பகைவிடை ஈசுவரம், திருத்தோற்றமுடையார் கோயில், குலோத்துங்க சோழ ஈசுவரம் என்னும் மூன்று பெயர்களைத் தருகின்றன. இவற்றுள் மையக்கோயில் பட்டிகையில் காணப்படும் கல்வெட்டுகள் சுட்டும் பகைவிடை ஈசுவரமே இப்போது சுந்தரேசுவரர் கோயிலாய்ப் பெயர் மாறி விளங்குகிறது. திருப்பணிகளுக்கு ஆளானபோதும் மையக்கோயிலின் கீழ்த்தளக் கட்டுமானம் ஏறத்தாழப் பழைய அமைப்பிலேயே இருப்பது குறிப்பிடத்தக்கது.

திருத்தோற்றமுடையார், குலோத்துங்க சோழ ஈசுவரம் என்னும் இரு பெயர்களும் பழுவூரிலிருந்து அழிந்துபோன கோயிலொன்றைக் குறிப்பனவாகும். உத்தம சோழர் காலத்தில் பழுவேட்டரையர் கண்டன் மறவனால் செங்கல் தளியாக எடுக்கப்பட்ட திருத்தோற்றமுடையார் கோயில்,[2] முதலாம் குலோத்துங்க சோழர் காலத்திற்கு முன்பே வழிபாடிழந்து பழுதுற்றுப்போனது. முதலாம் குலோத்துங்கரின் நலம் போற்றி, அம்மன்னரின் படைத்தலைவர்களுள் ஒருவரான வாணகோவரையன் சுத்தமல்லன் உத்தம சோழரான இலங்கேசுவரன் என்பார் பழுதுற்றிருந்த திருத்தோற்றமுடையார் கோயிலைக் கற்றளியாக மாற்றியமைத்துக் குலோத்துங்க சோழ ஈசுவரம் என்று பெயரிட்டார்.[3] மூன்றாம் இராசராசர் காலம்வரை இக்கோயில் வழிபாட்டில் இருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுள்ளது.[4] அதற்குப் பின்னர் இக்கோயில் மீண்டும் எப்போது சிதைவுற்றதென்பதை அறியக்கூடவில்லை.

2. S.I.I. Vol. XIII, Ins. No. 98.
3. A.R.E. 390 and 393 of 1924.
4. A.R.E. 388 of 1924.

இன்றைக்கு, இக்கோயில் தொடர்பான அனைத்துக் கல்வெட்டுகளும் பகைவிடை ஈசுவரத்து அம்மன் திருமுன்னின் சுவர்களில் தொடர்பின்றியும் ஒழுங்கின்றியும் காணப்படுவது நோக்க, அம்மன் கோயிலும் அது இடம்பெற்றிருக்கும் மண்டபமும் கட்டப்பட்ட காலத்திற்கு முன்னரே இக்கோயில் அழிந்துவிட்டதாகக் கொள்ளவேண்டியுள்ளது.

கீழப்பழுவூரிலுள்ள மூன்று பெருங்கோயில்களும் கீழப்பழுவூர், தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளன. இவற்றுள் முதலாவதாக அமைந்துள்ள திருவாலந்துறையார் திருக்கோயில் சம்பந்தர் பாடல் பெற்ற தலமாகும்.[5] உத்தம சோழர் காலத்தில் பழுவேட்டரையர் மறவன் கண்டனால் கற்றளியாக்கப்பட்ட[6] இக்கோயில் பின்னாளில் பெரியதொரு வளாகமாக வளர்ந்தமைக்குச் சோழர் காலக் கல்வெட்டுகள் பல சான்றாகின்றன. மையக்கோயிலும் அதன் முன்னாலுள்ள மண்டபமும் பழுவேட்டரையர் மறவன் கண்டனின் திருப்பணிகளாக அமைந்துள்ள இக்கோயிலில், நாயக்கர் காலம் வரையிலான கட்டட அமைப்புகள் காணப்படுகின்றன.

திருவாலந்துறையார் கோயிலை அடுத்து அமைந்துள்ள மறவனீசுவரமும் பழுவேட்டரையர் காலத்தில் கட்டப்பட்ட கோயிலாகும். மேல்தளங்கள் சிதறி, கட்டடம் சீர்குலைந்த நிலையில் காணப்படும் இக்கோயில் வளாகத்தில் முற்சோழர் கல்வெட்டுகள் சில காணப்படுகின்றன.

மறவனீசுவரத்திற்குச் சற்றுத் தள்ளி அமைந்திருக்கும் கோயில், அழகிய மணவாள சீனிவாசப்பெருமாள் கோயிலென்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் கருவறையும் முகமண்டபமும் 5.3.1974இல் நடந்த குடமுழுக்கின்போது பிரித்துக் கட்டப்பட்டதாகவும் இராச கோபுரம், மகாமண்டபம், அலங்கார மண்டபம், மடைப்

---

5. இரண்டாம் திருமுறை, பதிக எண். 34, பாடல் எண்கள்1-11.

6. S.I.I. Vol. XIX, Ins. No. 384.

பள்ளி, மதில் சுவர்கள் ஆகியன புதிதாகக் கட்டப்பட்டதாகவும் இங்குள்ள கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. இக்கோயிலில் முதல் குலோத்துங்கரின் இருபத்து நான்காம் ஆட்சியாண்டைச் சேர்ந்த துண்டுக் கல்வெட்டொன்று காணப்படுகிறது. இதில் கோயிலின் பெயரேதும் இல்லை. பழுவூரிலுள்ள சோழர் கல்வெட்டுகளுள் இரண்டு, இவ்வூரில் முதல் இராசேந்திரரின் காலத்தில் இருந்த பவித்திரமாணிக்க விண்ணகரையும் முதலாம் குலோத்துங்கரின் காலத்திலிருந்த வீரசோழ விண்ணகரையும் சுட்டுகின்றன. இவ்விரண்டனுள் வீரசோழ விண்ணகரே இன்று அழகிய மணவாள சீனிவாசப்பெருமாள் கோயிலாகப் பெயர் மாற்றமும் உருமாற்றமும் பெற்றுள்ளதோ எனக் கருதவேண்டியுள்ளது. இக்கோயிலில் காணப்படும் முதலாம் குலோத்துங்கரின் துண்டுக் கல்வெட்டு[7] இக்கருத்துக்கு வலிமை சேர்க்கிறது. இந்நாளில் இக்கோயிலைச் சோழர் கோயிலாகக் கருத இக்கல்வெட்டு தவிர வேறு சான்றேதும் இல்லை.

இந்த ஆறு திருக்கோயில்களுள் அழகிய மணவாள சீனிவாசப்பெருமாள் கோயில் தவிர ஏனைய ஐந்தும் பழுவேட்டரையர் காலக் கட்டட அமைப்புகளையும் சிற்பங்களையும் கொண்டுள்ளன. இக்கட்டட அமைப்புகள் குறித்தும் இங்குள்ள பழுவேட்டரையர் காலச் சிற்பங்கள் குறித்தும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுத் தொகுக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் கோயில்வாரியாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

7. A.R.E. 224 of 1926

அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகம்

கீழையூரிலுள்ள அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகம் பழுவேட்டரையர் காலக் கோயில்கள் இரண்டினை உள்ளடக்கியுள்ளது.[1] இவ்வளாகத்தின் கோபுர நுழை வாயில் மேற்கில் உள்ளது.

கோபுரம்

கீழ்த்தளம்

சுதையுருவங்கள் ஏதுமின்றி முத்தளக்[2] கட்டுமானமாய்

---

1. ஒரே வளாகத்தில் இதுபோல் இரண்டல்லது மூன்று கோயில்களை அமைக்கும் பழக்கம் பல்லவர் காலத்திலேயே தொடங்கிவிட்டது. மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்கள் வளாகமும் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் வளாகமும் குறிப்பிடத்தக்கன. கடற்கரைக் கோயில்கள் வளாகத்தில் ராஜசிம்மேசுவரம், நரபதிசிம்ம விஷ்ணு கிருகம், க்ஷத்திரிய சிம்மேசுவரம் என்னும் மூன்று கோயில்கள் ஒன்றன் பின் ஒன்றாய் அமைந்துள்ளன. காஞ்சிபுரத்தில் ஒரே வளாகத்தில் மகேந்திரவர்ம ஈசுவர கிருகமும் கயிலாசநாதர் கோயிலும் ஒன்றன் பின் ஒன்றாய் அமைந்துள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கொடும்பாளூரிலும் இருக்குவேளிர் மரபைச் சேர்ந்த, பூதி விக்கிரமகேசரியால் ஒரே வளாகத்தில் அடுத்தடுத்து மூன்று கோயில்கள் எழுப்பப்பெற்றன. இந்தமுறை பின்னாளிலும் பின்பற்றப்பட்டமைக்குத் திருவையாற்றுப் பஞ்சநதீசுவரர் வளாகத்திலுள்ள வட, தென் கயிலாயங்களும் கங்கை கொண்ட சோழீசுவர வளாகத்திலுள்ள வட, தென் கயிலாயங்களும் சிறந்த சான்றுகளாகும்.

2. பல்லவர் காலக் கோபுரங்களுள் எஞ்சியிருப்பது கயிலாசநாதர் கோயில் கோபுரமே. இது அளவில் மிகச் சிறியதாய் ஒருதளக் கோபுரமாய் அமைந்துள்ளது. கயிலாசநாதர் கோயில் போன்ற கலைச்சிறப்பும் கட்டுமானச் சிறப்புமுடைய கோயில்களுக்கே இத்தகு சிறு கோபுரங்கள் எடுக்கப்பட்டிருப்பதை நோக்கும்போது, பல்லவர் காலத்தே கோபுரங்களைப் பெரிதாக எடுக்கும் பழக்கம் இல்லாதிருந்ததாகவே கொள்ளவேண்டியுள்ளது. முற்சோழர் காலத்துக் கோபுரங்களுள் எதுவும் இன்று பார்வைக்குக் கிடைக்காமையால், தஞ்சாவூர் ராஜராஜீசுவரத்துக் கோபுரங்கள் கொண்டே முற்சோழர் கோபுரங்கள் எப்படி இருந்திருக்க முடியுமென்பதை ஊகிக்க வேண்டியுள்ளது.

நிற்கும் கோபுரத்தின் கீழ்த்தளம் கருங்கற்களாலும் மேல் தளங்கள் செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளன.[3] கோபுரத்தின் இருபுறமும் விரியும் மதிற்சுவர் வளாகத்தின் நாற்புறமும் அரண் போலத் தொடர்ந்து கோயில் வளாகத்தைச் சுற்றுப்புறப் பகுதிகளிலிருந்து தனிமைப் படுத்துகிறது.[4] கோபுரத்துக்கு முன்னால் திறந்தவெளிப் பகுதியும் தென்புறத்தே திருச்சிராப்பள்ளி செயங்கொண்டம் நெடுஞ்சாலையும் வடக்கு மற்றும் கிழக்குப் பக்கங்களில் குடியிருப்புகளும் உள்ளன. வளாக மதிற்சுவர் 1.88மீ. உயரத்திற்குக் கருங்கல் கட்டுமானமாகவும் அதற்குமேல் செங்கற் கட்டுமானமாகவும் உள்ளது.

கோபுரக் கட்டுமானம் மூன்று பத்திகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வாயில் அமைந்திருக்கும் நடுப்பத்தி சாலைப்பத்தி எனவும் அதன் பக்கங்களிலுள்ள பத்திகள் கர்ணபத்திகள் எனவும் அறியப்படும்.[5] சாலைப்பத்தி,

---

3. பெரும்பாலான முற்சோழர் கோபுரங்கள் இத்தகு கலப்புக் கட்டடங்களாகவே அமைந்திருத்தல் வேண்டும். அதனால்தான் அவை சீர்குலைவிற்காளாகித் திருப்பணிகளுக்குட்படுமாறு ஆயிற்று. முதலாம் இராசராசரின் இராஜராஜீசுவரத்துக் கோபுரங்களே இன்றைக்கு நமக்கிருக்கும் சோழர் காலக் கோபுரங்களுள் காலத்தால் பழைமையானவை. இவற்றுள் முதற் கோபுரம் கலப்புக் கட்டுமானம். இராசராசன் திருவாயில் முற்றிலும் கருங்கல் பணி. ப. இராமகிருட்டிணன், இராஜராஜீசுவரத்துத் திருவாயில்கள், பதிப்பிக்கப்படாத கருத்தரங்கக் கட்டுரை, 21 அக்டோபர் 1990.

4. கோயில் சூழ்ந்த இதுபோன்ற மதில்கள் சங்க காலத்திலேயே இருந்துள்ளன. பல்படைப்புரிசை என அவை பாராட்டப்படுகின்றன. பல்லவர் காலத்தில் கோயில் வளாகத்தைச் சூழ மதில் இருந்ததை, மாம்மல்லபுரம் கடற்கரைக் கோயில்கள் வளாகம் கொண்டு தெளியலாம்.

5. கோயில் கட்டடத்தை இப்படிப் பத்திகளாகப் பிரிக்கும் பழக்கம் பல்லவர் காலப் பழைமையது. அருச்சுனர் ரதமென்று அழைக்கப்படும் மாமல்லபுரத்து இருதள ஒரு கல்தளி இத்தகு பத்திப்பிரிப்புக்குட்பட்டிருக்கிறது.

கர்ணபத்திகளினும் பிதுக்கமாக நன்கு வெளித்தள்ளிய நிலையில் காணப்படுகிறது. கோபுரத் தாங்குதளத்தின் கீழ்ப்பகுதி உயர்ந்திருக்கும் நிலமட்டத்தால் மறைக்கப் பட்டுள்ளது. உருள் குமுதத்திலிருந்தே தாங்குதளப்பகுதி பார்வைக்குக் கிடைக்கிறது. இதன்மீது பிரதிவரி காட்டப்பட்டுள்ளது. பிரதிமுகங்கள் பெரும்பாலும் சிதைந்துள்ளன. இப்பிரதிபந்தத் தாங்குதளத்திற்கு[6] மேல் சற்று உள்ளடங்கிய நிலையில் கம்பும் அதன் மீது நான்முக அரைத்தூண்கள் கொண்ட சுவரும் காட்டப்பட்டுள்ளன. தூண்கள், கால், மாலைத்தொங்கல், தானம், தாமரைக்கட்டு, கலசம், தாடி, கும்பம், கண்டம், பாலிகை, பலகை,

---

6. தமிழகத்துப் பழங்கோயில்களில் பொதுவாகப் பாதபந்தம் அல்லது பிரதிபந்தம் என்னும் இருவகைத் தாங்குதள அமைப்புகளே காணப்படுகின்றன. இவற்றுள் பிரதிபந்தத் தாங்குதளம் பல்லவரின் கடற்கரைக் கோயில்களுள் இராஜசிம்மேசுவரம், க்ஷத்திரிய சிம்மேசுவரம் ஆகிய இரண்டிலும் அமைந்துள்ளது. இத்தாங்குதள அமைப்பில் ஜகதி, உருள் குமுதம், பிரதிவரி என்பன அமையும். பிரதிவரியில் ஆலிங்கம், அந்தரி, பிரதிமுகம், வாஜனம் என்னும் உறுப்புகள் இடம்பெறும். கயிலாசநாதர் கோயில், முக்தேசுரம் போன்ற பல்லவர் கோயில்களில் பாதபந்தத் தாங்குதளம் காட்டப்பட்டுள்ளது. இது ஜகதி, எண்பட்டைக் குமுதம், பாதங்களும் மேலும் கீழும் இரு கம்புகளும் கொண்டமைந்த கண்டம், பட்டிகை எனும் உறுப்புகளால் ஆனது. முற்சோழர் காலத்தில் இவ்விருவகைத் தாங்கு தளங்களுமே காணப்பட்டாலும் பெரும்பாலும் பாதபந்தத் தாங்குதளமே விரும்பி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜீயபுரத்துத் திருச்செந்துறைப் பெருமானடிகள் கோயில், வாலிகண்டபுரத்துத் திருவாலீசுவரர் திருக்கோயில், சீனிவாசநல்லூரிலுள்ள குரங்கநாதர் கோயில், திருநாமநல்லூர் திருத்தொண்டீசுவரர் கோயில், புள்ளமங்கை ஆலந்துறையார் கோயில் போன்றவற்றில் பிரதிபந்தத் தாங்குதளம் காட்டப்பட்டுள்ளது. இவை கீழையூர்க் கோயில்களின் தாங்குதளங்களை ஒத்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

வீரகண்டம் என்னும் உறுப்புகள் பெற்று அமைந்துள்ளன.[7] வீரகண்டத்திலிருந்து கிளைக்கும் குளவுடன் கூடிய தரங்கப் போதிகைகள்[8] நடுவில் பட்டையுடன் உத்திரம் தொடுகின்றன. உத்திரத்தையடுத்து வாஜனமும் அதற்கு மேலாக

---

7. சுவர்களில் அமையும் அரைத்தூண்கள் பொதுவாக நான்முகத் தூண்களாகவே (பிரம்மகாந்தம்) முற்சோழர் கோயில்களில் காணப்படுகின்றன. சில இடங்களில் எண்முகத் தூண்களும் (விஷ்ணுகாந்தம்) காணப்படுகின்றன. தேவகோட்ட அணைவுத் தூண்களாக நான்முகத் தூண்கள் அல்லது உருளைத் தூண்கள் (ருத்ரகாந்தம்) காட்டப்பெற்றுள்ளன. இம்மூவகைத் தூண்களும் பல்லவர் காலத்திலேயே காணப்பெறுவது குறிப்பிடத்தக்கது. தூண்களின் உறுப்புகள் அவற்றின் முகங்களுக்கேற்ப வடிவு பெற்றாலும் மூவகைத் தூண்களும் ஒன்று போல உறுப்புகள் பெற்றமைந்துள்ளன. அரைத்தூண் பெறும் இவ்வுறுப்பு லட்சணங்கள் மயமதத்தில் கூறப்பட்டுள்ளன. (மயமதம் தஞ்சாவூர், ஸரஸ்வதி மஹால் வெளியீடு, 1966), ப-ள் 185-200.

8. மகேந்திரவர்மரின் தொடக்க காலக் குடைவரைகளில் காணப்படும் போதிகைகள் வெறுமையாக உள்ளன. திருச்சிராப்பள்ளி லளிதாங்குர பல்லவேசுவர கிருகம், தளவானூர் சத்ருமல்லேசுவரம் போன்ற குடைவரைகளில் இப்போதிகைகள் தரங்கம் எனப்படும் அலையெழுச்சிகளைப் பெற்றுள்ளன. இத்தரங்கங்களின் நடுப்பகுதியில், மேலிருந்து கீழாகக் கொடிக்கருக்குகளுடன் கூடிய பட்டையொன்றும் மகேந்திரர் காலத்திலேயே இடம்பெறுவதை லளிதாங்குர பல்லவேசுவர கிருகத்தில் காணமுடிகிறது. தொடர்ந்து பல்லவர் கோயில்கள் பலவற்றிலும் தரங்கப் போதிகைகளே, பட்டை பெற்றும் இல்லாமலும் இடம்பெற்றுள்ளன. சில இடங்களில் வெறுமையான போதிகைகளும் காணப்படுகின்றன.

முற்சோழர் காலத்தே போதிகைகளின் கிழ்க்கைகள் மேற்கைகளாகத் திரும்பும் இடத்தில் எழுச்சிகளின் ஊடே ஒரு தாழ்ச்சியும் காட்டப்பட்டுள்ளது. அலையெழுச்சிகளினிடையே காணப்படும் இத்தாழ்ச்சியையே குளவு என்னும் கலைச்சொல்லால் குறிக்கிறோம். திருப்பணிகளுக்கு ஆளாகாத முற்சோழர் கோயில் கட்டுமானங்கள் அனைத்திலும் போதிகைகளில் இத்தகு குளவுகளைக் காணமுடிகிறது.

வலபியும் காணப்படுகின்றன.[9] வலபிப்பகுதியில் கோபுர வாயிலுக்கு மேல் மட்டும் கிழக்கிலும் மேற்கிலும் பூதவரி காணப்படுகிறது.[10] இவ்வரிமானத்திலுள்ள பூதங்கள் ஆடல் மற்றும் இசைக் கலைஞர்களாய்த் தோற்றமளிக்கின்றன. இவ்வரிமானத்தின் வட, தென் திருப்பங்களில் பாயும் யாளிகளும், போதிகை மேலமர் வாஜனப்பகுதிகளில் எட்டிப் பார்ப்பது போல் பூதங்களும் காட்டப்பட்டுள்ளன. வாயிலையொட்டிய வட, தென் வலபித் திருப்பங்களில் மேற்கில் யாளிவரியுள்ள கற்களும் ஒன்றிரண்டு கணங்களும் காணப்படுகின்றன. கிழக்கில் இருபுறமும் பூமிதேசப் பகுதிகள்[11] இடைச் செருகல்களாய்க் காணப்படுகின்றன. கோபுரத்தை மறு கட்டுமானம் செய்த காலத்தில் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்கலாம்.

---

9. போதிகைகளுக்கு மேல் அமரும் உத்திரமும் அதையடுத்தமரும் வாஜனம், வலபி போன்றவையும் கூரையுறுப்புகளாகக் கொள்ளப்படும். இவை பல்லவர்களின் தொடக்கக் காலக் குடைவரைகளிலேயே காட்டப்பெற்றுள்ளன. மாமண்டூர் குடைவரைகளைச் சான்றாகக் கொள்ளலாம்.

10. வலபிப்பகுதியில் பூதவரி காட்டும் பழக்கம் இராஜசிம்மர் காலத்தில் தோன்றியதாகும். மகேந்திரருடையதாகக் கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு மெய்ப்பிக்கப்பட்டிருக்கும் எந்தக் குடைவரையின் வலபிப்பகுதியிலும் வரிமானச் சிற்பங்கள் இடம்பெறவில்லை. இராஜசிம்மருடையதாகக் கருதப்படும் ஒருகல் தளிகளிலும் (கொற்றவைக் கோயில்) குடைவரைகளிலுமே (இராமானுஜர் குடைவரை, வராகர் குடைவரை) முதல்முறையாக வலபிப்பகுதியில் பூதவரிகளைப் பார்க்கமுடிகிறது. பாண்டியர் பகுதியில் கழுகுமலை ஒருகல் தளியான வெட்டுவான் கோயிலில் பூதவரிமானம் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

11. பூமிதேசம் என்பது தளமுடிவைக் காட்டும் வரிமானத் தொடராகும். பொதுவாக இது யாளிவரித் தொடராகவே அமைந்துள்ளது. இதன் தொடக்க நிலையைத் தளவானூர்க் குடைவரையின் முகப்பு நெற்றியில் காணலாம். இதன் வளர்நிலைகளை மாமல்லபுரத்துக் குடைவரைகளிலும் ஒருகல் தளிகளிலும் பார்க்கமுடிகிறது. இதன் நிறைநிலை பல்லவர் கற்றளிகளில் பரிணமித்துள்ளது.

பூதவரிக்கு மேல் கபோதம், கூரையின் முன்னிழுப் பாய்க் காட்டப்பட்டுள்ளது.[12] தொடர்ச்சியற்றுக் காணப்படும் இக்கபோதப்பகுதி மறு கட்டுமானத்தின் விளைவாகலாம்.

நுழைவாயில்

கோபுரத்தில் சாலைப்பகுதியில் அமைந்துள்ள நுழைவாயில் கீழ், மேல் நிலைகளும் திருநிலைக்கால்களும் கொண்டு விளங்குகிறது. இவ்வாயிலின் அகலம் 1.21மீ. உயரம் 2.10மீ. திருநிலைக்கால்களின் வெளி விளிம்பு இரு பிரிவுகளாக்கப்பட்டு வெளிப்பிரிவில் அடர்த்தியான கொடிக்கருக்குகள் அழகுறக் காட்டப்பட்டுள்ளன. இந்தக் கருக்குகளின் தொடர்ச்சியாய்ச் சில கொடியிழைகள் உட்பிரிவிலும் படர்ந்துள்ளன. மேல்நிலைக்கு மேலே பாதங்களுடன் கூடிய கண்டப்பகுதி காட்டப்பட்டுள்ளது.[13] வாயிலையொட்டி அமைந்துள்ள இரண்டு நான்முக அரைத்தூண்களும் உரிய உறுப்புகள் அனைத்தும் பெற்று முத்தலைப் போதிகைகளுடன்[14] உத்திரம் தாங்குகின்றன. இப்போதிகைகள் அனைத்தும் தரங்க எழுச்சிகளும் குளவும் பெற்று, நடுவில் பட்டையுடன் அமைந்துள்ளன.

---

12. கபோதம் என்பது இந்நாளைய கட்டடங்களில் காணப்படும் வெயில் மற்றும் மழைத்தடுப்புப் போன்றதாகும். கூரையின் முன்னிழுப்பாய் வளைத்துக் காட்டப்படும் இவ்வுறுப்பினைப் பல்லவர் குடைவரைகளில் பார்க்கமுடிகிறது. நன்கு வடிவமைக் கப்பட்ட கபோதத்தைத் தளவானூர் சத்ருமல்லேசுவரம் கொண்டுள்ளது. இக்கபோதத்தில் அருமையான கூடுகளும் வளைவுத் தோரணங்களும் கூடுகளுள் சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன.

13. இது போன்ற வாயிலமைப்பு பல்லவர் காலத்தில் மலையடிப்பட்டியில் அமைக்கப்பெற்ற ஒளிபதி விஷ்ணு கிருகமென்னும் குடைவரையில் காணப்படுகிறது. இக்கலைமுறை பின்னாளிலும் பின்பற்றப்பட்டதற்குச் சுந்தர சோழர் காலக் கட்டுமானமான பெருங்குடி பெருமுடியீசுவரர் கோயில் கருவறை வாயிலைச் சான்றாகக் கொள்ளலாம்.

இத்தூண்களை அடுத்துள்ள கோட்டங்களில் வடபுறம் ஒன்றும் தென்புறம் ஒன்றுமாய் இரு வாயிற்காவலர் சிற்பங்கள்[15] காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் கருங்கல் தளமொன்றின் மீது நிற்குமாறு செய்யப்பட்டுள்ளன. பிற்காலத்தில் இக்கோட்டங்களின் பக்கவாட்டில், சுவர்ப்புறத்தே, காரையாலும் செங்கல்லாலும் இரு உருளை

---

14. பொதுவாகப் போதிகைகள் அரைத்தூண்களின் மேலுறுப்பான வீரகண்டத்தின் மேற்பகுதியில் அதன் இருபுறமிருந்தும் இரு கைகளெனக் கிளைக்கும். மூன்றாவது வீரகண்டத்தின் முன்புறமிருந்து கிளைப்பது போல் காட்டப்பட்டிருக்கும். இப்படி மூன்று போதிகைக் கைகள் ஓர் அரைத்தூணிலிருந்து கிளைப்பதையே முத்தலைப் போதிகை என்கிறோம். இதுபோன்ற முத்தலைப் போதிகை அமைப்புமுறைகளைப் பல்லவர் குடைவரைகளிலேயே பார்க்கலாம். தளவானூர் சத்ருமல்லேசு வரத்திலுள்ள முகப்பு மண்டபத் தூண்கள் இத்தகு முத்தலைப் போதிகைகளைக் கொண்டுள்ளன. பாண்டியர் பகுதியில் திருக்கோளக்குடிக் குடைவரையின் கருவறை முன்சுவரில் உள்ள அரைத்தூண்கள் இத்தகு முத்தலைப் போதிகைகளைக் கொண்டமைந்துள்ளன. மாமல்லபுரத்து ஒருகல் தளிகளிலும் இக்கலைமுறையைக் காணமுடிகிறது. இது முற்சோழர்காலத்தில் தொடரப்பெற்றது.

15. தமிழ்நாட்டின் முதற் குடைவரையாகக் கருதப்படும் மண்டகப் பட்டுக் குடைவரையிலேயே வாயிற்காவலர் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை குடைவரையின் வெளிச்சுவர்க் கோட்டங்களில் காணப்படுவது போலவே, நாளடைவில் கருவறைப் புறச்சுவர்க் கோட்டகளிலும் இடம்பெறலாயின. சியமங்கலம் அவனிபாஜன பல்லவேசுவர கிருகம், செவல்பட்டிக் குடைவரை, மாமண்டூர்க் குடைவரைகள் போன்றவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

குடைவரையின் வெளிச்சுவர்க்கோட்டங்களில் இடம்பெற்றாற் போலவே, பின்னாளில் கோபுரங்கள் வழக்கிற்கு வந்த நிலையில், கோபுரவாயில்களில் வாயிற்காப்போர் சிற்பங்கள் நிறுத்தப்பட்டன. முதலாம் ஆதித்தர் காலக் கோயிலான திருநெடுங்களநாதர் கோயில் கோபுரம், திருப்பணிகளுக்கு ஆளானபோதிலும் முற்சோழர் கால வாயிற்காப்போரையே கோபுரத்தில் கொண்டுள்ளமை இங்கு எண்ணத்தக்கது. முதலாம் இராசராசரின் இராஜராஜீசுவரத்திலும் இம்முறை பின்பற்றப்பட்டுள்ளது.

வடிவிலான அரைத்தூண்களைக் காட்டி, அவற்றின் மேல் அலங்காரமற்ற வளைவொன்றை அமைத்துள்ளனர். இவ்வரைத்தூண்களின் கலசப் பகுதியில் பூவேலை காட்டப்பட்டுள்ளது.

கோபுரத்தின் கிழக்குச் சுவரிலும் மேற்கிலிருப்பது போலவே இரண்டு கோட்டங்கள் காணப்படுகின்றன. இவை சிற்பங்கள் ஏதுமின்றி வெறுமையாக உள்ளன. இங்கு வாயிலை அடுத்துள்ள நான்முகத் தூண்களுக்கு முன்னால் செங்கல் மற்றும் காரையால் இரண்டு பெருந்தூண்கள் எடுத்து, மேலே வளைவுத் தோரணம் காட்டியுள்ளனர். இது பல இடங்களில் சிதைந்துள்ளது.

கபோதத்திற்கு மேல் பூமிதேசத்திற்குப் பதிலாகக் கல்லடுக்கொன்று காணப்படுகிறது. இங்கு இருந்திருக்க வேண்டிய பூமிதேசம், கோபுரச் சீரமைப்பின்போது இடம்மாறியும் சிதைந்தும் போனதை வலபிப்பகுதியின் சில இடங்களில் இப்பூமிதேசப் பகுதி இடம்பெற்றிருப் பதிலிருந்து அறியலாம்.

ஆர உறுப்புகளும் மேல்தளங்களும்

கிழ்த்தளக் கூரையின் மேல் ஆர உறுப்புகளாக[16] ஓரங்களில் கர்ணகூடங்களும் நடுவில் சாலையும் அமைந்துள்ளன. இவற்றுள் கர்ணகூடங்களைவிடச் சாலை சற்று முன்தள்ளிய நிலையில் பிதுக்கமாய்க் காட்டப்

---

16. விமானக் கிழ்த்தளக் கூரையின் மீது ஆர உறுப்புகளை அமைக்கும் பழக்கம் பல்லவர் குடைவரைகளிலேயே தொடங்குகிறது. வராகர் குடைவரை, பஞ்சபாண்டவர் குடைவரை போன்றவற்றின் முகப்புக் கூரையின் மேலே உள்ள நெற்றிப்பகுதியில் ஆர உறுப்புகள் காட்டப்பட்டுள்ளன. ஒருகல் தளிகளிலும் பல்லவர் கற்றளிகளிலும் இவை சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன. இவ்வார உறுப்புகள் கர்ணகூடங்கள், பஞ்சரங்கள், சாலைகள் என மூவகைப்படும். இவற்றை இணைக்கும் பிடிச்சுவர் ஆரச்சுவர் (ஆராந்தரம்) எனப்படுகிறது. ஆர உறுப்புகளுள் கர்ணகூடங்கள் கர்ணபத்திகளின் மேலும்,

பட்டுள்ளது. கர்ணகூடங்களுக்கும் சாலைக்கும் இடைப் பட்ட பகுதிகளில் பஞ்சரங்கள் காட்டப்பட்டுள்ளன. இந்த ஆர உறுப்புகளுக்கு இடையே இவற்றை இணைக்கும் பிடிச்சுவர், நாசிகைகளுடன் அமைந்துள்ளது. இதை ஆரச்சுவர் என்பர். ஆர உறுப்புகளுக்குப் பின்னால் கோபுரக் கட்டுமானத்தின் இரண்டாம் தளம் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு அரமியம் என்று பெயர்.[17] அரைத்தூண்கள்

அதாவது கட்டடத்தின் ஓரப்பகுதிகளிலும் சாலைகள் சாலைப்பத்திகளின் மீதும், அதாவது கட்டடத்தின் மையப் பகுதிகளிலும் அமரும். இவை அவ்வப் பத்திகளின் மேலுறுப்புகளாகும். கர்ணகூடங்கள் பொதுவாக நாகரமாய் அமையச் சாலைகள் செவ்வகமாய் அமையும். கர்ணகூடங்களுக்கும் சாலைகளுக்கும் இடைப்பட்ட பகுதியில், சில கட்டுமானங்களில், பஞ்சரங்கள் என்னும் சிறிய அளவிலான கட்டட உறுப்பு இடம்பெறும், இவற்றை முதல்முதலாக, தர்மராசர் ரதத்திலும் நகுல சகாதேவர் ரதத்திலும் பார்க்கமுடிகிறது. கர்ணகூடம், சாலை, பஞ்சரம் ஆகியவற்றைச் சிறிய அளவிலான திருமுன்களாகக் கருதுவாரும் உண்டு. (K.R. Srinivasan, Temples of South India, New Delhi, National Book Trust, 1985 pp.88, 211-213).

17. விமானத்தின் உயரத்தைக் கூட்டுவதற்காகத் தளங்களை அதிகப்படுத்தும் முறை கையாளப்பட்டது. இதற்காக விமானக் கீழ்த்தளக் கூரையின் மேல் உள்ளடங்கிய நிலையில் ஆர உறுப்புகளின் பின்னால் இரண்டாம் தளமும் அதன் கூரை மீது மூன்றாம் தளமும் என விழைவுக்கேற்ப தளங்கள் அமைக்கப்பட்டன. கீழ்த்தளத்திற்கு மேலமைக்கப்பட்ட இத்தகு தளங்கள் அனைத்தும் தாங்குதள அங்கமின்றிச் சுவர், கூரையுறுப்புகள் என்னும் இரண்டு அங்கங்கள் மட்டுமே கொண்டு கட்டப்பெற்றன. இக்கட்டுமானங்களை அரமியம் என்பர். பல்லவர் ஒருகல் தளிகளான அருச்சுனர் ரதத்திலும் தர்மராசர் ரதத்திலும் முதல்முறையாக இதுபோன்ற தளக் கட்டுமானங்களைக் காணமுடிகிறது. இவற்றின் வளர் நிலைகளைப் பல்லவர் கற்றளிகள் கொண்டுள்ளன. தளங்களின் எண்ணிக்கைக்கேற்ப இவ்விமானங்கள் ஒரு தள, இரு தள, முத்தள மற்றும் பல தள விமானங்களாய்ப் பெயர் பெற்றன. இதே அமைப்புமுறை கோபுரக் கட்டுமானத்திற்கும் பொருந்தும்.

பொருந்திய தளச் சுவரும் கூரை உறுப்புகளும் கொண்டு கபோதத்துடன் முடியும் இத்தளத்தின் பூமிதேசப்பகுதிக்குச் சற்று உட்தள்ளி இரண்டாம் தள ஆர உறுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தளக் குறுக்கம் காரணமாக கீழ்த்தள ஆர உறுப்புகளைவிட இவை சற்று அளவில் சிறுத்துக் காணப்படுகின்றன. இவற்றின் பின்னே கோபுரத்தின் மூன்றாம் தள எழுச்சியைக் காணமுடிகிறது.

கிரீவம். சிகரம். தூபி

மூன்றாம் தளக் கூரையின் மேல் கிரீவமும்[18] அதன்மேல்

---

18. விமானம் அல்லது கோபுரக் கட்டுமானத்தின் இன்றியமையாத உறுப்புகளுள் கிரீவமும் ஒன்றாகும். ஒரு தள விமானக் கட்டுக்கோப்பின் ஆறு அங்கங்களுள் இது நான்காம் அங்கமாகத் தளக் கூரையின் நடுப்பகுதியில் அமையும். பல தளங்கள் அமையப்பெறும் நிலையில் மேல்தளக் கூரையின் நடுப்பகுதியில் வேதிகையொன்றின் மீது இவ்வுறுப்பு அமைக்கப்பெறும். சுவர்ப்பரப்பு, கூரையென அமையும் கிரீவம், சிகரத்தின் வடிவையே மேற்கொள்ளும். கோபுரங்களின் சிகரம் சாலையாக இருப்பதால் இங்கு கிரீவமும் சாலையாக, அதாவது செவ்வக வடிவில் அமைகிறது. இக்கிரீவ சுவர்களின் நான்கு முதன்மைத் திசைகளிலும் கோட்டங்கள் அமைத்துச் சிற்பங்கள் இருத்துவது விமானக் கட்டுமானங்களில் பரவலாகப் பின்பற்றப்பட்டுள்ளது. பல்லவர், முற்சோழர் காலக் கோபுரக் கட்டுமானங்கள் ஏதும் இன்று இல்லாத நிலையில் அக்காலகட்டங்களில் கோபுர கிரிவங்களில் கோட்டங்கள் அமைத்துச் சிற்பங்கள் இருத்தப்பட்டனவா என்பதை அறியக்கூடவில்லை. இராஜராஜீசுவரக் கோபுரங்களில் கிரீவ சுவர்களின் இருபுறத்தும் சிற்பங்கள் காட்டப்பட்டிருந்த போதும், நாற்றிசைக் கோட்டச் சிற்பங்கள் இடம்பெறாமை, இப்பழக்கம் முற்சோழர் காலத்து இடம்பெற்றிருக்க வாய்ப்பில்லை என்றே கருதவைக்கிறது. ஆனால் கீழையூர்க் கோபுரத்தில் கிரீவ கோட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. இது பின்னாள் திருப்பணியின் விளைவாகலாம்.

சாலை சிகரமும்[19] அமைந்துள்ளன. கிரீவத்தின் நாற்புறமும் மகாநாசிகைக் கோட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. கிழக்கிலும் மேற்கிலும் மட்டும் இவற்றின் இருபுறமும் அல்பநாசிகைகள் உள்ளன. வடக்கிலும் தெற்கிலும் உள்ள மகாநாசிகைகளின் மேல்வளைவுகள் கீர்த்திமுகங்களாய்க் காட்டப்பட்டுள்ளன. இம்மகாநாசிகைகள் அனைத்துமே தெய்வ உருவங்கள் ஏதுமின்றி வெறுமையாக உள்ளன. சாலை சிகரத்தின் மேல் ஐந்து தூபிகள் செங்கல்லாலேயே அமைக்கப்பட்டுள்ளன.[20]

கோயில் வளாகம்

கோபுரவாயில் வழி உள் நுழைந்ததும் எதிரிலுள்ள தென்வாயில் ஸ்ரீகோயிலே முதலில் கண்களில் படுகிறது. வாயிலுக்கு நேரே அமைந்துள்ள இக்கோயிலின் முன்னால் கொடித்தளமும்[21] நந்திமேடையும் உள்ளன.

---

19. கிரீவத்தின் மேலமரும் உறுப்பே சிகரமாகும். இது விமான, கோபுரக் கட்டுமானங்களில் தவிர்க்கமுடியாத ஓர் உறுப்பாகும். கோபுரச் சிகரங்கள் சாலை வடிவில் செவ்வகமாகவே அமையும்.

20. கோபுர சிகரத்தின் மீதமையும் தூபிகள் தளக் கட்டுமானத்தைப் பொறுத்துக் கல் அல்லது செங்கல் கொண்டு அமைக்கப்பெறும். இம்மரபு முதலாம் இராசராசர் காலம்வரை பின்பற்றப்பட்டமைக்கு இராஜராஜீசுவரத்துக் கோபுரக் கலசங்களே சான்றாகும். (ப.இராமகிருட்டிணன், இராஜராஜீசுவரத்துத் திருவாயில்கள், கட்டுரை, 21 அக்டோபர் 1990.) சாலை விமானத் தூபிகளைப் பல்லவர் கால பீம, கணேசர் ரதங்களில் காணலாம். இவையே காலத்தால் முற்பட்ட சாலைச் சிகரங்கள். பின்னாளில் தூபிகளை அமைக்கச் செப்புக் குடங்களும் பயன்படுத்தப்பட்டன.

21. கோயில் வளாகத்திலிருந்த கொடிமரத்தில் விழா நாளன்று கொடியேற்றும் பழக்கமும் அதை மக்கள் தொழுது வணங்குவதும் சங்க காலத்திலிருந்தே தொடர்ந்துவரும் நடைமுறையாகும். பட்டினப்பாலை, அடிகள் 159-160. இப்பழக்கம் பல்லவர் காலத்தில் பின்பற்றப்பட்டமைக்கு மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் வளாகத்தில் இருக்கும் கொடித்தளங்கள் சான்றாகின்றன. முற்சோழர் காலத்திலும் இம்மரபைப் பின்பற்றிக் கோயில்களில் கொடித்தளங் களை நிறுவினார்கள்.

கொடித்தளம்

கொடித்தளத்தின் கீழ்ப்பகுதி தரைக்குக் கீழ் மறைந்துள்ளது. தரைமட்டத்திற்கு மேலே கண்டப்பகுதியும் பட்டிகையும் மட்டுமே பார்வைக்குக் கிடைக்கின்றன. பட்டிகையின் மேற்கு முகப்பில் சிதைந்த நிலையில் காணப்படும் கல்வெட்டு இக்கொடித்தளத்தைப் பழுவேட்டரையரின் கைக்கோளப் படைப்பிரிவைச் சேர்ந்த மாதேவன் இரணமுகராமன் எடுப்பித்த தகவலைத் தருகிறது.[22] தளத்தின் நடுவில் வேசர பீடத்தின் மேல் விரிந்த தாமரை போல் வடிவமைக்கப்பட்ட கல்லமைப்பு இருத்தப்பட்டுள்ளது.

நந்திமேடை

கொடித்தளத்திற்கு நேர் கிழக்கில் நந்திமேடை[23] காணப்படுகிறது. இம்மேடைத்தளத்தின் கீழ்ப்பகுதியும்

---

22. இரண்டு வரிகளில் அமைந்துள்ள இக்கல்வெட்டின் தொடக்க எழுத்துகள் சிதைந்துள்ளன.

 1 [ஸ்வ]ஸ்திஸ்ரீ அடிகள் பழுவேட்டரையர் கைக்கோள

 2 மாதேவந் இரணமுகராமன் எடுப்பித்த துவஜபீடம்

 என்பது கல்வெட்டுப் பாடமாகும். முற்சோழர் காலக் கோயில்களுள் கல்வெட்டுடன் அமைந்துள்ள ஒரே கொடித்தளம் இதுதான். மாமல்லபுரத்துப் பல்லவர் கொடித்தளங்களில் அரசரின் விருதுப் பெயர்கள் பல்லவ கிரந்தத்தில் இடம்பெற்றிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

23. கோயில் வளாகத்தில் அவ்வக்கோயில் இறைக்குரிய வாகனங்களின் சிற்பங்களை அமைக்கும் பழக்கம் பல்லவர் காலத்திலேயே இருந்துள்ளமையை மாமல்லபுரம் ஒருகல் தளிகளுக்கு முன்னால் இருக்கும் நந்தியும் சிம்மமும் உணர்த்தவல்லன. காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலின் சுற்று வளாகத்தில் சிவபெருமானின் வாகனமான நந்தி பல இடங்களில் காணப்படுகிறது. வாகனத்தை இறைக்கோயில் விமானத்தின் முன் தனிமேடையமைத்து அமைக்கும் பழக்கம் பாண்டியர் குடைவரைகளிலும் முத்தரையர் குடைவரைகளிலும் காணப்படுகிறது. திருக்கோளக்குடிக் குடைவரையில் கருவறைக்கு முன்னால் குடைவரையின் முகமண்டபப் பகுதியில் பாறையிலேயே உருவாக்கப்பட்டுள்ள நந்தி காணப்படுகிறது. மலையடிப்பட்டியிலுள்ள தந்திவர்மர் கால முத்தரையர் குடைவரையிலும் இதுபோலவே கருவறைக்கு முன்பாகத் தனிமேடையில் நந்தி குடைவரையின் அங்கமாகவே உருவாக்கப்பட்டுள்ளது. இம்முறை முற்சோழர் காலத்தில் பின்பற்றப்பட்டதெனலாம்.

தரைக்குள் மறைந்துள்ளது. கீழே கபோதப் பகுதிகளும் மேலே எண்பட்டைக் குமுதமுமாய் அமைந்துள்ள தளத்தின் மேற்பரப்பில் சற்றே புதைந்த நிலையில் நந்தியொன்று சிறிய, வளைந்த கொம்புகளுடன் காணப்படுகிறது. கொம்புகளைச் சுற்றி வளைந்திறங்கும் நெற்றிப் பட்டத்திலிருந்து இரண்டு செவிகளையும் தழுவுமாறு, தொங்கும் குஞ்சலங்கள் கன்னப்பகுதிகளைத் தொட்டவாறு உள்ளன. கழுத்தில் இரண்டு மணிமாலைகள். ஒன்று இரட்டை வட ருத்திராக்க மாலையாய்க் கழுத்தைச் சுற்றியும் அமைந்து, கீழே சிங்கமுகப் பதக்கத்தில் முடிகிறது. மணிச்சரங்களும் தோரண வளையங்களும் மாறிமாறி விளங்கும் மற்றொரு மாலை, இந்த ருத்திராக்க மாலையின் கீழ், பொலிவுடன் காட்டப்பட்டுள்ளது. கிழக்கு நோக்கிய நிலையில் கால்களை மடக்கியபடி அமர்ந்திருக்கும் இந்த நந்தி சோழர் காலத்தது.

வளாகக் கட்டடங்கள்

நந்தி மேடைக்கு எதிரில் தென்வாயில் ஸ்ரீகோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் வடபுறத்தே வடவாயில் ஸ்ரீகோயில் வேசர சிகரத்துடன் காட்சியளிக்கிறது. இவ்விரண்டு கோயில்களையும் சுற்றியுள்ள நிலப்பரப்பில் ஏழு கட்டட அமைப்புகள் உள்ளன. இவற்றுள் ஆறில் இறைத்திருமேனிகள் உள்ளன. வளாகத்தின் தென்கிழக்கு மூலையில் மதிலையொட்டி அமைந்துள்ள செவ்வக வடிவிலான கட்டடம் முற்றிலும் உருமாறி நாயக்கர் காலக் கலையமைப்புடன் காட்சியளிக்கிறது. இது ஒரு காலத்தில் சுற்றாலைத் திருமுன்னாக இருந்திருக்கலாம். இக்கட்டடத்தின் தாங்குதளப்பகுதி முழுவதுமாய் நிலத்துக்கடியில் புதைந்துள்ளது.

ஏனைய ஆறு கட்டடங்களுள் ஐந்து, சுற்றாலைத் திருமுன்களாகவும் (பரிவார தேவதைகளின் கோயில்கள்) ஒன்று தென்வாயில் ஸ்ரீகோயிலுக்குரிய அம்மன் கோயிலாகவும் விளங்குகின்றன.

அ. சுற்றாலைத் திருமுன்கள்

கோயில் வளாகத்தில் மையக் கோயிலைச் சுற்றியுள்ள சுற்றுவெளிப் பகுதியில் மதிலுக்கு உட்பட்டமையும் சிறிய அளவிலான விமானங்களைச் சுற்றாலைக் கோயில்கள் என்பர். பல்லவர் காலக் கோயில்களுள் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் மட்டுமே சுற்றாலைத் திருமுன்கள் காணப்படுகின்றன.

மையக்கோயிலைச் சுற்றியுள்ள திருச்சுற்றில் எட்டுப் பரிவாரக் கோயில்கள் எடுக்கும் பழக்கம் முற்சோழர் காலத்தில் தொடங்கப்பெற்றதெனலாம். முதற்பராந்தகரின் எறும்பூர்க் கல்வெட்டு இதனை உறுதிப்படுத்தும்.[24] விஜயாலய சோழீச்சுவரத்தைச் சுற்றி எட்டுப் பரிவாரக் கோயில்கள் அமைந்திருந்ததாக எஸ்.ஆர். பாலசுப் பிரமணியம் கருதுகிறார். இவற்றுக்குரிய தெய்வங்களாகச் சூரியன், அன்னையர் எழுவர், பிள்ளையார், முருகன், ஜேஷ்டை, சந்திரன், சண்டேசுவரர், பைரவர் ஆகிய இறைவடிவங்களை அவர் சுட்டுகிறார்.[25]

1. கட்டட அமைப்பு

கீழையூர்க் கோயில் சுற்றுவெளியில் முருகன், பிள்ளையார், அன்னையர் எழுவர், சூரியன், சண்டேசுவரர் என்னும் ஐந்து தெய்வங்களுக்குரிய பரிவாரக் கோயில்களே இன்று காணப்படுகின்றன. இவற்றுள் உரிய இறைத்திருமேனிகளும் உள்ளன. இவ்வளாகத்தில் உள்ள அம்மன் கோயிலும் செவ்வக மண்டபமும் பழுவேட்ட ரையர் காலத்தில் பரிவாரக் கோயில்களாக இருந்திருக் கலாம். காலப்போக்கில் உருமாறி, பயன்மாறிப்போன இவற்றுள் ஜேஷ்டைதேவியும் பைரவரும் பழுவேட்டரையர் காலத்தில் இடம்பெற்றிருக்கக்கூடும். இக்கருத்தை

24. A.R.E. 384 of 1913.
25. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், ப-ள். 77-78.

உறுதிப்படுத்துமாறு போல இக்கோயில் வளாகத்தில் ஜேஷ்டைதேவியின் சிற்பமொன்று தனிச்சிற்பமாய் வளாகத்தின் வடவெளியில் மரத்தடியில் காணப்படுகிறது. அதேபோல் பைரவரின் சிற்பமொன்றும் தென்வாயில் ஸ்ரீகோயில் மகாமண்டபத்தில் காணக்கிடக்கிறது.

i) *முருகன் திருமுன்*

இப்பரிவாரக் கோயில்களுள் கோபுரத்தையொட்டி அதன் வடபுறத்தே மதிலோடு ஒன்றிய நிலையில் காணப்படும் முருகன் திருமுன், விமானம், முகமண்டபம்[26] என்ற அமைப்பில் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. விமானம் ஒரு தள நாகரமாய்[27] பிரதிபந்தத் தாங்கு தளத்துடன் அமைந்துள்ளது. தாங்குதளத்தின் பெரும்பகுதி

---

26. தொடக்கக் காலக் குடைவரைகளிலேயே கருவறை, முகமண்டபம் என்ற அமைப்பு காணப்படுகிறது. மண்டகப்பட்டு, வல்லம், மாமண்டூர்க் குடைவரைகள் இதற்குச் சான்றுகளாகும். ஒருகல் தளிகளில் விமானமும் முகமண்டபமும் கொண்டமைந் துள்ளனவாய் அருச்சுனர் ரதம், கணேசர் ரதம், போன்றவற்றைக் குறிப்பிடலாம். விமானத்தின் முன்னிருக்கும் மண்டபத்தையே முகமண்டபமென்றும் அர்த்த மண்டபமென்றும் (உள் மண்டபம்) கூறுவர். தொடக்கக் காலக் கற்றளிகளும் விமானம், முகமண்டபம் கொண்டே அமைந்தன. மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களான இராஜசிம்மேசுவரமும் க்ஷத்திரிய சிம்மேசுவரமும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமையும்.

27. கோயில் விமானங்களை அவற்றின் அமைப்பிற்கேற்ப நாகரம் (சதுரம்), வேசரம் (வட்டம்), திராவிடம் (அறுபட்டை, எண்பட்டை முதலாயின), கஜபிருஷ்டம் (தூங்கானைமாடம்), சாலை எனப் பிரிப்பதுண்டு. அடிமுதல் முடிவரை ஓர் அமைப்பில் இருக்கும் விமானத்தைத் தூய என்னும் அடை தந்தும் அழைப்பர். விமானத்தின் முதல்மூன்று அங்கங்கள் ஓர் அமைப்பிலும் அடுத்த மூன்று அங்கங்கள் வேறோர் அமைப்பிலும் இருப்பின் அவ்விமானம் கலப்பு விமானம் என்றழைக்கப்படும். கீழையூர் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்திலுள்ள முருகனின் பரிவாரக் கோயில் அடிமுதல் முடிவரை நாகரமாய் (சதுரமாய்) அமைந்துள்ளமையால் இதை நாகர விமானம் என்றும் தூய நாகர விமானமென்றும் அழைக்கலாம்.

மண்ணில் புதைந்துள்ளது. பிரதிமுகப்பகுதி மட்டுமே பார்வைக்குக் கிடைக்கிறது. யாளிவரியாலான பிரதிமுகத் திருப்புமுனைகளில் காட்டப்பட்டுள்ள, அங்காத்த வாயுடன் கூடிய மகரங்கள்[28] சிதைவுக்காளகியுள்ளன. இப்பிரதி முகங்களும் மகரங்களும் முதன்மைக் கோயில்களிலுள்ள அமைப்பை அப்படியே பிரதிபலிப்பனவாய் உள்ளன. பிரதிமுகத்தின் மீது கம்பும் அதன்மீது நான்முக அரைத்தூண்களுடன் கூடிய சுவரும் காட்டப்பட்டுள்ளன. இவ்வரைத்தூண்களின் குளவுடன் கூடிய தரங்கப் போதிகைகள் தாங்கும் உத்திரத்திற்கு மேல் வாஜனமும் வலபியும் காணப்படுகின்றன. வலபி, பூதவரிமானச் செதுக்கலுடன் உள்ளது. கூரையின் முன்னிழுப்பு, கூடுகளுடன் கூடிய கபோதமாக அமைய, மேலே பூமிதேசம் தளமுடிவைக் காட்டுமாறு அமைந்துள்ளது. சற்று உள்ளடங்கிய நிலையில் வேதிகையும், அதன் மீது நாகர கிரீவமும், மேலே நாகர சிகரமும், தூபியும் காட்டப் பட்டுள்ளன. கிரீவப்பகுதியில் நான்கு திசைகளிலும் கோட்டங்கள் உள்ளன. இக்கோட்டங்களின் தலைமேல், நான்கு திசைகளிலும் சிகரப்பகுதியில், தோரண வளைவுடன்

---

28. மகரங்களை முதல்முதலாகக் குடைவரைகளின் தோரண வாயில்களில்தான் காணமுடிகிறது. தளவானூர் சத்ருமல்லேசுவரம் குடைவரையின் நடு அங்கண வாயிலில் உள்ள இரண்டு தூண்களின் போதிகைகளிலும் இம்மகரங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் கழுத்துப்பகுதியில் வீரர்கள் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளனர். இம்மகரங்களின் இருப்பால், இப்போதிகைகள் சித்திரப் போதிகைகள் என்று பெயர் பெறுகின்றன. இது போன்ற மகரங்களை மலையடிக்குறிச்சிக் குடைவரையிலும் பார்க்கமுடிகிறது.

ஒருகல் தளிகளில் இவை மகரதோரணப் பகுதிகளிலும் பூமிதேசத்திலும் இடம்பெற்றன. கடற்கரைக் கோயில் வளாகத்திலுள்ள க்ஷத்திரிய சிம்மேசுவரத்தில் இவை பிரதிவரியில் இடம்பெற்றிருப்பதைப் பார்க்கமுடிகிறது. பின்னாளில் அமைந்த பிரதிபந்தத் தாங்குதளத்தோடு கூடிய கற்றளிகள் அனைத்திலும் இம்மகரங்கள் தவறாமல் இடம்பெற்றுள்ளன.

கூடிய கூடுகள் காணப்படுகின்றன. மகாநாசிகைகள் என்றழைக்கப்படும் இக்கோட்டங்களில் அமர்ந்த நிலையில் இருத்தப்பட்டுள்ள இறைத் திருமேனிகள் பெரிதும் சிதைந்துள்ளமையால், யாரைக் குறிக்கின்றன என்பதை அறியக்கூடவில்லை. சிகரத்தின் மீது அடர்த்தியான சுதை பூசப்பட்டுள்ளது.

விமானத்தின் முன் சற்று உள்ளடங்கிய நிலையில் சிறியதொரு வாயிலுடன் முகமண்டபம் அமைந்துள்ளது. திருநிலைக்கால்களும் மேல், கீழ் நிலைகளுமாய் அமைந் திருக்கும் வாயிலின் இருபுறமும் நான்முக அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. கருவறை போலவே கட்டமைப்பு கொண்டு அமைந்துள்ள இம்முகமண்டபத்தின் உள்ளே மிகப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த சிறிய அளவிலான பழனியாண்டியின் சிற்பம் கிழக்குப் பார்வையாய் நிறுவப் பட்டுள்ளது. வலக்கையில் வேலும் இடக்கையை ஊரு அஸ்தத்திலும் கொண்டுள்ள இவரின் மழித்த தலையைச் சுற்றிலும் அக்கமாலைச் சரம் காணப்படுகிறது. கழுத்திலும் அக்கமாலை. விமான உட்பகுதியான கருவறையில் முருகப் பெருமான் கருங்கல் தளத்தில் சுகாசனக் கோலத்தில்[29] வீற்றிருக்கிறார்.

ii) *பிள்ளையார் திருமுன்*

வளாகத்தின் தென்மேற்கு மூலையில் மதிலையொட்டி மற்றொரு திருமுன் அமைந்துள்ளது. முருகன் திருமுன் போல் அமைந்துள்ள இதுவும் விமானம், முகமண்டபமென்ற அமைப்பில் உள்ளது. நாகரமாய் அமைந்துள்ள விமானத்தில், பிரதிபந்தத் தாங்குதளத்தின் உருள் குமுதமும்

---

29. சுகாசனக் கோலம் ஓர் அமர்வு நிலையாகும். உடலை எப்பக்கத்திலும் சாய்வின்றி நேராக நிமிர்த்திக் கைகளைச் சமச் சீருடையதாகக் கோலித்து, ஒரு காலை ஆசனத்தின் மீது படுக்க வைத்து, மற்றொரு காலை சுகமாகத் தொங்கவிட்டு அமர்ந்திருக்கும் நிலைக்குச் சுகாசனம் என்று பெயர். - வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், (சென்னை, தொழில்நுட்பக் கல்வி இயக்கம், 1978) ப.59.

பிரதிவரியும் வெளித்தெரிய, ஜகதி மண்ணுக்குள் புதைந்துள்ளது. உருள் குமுதத்தின் மேற்பரப்பில் ஊர்த்வ தாமரைவரி[30] செதுக்கப்பட்டுள்ளது. பிரதிமுகங்கள் வழக்கம் போல் யாளிவரியாய் அமைய, மேலே கம்பும் அதன்மீது நான்முக அரைத்தூண்களுடன் கூடிய சுவரும் காட்டப்பட்டுள்ளன. மேல் உறுப்புகளை நிறைவாகப் பெற்றுள்ள தூண்கள் குளவுடன் கூடிய தரங்கப் போதிகை களுடன் உத்திரம் தாங்குகின்றன. மேலே வாஜனமும், வலபியும், கூரையின் முன்னிழுப்பாய்க் கபோதமும் உள்ளன. வலபியில் செதுக்கப்பட்டுள்ள வரிமானம் பெரிதும் சிதைந் துள்ளதால் வடிவங்களை அடையாளம் காணமுடியவில்லை. கூரையின் மேல் பூமிதேசத்திற்குச் சற்று உள்ளடங்கி நாகர கிரீவமும் சிகரமும் அமைந்துள்ளன. தூபி வேசரமாகக் காட்டப்பட்டுள்ளது. கிரீவ கோட்டங்களில் பிள்ளையாரின் சிற்பங்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. இடம் புரியாய் உள்ள இச்சிற்பங்கள் அனைத்தும் ஒன்றுபோல் அமைந்துள்ளன. கருவறையுள் பிள்ளையார் லளிதாச னத்தில்[31] கருங்கல் தளத்தின் மீது எழுந்தருளியுள்ளார்.

---

30. இது போன்ற தாமரைவரிகள் தாங்குதள உறுப்புகளின் மேலமையும் அலங்கார வரிகளாகும். காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் கற்றளிகளிலேயே இவற்றை முதல்முறையாகப் பார்க்கமுடிகிறது. காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் தாங்குதளத்திலுள்ள குமுதத்தின் கீழ் மற்றும் மேல் முகங்களில் இத்தாமரைவரிகள் காணப்படுகின்றன. கீழ்த்தாமரைவரியின் நுனிகள் கீழ்நோக்கித் தாழ்ந்திருப்பதால் இவ்வரியை அதபத்மவரியென்றும், மேல் தாமரைவரியின் நுனிகள் மேல்நோக்கி வளைந்திருப்பதால் இவ்வரியை ஊர்த்வ பத்மவரியென்றும் பெயரிடுவர்.

31. பொதுவாகப் பரிவாரப் பிள்ளையார் வடிவங்கள் லளிதாசனத் திலேயே காணப்படுகின்றன. பீடத்தில் இரண்டு கால்களையும் வைத்து அமர்ந்து, ஒரு காலை பீடத்தின் மீது மடக்கிப் படுக்கையாக வைத்து மற்றொரு காலை மடக்கி நிறுத்தி அமைந்த அமைதி லளிதாசனம். - வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப. 59.

iii) அன்னையர் எழுவர் திருமுன்

தென்வாயில் ஸ்ரீகோயில் இடைநாழிகைக்குத் தென் புறத்தே தென்மதிலையொட்டிச் செவ்வக வடிவிலான சுற்றாலைத் திருமுன் ஒன்று அமைந்துள்ளது. பழங்கட் டமைப்பு குலையாமல் உள்ள இத்திருமுன்னும் விமானம், முகமண்டபம் என்ற அமைப்பில் காட்டப்பட்டுள்ளது. பிரதிபந்தத் தாங்குதளத்துடன் தொடங்கும் கீழ்ப்பகுதியை யொட்டிக் கம்பும், அதையடுத்து நான்முக அரைத் தூண்களோடு கூடிய சுவரும், மேலே வாஜனம், வலபியோடு கூடிய கூரையும் உள்ளன. பிரதிபந்தத் தாங்குதளத்தின் உருள் குமுதமும் பிரதிவரியும் வடக்கிலும் மேற்கிலும் நன்றாகத் தெரிகின்றன. தென்பகுதியில் இவை மண்ணுக்குள் மறைந்துள்ளன. தாங்குதள ஜகதி அனைத்துப் பக்கங்களிலும் மண்ணடியில் புதையுண்டு போயுள்ளது. நான்முக அரைத்தூண்கள் ஏனைய திருமுன்களைப் போலவே அனைத்து உறுப்புகளும் கொண்டு தரங்கப் போதிகைகளால் உத்திரம் தாங்குகின்றன. இப்போதிகை அமைப்பு பல இடங்களில் பெரிதும் சிதைந்துள்ளது. வலபி வெறுமையாக உள்ளது. கூரையின் முன்னிழுப்பாய் உள்ள கபோதம் கருவறைப் பகுதியில் கூடுகளுடனும் முகமண்டபப் பகுதிகளில் கூடுகளின்றியும் இருக்க, பூமிதேசம் தென்கிழக்குக் கோடியில் மட்டும் காணப்படுகிறது. கூரையின் மீது செவ்வகமான கிரீவமும் சாலை அமைப்பிலான சிகரமும் உள்ளன. வடபுற கிரீவ கோட்டத்தில் சிதைந்த நிலையில் இறைவி வடிவமொன்று காணப்படுகிறது. தென்புறக் கோட்டம் சிதைந்தழிந்துள்ளது. சிகரம் வடபுறத்தே கொடிக்கருக்குகளாலான தோரண வளைவு, உட்பகுதியில் பெரியதொரு குழிவு கொண்டமைந்துள்ளது. கிரீவ நாசிகையின் தலைப்பகுதியான இது பழங்காலக் கட்டுமானப் பகுதியாகும்.

விமானக் கட்டுமானத்தையொட்டி அதனினும் உள்ளடங்கி எழும் முகமண்டபத்தின் தென்சுவர் நடுவே

வாயில் காட்டப்பட்டுள்ளது. இவ்வாயிலைத் திருநிலைக் கால்களும் மேல், கீழ் நிலைகளும் வரையறுக்கின்றன. அண்மைக்காலத்தே இவ்வாயிலுக்கு மரத்தாலான கதவொன்று போடப்பட்டுள்ளது. வாயிலையொட்டி வெளிச்சுவரில் இரு சிறு நான்முக அரைத்தூண்களும் சுவர்த்திருப்பங்களில் இரு நெடிய நான்முக அரைத்தூண்களும் காட்டப்பட்டுள்ளன.

வெறுமையாய் உள்ள முகமண்டபத்தையடுத்த கருவறையுள் அன்னையர் எழுவர் வடிவங்கள் தெற்குப்பார்வையாக அமர்த்தப்பட்டுள்ளன. கிழக்கிலிருந்து மேற்காக பிரம்மி, மயேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என இத்தேவியர் வடிவங்கள் சுகாசனக் கோலத்தில்[32] தனித்தனித் தளங்களின் மீது இருத்தப்பட்டுள்ளன. கருவறையின் கிழக்கில் மேற்குப் பார்வையாக வீரபத்திரரும் மேற்கில் கிழக்குப் பார்வையாகப் பிள்ளையாரும் முறையே கிழக்குச் சுவர் அருகிலும் மேற்குச் சுவர் அருகிலும் அமர்ந்தகோலத்தில் காட்டப்பட்டுள்ளனர். அன்னையர் எழுவருடன் வீரபத்திரரும் பிள்ளையாரும் காட்டப்படவேண்டும் என்ற ஆகமநெறிக்கேற்ப[33] இச்சிற்பங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

iv) *சூரியன் திருமுன்*

வளாகத்தின் கிழக்குப்புறத்தே வடவாயில், தென்வாயில் ஸ்ரீகோயில்களுக்கு இடைப்பட்ட பகுதியில் மதிலையொட்டி அமைந்துள்ள சுற்றாலைத் திருமுன்

---

32. பொதுவாக அன்னையர் எழுவர் வடிவங்கள் சுகாசனக் கோலத்திலேயே காட்டப்பட்டுள்ளன. மலையடிப்பட்டிக் குடைவரை, திருக்கோகர்ணம் குடைவரை, திருக்கோளக்குடிக் குடைவரை ஆகியவற்றில் காணப்படும் காலத்தால் முற்பட்ட அன்னையர் எழுவர் வடிவங்கள் அனைத்தும் சுகாசனக் கோலத்திலேயே காணப்படுகின்றன என்பது இங்கு நினைக்கத்தக்கது.

33. T.A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol. I, Part II, (Madras, Motilal Banarsidas, 1985), pp. 379-389.

சூரியதேவனைக் கொண்டுள்ளது. கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள இத்திருமுன்னின் தாங்குதளமும் பூமியில் புதைந்துள்ளது. முருகன் திருமுன்னில் தெரியும் பிரதிமுகம்கூட இங்கு மண்ணுக்குள் மறைந்துள்ளது. தாங்குதளம்வரை பழைய கட்டுமானத்தைக் கொண்டுள்ள இத்திருமுன்னின் விமானம், முகமண்டபம் ஆகியவற்றின் எஞ்சிய பகுதிகள் திருப்பணிக்கு ஆளாகிக் கலைமுறை மாற்றம் கண்டுள்ளன. விமானத்தின் சுவர்ப்பகுதியில் உள்ள நான்முக அரைத்தூண்களின் போதிகைகள் பெரிதும் சிதைந்துள்ளன. உத்திரத்திற்கு மேற்பட்ட பகுதிகள் முறையான அமைப்பின்றிக் காட்டப்பட்டுள்ளன. மேலே தொடர்ச்சியற்ற கபோதமும் அதன் மேல் காரைப்பூச்சு கொண்ட செங்கற் கட்டுமானமாய் வேதிகையும் உள்ளன. கிரீவமும் சிகரமும் வேசர வடிவில் அமைந்துள்ளன. கிரீவத்தின் நான்கு திசைகளிலும் இறைத்திருமேனிகளற்ற கோட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. இவ்விமானத்தின் முன் அமைந்துள்ள முகமண்டபம் திருப்பணிகளால் முழுவதுமாய்ப் பழைய அமைப்பை இழந்துள்ளது.

பழைய கட்டமைப்பிலுள்ள முருகன், பிள்ளையார், அன்னையர் எழுவர் திருமுன்களும், விமான அளவில் ஓரளவிற்குப் பழைய சாயலைக் கொண்டுள்ள சூரியன் திருமுன்னும் கட்டுமானத்தில் ஒரே கலைமுறையைக் கொண்டுள்ளன. இவற்றின் விமானங்கள் அனைத்துமே பிரதிபந்தத் தாங்குதளத்துடன் தொடங்கி, நான்முக அரைத் தூண்களுடன் கூடிய சுவரைப் பெற்று, ஒரு தள விமானங் களாய் முடிகின்றன. கருவறைக்கு மேலெழும் விமானத்தின் மேலுறுப்புகளான கிரீவமும் சிகரமும் உட்புறத்தே பொள்ள லாகக் காட்டப்பட்டிருப்பதால், கருவறையினுள் நின்று, மேல் நோக்குகையில் தூபியின் அடிப்பகுதியிலமைந்துள்ள சதுரக்கல்வரை பார்க்கமுடிகிறது. கீழ்த்தளத்திற்கு மேலெழும் கட்டுமானங்களைப் படிப்படியாகக் குறுக்கி உச்சிப்பகுதியைக் கல்லொன்று கொண்டு மூடும் இக்கலைமரபே பின்னாளில் எழுந்த சோழர் கோயில்களிலும் பரவலாகப் பின்பற்றப்

பட்டுள்ளது. தஞ்சாவூரிலுள்ள இராஜராஜீசுவரம் மற்றும் அதன் சுற்றாலைத் திருமுன்கள் ஆகியவற்றின் கட்டுமானம் இது போலவே உள்ளமை இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

v) *சண்டேசுவரர் திருமுன்*

தென்வாயில் ஸ்ரீகோயில் இடைநாழிகையின் வட வாயிலுக்கு எதிரே தெற்குப்பார்வையாக சண்டேசுவரர் திருமுன் அமைந்துள்ளது. இதன் தாங்குதளம் ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்பு, கண்டம், பட்டிகை எனப் பாதபந்தமாக அமைந்துள்ளது. இவ்வளாகத்திலிருக்கும் பழுவேட்டரையர் காலச் சுற்றாலைத் திருமுன்கள் அனைத்துமே பிரதிபந்தத் தாங்குதளத்துடன் இருப்பதால், இத்திருமுன் பழுவேட்டரையர் காலத்திற்குப் பின் திருப்பணிகளுக்கு ஆளானமையை உணரலாம்.

இப்பாதபந்தத் தாங்குதளத்தின் மேல் கம்பொன்று காட்டப்பட்டுள்ளது. இதன் மேலெழும் சுவர் வெறும் கல்லடுக்குடன் முறையான அமைப்பின்றிக் காணப்படுகிறது. தாங்குதளத்தின் கண்டப்பகுதியில் பாதங்கள் காட்டப் பட்டிருந்தபோதும் அவற்றுக்குரிய மேலெழுச்சிகளான அரைத்தூண்களைச் சுவரின் எந்தப் பகுதியிலும் காண முடியவில்லை. சுவரின் மேலமரும் கூரையுறுப்புகளான உத்திரம், வாஜனம், வலபி ஆகியன இக்கட்டமைப்பில் காணுமாறு இல்லை. தென்சுவரின் மேற்பகுதி, நுழை வாயிலுக்கு இருபுறமும் செங்கல் திருப்பணியாய் உள்ளது. கூரைக்கு மேல் வழக்கமாக இடம்பெறவேண்டிய விமானத்தின் மேலுறுப்புகளான கிரீவம், சிகரம், தூபி ஆகிய அனைத்தையும் இழந்த நிலையில் சிதைந்த கட்டடமாக இத்திருமுன் அமைந்துள்ளது.

இவ்வாளகத்திலுள்ள பிற திருமுன்கள் அனைத்துமே விமானம், முகமண்டபம் என அமைந்திருக்க இத்திருமுன் மட்டும் விமானத்தின் கீழ்ப்பகுதியோடு முகமண்டபமின்றிக்

காணப்படுகிறது. பிற பரிவாரக் கோயில்களிலிருந்து மாறுபட்ட தாங்குதள அமைப்போடு, முறையான கட்டமைப்புமின்றிக் காணப்படுவதால் இத்திருமுன் பழுவேட்டரையர் காலத்திற்குப் பிறகு சிதைவுற்றுப் பின்னாளில் திருப்பணிகளுக்கு ஆளாகியிருக்கவேண்டும் என்று உறுதிகொள்ளலாம். பொதுவாக முறையான கட்டடக் கலைக்கூறுகள் ஏதுமின்மையால் இந்தத்திருப்பணிகளின் காலத்தை நிர்ணயிக்கக் கூடவில்லை.

vi) *அம்மன் திருமுன்*

வளாகத்தின் வடமேற்குப்பகுதியில் தென்பார்வையாக அமைந்திருக்கும் அம்மன் திருமுன்[34] இருதள விமானமும் முகமண்டபமும் கொண்டமைந்துள்ளது. விமானம் பாதபந்தத் தாங்குதளத்துடன் தொடங்குகிறது. இத்தாங்குதளத்தின் ஜகதிப்பகுதி மண்ணில் புதைந்து மறைந்துள்ளது. அதற்கு மேலமையும் எண்பட்டைக் குமுதமே பார்வைக்குக் கிடைக்கும் முதல் உறுப்பாய்த் திகழ்கிறது. சுவர் நான்முக அரைத்தூண்களுடன் அமைய, தூண்களின் எளிய விரிகோணப் போதிகைகள் உத்திரம் தாங்குகின்றன. மேலே வழக்கமாய் அமையவேண்டிய வாஜனமும் வலபியும் இல்லாமல் கூரை காட்டப்பட்டுள்ளது. இதன் முன்னிழுப் பாய்க் கூடுகளற்ற ஆனால், தோரண வளைவுகளோடு கூடிய கபோதம். கூரைக்கு மேல் பூமிதேசமாய் யாளிவரிக்குப் பதில்

---

34. அம்மன் திருமுன்னை இறைவன் கோயில் வளாகத்திற்குள் தனியாக அமைக்கும் மரபு முதலாம் குலோத்துங்கர் காலத்தில்தான் முதல்முறையாக வழக்கத்திற்கு வந்ததாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். S.R. Balasubrahmanyam, Middle Chola Temples, (Amsterdam, Oriental Press BV, 1977), p.28.

அதற்கு முற்பட்ட காலத்தில் கருவறைக்கு முன்னாலுள்ள முகமண்டபத்தில் அம்மன் வடிவத்தைச் செப்புத்திருமேனியாக இருத்தி வழிபடுவது மரபாகப் பின்பற்றப்பட்டுவந்தது. அம்மனின் இவ்வுலோகத் திருமேனியை உமாபட்டாரகி என்ற பெயரில் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. A.R.E. 151 of 1936-37.

பூப்பதக்கங்கள்.[35] இதற்கு உள்ளடங்கிய நிலையில் கூரை மேலமரும் உறுப்புகளாகக் கர்ணகூடங்ளும் சாலைகளும் ஆரச்சுவரால் இணைக்கப்பட்டு, ஆரமாய் நிற்கின்றன. இவற்றின் பின்னால் இரண்டாம் தளச் சுவரும் கூரையும் அதன் முன்னிழுப்பாய்க் கபோதமும் உள்ளன. இரண்டாம் தளக் கூரைக்கு மேலே நான்கு மூலைகளிலும் நந்திகள். வேசர கிரீவமும் சிகரமும் கொண்டுள்ள இவ்விமானத்தில் தூபியில்லை. இது காலப்போக்கில் சிதைந்திருக்கலாம். கிரீவத்தில் நான்கு மகாநாசிகைகளும் நான்கு அல்ப நாசிகைகளும்[36] காட்டப்பட்டுள்ளன. சாலை நாசிகைகள் மற்றும் மகாநாசிகைகளில் உள்ள சுதையுருவங்கள் அனைத்துமே சிதைந்துள்ளன. கர்ணகூடங்களில் சிற்பங்களோ சுதையுருவங்களோ இடம்பெறவில்லை. குமுதத்திலிருந்து உத்திரம் வரை கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கும் இத்திருமுன்னின் மேற்பகுதிகள் அனைத்தும் செங்கற் கட்டுமானமாய் உள்ளன.

முகமண்டபத்தின் தாங்குதளம் உருள் குமுதவரியிலிருந்து தொடங்குகிறது. ஜகதிப்பகுதியைப் பார்க்கமுடியவில்லை. உருள் குமுதத்தின் மேல் ஊர்த்வ பத்மவரியும்

---

35. பூமிதேசப்பகுதியில் பிரதிவரியாக யாளிவரியைக் காட்டுவதே மரபாக இருந்துவருகிறது. ஆனாலும் அரிதாகச் சில விமானக் கட்டுமானங்களில் இந்த பூமிதேசப்பகுதியில், யாளிவரிக்குப் பதிலாகப் பூப்பதக்கங்களையும் காட்டியுள்ளனர். இது பல்லவர் காலத்திலேயே நடைமுறையில் இருந்தது. திராவிட சிகரத்துடன் முற்றுப்பெறாமல் அமைந்திருக்கும் மாமல்லபுரத்துப் பிடாரி ரதத்தின் முதல் தள முடிவாகப் பூப்பதக்கங்களே பூமிதேசமாய் அழகுற அமைந்துள்ளன.

36. கிரீவ கோட்டங்களும் அவற்றிற்காக சிகரத்திலமையும் வளைவுத் தோரணங்களும் சேர்ந்து மகாநாசிகைகள் எனப்பெறும். இந்நாசிகைகள் கிரீவத்தின் நாற்புறமும் நான்கு முதன்மைத் திசைகளையும் நோக்கி அமைக்கப்படும். கோணத்திசைகளை நோக்கிச் சிறிய அளவில் அமையும் நாசிகைகள் அல்ப நாசிகைகள் எனப்பெறும்.

கம்புகளோடு கூடிய கண்டமும் பின், பட்டிகையும் அமைந் துள்ளன. சுவர்ப்பகுதியும் கூரையும் விமானத்தின் கீழ்த்தளம் போலவே அமைந்துள்ளன. கூரை மீது முகப்பின் இரு ஓரங்களிலும் நந்திகள் அமர்ந்திருக்க நடுவில் வளைவான மாடமொன்று காட்டப்பட்டுள்ளது. இவையனைத்துமே செங்கல் திருப்பணிகளாகும்.

கருவறையுள் தேவி நின்ற கோலத்தில் காட்சிதருகிறார். இவரின் முன்னிரு கைகள் அபயமும் வரதமும் காட்டப் பின்னிரு கைகளில் மலர்கள் உள்ளன. இடுப்பிற்குக் கீழே பட்டாடை காட்டப்பட்டுள்ளது. சடைமகுடமும் கையணி களும் தாள்செறிகளும் கழுத்தணிகளும் கொண்டுள்ள அம்மையின் விரல்களில் மோதிரங்கள் உள்ளன. கருவறையின் மேற்பகுதி கூரையால் மூடப்பட்டுள்ளது. கட்டுமான அமைப்பு கொண்டு இத்திருமுன்னைக் கி.பி. பதினாறாம் நூற்றாண் டிற்குப் பிற்பட்ட திருப்பணியாகக் கொள்ளலாம்.

2. *சிற்பங்கள்*

முருகன்

கிழக்கு மதிலையொட்டிக் கோபுரத்தின் வடபுறத்தே அமைந்துள்ள திருமுன்னில், கருங்கல் தளத்தின் மேல் சுகாசனக் கோலத்தில், வலக்காலைக் கீழிறக்கிய நிலையில், முருகப் பெருமானின் சிற்பம் காணப்படுகிறது. தலையில் கரண்ட மகுடம்.[37] அவரது நெற்றியின் மேற்பகுதியில் அழகிய

37. இறைச் சிற்பங்களில் சடைமகுடம், கரண்ட மகுடம், கிரீடமகுடம் என்னும் மூவகைத் தலைக்கோலங்களே மிகுதியான அளவில் காணப் படுகின்றன. இவை தவிர சடைபாரம், சடைமண்டலம், சடைபந்தம், விரிசடை என மேலும் பத்து வகைத் தலைக்கோலங்களைச் சிற்பநூல்கள் வழி அறியமுடிகிறது. கரண்ட மகுடம் என்பது புரிமணை போன்ற அடுக்குகளை மூன்றல்லது ஐந்தாக மேற்பகுதியில் கொண்டு, குழாய் போன்ற அமைப்பைக் கிழ்ப்பகுதியில் கொண்டு அமைவதாகும். இதில் நான்கு பூரிமங்கள் தைக்கப்பெற்று, சிகரத்தில் தாமரை மொட்டையொத்த சிகாமணி பொருத்தப்பெற்றிருக்கும். தேவியர், முருகர், இராமர், விநாயகர் முதலியோர் படிமங்களில் இம்மகுடத்தைக் காணலாம். வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.ள் 74-89.

சென்னி[38] காட்டப்பட்டுள்ளது. வலமுன்கை அபயக் குறிப்பிலிருக்க, இட முன்கை கடகமாய்த் தொடை மேல் இருத்தப்பட்டுள்ளது. பின்கைகளில் வலப்புறம் சக்தி; இடப்புறம் சூலமணி. சூலமணி என்பது மேற்பகுதி திரிசூலமாகவும் கீழ்ப்பகுதி மணியாகவும் அமைந்த ஒரு கருவியாகும். இதே கோயிலில் உள்ள அன்னையர் எழுவர் தொகுதியிலுள்ள கௌமாரியின் கைகளிலும இச்சூலமணி காணப்படுவது இங்கு நினைக்கத்தக்கது. பொதுவாக முருகன் கைகளில் சக்தியும் வஜ்ரமும் காட்டப்படும். இங்கு அதற்கு மாறாகச் சக்தியும் சூலமணியும் காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க மாறுபாடாகும். சூலமணி மிக அரிதாகக் காணப்படும் கருவியாகும். பல்லவர் கோயில்களிலோ பாண்டியர் குடைவரைகளிலோ முருகன் கைகளில் இக்கருவியைக் காணமுடியவில்லை. அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்து முருகனிடமே இக்கருவி முதல்முறையாக இடம்பெறுவதால் இதை இக்கோயிலுக்குரிய தனிச் சிறப்பாகக் கொள்ளலாம்.

மார்பில் சன்னவீரமும்[39] மேற்கைகளில் கங்கணங்களும் மணிக்கட்டருகே வளைகளும் கழுத்தில் சரப்பளியும் அணிந்துள்ள முருகனின் இடுப்பைச் சிற்றாடை அழகு செய்கிறது. கணுக்கால்களில் வீரக்கழலும் பாதங்களில் தாள்செறியும் உள்ளன.

---

38. இலை, தழை, மலர்கள் கொண்டு அமைக்கப்பட்டு நெற்றியில் சூட்டப்படும் மாலை சென்னி எனப்படும். இதைத் தலைமாலை என்றும் சிகலி என்றும் அழைப்பதுண்டு. இது வெற்றியின் சின்னமாக நெற்றியை ஒட்டிக் கட்டப்படும். முருகன் படிமத்தில் இதைக் காணலாம். வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப. 89.

39. கழுத்தைச் சுற்றியும், மார்பணிகளைச் சுற்றியும் உடலின் ஒரு மூலையிலிருந்து எதிர்மூலைக்குக் குறுக்கே சென்று, முதுகிலும் அங்ஙனமே அமைந்த இரு சங்கிலிகளின் பெயர் வீரச்சங்கிலி ஆகும். இச்சங்கிலி ஸ்தனத்திலிருந்து 8 விரல் அளவு கீழே தொங்கிச் செல்லும். இதற்குச் சன்னவீரம் என்ற பெயரும் உண்டு. இவ்வீரச் சங்கிலி வீரர்களின் அணியாகும். வீரனாகிய முருகனுக்கு உகந்த அணியுமாகும். வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.95.

பிள்ளையார்

தென்மேற்குத் திருமுன்னில் காணப்படும் பிள்ளையார் தாமரைத் தளத்தின் மேல் லளிதாசனத்தில் அமர்ந்துள்ளார். ஏறத்தாழ அன்னையர் எழுவர் திருமுன்னிலிருக்கும் பிள்ளையார் வடிவத்தையொட்டியே அமைக்கப்பட்டிருந்தாலும் அதனினும் அழகுடையதாய் அமைந்துள்ள இச்சிற்பத்தின் முன்கைகளில் மோதகங்கள் இடம்பெற்றுள்ளன. பின்கைகளில் வலப்புறம் உடைந்த தந்தமும் இடப்புறம் அக்கமாலையும் கொண்டுள்ளார். உதரபந்தம், துணிக்கட்டாய் முடிச்சுகளுடன் காட்டப் பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடமும் மேற்கைகளில் கங்கணங்களும் மணிக்கட்டுகளில் வளைகளும் கொண்டுள்ள இவரின் நெற்றிப் பட்டம் அலங்காரமாக உள்ளது. இதன் குஞ்சலங்கள் பெரிய அளவினவாய்க் காதுகளின் அருகே காட்டப்பட்டுள்ளன. முப்புரிநூல் சிறுமணிகளால் கோக்கப்பெற்ற மூன்று பட்டைகளாய்க் காட்சியளிக்கிறது. இடம்புரியாய் உள்ள துதிக்கையிலும் மோதகம் உள்ளது.

அன்னையர் எழுவர்

தெற்கு மதிலையொட்டிய சுற்றாலைத் திருமுன்னின் கருவறையில் ஒன்பது இறைத்திருமேனிகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் ஏழு திருமேனிகள் அன்னையர் எழுவரைக் குறிக்கின்றன. அன்னையர் எழுவர் திருமேனிகள் எழுந்தருளுவிக்கப்படும் இடத்தில், அவற்றின் வலப்புறம் வீரபத்திரரையும் இடப்புறம் பிள்ளையாரையும் இருத்துவது ஆகம மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.[40] காலத்தால் முற்பட்ட அன்னையர் எழுவர் சிற்பங்கள் காணப்படும் மலையடிப்பட்டிக் குடைவரையில்கூட இம்முறை பின்

---

40. T.A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol. 1, Part II, pp. 379-389.

பற்றப்பட்டுள்ளது.[41] அந்த மரபையொட்டி இங்கும் அன்னையர் எழுவரின் வலப்புறம் வீரபத்திரர் திருமேனியும் இடப்புறம் பிள்ளையார் திருமேனியும் நிறுவப்பட்டுள்ளன.

வீரபத்திரர் சிற்பம் சுவரையொட்டி மேற்குப் பார்வையாகக் கருங்கல் தளத்தின் மீது சுகாசனத்தில்[42] காணப்படுகிறது. இதன் தலைக்கோல அமைப்பு சடைமண்டலமாக[43] உள்ளது. இதே போன்றதொரு தலைக்கோலத்தைத்தான் இங்குள்ள சண்டேசுவரரும் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சடை முகப்பில் நெருஞ்சிப் பூக்கள் செருகப்பட்டுள்ளன. வலச்செவி நீள் செவியாய் அணிகலன் ஏதுமின்றி இருக்க, இடச்செவியில் பனையோலைச் சுருள் செருகப்பட்டுள்ளது. கழுத்தில் ஒரே ஒரு மணிமாலை. மேற்கைகளில் கடகங்களும் மணிக் கட்டருகே வளைகளும் உள்ளன. சிற்றாடை அணிந்து, பாதங்களில் தாள்செறிகள் விளங்கக் காட்சியளிக்கும் வீரபத்திரரின் பின்கைகளில் வலப்புறம் திரிசூலமும் இடப்புறம் அக்கமாலையும் உள்ளன. முன் கைகளில் வலக்கை அபயம் காட்ட, இடக்கை தொடை மீது இருத்தப்பட்டுள்ளது.

---

41. ம. ஜான்சி, மு. நளினி, இரா. கலைக்கோவன், 'மலையடிப்பட்டிக் குடைவரைகளும் கல்வெட்டுகளும்,' வரலாறு 4, ப-ள். 86-89.

42. இதற்குக் காலத்தால் முற்பட்ட மலையடிப்பட்டிக் குடைவரையில் காணப்படும் வீரபத்திரர் சிற்பம் யோகாசனத்தில் வடிக்கப் பட்டுள்ளது. திருக்கோளக்குடிக் குடைவரை வீரபத்திரர் சுகாசனத்தில் காட்டப்பட்டிருந்தபோதும் அவருக்குப் பின்னால் நந்தி இடம்பெற்றுள்ளது. தொடக்கக் கால அன்னையர் எழுவர் சிற்பத் தொகுதிகளுடன் காணப்படும் வீரபத்திரரின் தோற்றம், அமர்வு நிலை போன்றன இடத்துக்கு இடம் சற்று மாறுபட்டு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

43. தலையின் பின்னணியில் திரிசடைகளை வட்டமாக, மண்டலமாக அமைப்பின் அத்தலைக்கோலம் சடைமண்டலம் எனப்படும். இந்தச் சடைமண்டலம் தலையின் பின்புறத்தில் முடியப் பெற்றிருக்கும். எனவே அலங்காரமான நாடாக்கள், முத்துச்சரங்கள் ஆகியவற்றைக் காதோரம் தெரியுமாறு அழகுபடக் காட்டிடல் வேண்டும். வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.78.

சுகாசனக் கோலத்தில் அமர்ந்துள்ளதால் கீழே இறக்கப் பட்டுள்ள வலக்காலை இருத்தப் பாதந்தாங்கியொன்று காட்டப்பட்டுள்ளது.

அன்னையர் எழுவர்[44] சிற்பங்கள் அனைத்தும் தென்சுவரையொட்டி வடபார்வையாகத் தனித்தனிக் கருங்கல் தளங்களின் மீது சுகாசனக் கோலத்தில் காட்சியளிக்கின்றன. சரியான அளவில் இடம்விட்டு, வரிசையாக அமர்த்தப் பட்டிருக்கும் இத்திருமேனிகளின் கீழிறக்கப்பட்டுள்ள வலக்காலை இருத்த, ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே தாமரை மலர் வடிவில் பாதந்தாங்கிகள் காட்டப்பட்டுள்ளன. திருக் கோளக்குடியிலுள்ள முற்காலப் பாண்டியர் குடைவரையிலும் அன்னையர் எழுவர்க்கு இது போன்ற பாதந்தாங்கிகள் காட்டப்பட்டிருப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.[45] இத்திருமேனிகளின் முன்கைகளுள் வலக்கை அபய முத்திரையிலிருக்க, இடக்கை தொடை மீது இருத்தப் பட்டுள்ளது. மயேசுவரி, கௌமாரி, சாமுண்டி தவிர ஏனைய நால்வர்க்கும் கணுக்கால் வரையிலான பட்டாடை காட்டப்பட்டுள்ளது. மயேசுவரி, கௌமாரி, சாமுண்டி ஆகியோர்தம் இடுப்பாடை தொடைப்பகுதி வரையே காட்டப்பட்டுள்ளது. சாமுண்டியைத் தவிர்த்து ஏனைய அனைத்து அன்னையரும் மார்புக் கச்சு அணிந்துள்ளனர்.

---

44. அன்னையர் எழுவராக ஆகமங்களில் குறிக்கப்படும் பிரம்மி, மயேசுவரி, கௌமாரி, வைணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி ஆகியோர் முறையே பிரம்மன், சிவன், முருகன், விஷ்ணு, வராகர், இந்திரன், இயமன் ஆகியோரின் மனைவியராகக் கருதப் படுகின்றனர். T.A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol. 1, Part II, pp. 379-389.

45. சுகாசனக் கோலச் சிற்பங்களில், கீழிறக்கப்படும் காலின் பாதத்தை இருத்த இது போன்ற பாதந்தாங்கிகள் அமைக்கும் பழக்கத்தைப் பல்லவர் கோயில்களிலும் பரவலாகப் பார்க்கமுடிகிறது. பல்லவர் குடைவரைகளில் காணப்படும் சில சோமாஸ்கந்தர் சிற்பங்களிலும் கயிலாசநாதர் கோயில், பனைமலை போன்ற கற்றளிகளில் காணப்படும் சுகாசன அமர்விலுள்ள நான்முகன், திருமால் மற்றும் சோமாஸ்கந்தர் சிற்பங்களிலும் பாதந்தாங்கிகள் காட்டப் பட்டுள்ளன.

அனைவருமே மேற்கைகள், மணிக்கட்டுகள், செவிகள், பாதங்கள், கழுத்து முதலிய இடங்களில் உரிய, எளிய அமைப்புடைய அணிகலன்களைக் கொண்டுள்ளனர். அனைவரது உடலமைப்பும் மிக இயல்பாகவும் அருமையாகவும் வடிக்கப்பட்டுள்ளது.

அன்னையர் எழுவருள் முதலாவதாகக் காட்டப்பட்டிருப்பது பிரம்மியின் சிற்பம். மூன்று முகங்களுடன் காட்சி தரும் இவ்வம்மையின் சடை, மகுடமாய்க் கட்டப்பட்டடள்ளது; செவிகளில் மகர குண்டலங்கள்; பின்கைகளில் வலப்புறம் அக்கமாலையும், இடப்புறம் குண்டிகையும் கொண்டுள்ளார்.

பிரம்மியை அடுத்துள்ள மயேசுவரியும் சடைமகுடராய், மகர குண்டலங்களுடன் காட்சிதருகிறார். பின்கைகளில் வலப்புறம் பரசுவும் இடப்புறம் அக்கமாலையும் வைத்துள்ளார். இவரையடுத்து அமர்ந்துள்ளவர் கௌமாரி. கரண்ட மகுடமும் சென்னியும் பனையோலைக் குண்டலங்களுமாய்க் காட்சி தரும் இவரின் பின்கைகளில் வலப்புறம் சக்தியும் இடப்புறம் சூலமணியும் உள்ளன. பொதுவாக முருகன் அல்லது முருகனின் துணைவியான கௌமாரியின் கைகளில் சக்தியும் வஜ்ரமுமே காட்டப்பெறும். மலையடிப்பட்டி, திருக்கோளக்குடி குடைவரைகளில் உள்ள கௌமாரியின் சிற்பங்கள் இதற்குச் சான்றாகும். இக்கோயிலில் வஜ்ரத்திற்குப் பதிலாகச் சூலமணி இடம்பெற்றுள்ளது சிறப்புக்குரிய ஒரு மாறுதலாகும். இதை இக்கோயில் கௌமாரி சிற்பத்தின் தனித்தன்மையாகக் கொள்ளலாம்.

அடுத்து அமைந்திருக்கும் வைணவி, மகர குண்டலங்கள் அணிந்து தலையில் கிரீட மகுடத்துடன் பின்கைகளில் வலப்புறம் சக்கரமும் இடப்புறம் சங்கும் கொண்டுள்ளார். இச்சிற்பத்தின் வலப் பின்கையில் காட்டப்பட்டிருக்கும் சக்கரத்தின் அமைப்பு குறிப்பிடத்தக்கது. பல்லவரின் விஷ்ணு சிற்பங்கள் சிலவற்றில் இது போன்ற சக்கர அமைப்பு காணப்படுகிறது. முதலாம் ஆதித்தர் காலத்துக் கோயிலான

திருக்கழுக்குன்றத்து மகாதேவர் கோயிலின் (மலைக்குக் கீழுள்ள கோயில்) வெளித்திருச்சுற்றில் அமைந்துள்ள வடசுவர்க் கோட்டத்தில் காணப்படும் அழகு பொலியும் கொற்றவையின் வலப் பின்கையிலும் இது போன்ற அமைப்பிலேயே சக்கரம் காட்டப்பட்டிருப்பது இக்காலத்தே பின்பற்றப்பட்ட கலைமுறையைச் சுட்டுவதாய் அமைந்துள்ளது. இக்கலைமுறை பின்னாளிலும் பின்பற்றப் பட்டமைக்குப் பெருங்குடியிலுள்ள சுந்தர சோழர் காலக் கோயிலான பெருமுடியீசுவரத்து மேற்கு மகாநாசிகை விஷ்ணு சிற்பமே சான்றாகும்.[46] முற்சோழர்க்குப் பிற்பட்ட வைணவி அல்லது விஷ்ணு சிற்பங்களில் இதுபோன்ற சக்கர அமைப்பைப் பொதுவாகக் காணமுடிவதில்லை.

வராகி பன்றி முகத்துடன் கரண்ட மகுடம் அணிந்து வலப் பின்கையில் தடியும் இடப் பின்கையில் கலப்பையும் கொண்டுள்ளார். இவரது செவிகள் வெறுமையாக உள்ளன. இந்திராணி கிரீட மகுடமும் மகர குண்டலங்களும் கொண்டு பின்கைகளில் வலப்புறம் வஜ்ரமும் இடப்புறம் அங்குசமும் வைத்துள்ளார்.

இறுதியாகக் காணப்படும் சாமுண்டி, சடைபாரமாய்த் தலைக்கோலம் கொண்டுள்ளார். தலைக்கோலத்தின் முன் பகுதியில் இருபாம்புகள் சுற்றி வளைத்துள்ள நிலையில், இடையே மண்டையோடு செருகப்பட்டுள்ளது. வலச்செவியில் பிணக்குண்டலம். குப்புறக் கவிழ்ந்த நிலையில் செவித்துளையில் செருகப்பட்டுள்ள இப்பிணத்தின் இடுப்புக்கு மேலான உடற்பகுதிகள் சாமுண்டியின் முகம் நோக்கியும் கீழ்ப்பகுதிகள் செவிக்குப் புறத்தேயுமாய்க் காட்டப்பட்டுள்ளன. இடச்செவியில் பனையோலைக் குண்டலம். இதுபோல் பிணக்குண்டலம் கொண்ட முற்சோழர் காலச் சாமுண்டியை முதலாம் ஆதித்த சோழரின் திருப்பணியான திருநெடுங்களநாதர் கோயிலில்

46. பெருமுடியீசுவரர் திருக்கோயில் கல்வெட்டுகள், வரலாறு 5, ப. 19.

காணமுடிகிறது. முற்பாண்டியர் காலக் குடைவரையான திருக்கோளக்குடியிலும் இது போன்ற குண்டலம் கொண்ட சாமுண்டி, குடைவரைச் செதுக்கலாகக் காட்டப்பட்டுள்ளார்.

கச்சணியாத சாமுண்டியின் மார்பகங்களைப் பாம்பொன்று சுற்றிக்கொண்டுள்ளது. இவரது இதழ்க் கடைகளின் வழியே கோரைப்பற்கள் நீட்டிக் கொண்டுள்ளன. இதுபோன்ற கோரைப்பற்கள் சற்றுப் பெரிய அளவினவாய் வராகிக்கும் காட்டப்பட்டுள்ளன. வலப் பின்கையில் திரிசூலமும் இடப் பின்கையில் தலையோடும் கொண்டிருக்கும் இவ்வம்மையின் முப்புரிநூலில் இறந்தோர் தலைகள் கோக்கப்பட்டுள்ளன. பொதுவாகச் சாமுண்டி, பைரவர் போன்ற உக்கிரத் தெய்வங்களுக்கு மண்டையோடுகளாலான முப்புரிநூல் காட்டப்படுவது மரபு. ஆனால் இங்கு மண்டையோடுகளுக்குப் பதிலாக முழுத் தலைகளே காட்டப்பட்டிருக்கின்றன. இத்தனித்தன்மையால் பல்லவர், பாண்டியர் மற்றும் முற்சோழர் காலச் சாமுண்டிச் சிற்பங்களுள் பழுவேட்டரையர்களின் இச்சிற்பம் குறிப்பிடத்தக்கதோர் இடத்தைப் பெறுகிறதெனலாம்.

பிள்ளையார் மேற்குச்சுவர் அருகே கிழக்குப் பார்வையாகக் கருங்கல் தளத்தின் மீது லளிதாசனத்தில் அமர்ந்திருக்கிறார். இடம்புரியாய்ச் சுருண்டுள்ள துதிக்கையிலும் முன்கைகளிலும் மோதகம். பின்கைகளில் வலப்புறம் உடைந்த தந்தம்; இடப்புறம் தடி. கரண்ட மகுடமும் அரையாடையும் கைவளைகளும் கொண்டுள்ள இவரது முகம் இலேசாக வலப்புறம் திரும்பிய நிலையில் உள்ளது. நெற்றிப் பட்டத்தின் குஞ்சலங்கள் செவிகளின் அருகே காட்டப்பட்டுள்ளன. இவரது முப்புரிநூல் மூன்று சரமணிகள் கோக்கப்பட்ட அமைப்பிலுள்ளது.

சூரியன்

கிழக்கு மதிலையொட்டிய சுற்றாலைத் திருமுன்னில் காணப்படும் சூரியன் நின்ற கோலத்தில் காட்சிதருகிறார்.

வலப்பாதம் சமமாகவும் இடப்பாதம் திரயச்ரமாகவும்[47] இருக்கச் சமபங்கத்தில் நிற்கும் சூரியனின் கைகளில் மலர்ந்த தாமரைகள் காட்டப்பட்டுள்ளன. தலையைக் கரண்ட மகுடம் அழகு செய்கிறது. தலைக்குப் பின்னால் ஒளிவட்டம்; இருசெவிகளிலும் மகர குண்டலங்கள். இவரும் அரையில் சிற்றாடை அணிந்துள்ளார். இவ்வாடையின் முடிச்சுகள் பக்கவாட்டுகளில் இருபுறமும் தொங்குமாறு போலக் காட்டப்பட்டுள்ளன. முப்புரிநூலும் உதரபந்தமும் உரிய இடங்களில் காட்டப்பட்டுள்ளன. பாதங்களில் தாள்செறிகள். இச்சிற்பத்தின் அகலமான முகமும் செழுமையற்ற தட்டையான கன்னப்பகுதிகளும் தென்வாயில் ஸ்ரீகோயில் தென்கோட்டச் சிவபெருமான் சிற்பத்திலிருப்பது போலவே உள்ளன. தனித்த நிலையில் கிடைத்திருக்கும் சூரியன் சிற்பங்களுள் காலத்தால் முற்பட்டன மிகச் சிலவே. அவற்றுள் ஒன்றாக இதைக் கொள்ளலாம். இது போன்றதொரு முற்சோழர் காலச் சூரியன் சிற்பத்தைக் குடந்தைக் கீழ்க்கோட்டம் திருக்கோயிலில் காணலாம். அமைப்பிலும் ஆடை, அணிகலன்களைப் பெற்றுள்ள முறையிலும் இரண்டும் ஒன்றையொன்று பெரிதும் ஒத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. முற்சோழர் காலத்தில்தான் சூரியனுக்கென்று தனித்திருமுன் ஏற்பட்டதென்றாலும் பல்லவர் காலத்திலேயே சூரியன், கோட்டத் தெய்வங்களுள் ஒன்றாகக் காட்டப்பட்டிருப்பது இங்கு நினைக்கத்தக்கது.[48]

---

47. திரயச்ரம் என்பது பாதநிலைகளுள் ஒன்றாகும். பாதங்கள் முழுவதுமாய்ப் பக்கவாட்டில் திருப்பப்படாமல், சமநிலைக்கும் பார்சுவகத்திற்கும் இடைப்பட்ட நிலையில் திருப்பப்படுவது திரயச்ரம். பத்மா சுப்ரமணியம், பரதக்கலை (கோட்பாடு), (சென்னை, வானதி பதிப்பகம், 1985), ப. 53.

48. இரா. கலைக்கோவன், ஞாயிறு போற்றுதும், வானொலி உரை, 15 ஜனவரி 1996.

சண்டேசுவரர்

கருங்கல் தளத்தின் மீது சிற்றாடை அணிந்தவராய் சுகாசனத்தில் அமர்ந்திருக்கும் சண்டேசுவரர் இடக்கையைத் தொடை மீது இருத்தி வலக்கையில் பரசு கொண்டுள்ளார். இரு செவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள். கைகளில் ருத்திராக்க வளைகள் உள்ளன. கழுத்தில் கண்டிகையும் மற்றோர் அணியும் அணிந்துள்ளார். மார்பில் முப்புரி நூலும், மார்பு வயிற்றுப் பகுதியோடு இணையும் உடற்பகுதியில் உதரபந்தமும் காட்டப்பட்டுள்ளன. சுண்டு விரல்களில் மோதிரங்கள்; சடைமண்டல அமைப்பில் தலைக்கோலம். சடை முகப்பில் பதக்கமாய் நெருஞ்சிப் பூக்கள். இச்சிற்பத்தின் முகத்தோற்றம், உடலமைப்பு, ஆடை, அணிகலன்களில் காட்டப்பட்டிருக்கும் எளிமை அனைத்துமே இதைப் பழுவேட்டரையர் காலச் சிற்பமாக உறுதிப்படுத்துகின்றன. தந்திவர்மரின் காலத்தில் முத்தரையர் எடுத்த மலையடிப்பட்டிக் குடைவரையில் காணப்படும் சண்டேசுவரர் வடிவத்தை[49] இச்சிற்பத்துடன் ஒப்பிட்டு மகிழலாம்.

ஆ. வடவாயில் ஸ்ரீகோயில்

1. கட்டட அமைப்பு

அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்தின் வடபுறத்தே உள்ள இருதளக் கற்றளியைக் கல்வெட்டுகள் வடவாயில் ஸ்ரீகோயில் என்றழைக்கின்றன. சுற்றிலுமுள்ள நிலமட்டத்தைவிட 43 செ.மீ. இறக்கத்தில் காணப்படும் இக்கோயில் விமானமும் முகமண்டபமும் பழுவேட்டரையர் காலக் கட்டுமானங்கள். முகமண்டபத்தின் முன்னாலுள்ள மகாமண்டபம் பிற்காலத்தே எழுப்பப்பட்டதாகும்.

---

49. ம. ஜான்சி, மு. நளினி, இரா. கலைக்கோவன் - மலையடிப்பட்டிக் குடைவரைகளும் கல்வெட்டுகளும், வரலாறு 4, ப. 91.

விமானம்

அ. கீழ்த்தளம்

சுற்றிலுமுள்ள தரைப்பகுதியுடன் ஒன்றிப் போயிருக்கும் உபானத்தின்[50] மீது எழும் விமானம் மூன்று பத்திகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. உள்ளடங்கியுள்ள ஓரப்பத்திகள் கர்ணபத்திகள் என்றும் பிதுக்கமாயுள்ள நடுப்பத்தி சாலைப்பத்தி என்றும் அழைக்கப்பெறும். இவ் விமானத்தின் தாங்குதளம் பிரதிபந்தமாய்[51] அமைந்துள்ளது. பெருந்தாமரை இதழ்களாய் வடிக்கப்பட்டிருக்கும் ஜகதிப் பகுதிக்கும் அடுத்த உறுப்பான உருள் குமுதத்திற்கும் இடையே கம்பொன்று காட்டப்பட்டுள்ளது. உருள் குமுதத்தின் கீழ்ப்பரப்பிலும் மேற்பரப்பிலும் முறையே அத மற்றும் ஊர்த்வ பத்மவரிகள் காட்டப்பட்டுள்ளன.[52] உருள் குமுதத்தையடுத்து பிரதிவரி சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. பிரதிமுகங்களாக யாளிகள்[53] காணப்படுகின்றன. விரல்களின்

---

50. உபானம் என்பது தாங்குதளத்தின் கீழ்க் காணப்படும் கட்டட உறுப்பாகும். தாங்குதளத்தின் முதல் உறுப்பான ஜகதி அல்லது மகாபத்மத்திற்குக் கீழே காட்டப்படும் இவ்வுபானம் பல்லவர், பாண்டியர் காலக் குடைவரைகளிலேயே இடம்பெற்றுள்ளது. மாமண்டூர் மூன்றாம் குடைவரையும் மலையடிப்பட்டிச் சிவன் குடைவரையும் இதற்குச் சிறந்த சான்றுகளாகும். ஒருகல் தளிகளிலும் உபானம் இடம் பெற்றுள்ளமைக்குக் கொற்றவைத் தளியும் அருச்சுனர் ரதமும் சான்றுகளாய் அமையும். பல்லவர் கற்றளிகளிலும் உபானம் இடம்பெற்றதைக் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் விமானம் கொண்டு அறியலாம்.
51. இதை பத்மபந்தம் என்றும் சொல்வார்கள். இத்தாங்குதள அமைப்பில் ஜகதிப் பகுதி பெருந்தாமரையிதழ்களாக (மகா பத்மம்) உருவாக்கப்பட்டிருப்பதால் இப்பெயர் ஏற்பட்டது. மயமதம், ப.179.
52. கீழையூர்க் கோயில் வளாகத்தின் மையக் கோயில்களில் காணப்படும் இத்தாமரைவரிகள் சுற்றாலைப் பிள்ளையார் திருமுன் தாங்குதளத்திலும் இடம்பெற்றுள்ளன. முருகன் திருமுன்னில் உருள் குமுதம் மண்ணில் புதைந்துள்ளதால் அதில் தாமரைவரிகள் இடம்பெற்றுள்ளனவா என்பதை அறியக்கூடவில்லை.
53. பாம்பின் முகமும் சிங்கத்தின் உடலும் சேர்ந்தமைந்த கற்பனை வடிவே யாளி எனப்படும். இது வியாழம் என்றும் அழைக்கப்படும். வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப-ள் 142-143.

கூரிய நகங்களும் கழுத்தில் பிடரி மயிரும் தலைப்பகுதியில் நீண்டு வளைந்து முறுக்கேறிய கொம்புகளும் திறந்த வாயில் முன்னிரு கோரைப்பற்களுமெனக் காட்டப்பட்டிருக்கும் இந்த யாளிகள் முழு உருவங்களாக சித்திரிக்கப்படவில்லை. தலை, கழுத்து, மார்பின் மேற்பகுதி, முன்னங்கால்கள் என்ற அளவிலேயே இவை வடிக்கப்பட்டுள்ளன. வரிமானம் முழுமைக்கும் இவை பெரும்பாலும் ஒன்றையொன்று நோக்கிய நிலையிலேயே உள்ளன. சில மட்டுமே, எதிர்நோக்கும் யாளியின்றித் தனித்துக் காட்டப்பட்டுள்ளன. சில யாளிகள் வேழயாளிகளாக உருவகிக்கப்பட்டுள்ளன. இத்தகு யாளிகள் நீண்ட துதிக்கையும் தந்தங்களும் கொண்டுள்ளன. துதிக்கை, சிலவற்றில் நன்கு சுருட்டப்பட்டும் சிலவற்றில் நுனியில் மட்டும் சுருண்ட நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. இதுபோன்ற வேழயாளிகள்[54] பல்லவர் கால ஒருகல் தளிகளின் பூமிதேசப் பகுதிகளிலும், கற்றளிகளான கடற்கரைக் கோயில்களின் தாங்குதளப் பகுதிகளிலும் (இராஜசிம்மேசுவரம், க்ஷத்திரிய சிம்மேசுவரம்) முதன்முதலாகக் காணப்படுகின்றன.

இந்த யாளி வரிமானத்தின் திருப்பங்களில் அகலத் திறந்த வாயுடன் மகரங்கள் காட்சியளிக்கின்றன. இவற்றின் துதிக்கைகள் மேல்நோக்கிச் சுருண்டிருக்கத் தந்தங்கள் பக்கவாட்டில் கிளைத்து மேல் நோக்கி வளைந்துள்ளன. சில மகரங்களின் தலைமீது வீரர்கள் அமர்ந்துள்ளனர்.

திறந்திருக்கும் மகர வாய்களின் வழியே, கத்தியும் கேடயமும் கொண்டு வெளிப்படும் வீரர்கள், பாயும் சிம்மம் போன்ற சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. இந்த மகரங்களும்

54. இவற்றைத் துதியாளிகள் என்றும் சொல்வதுண்டு. யானையின் துதிக்கையையும், பாம்பின் முகத்தையும், சிம்மத்தின் பற்களையும் கண்களையும் உடலையும், புலி நகங்களையும் கொண்டதாய் விளங்கும் இத்துதியாளி, சிற்பிகளின் வளமான கற்பனைத் திறனுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப-ள். 142-143.

யாளிவரிமானமும் திருத்தமுறச் செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதிவரியுடன் முடியும் தாங்குதளத்தின் மீது சற்று உள்ளடங்கிய நிலையில் துணைக்கம்பு ஒன்று நெடுகக் காட்டப்பட்டுள்ளது. இக்கம்பின் மீதே சுவர்ப்பகுதி எழுகிறது. கீழ்த்தளத்தின் இரண்டாம் உறுப்பாக எழும் இச்சுவர் சீரமைக்கப்பட்ட கருங்கற்களைக் கொண்டு கட்டப் பட்டுள்ளது. சுவரின் பரப்பில் நாற்புறமும் அமைந்துள்ள நான்முக அரைத்தூண்களும் கம்பின் மீதிருந்தே எழுகின்றன. அரைத்தூண்களின் கலசம், கும்பம், பாலிகை ஆகிய மூன்று உறுப்புகளும் பூ வேலைப்பாடு கொண்டுள்ளன. உரிய உறுப்புகளோடு அமைந்துள்ள இத்தூண்களின் முப்புறமும் அமைந்துள்ள போதிகைக் கைகள் உத்திரம் தாங்குகின்றன.

விமானத்தின் சுவர்ப்பகுதியில் தெற்கு, கிழக்கு, வடக்கு என முப்புறமும் கோட்டங்கள்[55] காட்டப்பட்டுள்ளன. இக்கோட்டங்களின் அணைவுத் தூண்களாகவும் நான்முகத் தூண்களே உள்ளன. இவை அளவில் சுவர்த் தூண்களைவிடச் சற்று சிறியனவாக உள்ளன. 41.5செ.மீ. அகலமும் 1.27மீ. உயரமும் கொண்டமைந்துள்ள தெற்குக் கோட்டத்தில் ஆலமர் அண்ணலும்[56] 42செ.மீ. அகலமும் 1.38மீ. உயரமும்

---

55. கருவறையின் புறச்சுவரில் கோட்டம் அமைக்கும் பழக்கம் குடைவரைக் காலத்திலேயே வந்துவிட்டது. ஒருகல் தளிகளிலும் பல்லவர் கற்றளிகளிலும் இதுபோன்ற கோட்டங்கள் பரவலாய் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம். கருவறையின் புறச்சுவர்களில் மூன்று கோட்டங்கள் மட்டுமே அமைக்கும் பழக்கம் பிற்காலப் பல்லவர் காலத்தில் நடைமுறைக்கு வந்ததாகக் கொள்ளலாம். தக்கோலம் திருவூறல் மகாதேவர் திருக்கோயில் கருவறை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

56. கருவறையில் தென்புறச் சுவர்க் கோட்டத்தில் ஆலமர் அண்ணலைக் காட்டும் பழக்கம் பல்லவர் கற்றளிக்ளிலேயே தொடங்கிவிட்டது. உலக்கணேசுவரமும் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

கொண்டுள்ள கிழக்குக் கோட்டத்தில் முருகனும்[57] 42செ.மீ. அகலமும் 1.32மீ. உயரமும் கொண்டுள்ள வடக்குக் கோட்டத்தில் நான்முகனும்[58] அமர்ந்தநிலைச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளனர். கோட்டங்களின் மேலே மகரதோர

57. பெரும்பாலான கோயில்கள் கிழக்கு நோக்கியே அமைந்தமையால், கிழக்கில் கோட்டம் அமையும் வாய்ப்பு இல்லாது போயிற்று. அதனால் கிழக்கிற்குரிய தெய்வங்களான முருகன் அல்லது சிவபெருமானை இத்தகு கோயில்களில் கிழக்கு கிரீவ கோட்டத்தில் மகாநாசிகைச் சிற்பமாக இருத்தினர்.

பல்லவர் கற்றளிகள் எதிலும் முருகன் கோட்டத் தெய்வமாய் இடம்பெறவில்லை. மும்மூர்த்திக் குடைவரையில் பிரம்ம சாஸ்தாவாகக் கருவறைத் தெய்வமாய் அமைந்துள்ள முருகனை மாமல்லபுரம். தருமராஜ ரதத்தில் கோட்டத் தெய்வமாகவும், காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் தென் சுற்றாலைச் சிறுகோயில் ஒன்றின் முகப்பில் கார்த்திகேயனாகவும் காணமுடிகிறது. பாண்டியர் குடைவரையான பரங்குன்றத்திலும் பல்லவர் குடைவரையான திருச்சிராப்பள்ளிக் கீழ்க் குடைவரையிலும் முருகன், கோட்டத் தெய்வமாக இடம்பெற்றுள்ளார். அருச்சுனர் ரதக் கிழக்குக் கோட்டச்சிற்பம் முருகனா, இந்திரனா என்பதில் அறிஞர்களுக்குள் கருத்தொற்றுமையில்லை, அதனால் கருவறைக்கோட்டத்தில் முருகன் இடம்பெற்ற முதல் இடமாகக் கீழையூர் மையக் கோயில்களைக் கொள்ளலாம். இது இக்கோயில்களின் சிறப்பம்சமாகும். முதற் பராந்தகர் காலக் கோயிலான கிளியனூர் அகத்தீசுவரத்தின் கருவறைக் கோட்டங்களுள் கிழக்குக் கோட்டத்தில் முருகன் இடம்பெற்றிருப் பதாக எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் எழுதியிருப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. மேற்குப் பார்த்த இக்கோயில் கீழையூர்க் கோயில்களுக்குக் காலத்தால் சற்று பிற்பட்டதாகும். - எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், ப.91.

58. கருவறையின் வடபுறச் சுவரில் நான்முகன் இடம்பெறுவதைப் பல்லவர் கற்றளிகளில் பார்க்கமுடிகிறது. காஞ்சிபுரம் அய்ராவதேசுவரர் கோயிலின் வடபுறச் சுவரில் நான்முகனின் அழகிய சிற்பம் ஒன்று காணப்படுகிறது. அபராசிதவர்மருடைய காலத்தில் கட்டப்பட்டதாகக் கருதப்படும் தக்கோலம் திருவூறல் மகாதேவர் கோயில் கருவறையின் வடபுறக் கோட்டத்தில் நான்முகன் இடம்பெற்றுள்ளார். - எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், ப-ள். 203-206. பல்லவர் காலத்தே தோன்றிய இம்மரபு முற்சோழர் காலத்தும் பின்பற்றப்பட்டது.

ணங்கள்.[59] வடபுறத்தே இம்மகரதோரணம் முழுமையடைய வில்லை. கிழக்கில் மகரதோரணக் குழிவில் பூதகணமொன்று ஆடற்கோலத்தில் காட்சியளிக்கத் தென்புறத்தே இறைவன் ரிஷபாந்திகராய்க்[60] காட்டப்பட்டுள்ளார். நந்தி பின்புலத்தில் அமர்ந்திருக்க, அதன்மீது வலக்கையைத் தாங்கலாய் இருத்தி மகாராஜ லீலாசனத்தில் அமர்ந்திருக்கும் இறைவன், இடக்கையை முழங்கால் மீது நெகிழ்த்தியுள்ளார். இறைவனின் சடைபாரமும் பனையோலைக் குண்டலங்களும் நன்கு காட்டப்பட்டுள்ளன. பின்கைகள் தெளிவாக இல்லை. வடவாயில் மகரதோரணச் சிற்பங்களுள் இதுவே சிறப்புற அமைந்துள்ளது. இது போன்ற ரிஷபாந்திகர் சிற்பங்கள் முற்சோழர் மற்றும் இடைச்சோழர் காலக் கோயில்களில் கூடுகள், மகரதோரணக் குழிவுகள், கோட்டங்கள் எனப் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன.

போதிகைகள் தாங்கும் உத்திரத்திற்கு மேல் வாஜனமும் அதற்கு மேல் வலபியும் கூரையும் அமைந்துள்ளன. வலபிப்பகுதியில் அழகுறச் செதுக்கப்பட்ட பூதவரி காட்டப்பட்டுள்ளது. கூரைப் பகுதியின் முன்னிழுப்பு கபோதமாகச் செதுக்கப்பட்டு இடையிடையே கூடுகள் கொண்டு அமைந்துள்ளது. இதன் ஓரப்பகுதியிலும்

---

59. கோட்டங்களின் மேல் மகரதோரணங்கள் இடம்பெறுவதைச் சீயமங்கலம் அவனிபாஜன பல்லவேசுவர கிருகத்தில்தான் முதல்முறையாகப் பார்க்கமுடிகிறது. மாமல்லபுரத்துக் கொற்றவைத் தளியிலும் பல்லவர் காலக் கற்றளிகளிலும் இம்மகரதோரணங்கள் முழுமையான நிலையைப் பெற்றுவிடுகின்றன. காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் கோட்டங்களின் மீதமைந்துள்ள மகரதோரணங்கள் அருமையான வேலைப்பாடுடையவை. முற்சோழர்களின் காலத்தில் இம்மரபு தொடர்ந்து பின்பற்றப்பட்டது.

60. ரிஷபாந்திகர் சிற்பத்தைப் பல்லவர்களின் தொடக்கக் காலத்திலேயே பார்க்கமுடிகிறது. சீயமங்கலத்திலுள்ள அவனி பாஜன பல்லவேசுவர கிருகத்தின் முகப்புத்தூண் சதுரமொன்றில் சிவபெருமானின் ரிஷபாந்திகக் கோலச் சிற்பம் காணப்படுகிறது. K.R. Srinivasan, Cave-Temples of the Pallavas, p.92.

நடுப்பகுதியிலும் கொடிக்கருக்குகள் செதுக்கப்பட்டுள்ளன. இவை முறையே கோடிப்பாளை, மையப்பாளை என்றழைக் கப்பெறும்.[61] கபோதத்தின் வெளிப்பரப்பில் கீழ் விளிம்பை யொட்டிச் சற்று உள்ளடங்கி வெட்டப்பட்ட நிலையில் சிறு சிறு வட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. சந்திரமண்டலமென்று அழைக்கப்படும் இக்கீழ் விளிம்பு வட்டங்களைப் பல்லவர் குடைவரைகளிலோ, ஒருகல் தளிகளிலோ காணமுடிய வில்லை. பல்லவர் காலக் கற்றளிகள் ஒன்றிரண்டில் காணப்படும் இக்கலைமுறையை முதல்முறையாக முற்சோழர் காலக் கோயில்களில்தான் பரவலாகக் காணமுடிகிறது.

கருவறைக் கட்டுமானத்தின் ஒவ்வொரு பத்திக்கும் இரண்டென அமைந்துள்ள கபோதக் கூடுகள் சாலைப்பத்தியில் ஒன்றை விட்டு ஒன்று நன்கு தள்ளியமைந்திருக்க, கர்ணபத்திகளில் ஒன்றுக்கொன்று நெருக்கமாகக் காட்டப்பட்டுள்ளன. இப்படி நெருக்கமாக அமையும் கூடுகளை நேத்ர நாசிகைகள் என்றழைப்பதுண்டு. இத்தகு நேத்ர நாசிகைகள் பல்லவர் கலைமுறையின் தொடர்ச்சியாகும். மாமல்லபுரத்திலுள்ள அருச்சுனர் ரதம், தர்மராசர் ரதம் போன்ற ஒருகல் தளிகளில் இந்நேத்ர வகை நாசிகைகள் காணப்படுகின்றன.[62] நன்கு வளைந்து

61. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப-ள். 114-115. இத்தகு கொடிக்கருக்குகளைப் பல்லவர் குடைவரைக் கபோதங்களில் பார்க்கமுடிகிறது. சீயமங்கலம் அவனிபாஜன பல்லவேசுவர கிருகத்துக் கருவறைக் கபோதம் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஒருகல் தளிகளில் அருச்சுனர் ரதம், தர்மராசர் ரதம் ஆகியவற்றில் கோடிப்பாளை இடம்பெற்றுள்ளது. பல்லவக் கற்றளிகளிலும் இத்தகு கொடிக்கருக்குகள் காட்டப்பட்டுள்ளன. பாண்டியர் ஒருகல் தளியான கழுகுமலை வெட்டுவான் கோயிலில் இக்கொடிக் கருக்குகள் மிகச் சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளன. C. Sivaramamurthy, Kalugumalai and Early Pandyan Rock-Cut Shrines, (Bombay, N.M. Tripathi Private Ltd., 1961), p.19.

62. Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa, 200 B.C.1324 A.D. (American Institute of Indian Studies, 1983), p.34.

அமைந்துள்ள இக்கூடுகளின் கீழ்ப்பகுதி திறப்பாக விடப்பட்டுள்ளது. கூடுகளைச் சுற்றியமைந்துள்ள வளைவில் கொடிக்கருக்குகளும் வளைவின் உச்சிப்பகுதியில் பூப்பதக்கமும் காட்டப்பட்டுள்ளன.

கருவறையின் தென்புறக் கூடுகளில் ஐந்தில் கந்தருவர் தலைகள்[63] காட்டப்பட்டுள்ளன. ஒன்றில் அமர்ந்த நிலையில் சிம்மம் உள்ளது. கிழக்குக் கூடுகளில் ஒன்றில் படுத்த நிலையில் விஷ்ணுவும் மூன்றில் கந்தருவர் தலைகளும் இருக்க, இரண்டு வெறுமையாக விடப்பட்டுள்ளன. வடபுறக் கூடுகள் அனைத்துமே வெறுமையாக உள்ளன.

ஆ. கீழ்த்தள ஆர உறுப்புகள்

கீழ்த்தளக் கூரையின் மேல் சற்று உள்ளடங்கிய நிலையில் பூமிதேசம் காட்டப்பட்டுள்ளது. யாளிவரியாய் அமைந்துள்ள இந்த பூமிதேசத்திலும் வேழயாளிகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. திருப்பங்களில் மகரங்கள் உள்ளன. கூரையின் மீது தள மேலுறுப்புகளாய்க் கர்ண பத்திகளின் மேல் கர்ணகூடங்களும், சாலைப்பத்திகளின் மீது சாலைகளும் அமைந்துள்ளன. பத்திப் பிரிப்பிற்கேற்பச் சாலை நன்கு முன்தள்ளியும் கர்ணகூடங்கள் சற்று உள்ளடங்கியும் இருக்க, இவற்றை இணைப்பனவாய் நாற்புறமும் ஆரச்சுவர் காட்டப்பட்டுள்ளது.

கர்ணகூடங்கள், சாலைகள் மற்றும் இவற்றை இணைக்கும் பிடிச்சுவர் ஆகியவற்றில் நாசிகைகள்

---

63. கபோதக் கூடுகளில் இதுபோல் கந்தருவர் தலைகளை அமைக்கும் பழக்கம் பல்லவர் குடைவரைகளிலேயே தொடங்கிவிட்டது. முதலாம் மகேந்திரவர்மரின் தளவானூர்க் குடைவரையின் முகப்புக் கபோதத்திலேயே கூடுகளும் அக்கூடுகளுள் கந்தர்வர் தலைகளும் காணப்படுகின்றன. இக்கூடுகளில் பலவிதமான சிற்பங்களை அமைக்கும் பழக்கம் பாண்டியரால் மேற்கொள்ளப்பட்டது.

காட்டப்பட்டுள்ளன. இந்நாசிகைகள், சாலைகளில் சற்றுப் பெரியதாகவும் மற்ற இடங்களில் அதில் பாதியளவாகவும் அமைந்துள்ளன. கம்புகளோடும் பாதங்களோடும் கூடிய கண்டம், வேதிகை, கம்பு என அமைந்த தளம் கீழுறுப்பாக, இரு தூண்களுக்கிடைப்பட்ட கோட்டம் நடுவிலும், தோரணவளைவுடன் கூடிய கூடு மேற்பகுதியிலும் அமைந்துள்ள இந்நாசிகைகளின் தலைப்பகுதியில் பூப்பதக்கங்கள் காட்டப்பட்டுள்ளன.[64]

சாலை சிகரத்தின் பக்க நாசிகைகளின் தலைப்புகளாக யாளித்தலைகள் அமையக் கர்ணகூடங்களுக்கு ஒரு தூபியும் சாலைகளுக்கு இரண்டு தூபிகளும் காட்டப்பட்டுள்ளன.

சாலை, கர்ணகூடம் போன்றவற்றிலுள்ள நாசிகைகள் அல்ப நாசிகைகள் என்றும் ஆரச்சுவர் நாசிகைகள் சூத்ர நாசிகைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.[65]

கர்ணகூட, ஆரச்சுவர் நாசிகைக் கோட்டங்களில் மலரேந்திய ஆடவர் மற்றும் பெண் உருவங்களும்[66] சாலை

---

64. இதுபோன்ற பூப்பதக்கங்கள் பாண்டியர் ஒருகல் தளியான கழுகுமலை வெட்டுவான் கோயிலிலும் பல்லவர்தம் நிறைவடையா ஒருகல் தளிகளான பிடாரி மற்றும் வலையன் குட்டை ரதங்களிலும் முதல்முதலாகக் காணப்படுகின்றன.

65. K.R. Srinivasan, Temples of South India, Glossary, pp.209-211.

66. இவர்களைத் தேவர்களாகக் கொள்ளலாம். இவர்தம் இறைக்கோயில் வழிபாட்டைக் குறிக்கும் வகையிலேயே இச்சிற்பங்கள் அமைந்துள்ளன. இதுபோல் மலரேந்திய ஆடவர் சிற்பங்களைப் பல்லவர், பாண்டியர் மற்றும் முத்தரையர் குடைவரைகளில் கோட்டச் சிற்பங்களாகக் காணமுடிகிறது.

மாமல்லபுரத்து மும்மூர்த்திக் குடைவரை, மலையடிப்பட்டி ஒளிபதி விஷ்ணு கிருகம், பாண்டியரின் திருக்கோளக்குடிக் குடைவரை ஆகியன இதுபோன்ற சிற்பங்களைக் கொண்டுள்ளன. முற்சோழர் காலக் கற்றளியான திருச்செந்துறை சந்திரசேகரர் திருக்கோயிலின் ஆர உறுப்பு நாசிகைகள் இதுபோன்ற சிற்பங்களைக் கொண்டுள்ளன.

நாசிகைக் கோட்டங்களில் தெய்வத் திருமேனிகளும் காட்டப்பட்டுள்ளன. சாலை நாசிகைக் கோட்டங்களின் தென்புறம் ஆலமர் அண்ணலும் கிழக்கில் முருகனும் வடக்கில் நான்முகனும் மேற்கில் திருமாலும் காட்டப்பட்டள்ளனர்.[67]

ஆரச்சுவர் நாசிகைக் கோட்டங்கள்

தெற்கு	-	தென்மேற்கு - சிதைந்த நிலையில் பெண் வடிவம்.
		தென்கிழக்கு - அமர்ந்த நிலையில் வலக்கையில் மலரேந்திய பெண். இடக்கை தொடை மேல் இருத்தப் பட்டுள்ளது.
கிழக்கு	-	தென்கிழக்கு - அமர்ந்த நிலையில் பெண் சிற்பம்; சிதைந்துள்ளது.
		வடகிழக்கு - கோட்டம் இல்லை; சிற்பமும் இல்லை; வளைவுத் தோரணம் மட்டும் உள்ளது.
வடக்கு	-	வடகிழக்கு - கோட்டம் இல்லை; சிற்பமும் இல்லை; வளைவுத் தோரணம் மட்டும் உள்ளது.
		வடமேற்கு - அமர்ந்த நிலையில் பெண் சிற்பம்; சிதைந்துள்ளது.
மேற்கு	-	வடமேற்கு, தென்மேற்கு - சிற்பங்கள் இல்லை.

---

67. ஆர உறுப்புகளின் நாசிகைக் கோட்டங்களில் சிற்பங்கள் அமைக்கும் பழக்கத்தைப் பல்லவர் ஒருகல் தளிகளில் காணமுடியவில்லை. ஆனால் பாண்டியர் ஒருகல் தளியான கழுகுமலை வெட்டுவான் கோயிலில் இம்மரபு முழுமையாக இடம்பெற்றுள்ளது. தமிழகக் கலை வரலாற்றில் நாசிகைச் சிற்பங்கள் இடம்பெறும் முதற்கோயிலாக வெட்டுவான் கோயிலைக் குறிப்பிடலாம். கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு எனச் சாலை நாசிகைகளில் முதன்மைத் தெய்வங்களை அமர்த்தும் முறையும் முதல்முறையாக வெட்டுவான் கோயிலிலேயே இடம்பெற்றுள்ளது.

கர்ணகூட நாசிகைக் கோட்டங்களில் தென்கிழக்கில் மட்டுமே மலரேந்தி அமர்ந்த நிலையிலான ஆடவர் சிற்பமொன்று காணப்படுகிறது.

இ. இரண்டாம் தளம்

தளக்கூரையின் முன்பகுதியில் காட்டப்பட்டுள்ள ஆர உறுப்புகளின் பின்புறத்தே, நடுப்பகுதியில், கீழ்த்தளத்தின் வளர்ச்சியாக இரண்டாம் தளம் எழுகின்றது. இத்தளத்தின் தாங்குதளமும் சுவரின் பெரும்பகுதியும் முன்னுள்ள கூரையமர் மேலுறுப்புகளால் மறைக்கப்பட்டிருப்பதாகக் கொண்டு சுவரின் மேற்பகுதியை மட்டும் வடிவமைத்துக் காட்டுவது மரபு.[68] இங்கும் அம்மரபே பின்பற்றப் பட்டுள்ளது.

சுவரின் நான்முக அரைத்தூண்கள் கும்பத்தில் தொடங்கிப் போதிகைவரை காட்டப்பட்டுள்ளன. போதிகைகளின் கீழ்க்கைகள் மேற்கைகளாகித் திரும்பும் இடத்தில் விரிகோணத்தில் திரும்புகின்றன. தரங்க அமைப்பு இல்லை. இப்போதிகைகள் தாங்கும் உத்திரம், அதற்கு மேல் அமைந்துள்ள வாஜனம், மேலுள்ள வலபிப் பகுதி அனைத்தும் கீழ்த்தளத்தைப் போலவே, ஆனால் அளவில் சிறியனவாகச் செதுக்கப்பட்டுள்ளன. வலபியில் பூதவரிக்குப் பதிலாக அன்னவரி[69] காட்டப்பட்டுள்ளது. பக்கவாட்டுத் தோற்றத்தில் ஒன்றுபோல அமைந்து வரிசையாகக் காட்டப்பட்டிருக்கும் இப்பறவைகள்

---

68. இம்மரபு பல்லவர் காலத்திலேயே தொடங்கப்பெற்றதை அருச்சுனர் ரதத்தில் காணமுடிகிறது. ஒரு தளத்திற்கு மேற்பட்ட தளங்கள் கொண்டிருக்கும் பல்லவர் கற்றளிகளிலும் இவ்வமைப்பு பின்பற்றப்பட்டுள்ளது. முற்சோழர்கள் இம்மரபைத் தொடர்ந் துள்ளனர்.

69. அன்னவரி வலபியில் இடம்பெறுவதைப் பல்லவர் குடைவரைகளிலேயே பார்க்கமுடிகிறது. மாமல்லபுரத்து வராகர் குடைவரை சிறந்த எடுத்துக்காட்டாகும். முற்சோழர் கோயில்களைப் பொறுத்தமட்டில் பெரும்பாலான கோயில்களில் இவ்வரி மேற்றள வலபிகளிலேயே காட்டப்பட்டுள்ளது.

சுதைப்பூச்சால் பெரிதும் சிதைந்துள்ளன, மேலே, கூரையின் முன்னிழுப்பாய் நாற்புறமும் உள்ள கபோதத்தின் கர்ணப்பகுதிகளில் பகுதிக்கொரு கூடும், சாலைப் பகுதிகளில் பகுதிக்கு இரண்டு கூடுகளும் காட்டப் பட்டுள்ளன. கீழ்த்தளக் கபோதத்தின் கர்ணப்பகுதிகளில் நேத்ர நாசிகைகளாய் இரு கூடுகள் அருகருகே காட்டப் பட்டிருக்கும் நிலையிலிருந்து, இம்மேல்தள அமைப்பு மாறுபட்டுள்ளது.

ஈ. கிரீவம், சிகரம், தூபி

கூரைக்கு மேலே பூமிதேசமும் அதற்குச் சற்று உள்ளடங்கிய நிலையில் கூரையின் மேற்பரப்பின் நான்கு மூலைகளிலும் அமர்ந்தநிலையில் நந்திகளும்[70] உள்ளன. இந்நந்திகள் தென்வாயில் ஸ்ரீகோயில் கிரீவ நந்திகளினும் அளவில் சிறியவை. சிறிய திமிலும் இலேசாய் வளைந்த சிறிய கொம்புகளும் கொண்டுள்ள இவற்றுள், இரண்டின் கழுத்தில், மூன்று வடங்களாய்ப் பிணைக்கப்பெற்ற மணிமாலை காட்டப்பட்டுள்ளது. வடமேற்கு நந்திக்குக் கழுத்தின் வலப்புறத்தே சிறுமணிகள் கோத்த மாலையும் வடக்கயிறும் காட்டப்பட்டுள்ளன. ஆனால் இடப்புறத்தே இவ்வடிப்பு தொடரவில்லை. தென்மேற்கு நந்தியின் கழுத்தில் காணப்படும் பட்டையான அமைப்பு சிற்பத்தின் நிறைவடையா நிலையைச் சுட்டுவதாக உள்ளது.

---

70. விமான மேல்தளக் கூரையின் நான்கு மூலைகளிலும், அவ்விமானத்தில் உறையும் தெய்வத்தின் வாகனத்தை அமர்த்தும் மரபை முதல்முதலாகப் பாண்டியர் ஒருகல் தளியான கழுகுமலையிலேயே காணமுடிகிறது. பல்லவர் பகுதியில் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலின் மேல்தள மூலைகளில் நந்திகள் அமர்த்தப்பட்டிருக்கின்றன. கடற்கரை வளாகக் கோயிலான இராஜசிம்மேசுவரத்தில் முகமண்டபக் கூரையில்தான் நந்தியைப் பார்க்கமுடிகிறது. க்ஷத்திரிய சிம்மேசுவரத்தில் நந்திகள் இடம்பெறவில்லை.

இரண்டாம் தளக் கூரையின் நடுப்பகுதியில் பூமிதேசப் பரப்பின் மேல், வட்டவடிவத்தில் வேதிகையும் அதன்மீது கிரீவ சுவரும் எழுப்பப்பட்டுள்ளன. அரைத்தூண்கள் ஏதுமின்றி வெறுமையாகக் காட்சியளிக்கும் கிரீவ சுவரின் மேற்பகுதியில் உத்திரமும் அதைத் தொடர்ந்து வாஜனமும் உள்ளன. வாஜனத்தின் மீது அமர்ந்துள்ள வலபிப்பகுதியில் அன்னவரி காட்டப்பட்டுள்ளது. இப்பறவைகள் இரண்டாம் தள வலபிவரியை ஒத்தமைந்துள்ளன.

கிரீவத்தின் நாற்புறமும் நடுப்பகுதியில் சிற்பங்களோடு கூடிய நாசிகைக் கோட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. மகாநாசிகைகள் என்றழைக்கப்படும் இந்நாசிகைக் கோட்டங்களின் தளங்கள் கிரீவ வேதிகையுடன் தொடர்புடையனவாக இருக்க, இடைப்பட்ட கோட்டங்களும் அவற்றுள்ளிருக்கும் சிற்பங்களும் தனிக் கற்பலகைகளில் செதுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன. இப்படி இணைக்கப்பட்டுள்ள கற்பலகைக் கோட்டங்களின் அணைவுத் தூண்கள் எளிய நான்முகத் தூண்களாய்க் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் போதிகைகள் விரிகோணத்தில் உத்திரம் தொடுகின்றன. இப்போதிகைகளின் கீழ்க் கைகளைவிட மேற்கைகள் அளவில் பெரியன. உத்திரத்திற்கு மேலே சிகரத்தில் காட்டப்பட்டிருக்கும் தோரண வளைவுடன் கூடிய கூடுகள் நாசிகைகளின் தலைப் பகுதிகளாய் அமைந்துள்ளன. இந்நாசிகைக் கோட்டங்களில் தூண்களுக்கு இடைப்பட்ட பகுதியில் கிரீவ வேதிகையில் அமர்ந்தாற் போன்றதொரு நிலையில் இறைத்திருமேனிகள் காட்டப்பட்டுள்ளன. தெற்கில் ஆலமர் அண்ணலும் கிழக்கில் முருகனும் வடக்கில் நான்முகனும் மேற்கில் விஷ்ணுவும் அழகிய சிற்பங்களாய் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கிரீவத்தையடுத்து வட்டமான வேசர சிகரம் மேலே தூபியுடன் அமைந்துள்ளது. பல கற்களை அடுக்கிய கட்டுமானமாய் எவ்விதமான மேற்பூச்சு வேலையுமின்றி வெறுமையாகக் காட்சியளிக்கும் சிகரத்தில் கிரீவ

கோட்டங்களுக்கு நேர் மேலாக நான்கு முதன்மைத் திசைகளிலும் தோரண வளைவுகள் காட்டப்பட்டுள்ளன. இத்தோரண வளைவுகளின் நடுவிலுள்ள குழிந்த பகுதிகள் கோட்டத்தில் அமர்ந்திருக்கும் தெய்வ வடிவங்களின் தலைப்பகுதிகளுக்கு மேலாகக் காட்டப்பட்டுள்ளன. தோரண வளைவுகளில் இருபுறமும் கொடிக்கருக்குகள் செதுக்கப் பட்டுள்ளன. இவ்வளைவின் உச்சியில் யாளித்தலைகளும் கூடுகளின் குழிந்த பகுதிகளில் தோரணம், மதலைகள் ஆகியனவும் காட்டப்பட்டுள்ளன.[71] தூபிக் குடத்தின் கீழ்ப்பகுதியிலும் மேற்பகுதியிலும் தாமரை வரிகள் அழகுபடச் செதுக்கப்பட்டுள்ளன.

உ. மகாமண்டபம்

விமானத்தின் கீழ்த்தளமான கருவறைக்கு முன்னால் முகமண்டபமும் அதையடுத்து மகாமண்டபமும் உள்ளன. கிழக்கு மேற்காக 6.80மீ. நீளமும் தென்வடலாக 5.28மீ. அகலமும் கொண்ட மகாமண்டபம், முறையான தாங்குதள அமைப்பு ஏதுமின்றிப் பிற்காலத் திருப்பணியாய் எழுந்துள்ளது. முகமண்டபத்தின் மேற்குச் சுவரையொட்டி வடக்கில் 1.87மீ. அகலத்திற்கும் தெற்கில் 65செ.மீ. அகலத்திற்குமாய் விரிந்து நீளும் இம்மண்டபத்தின் தென்பகுதி மட்டும் திறப்பாக உள்ளது. சதுரம், நீளமான கட்டுப்பகுதி, சதுரம் என்ற அமைப்பில் உள்ள ஆறு தூண்கள் இம்மண்ட பத்தை இரு வரிசைகளாய் நின்று தாங்குகின்றன. இவற்றுள் இரண்டு தூண்கள் தென்புறத் திறப்பையொட்டி அமைந்து அப்பகுதியை மூன்று அங்கணங்களாக்கியுள்ளன. இத்தூண் களின் வெட்டுப் போதிகைகள் உத்திரம் தாங்குகின்றன.

---

71. கூடுகளின் குழிந்த பகுதியில் தோரணம், மதலை காட்டும் மரபு பல்லவர்தம் ஒருகல் தளிகளில் தொடங்குகிறது: மாமல்லபுரம் பீமர் ரத சிகரத்தின் தெற்கிலும் வடக்கிலும் உள்ள குழிவுப் பகுதிகளுக்குள் தோரணங்களும் மதலைகளும் காட்டப் பட்டுள்ளன. கணேசர் ரதத்திலும் இவற்றைப் பார்க்கமுடிகிறது. இம்மரபின் தொடர்ச்சியையே வடவாயில் ஸ்ரீகோயிலில் காண்கிறோம்.

மேலே கூரை, தெற்குப் பகுதியில் மட்டும் கபோத இழுப்பின்றிக் காட்டப்பட்டுள்ளது. கட்டமைப்புக் கொண்டு இம்மண்டபம் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிறகு எழுப்பப்பட்டதாகக் கொள்ளலாம்.

மண்டபத்தினுள் கிழக்குப் பார்வையாக மூன்று பிள்ளையார் சிற்பங்கள் உள்ளன. இவற்றுள் இரண்டு சிறிய அளவின. மூன்றாவதாக உள்ள சிற்பம் சற்றுப் பழமையானதாக உள்ளது.

ஊ. முகமண்டபம்

மகாமண்டபத்திற்கும் கருவறைக்கும் இடையில் முகமண்டபம் அமைந்துள்ளது. முகமண்டபமும் விமானமும் ஒரே காலகட்டத்தைச் சேர்ந்தவையென்பதால், புறப்பகுதியில் விமானத்தின் கீழ்த்தளமும் முகமண்டபமும் ஒரே கட்டுமான அமைப்பைக் கொண்டுள்ளன. பத்திப் பிரிப்பின்மையும் சுவர்க் கோட்டங்கள் இல்லாமையுமே வேறுபாடுகள். விமானத்தைப் போலன்றி முகமண்டபம் ஒரு தளத்துடன் நின்றுவிடுகிறது. கபோதத்திற்கு மேல் காணப்படும் பூமிதேசத்திற்குப் பிறகு முகமண்டபத்தில் எந்தவிதக் கட்டுமானமும் இல்லை. முகமண்டபக் கபோதக் கூடுகளில் தென்புறம், இரண்டில் பூதகணங்களும் ஒன்றில் குரங்கு முகமும் காட்டப்பட்டுள்ளன. வடபுறத்தே இரண்டு வெறுமையாக இருக்க, ஒன்றில் படுத்த நிலையில் சிம்மம் காட்டப்பட்டுள்ளது. விமானக் கீழ்த்தளமான கருவறையைவிட 35.5செ.மீ. உள்ளடங்கிக் கட்டப்பட்டுள்ள முகமண்டபம் கிழக்கு மேற்காக 3.23மீ. நீளமும் தென்வடலாக 1.86மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. இதன் மேற்கு நோக்கிய வாயில் 71செ.மீ. அகலத்தில் முறையான நிலையமைப்புடன் காணப்படுகிறது. மேல்நிலை மற்றும் நிலைக்கால்களின் விளிம்புகள் இரண்டு அடுக்குகளாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அகலமாகச் செதுக்கப்பட்டிருக்கும் வெளியடுக்கு கொடிக்கருக்குகளால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. இந்தக் கொடிகளின் இழைகள்

முதலடுக்கில் சிறுசிறு நாகத்தலைகள் போன்ற சுருள்களாகக் காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கோபுரத்திலும் இதுபோன்ற கருக்குகள் காணப்பட்டாலும் அங்கு இந்நாகத்தலைச் சுருள்கள் காணப்படவில்லை. மேல்நிலையில் இந்தக் கருக்குப்பகுதிக்கு மேலாகக் கண்டப்பகுதி காணப்படுகிறது. கீழ்நிலைக்குக் கீழும் இந்த அமைப்பு உள்ளது.

வாயில் நிலையையொட்டி சுவரின் இருபுறமும் பக்கத்திற்கொன்றாக நான்முக அரைத்தூண்கள் உரிய உறுப்புகளுடன் காட்சியளிக்கின்றன. இவற்றின் குளவுடன் கூடிய தரங்கப் போதிகைகள் தாங்கும் உத்திரத்திற்கு மேலாக வாஜனமும் வலபியும் உள்ளன. வலபியில் பூதவரி செதுக்கப் பட்டுள்ளது. மேலே கூரையும் அதன் முன் தொடர்ச்சியாகக் கபோதமும் காணப்படுகின்றன. சுவரில் அரைத்தூண் களையடுத்துக் காட்டப்பட்டுள்ள கோட்டங்களில் பக்கத்திற் கொன்றாக வாயிற்காவலர் சிற்பங்கள் உள்ளன.[72] முகமண்டபத்தின் உட்புறத்தே நான்கு அரைத்தூண்கள் காணப்படுகின்றன. இரு வரிசைகளில் சுவருக்கு இரண்டாய் அமைந்துள்ள இவை சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பில் உள்ளன. மேற்சதுரத்தின் மேலிருந்து கிளைக்கும் தரங்கப் போதிகைகளின் கீழ்க்கைகள் மிக நீளமாகவும் மேற்கைகள் சிறியதாகவும் உள்ளன. கீழ்க்கைகள் மேற்கைகளாகித் திரும்பும் இடத்தில் குளவும் தரங்க எழுச்சிகளின் நடுவே பட்டையும் காணப்படுகின்றன. இப்போதிகைகள் தாங்கும் உத்திரங்கள் இரண்டும் மேற்கூரையை மூன்று பிரிவுகளாய்ப் பிரிக்கின்றன. உத்திரத்திற்கு மேலுள்ள வாஜனத்திற்கும்

---

72. தொடக்கக் காலப் பல்லவர் குடைவரைகள் சிலவற்றுள் (தளவானூர் சத்ருமல்லேசுவரம், மண்டகப்பட்டு லக்ஷிதாயதனம்) முகப்பை யொட்டி அதன் இருபுறத்தும் அமைந்த சுவர்க் கோட்டங்களில் வாயிற்காவலர் சிற்பங்கள் இடம்பெற்றன. இதே அமைப்புப் பாண்டியர் பகுதியிலும் (குன்றக்குடிக் குடைவரைகள்) முத்தரையர் பகுதியிலும் (மலையடிப்பட்டி ஒளிபதி விஷ்ணு கிருகம்) பின்பற்றப்பட்டுள்ளது.

கூரைக்கும் இடையில் காணப்படும் வலபி, வடிவங்களின்றி வெறுமையாகக் காட்டப்பட்டுள்ளது. ஏறத்தாழ இதே காலகட்டத்தில் எழுப்பப்பட்ட முற்சோழர் கற்றளியான திருச்சென்னம்பூண்டி மகாதேவர் திருக்கோயிலில் இவ்வலபிகள் பூதவரிகளால் அழகுபடுத்தப்பட்டிருப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

தூண்களின் இருப்பால் மூன்று பிரிவுகளாக்கப் பட்டிருக்கும் முகமண்டபத்தில் கருவறையை அடுத்துள்ள இரு பிரிவுகளும் ஏறத்தாழ ஒரே அளவினதாய் இருக்க, வாயிலையொட்டியுள்ள பிரிவு மட்டும் அவற்றில் மூன்றில் ஒரு பங்கே உள்ளது. முகமண்டபத்தின் வடசுவர் அருகே தெற்குப் பார்த்த நிலையில் பெரிய அளவிலான அம்மன் திருமேனியொன்று நிறுத்தப்பட்டுள்ளது.

எ. கருவறை

71செ.மீ. அகலமுள்ள கருவறை வாயில் நன்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கும் மேல்நிலையின் மேலே கண்டப்பகுதி காட்டப்பட்டுள்ளது. வாயிலை அடுத்தமைந் துள்ள பக்கச் சுவர்களில் விரிகோணத்தில் அமைந்த எளிய போதிகைகளைக் கொண்ட நான்முக அரைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கருவறையின் நடுவில் லிங்கத்திருமேனி, ஆவுடையாரும் பாணமுமாய் அமைந்துள்ளது. ஆவுடையாரின் கீழ்ப்பகுதி வட்டத் தளமாய் இருக்க, அதன் மீது கண்டம் இடையிட்ட பெருந்தாமரையிதழ் வரிகளும் மேலே வட்டத்தளமும் காட்டப்பட்டுள்ளன. இத்தளத்தின் சுற்றுப் பகுதியில் சற்று உள்ளடங்கிய நிலையில் முழு வளைவிற்குமாய்க் கம்பொன்று செதுக்கப்பட்டுள்ளது. தளத்தின் நடுவில் உருளையாய் அமைந்த லிங்கபாணம். கோமுகம் வடக்குப் பகுதியில் உள்ளது. தாமரைவரிகளில்,

கிழடுக்கு ஊர்த்வ பத்மவரியாகவும் மேலடுக்கு அதபத்மவரியாகவும் காட்டப்பட்டுள்ளன.

கருவறையின் மேற்பகுதி இங்குள்ள சுற்றாலைத் திருமுன்கள் போலவே காட்டப்பட்டுள்ளது. மேலே செல்லச் செல்லக் கற்களை முன் நகர்த்தி விட்டத்தைக் குறுக்கியதன் மூலம் திறப்பின் அளவையும் படிப்படியாகக் குறைத்து, மேல் அமைப்பாகச் சிறு கற்பலகையொன்று தந்து அதன்மீது தூபியைப் பொருத்தியுள்ளனர். அம்மன் கோயில் தவிர இங்குள்ள ஏனைய அனைத்து விமானங்களுமே இதுபோல் பொள்ளலாகத்தான் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

2. *சிற்பங்கள்*

சுவர்க் கோட்டச் சிற்பங்கள்

வடவாயில் ஸ்ரீகோயில் விமானக் கிழ்த்தளச் சுவர்க் கோட்டங்களில் தென்புறம் ஆலமர் அண்ணலும் கிழக்கில் முருகனும் வடக்கில் நான்முகனும் அமர்ந்த கோலத்தில் காணப்படுகின்றனர்.

அ. ஆலமர் அண்ணல்

தென்புறக் கோட்டத்தில் கருங்கல் தளமொன்றில் வீராசனத்தில்[73] அமர்ந்துள்ள ஆலமர் அண்ணலின் வல முன்கை சின் முத்திரையிலிருக்க, இட முன்கையில் ஓலை காட்டப்பட்டுள்ளது. பின்கைகளில் வலக்கையில் மலரும் இடக்கையில் அக்கமாலையும் கொண்டுள்ளார். கீழே

73. காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில், மாமல்லபுரம் உலக்கணேசுவர் கோயில் ஆகியவற்றின் தென்புறக் கோட்டங்களிலுள்ள ஆலமர் அண்ணல் சிற்பங்களும் வீராசனத்திலேயே காட்டப்பட்டுள்ளன என்றாலும் சிற்பங்களின் அமர்நிலையில் வேறுபாடு உள்ளது. மேலும் பல்லவச் சிற்பங்களில் காட்டப்பட்டிருக்கும் யோகபட்டம் இங்கில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இறக்கப்பட்டிருக்கும் வலக்கால் பாதத்தை இருத்த, இறைத்திருமேனி அமர்த்தப்பட்டிருக்கும் கருங்கல் தளத்தின் கீழ்ப்பகுதியிலிருந்து சற்றுப் பிதுக்கமான தளமொன்று அரைநிலா வடிவத்தில் காட்டப்பட்டுள்ளது. சடை, அழகிய மகுடமாகப் புனையப்பட்டுள்ளது. மகுடத்தின் முகப்பிலும் பக்கங்களிலும் பூரிம அணிகள் பொருத்தமுறக் காட்டப் பட்டுள்ளன. மகுட முகப்பின் நடுவில் சிம்ம முகப் பதக்கமும் முகத்தில் நெற்றிக்கண்ணும் காட்டப்பட்டுள்ளன. செவிகளில் வலப்புறம் பூட்டுக் குண்டலமும் இடப்புறம் பனையோலைக் குண்டலமும் உள்ளன. பதக்கத்தோடு கூடிய மணிகள் பதித்த மாலையும் கண்டிகையும் கழுத்தை அணிசெய்கின்றன. முப்புரிநூலும் உதரபந்தமும் அரைப்பட்டிகையும் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. சிற்றாடையின் இடுப்பு முடிச்சு பட்டிகைப் பதக்கத்தால் இறுக்கப்பட்டுள்ளது. இதன் முடிச்சுகள் பக்கத்திலேயே அழகுத் தொங்கலாய்க் காட்டப்பட்டுள்ளன. மேற்கைகளில் கங்கணங்களும் மணிக்கட்டருகே வளைகளும் விரல்களில் மோதிரங்களும் கொண்டுள்ள இவரின் தோள்களில் சடைப்புரிகளின் தவழல் மிக இயல்பாகச் செதுக்கப் பட்டுள்ளது. தலைக்கு மேல் குடையொன்று காட்டப் பட்டுள்ளது. இலேசான சிரிப்பில் மலர்ந்திருக்கும் சிவபெருமானின் இதழ்க்கடையோரங்களில் சிறு கோரைப்பற்கள் காட்டப்பட்டுள்ளன. இது மிக அரிதான அமைப்பாகும். ஆலமர் அண்ணல் வடிவங்களில் கோரைப்பற்கள் காட்டப்படுவதில்லை. உக்கிரக் கோலங்களில் மட்டுமே காட்டப்பெறும் கோரைப்பற்கள் இங்கு அமைதித் தோற்றத்தில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதை இத்திருக்கோயில் சிற்ப அமைப்புகளில் காணப்படும் சிறப்பம்சங்களுள் ஒன்றாய்க் கொள்ளலாம்.

ஆ. முருகன்

கிழக்குக் கோட்டத்தில் முருகன் சுகாசனக் கோலத்தில் அமர்ந்துள்ளார். இவர் அமர்ந்துள்ள கருங்கல் தளத்தின் கீழ்ப்பகுதியிலேயே, கீழிறக்கப்பட்டுள்ள வலக்காலை இருந்துவதற்கான பாதந்தாங்கி காட்டப்பட்டுள்ளது. வல முன்கை அபயம் காட்ட, இட முன்கை தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. பின்கைகளில் வலப்புறம் சூலமணியும் இடப்புறம் சக்தியும் உள்ளன. தலையில் கரண்ட மகுடம்; நெற்றியின் மேற்பரப்பில் அடர்த்தியான சென்னி; மார்பில் வீரச்சங்கிலி; கழுத்தில் மணிமாலை; மேற்கைகளில் நன்கு வடிவமைக்கப்பட்டுள்ள கங்கணங்களும் மணிக்கட்டுப் பகுதியில் வளைகளும் உள்ளன. செவிகளில் பனையோலைக் குண்டலங்கள், இடுப்பாடை தொடையின் கீழ்ப்பகுதிவரை காட்டப்பட்டுள்ளது. ஆடை முடிச்சுகள் பக்கவாட்டில் இருக்க, மடிப்புத் தொங்கல் இடுப்பின் நடுப்பகுதியிலிருந்து தளத்தில் படிந்து நெகிழ்ந்துள்ளது. முருகனின் தலைக்குப் பின்னால் தீச்சுடர்களுடன் கூடிய திருவாசி காட்டப்பட்டுள்ளது. இது போன்றதொரு திருவாசி இக்கோயிலின் வேறெந்தச் சிற்பத்திற்கும் காட்டப்படவில்லை. பல்லவர் கால முருக வடிவங்கள் எதுவும் இதுபோன்ற திருவாசிகளுடன் அமைக்கப்படவில்லையென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இக்கோயிலுக்கே உரிய சிறப்புக் கருவியான சூலமணி இம்முருகனின் கையிலும் இடம்பெற்றுள்ளது.

இ. நான்முகன்

கருவறை வடகோட்டத்தில் கருங்கல் தளமொன்றின் மீது சுகாசனத்தில் நான்முகன் காட்டப்பட்டிருக்கிறார். பின்கைகளில் வலப்புறம் அக்கமாலையும் இடப்புறம் கமண்டலமும் கொண்டுள்ள பெருமானின் முன்கைகளில் வலக்கை அபயமுத்திரை காட்டுகிறது. இடக்கை தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. சடைமுடி மகுடமாய்ப் புனையப் பட்டுள்ளது. செவிகளில் பூட்டுக் குண்டலங்கள்.

நாசிகைச் சிற்பங்கள்

அ. சாலைச் சிற்பங்கள்

சாலைகளின் நடு நாசிகைகளில் நாற்புறமும் வனப்பான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தென்புறம் ஆலமர் அண்ணல் வீராசனத்தில் அமர்ந்துள்ளார். வல முன்கை தர்ஜனியில் உள்ளது. இட முன்கை கடகமாய் வயிற்றருகே காட்டப் பட்டுள்ளது. வலப் பின்கை சுதைப்பூச்சில் மறைந்துள்ளது. இடப் பின்கையில் அக்கமாலை. சிற்ப அமர்வு நேராக இல்லாமல் சற்றுக் கிழக்குத் திரும்பலாய், இடப்புறம் நோக்கிய நிலையில் உள்ளது.[74] தலைமுடி சடைபார அமைப்பிலிருக்கச் செவிகளைக் குண்டலங்கள் அழகுசெய்கின்றன.

ஏனைய மூன்று சாலை நாசிகைகளில் கிழக்கில் முருகனும் வடக்கில் நான்முகனும் மேற்கில் விஷ்ணுவும் அமர்ந்த கோலத்தில் உள்ளனர். இவர்களுள் முருகனும் விஷ்ணுவும் சுகாசனத்திலும் நான்முகன் அர்த்த பத்மாசனத்திலும் அமர்ந்துள்ளனர். இவர்தம் பின்கைக் கருவிகளை அடையாளம் காணமுடியவில்லை. முன்கைகளுள் வலக்கை அபயத்திலிருக்க, இடக்கை கடகமாய் இடத்தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. முருகன் கரண்டமகுடமும் விஷ்ணு கிரீடமகுடமும் அணிந்திருக்க, நான்முகன் சடையையே மகுடமாகப் புனைந்துள்ளார். நான்முகனும் விஷ்ணுவும் கணுக்கால் வரையிலான ஆடை அணிந்திருக்க, முருகன் சிற்றாடையுடன் காட்டப்பட்டுள்ளார். மூவருக்குமே கழுத்திலும் கைகளிலும் பாதங்களிலும் அணிகலன்கள் உள்ளன.

ஆ. மகாநாசிகைச் சிற்பங்கள்

வேசரமாய் அமைந்துள்ள கிரீவ சுவருக்கு முன்னால் நான்கு திசைகளிலும் காட்டப்பட்டுள்ள கோட்டங்களில்

---

74. இந்த அமர்வுத் தோற்றம் பல்லவச் சிற்பங்களைப் பின்பற்றி அமைந்துள்ளது. மாமல்லபுரம் உலக்கணேசுவரத்து ஆலமர் அண்ணலின் சிற்பம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இறைவடிவங்கள் இருக்கின்றன. தென்புற மகாநாசிகையில் ஆலமர் அண்ணல் வீராசனத்தில் காட்டப்பட்டுள்ளார். சற்றே கிழக்குத் திரும்பிய அமர்வு; வலக்கால் கீழே இறக்கப் பட்டுள்ளது. பின்கைகள் இரண்டும் கடக முத்திரை யிலுள்ளன. இவற்றுள் வலப் பின்கை அக்கமாலை ஏந்தியுள்ளது. வல முன்கை சின் முத்திரையிலிருக்க, இட முன்கை கடகமாய்க் காட்டப்பட்டுள்ளது. வலச்செவி நீள்செவியாய் வெறுஞ்செவியாய் இருக்க, இடச்செவியில் பனையோலைக் குண்டலம். முப்புரிநூலும் உதரபந்தமும் சடைபாரமும் கழுத்தில் கண்டிகையுமென சிற்பம் சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மகாநாசிகையில் முருகன் அர்த்த பத்மாசனக் கோலத்தில் அமர்ந்துள்ளார். தலையைக் கரண்டமகுடமும் மார்பை வீரச்சங்கிலியும் நெற்றி மேற்பரப்பைச் சென்னியும் அலங்கரிக்கின்றன. செவிகளிரண்டிலும் பனையோலைக் குண்டலங்கள். பின்கைகளில் இடப்புறம் அக்கமாலை கொண்டுள்ளார். வலப் பின்கையில் உள்ள கருவி அடையாளம் காணுமாறு தெளிவாக இல்லை. முன்கைகளில் வலக்கை அபயம் காட்ட, இடக்கை கடகமாய்த் தொடைமீது இருத்தப்பட்டுள்ளது.

வடக்கு மகாநாசிகையில் நான்முகன் சுகாசனத்தில் தாமரைத்தளத்தின் மீது காட்டப்பட்டுள்ளார். துணியாலான முப்புரிநூலும் மகுடமாய்ப் புனைந்த சடைமுடிகளுமாய் அமர்ந்திருக்கும் இப்பெருமானின் இடைக்குக் கீழ்ப் பட்டாடை காட்டப்பட்டுள்ளது. பின்கைகளில் வலப்புறம் குண்டிகை; இடப்புறம் அக்கமாலை. முன்கைகளில் வலக்கை அபயக் குறிப்புக் காட்ட, இடக்கை கடகமாய் இடத்தொடை மீது இருத்தப்பட்டுள்ளது.

மேற்கு மகாநாசிகையில் விஷ்ணு சுகாசனத்தில் அமர்ந்திருக்கிறார். இடையில் பட்டாடையும் மேற்கைகளில் கங்கணங்களும் கழுத்தில் ஆரமும் செவிகளில் மகர குண்டலங்களும் கொண்டுள்ள இப்பெருமானின் வல

முன்கை அபயத்தில் இருக்க இடமுன்கை தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. பின்கைகளில் வலப்புறம் சக்கரமும் இடப்புறம் சங்கும் உள்ளன.

வாயிற்காப்போர் சிற்பங்கள்

வடவாயில் ஸ்ரீகோயில் முகமண்டப நுழைவாயிலின் இருபுறமும் பக்கத்திற்கொன்றாக இரண்டு வாயிற்காவலர் சிற்பங்கள் காணப்படுகின்றன. வாயிலின் வலப்புறம் இருப்பவர் கருவறை நோக்கி உடலைத் திருப்பியிருந்தாலும் மார்பும் முகமும் நேர் நோக்கியுள்ளன. இவரின் இடப்புறத்தே பெரிய அளவிலான மரமொன்று காட்டப்பட்டுள்ளது. உயர்த்தப்பட்ட வலப்பாதம், பாம்பு சுற்றியுள்ள இந்த மரத்தின் உடைந்த கிளையொன்றின்மேல் இருத்தப்பட்டுள்ளது. இடப்பாதம் பார்சுவமாகத்[75] திருப்பப்பட்டுள்ளது. வலக்கை வியப்பு முத்திரையிலிருக்க இடக்கை மழு மீது தாங்கலாக நெகிழ்த்தப்பட்டுள்ளது. கால் விரல்களில் வளைய அணிகளும் பாதங்களில் தாள்செறியும் கொண்டுள்ள இவரது செவிகளில் பனையோலைக் குண்டலங்கள்; மேற்கைகளில் கங்கணங்கள்; மணிக்கட்டருகே இரு கைகளிலும் வளைகள். முப்புரிநூலும் உதரபந்தமும் கொண்டுள்ள இவரது கடைவாயருகே கோரைப்பற்கள் காட்டப்பட்டுள்ளன. சடைப்புரிகளைத் திரட்டி மகுடமாக்கியிருக்கிறார். இந்தச் சடை மகுடத்தின் முன்புறம் யாளிமுக முகப்பும் பக்கங்களில் பல்வகை மலர்களும் அணிமுகப்புகளும் பூப்பதக்கங்களும் காட்டப்பட்டுள்ளன.

இடப்புறம் இருப்பவர் சற்றே கருவறைக்காய்த் திரும்பி நிற்கிறார். இவரது இடப்பாதம் சமத்திலும் வலப்பாதம் உத்கட்டிதத்தில்[76] பார்சுவமாகவும் காட்டப்பட்டுள்ளன.

---

75. பாதங்கள் பக்கவாட்டில் நன்கு திருப்பப்பட்டு (ஒரு நேர்க்கோடாக) நிற்பது அல்லது நகர்வது பார்சுவம் எனப்படும். - பத்மா சுப்ரமணியம், பரதக்கலை (கோட்பாடு), ப. 52.

76. பாதத்தைத் தரையில் படியவைத்துக் குதிங்காலை மட்டும் உயர்த்தித் தட்டுவது உத்கட்டிதம் எனப்படும். - பத்மா சுப்ரமணியம், பரதக்கலை (கோட்பாடு), ப. 51.

இவரின் வலப்புறமும் பெயர்த்தெடுக்கப்பட்ட மரமொன்று, பாம்பு சுற்றிய கீழ்ப்பகுதியுடன் காட்டப்பட்டுள்ளது. அம்மரத்தின் மீது வலக்கையைத் தாங்கலாய் அமர்த்தி, இடக்கையில் தர்ஜனி காட்டி நிற்கிறார் இக்காவலர். இவரது முப்புரிநூலும் உதரபந்தமும் பூக்கள் கோக்கப்பெற்றவையாய் அமைந்திருக்க, இடுப்பாடை முடிச்சுகள் பக்கவாட்டில் நெகிழ்ந்துள்ளன. அரையாடை அணிந்துள்ள இவருக்கும் கோரைப்பற்கள் உள்ளன. இடச்செவியில் பனையோலைக் குண்டலம்; வலச்செவியில் அன்னக் குண்டலம்.

அம்மன் சிற்பம்

வடவாயில் ஸ்ரீகோயில் முகமண்டபத்தில் தென்பார்வையாய் நிறுவப்பட்டுள்ள அம்மனின் வல முன்கை அபயமாகவும் இட முன்கை வரதத்திலும் இருக்க, வலப் பின்கை விரிந்த மலரொன்றை ஏந்தியுள்ளது. இடப் பின்கையிலோ மலர் மொட்டு; சமபாத நிலையில் நிற்கும் தேவியின் சடைகள் மகுடமாய்ப் புனையப் பட்டுள்ளன. செவிகள், கழுத்துப் பகுதி, கைகள், பாதங்கள் என அனைத்து இடங்களிலும் அளவான அணிகலன்கள். இச்சிற்பம் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகலாம்.

பூதவரிச் சிற்பங்கள்

அ. உள்மண்டபப் பூதவரி

உள்மண்டபத்தின் வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு வலபிகளில் பூதவரி காட்டப்பட்டுள்ளது. வலபித் திருப்பங்களில் யாளிகளும் அவற்றை அடுத்து வாஜனத்தின் மீது கைகளை வைத்தபடி எட்டிப்பார்க்கும் கணங்களும் உள்ளன. திருப்பங்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் ஆடல், பாடல், குறும்பு முதலிய பல்வேறு செயற்பாடுகளில் பூதங்கள் காணப்படுகின்றன.

வட வலபியில் பதின்மூன்று பூதங்கள் உள்ளன. இவற்றுள் ஐந்து ஆடற்கோலத்திலும் ஏனையன

இசைக்கலைஞர்களாகவும் உள்ளன. அர்த்தரேசிதம், கஜ அஸ்தம் என்னும் நிருத்தக்கைகளும் பதாகம் போன்ற ஒற்றைக்கை முத்திரைகளும் காட்டி ஆடும் ஆடற் கணங்களுக்கு இசைக்கலைஞர்களாய்க் காட்சிதரும் கணங்கள் குழல், மத்தளம், இலைத்தாளம், நரம்புக் கருவிகள் எனப்பல்வேறு இசைக்கருவிகளின் துணையோடு தாளம் தருகின்றன. இடத்தோளின் மீது தாங்கலாய்க் கொண்டுள்ள நரம்புக்கருவியை வலக்கைச் சிறுகோலால் இயக்கும் கணங்கள் இவ்வரிசையில் இரண்டு உள்ளன. தற்கால வயலின் போலக் காட்சி தரும் இவ்விசைக் கருவியை அறிஞர் சிரட்டைக்கின்னரியென்பர்.

தென் வலபியில் பன்னிரண்டு கணங்கள் உள்ளன. இவற்றுள் இரண்டு சண்டையிடுகின்றன. ஒன்று கையில் மழுவை ஓங்கியபடி பாய, மற்றொன்று வலக்கையில் தடியேந்தி மோதத் தயாராகின்றது. மூன்றாவது கணம் வலக்கையில் உணவு நிறைந்த பாத்திரமொன்றைக் கொண்டுள்ளது. ஏழு கணங்கள் இசைக்கருவிகளுடன் உள்ளன. இவற்றுள் நந்தியும் ஒன்று[77]. நந்திதேவரைச் சிவகணங்களின் தலைவராகக் கொள்வர். இங்கு நந்தி, நரம்புக் கருவியைக் கோல் கொண்டு இசைக்கும் கண வடிவாய்க் காட்டப்பட்டுள்ளது. இரண்டு கணங்கள் வங்கியம் ஊதுகின்றன.[78] ஆடியபடியே மத்தளம் வாசிக்கும் கணமும்

---

77. பூதவரியில் நந்தி இடம்பெறுவதைப் பல்லவர் காலக் கோயில்களிலேயே காணமுடிகிறது. கொற்றவைக்கான ஒருகல் தளியின் வலபிவரியில் நாற்புறமும் நந்தி இடம்பெற்றுள்ளது. திருச்சிராப்பள்ளிக் கீழ்க் குடைவரையின் முகப்புப் பூதவரியிலுமம நந்தி காணப்படுகிறது.

78. இதுபோல் வங்கியம் ஊதும் பூதகணங்கள் கோபுர பூதவரியிலும் கிழக்குமுகத்தில் காணப்படுகிறன்றன. பல்லவர் பகுதிகளில் இதுபோன்ற வங்கியம் வாசிக்கும் கணங்களைக் காணமுடியவில்லை. அவ்வகையில் இங்கு இடம்பெற்றிருக்கும் இவை சிறப்பிடம் பெறுகின்றன.

இந்த இசைக்கூட்டத்தில் அடங்கும். இப்பூதங்களின் இசைக்கு ஆடலைத் தருவனவாய் இரண்டு பூத ஆடலர்கள்.

மேற்கு வலபியில் பன்னிரண்டு கணங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் எட்டும் விதவிதமான ஆடற்கோலங்களில் காட்டப்பட்டுள்ளன. ஒன்பதாவது கணம் நரம்புக்கருவி இசைக்கிறது. அடுத்துள்ள பூதமோ பக்கவாட்டில் திரும்பியபடி இசைப்பூதத்துடன் ஏதோ பேசுவது போல் அமர்ந்துள்ளது. அடுத்துள்ள இரண்டில் ஒன்று ஆடல் நிகழ்த்த, மற்றொன்று பாதி உடலே வெளித்தெரியும் நிலையில் எஞ்சிய பாதியை மகாமண்டபக் கட்டட இணைவில் பறிகொடுத்துள்ளது.

ஆ. கருவறைப் பூதவரி

கருவறையின் வடக்கு, கிழக்கு, தெற்கு என்னும் முப்புற வலபிகளிலும் பூதவரி காட்டப்பட்டுள்ளது. இங்கும் வலபித் திருப்பங்களில் யாளி முகமும் அதையொட்டிய வல, இடப்புறங்களில் பள்ளிகொண்ட பெருமாள் அல்லது அமர்ந்த நிலையிலான சிம்மம், புலி போன்ற விலங்குகளும் காட்டப் பட்டுள்ளன.

கர்ணபத்திகளில் பத்திக்கு ஐந்தெனவும் சாலைப் பத்தியில் நான்குமாய் வடபுறம் பதினான்கு பூதங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் உள்மண்டபத்தையொட்டித் தொடரும் கர்ணபத்தியிலுள்ள ஐந்து பூதங்களும் ஆடல் நிகழ்த்துகின்றன. நடுவிலிருப்பது செண்டு தாளத்தை இயக்கியபடியே ஆடுகிறது. இவ்வைந்து பூதங்களும் மலர்ந்த முகத்துடன் புன்னகை மாறாது ஆடுகின்றன. சாலைப் பத்தியிலுள்ள நான்கில் இரண்டு ஆட, ஒன்று நரம்புக் கருவியை இசைக்க, நான்காம் பூதம் கைகாட்டி, ஆள் சுட்டி வேடிக்கை செய்கிறது. தொடரும் கர்ணபத்தியில் மூன்று, இசைக்கருவிகள் கொள்ள, இரண்டு கணங்கள் ஆடுகின்றன. இவற்றுள் ஒன்றான நந்தி, வலக்கையைப் பதாகத்திலும் இடக்கையை கஜ அஸ்தத்திலும் கொண்டு அரைமண்டலத்தில் அழகு நடம் புரிகிறது.

கிழக்கு வலபியின் வடக்குக் கர்ணபத்தியிலும் ஐந்து கணங்களே உள்ளன. இவற்றுள் மூன்று ஆட, இரண்டு இசைக்கலைஞர்களாய்க் காட்சிதருகின்றன. சாலைக் கணங்களில் இரண்டு ஆடுகின்றன. ஒன்று குழல் வாசிக்க, மற்றொன்று தாளமிடுகிறது. சாலையை அடுத்தமைந்துள்ள கர்ணபத்தியில் ஐந்து கணங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று வயிற்றருகே குடமுழவை[79] ஒட்டிவைத்தவாறு தட்டி இசை எழுப்புகிறது. இரண்டு கணங்கள் தாளமும் மத்தளமும் கொண்டுள்ளன. தாடி வைத்துள்ள பூதம் நரம்புக்கருவியை இசைத்தவாறே பாடுகிறது. மற்றொரு கணமோ இசைக்கேற்ப ஆடல் நிகழ்த்துகிறது.

தெற்கு வலபியின் முதல் கர்ணபத்தியில் ஐந்து கணங்களே காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்று பாட, மற்றொன்று மத்தளம் அடிக்கிறது. மூன்றாம் கணம் மத்தள ஒலி தாங்காமல் தலைமயிரைப் பிய்த்துக்கொள்வது போல் காட்டப்பட்டுள்ளது. நான்காம் பூதம் மடக்கிய வலக்கை மேல் இரண்டு குடங்களைச் சுமந்தபடி குடக்கூத்து நிகழ்த்துகிறது.[80]

---

79. குடமுழவு என்னும் இந்த இசைக்கருவி தேவாரப் பதிகங்களில் இடம்பெற்றுள்ளது. சிவ நடனத்துடன் இணைத்துக் காட்டப்படும் இவ்விசைக்கருவியைப் பாண்டியரின் திருமலாபுரம் குடைவரையிலும் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலிலும் காணமுடிகிறது. கழுகுமலை வெட்டுவான் கோயில் பூதவரியிலும் குடமுழவு இடம்பெற்றுள்ளது.

80. குடக்கூத்தாடும் நிலையிலான சிற்பங்களைப் பல்லவர், பாண்டியர் குடைவரைகளிலோ ஒருகல் தளிகளிலோ காணமுடியவில்லை. முற்பாண்டியர் கற்றளியான திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில் கபோதக் கூடு ஒன்றில் குடக்கூத்துச் சிற்பம் காணப்படுகிறது. திருவெள்ளறைப் புண்டரிகாட்சப் பெருமாள் கோயில் அடித்தளக் கண்டப்பகுதியில் திருமாலின் குடக்கூத்துச் சிற்பம் ஒன்று காணப்படுகிறது. தமிழகத்தில் கிடைக்கும் குடக்கூத்துச் சிற்பங்களுள் இவையே காலத்தால் முற்பட்டவையெனலாம். பூதம் குடக்கூத்து ஆடுவது போல், அதுவும் இரு குடங்களைச் சுமந்தபடி ஆடுவது போல் அமைந்துள்ள சிற்பம் இங்கு மட்டுமே காணப்படுவது இக்கோயிலின் சிறப்புக்குரிய தனித்தன்மையாகும். குடக்கூத்து, சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் பதினொரு வகை ஆடல்களுள் ஒன்றாகும்.

இதன் இடக்கை டோல அஸ்தமாய் உள்ளது. ஐந்தாம் பூதம் தன் வலக்கையில் பிடித்திருக்கும் உடும்பின் வாலைத் தன் மூக்கிலேயே நுழைத்துக் கொண்டு நிற்கிறது. சாலைப் பகுதியில் மூன்று கணங்கள் இசைக்கலைஞர்களாக, ஒரு பூதம் ஆடுகிறது. அடுத்துள்ள கர்ணபத்தியில் இரண்டு கணங்கள் தாளமெழுப்ப, மூன்று கணங்கள் ஆடுகின்றன.

இக்கணங்களின் சிற்பங்கள் அக்காலத்தில் வழக்கிலிருந்த இசைக்கருவிகள், ஆடற்கோலங்கள், வீர விளையாட்டுகள் போன்றவற்றை வெளிப்படுத்துகின்றன. இவற்றின் தலைக்கோலங்கள், ஆடையணிகலன்கள், மெய்ப்பாடுகள் போன்றவை அக்கால நாகரிகத்தையும் கலையுணர்வுகளையும் சித்திரிப்பனவாய் உள்ளன. இதுபோன்ற பூதவரிகள் முற்சோழர் கோயில்கள் பெரும்பாலானவற்றில் இடம்பெற்றுள்ளன.

இ. *தென்வாயில் ஸ்ரீகோயில்*

1. *கட்டடஅமைப்பு*

கோபுர வாயிலுக்கு நேரெதிரே அமைந்திருக்கும் தென்வாயில் ஸ்ரீகோயில், விமானம், முகமண்டபம், அந்தராளம்,[81] மகாமண்டபம்[82] என்ற அமைப்பில் உள்ளது.

---

81. அந்தராளம் என்பது இரண்டு கட்டடங்களுக்கு இடையில் அவற்றை இணைக்குமாறு அமையும் கட்டுமானமாகும். இது கருவறைக்கும் முகமண்டபத்திற்கும் இடையிலோ முகமண்டபத்திற்கும் மகாமண்டபத்திற்கும் இடையிலோ அமையலாம். K.R. Srinivasan, Cave-Temples of the Pallavas, p.185.

82. மையக்கோயிலுக்கு முன்னால் மகாமண்டபமொன்று அமைக்கும் பழக்கம் பல்லவர் காலத்திலேயே வழக்கில் இருந்தமைக்குக் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் வளாகத்துள் உள்ள மண்டபம் சிறந்த சான்றாகும். மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்கள் வளாகத்தில் இர்ாஜசிம்மேசுவரத்தின் எதிரில் இதுபோல் மண்டபமொன்று இருந்தமைக்கான அடையாளமாக அதன் அடித்தளம் காணப்படுகிறது. முற்சோழர் காலத்தில் இம்முறை ஆங்காங்கே பின்பற்றப்பட்டமைக்குத் தென்வாயில் ஸ்ரீகோயில் ஓர் எடுத்துக்காட்டாகும்.

விமானம்

அ. கீழ்த்தளம்

வடவாயில் ஸ்ரீகோயில் போலவே தென்வாயில் ஸ்ரீகோயிலின் விமானமும் பத்திப்பிரிப்பு முறையில் கட்டப்பட்டுள்ளது. இரண்டு கர்ணபத்திகளும் நடுவில் ஒரு சாலைப்பத்தியுமென அமைந்திருக்கும் இந்தக் கட்டுமானத்தில், சாலைப்பத்தி பிதுக்கமாகக் காட்டப்பட்டுள்ளது. விமானத்தின் தாங்குதளம் பிரதிபந்தமாக உள்ளது. பிரதிவரியின் யாளி முகங்கள் பக்கவாட்டில் பார்த்தவாறு உள்ளன. இவற்றின் இடையே வேழ யாளிகளும் உள்ளன. இந்த யாளிவரியின் பத்தித் திருப்பங்களில் வாய் திறந்த மகரங்கள் சுருட்டிய துதிக்கைகளுடன் காணப்படுகின்றன. சில மகரங்களின் தலைமேல் வீரர்கள் காட்டப்பட்டுள்ளனர். சில மகரங்களின் அங்காத்த வாய்களிலிருந்து வீரர்கள் வெளிப்படும் காட்சியும் காணப்படுகிறது. யாளிவரிக்கு மேலே உள்ளடங்கிய நிலையில் துணைக்கம்பு. இக்கம்பிலிருந்தே விமானம், முகமண்டபம் ஆகியவற்றின் சுவர்கள் எழுகின்றன. இச்சுவர்களை நான்முக அரைத்தூண்கள் அழகு செய்கின்றன.

சாலைப்பத்திகள்

விமானத்தின் சாலைப்பத்திகள், இரண்டு நான்முக அரைத்தூண்களுக்கு இடைப்பட்ட பிதுக்கங்களாகக் காட்டப்பட்டுள்ளன. இவ்விரு தூண்களுக்கு இடைப்பட்ட பகுதியில் 60செ.மீ. அகலத்தில் 1.71மீ. உயரத்தில் தெற்கிலும் 59.5செ.மீ. அகலத்தில் 1.71மீ. உயரத்தில் கிழக்கிலும் 62.5செ.மீ. அகலத்தில் 1.70மீ. உயரத்தில் வடக்கிலும் கோட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. இக்கோட்டங்களில் முறையே சிவபெருமானும் முருகனும் நான்முகனும் நின்ற கோலத்தில் காட்சிதருகின்றனர். கோட்டங்களை அணைவு செய்தாற் போல் காணப்படும் சிறிய அளவிலான நான்முக அரைத்தூண்கள் இரண்டும் கம்பின் மேலிருந்து எழுகின்றன. உரிய உறுப்புகளைக் கொண்டுள்ள இவற்றின் மாலைத்தொங்கலும் தானமும்

கொடிக்கருக்கு வேலைகளைப் பெற்றுள்ளன. கோட்ட அணைவுத்தூண்களின் வீரகண்டத்திலிருந்து கிளைக்கும் போதிகைகள் விரிகோணத்தில் உத்திரம் தாங்குகின்றன. உததிரத்தின் மேல் வலபியும் அதன்மேல் மகரதோரணமும் காட்டப்பட்டுள்ளன. இந்த மகரதோரணங்களில், தெற்கிலும் கிழக்கிலும் அற்புதமான சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. வடக்கில் சிற்பமில்லை.

கர்ணபத்திகள்

கர்ணபத்திகளின் திருப்பங்களில் ஒரு நான்முக அரைத்தூணும் நடுப்பகுதியில் ஒரு நான்முக அரைத்தூணும் உள்ளன. இவ்வரைத்தூண்களும் சாலை அரைத்தூண்களும் ஒரே அளவின. அனைத்து உறுப்புகளும் கொண்டிலங்கும் இத்தூண்களின் மாலைத்தொங்கலும் தானமும் கொடிக்கருக்கு களால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றின் பாலிகைகளின் அடிப்புறம் பலவிதமான பறவைகள் செதுக்கப்பட்டுள்ளன.[83] இது வடவாயில் ஸ்ரீகோயில் பாலிகைகளில் காணப்படாத அமைப்பாகும். திருப்பத்தூண்களின் வீரகண்டங்களிலிருந்து முத்தலைப் போதிகைகளும் நடுத்தூண்களின் வீரகண்டங் களிலிருந்து இருதலைப் போதிகைகளும் கிளைத்துக் கட்டட உத்திரம் தாங்குகின்றன. இது போலவே சாலைப்பத்திகளின் பக்கத்தூண் போதிகைகளும் கைகளை நீட்டி உத்திரம் தாங்குகின்றன.

கூரையுறுப்புகள்

உத்திரத்தின் மேல் வாஜனமும் அதன் மேல் வலபியும் மேலே கூரையும் அதன் முன்னிழுப்பாகக் கூடுகளும்

---

83. பாலிகைகளின் கீழ்ப்பகுதியில் கொடிக்கருக்குகளையும் பூத்தொங்கல்களையும் காட்டும் மரபைப் பல்லவர் கற்றளிகளில் காணமுடிகிறது. ஆனால் எந்தப் பல்லவர் கற்றளியிலும் இதுபோன்ற பறவைகள் செதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கமுடியவில்லை. முற்சோழர் பாலிகைகளிலும் இத்தகு வடிப்பு காணப்படாமையின் இதைத் தென்வாயில் ஸ்ரீகோயிலின் சிறப்பம்சமாகக் கொள்ளலாம்.

வளைவும் கொண்ட கபோதமும் உள்ளன. வலபி, பூத வரியால் அழகுபடுத்தப்பட்டுள்ளது.

வடவாயில் ஸ்ரீகோயில் போலவே, கர்ணபத்திகளின் மேல் நேத்ர நாசிகைகளாகவும் சாலைப்பத்தியில், ஒன்றை விட்டு ஒன்று சற்றுத் தள்ளிய நிலையிலும் கபோதக்கூடுகள் செதுக்கப்பட்டுள்ளன. சில கூடுகளில் சிறிய அளவிலான சிற்பங்கள் இருக்கச் சில கூடுகள் வெறுமையாக உள்ளன. இக்கூடுகளைச் சுற்றியுள்ள வளைவுத் தோரணங்கள் பூத்தொங்கல்களாலும் கொடிக்கருக்குகளாலும் ஆக்கப்பட்டுள்ளன. இவற்றின் உச்சியில் வடவாயில் ஸ்ரீகோயில் போலவே பூப்பதக்கங்கள் இருந்திருக்கவேண்டும். இப்போது ஒன்று தவிர ஏனைய அனைத்தும் உடைந்துள்ளன.

கீழ்த்தள ஆர உறுப்புகள்

கூரையின் மீது அமைந்துள்ள பூமிதேசத்திற்குச் சற்று உள்ளடங்கிய நிலையில் கீழ்த்தள ஆரஉறுப்புகளாகக் கர்ணபத்திகளின் மேல் கர்ணகூடங்கள் காட்டப்பட்டுள்ளன. சாலைப்பத்திகளின் மீது வழக்கமான சாலைகளுக்குப் பதிலாக ஆறங்கச் சாலைகள்[84] அமைக்கப்பட்டுள்ளன. ஒரு

---

84. சாலைகளை இதுபோல் ஆறங்கம் உடையனவாக அமைக்கும் பழக்கத்தைப் பல்லவர் காலத்திலேயே பார்க்கமுடிகிறது. காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலிலும் பனைமலையிலுள்ள பனைமலையீசுவரர் கோயிலிலும் இம்முறை கைக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இவ்விரு கோயில்களிலும் கர்ணகூடங்களும் சாலைகளைப்போலவே ஆறங்கம் உடையனவாகக் காட்டப்பட்டுள்ளன. தென்வாயில் ஸ்ரீகோயிலிலோ இதற்கு மாறாகச் சாலைகளை மட்டும் ஆறங்கம் கொண்டனவாகக் காட்டிக் கர்ணகூடங்களை வழக்கம்போல அமைத்துள்ளனர்.
சாலைகளை ஆறங்கச் சாலைகளாகக் காட்டியிருக்கும் இந்தக் கலைமுறை பழுவூர்க் கோயில்களில் தென்வாயில் ஸ்ரீகோயிலில் மட்டும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். முற்சோழர் கோயில்களுள் திருச்செந்துறை சந்திரசேகரர் கோயில், திருவேதிகுடி வேதபுரீசுவரர் கோயில் விமானங்களில் இதுபோன்ற ஆறங்கச் சாலைகள் காணப்படுகின்றன. கொடும்பாளூர்க் கோயில்களுள் நடுத்தளி இத்தகு அமைப்பைக் கொண்டுள்ளது. இம்மூன்றிடங்களிலுமே கர்ணபத்தி வழக்கம்போல மூன்றங்கங்களுடன் விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விமானத்திற்குரிய அடிப்படை உறுப்புகளான தாங்குதளம், சுவர், கூரை, கிரீவம், சிகரம், தூபி எனும் ஆறையும் பெற்ற ஆறங்கச் சாலைகளாக இவை அமைந்துள்ளன.

சாலைகள்

இச்சாலைகளின் சுவர்க்கோட்டங்களில், அமர்ந்த நிலையில் தெற்கிலும் வடக்கிலும் சிவபெருமான் இருக்க, கிழக்குக் கோட்டம் சிற்பமின்றி உள்ளது. மேற்குக் கோட்டம் முகமண்டபக் கூரைத் தளத்தால் மூடப்பட்டுள்ளது. இந்தக் கோட்டங்கள் சிறிய அளவிலான இரு நான்முக அரைத்தூண்களால் அணைவு செய்யப்பட்டுள்ளன. உரிய உறுப்புகள் அனைத்தும் பெற்றுள்ள இந்த அணைவு அரைத்தூண்களின் போதிகைகள் விரிகோணத்தில் திரும்பி உத்திரம் தொடுகின்றன.

சாலைச்சுவர்களின் திருப்பங்களில் இரு நான்முக அரைத்தூண்கள் உள்ளன. இவை முத்தலைப் போதிகைகளுடன் உத்திரம் தாங்குமாறு செய்யப்பட்டுள்ளன. உத்திரத்தின் மேல் சிறிய வலபியும் அதன்மேல் கூரையும் அமைந்துள்ளன. கூரையின் முன்னிழுப்பான கபோதத்தில் கோடிப்பாளையும் மையப்பாளையும் காட்டப்பட்டிருப்ப துடன், கூடுகளுடன் கூடிய வளைவுத் தோரணங்கள் இரண்டும் உள்ளன. இவற்றுள் சிலவற்றின் உச்சிகளில் பூப்பதக்கங்கள் காணப்படுகின்றன.

கபோதத்தின் மேல் பூமிதேசமும் அதற்குச் சற்று உள்ளடங்கிய நிலையில் வேதிகையும் கிரீவ சுவரும் காட்டப்பட்டுள்ளன. கிரீவ சுவரின் திருப்பங்களில் இரு சிறு நான்முக அரைத்தூண்கள், உறுப்புகள் ஏதுமற்றவையாய் அமைந்துள்ளன. கிரீவ சுவரின் நடுவே வேதிகையை ஊடறுத்துக் கோட்டம் காட்டப்பட்டுள்ளது. மேலே சிகரம் வண்டிக்கூரை அமைப்பில், சாலை சிகரமாய் உள்ளது. கிரீவ கோட்டங்களான மகாநாசிகைகளில் இறைவடிவங்கள் இடம்பெற்றுள்ளன.

சாலை சிகரத்தின் முன் சரிவுப்பகுதியில், கிரீவ கோட்டத்திற்கு நேர் மேலே, கூடும் வளைவுத்தோரணமும் காட்டப்பட்டுள்ளன. உச்சியில் சிம்மத்தலை கொண்டுள்ள இவ்வளைவிலும், வளைவின் இருபுறத்தே சிகரச்சுவரிலுமாய்க் கொடிக்கருக்குகள் செதுக்கப்பட்டுள்ளன. வடசாலை சிகரச்சுவரில் மட்டும் இருபுறத்தும் அன்னச்சேவல்கள் காட்டப்பட்டுள்ளன. இதுபோன்ற கலைநயம் பொருந்திய வடிப்பினைப் பல்லவர் கற்றளிகளின் சாலை சிகரங்களிலோ, பழுவூரிலுள்ள ஏனைய கோயில்களின் சாலை சிகரங்களிலோ காணமுடிவதில்லை. ஆனால் கழுகுமலை வெட்டுவான் கோயில் சாலை சிகரங்களில் இது போன்ற வடிப்புகள் உள்ளன. சாலை சிகரத்தின் உச்சிப்பகுதி இரண்டு வேசர தூபிகளைக் கொண்டுள்ளது. சில சாலைகளில் இவை சிதைந்துள்ளன.

கர்ணகூடங்கள்

தென்வாயில் ஸ்ரீகோயிலின் கர்ணகூடங்கள் பிற கோயில்களில் காணப்படும் கர்ணகூடங்கள் போலவே அமைந்துள்ளன. கம்புகளின் தழுவலில் பாதங்கள் அடங்கிய கண்டப்பகுதியும் அதன் மேலொரு வேதிகையும் அதற்குமேல் உள்ளடங்கிய துணைக்கம்பொன்றுமென கீழ்ப்பகுதி அமைய, இக்கம்பிற்கு நன்கு உள்ளடங்கிய நிலையில் கிரீவ சுவர் எழுகிறது. சுவரின் திருப்பங்களில் உறுப்பு பேதமற்ற நான்முக அரைத்தூண்கள். இவற்றின் விரிகோணப் போதிகைகள் உத்திரம் தாங்க மேலே சிறு வலபி காட்டப்பட்டுள்ளது. இதற்கு மேல் நாகரமாய்ச் சிகரமும் அதன்மேல் நாகர தூபியும் இடம்பெற்றுள்ளன.

கிரீவ சுவர்ப்பகுதியின் நடுவே அமைந்துள்ள நாசிகையில் சிற்பம் காட்டப்பெற்றுள்ளது. இதற்கு மேலே சிகரச்சுவரின் சரிவில், கூடும் வளைவுத்தோரணமும் காட்டப்பட்டுள்ளன. இந்த வளைவுத் தோரணத்தின் உச்சியில் சில இடங்களில் சிம்மத்தலைகளைப் பார்க்கமுடிகிறது. சில இடங்களில் இத்தலைகள் சிதைந்துள்ளன. சிகரத்தின்

உச்சிப்பகுதியும் தூபியும் கருக்கணிகளாலும் தாமரையிதழ்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

ஆ. இரண்டாம் தளம்

விமானத்தின் கீழ்த்தள ஆர உறுப்புகளின் பின்னே இரண்டாம் தளத்தின் அரமியமாகச் சுவரின் மேற்பகுதி மட்டும் காட்டப்பட்டுள்ளது. முத்தலைப் போதிகைகளுடன் கூடிய நான்முக அரைத்தூண்களும் அவற்றின் போதிகைகள் தொடும் உத்திரமும் அதன் மேலுள்ள வாஜனமும் ஒழுங்குற வடிக்கப்பட்டுள்ளன. வலபிப்பகுதியில் இறக்கை விரித்த அன்னங்களின் தொடர். வலபியின் திருப்பங்களில் தாவும் நிலையில் சிங்கங்கள் காட்டப்பட்டுள்ளன. வலபிக்கு மேலுள்ள கூரையின் முன்னிழுப்பாயுள்ள கபோதத்தில், கீழ்த்தளம் போலவே வளைவுடன் கூடிய கூடுகள் காட்டப்பட்டுள்ளன. கபோதத்தில் கோடிப்பாளை நான்கு மூலைகளிலும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இ. கிரீவம்

கபோதத்திற்கு மேலே இரண்டாம் தள முடிவைக் காட்டும் பூமிதேசம். இதனையடுத்து அமைந்துள்ள வேதிகையின் நான்கு மூலைகளிலும் நந்திகள் அமர்ந்துள்ளன. இவை அளவிலும் அமைப்பிலும் ஏறத்தாழ ஒன்றுபோல இருந்தாலும் அலங்காரங்கள் மாறுபட்டுள்ளன. எடுப்பான திமிலும் சிறிய வளைந்த உறுதியான கொம்புகளும் அவற்றின் கீழ் விரிந்த காதுகளும் கொண்டுள்ள இந்நந்திகளின் கழுத்தைச் சுற்றி வளையங்களும் பூத்தொங்கல்களும் சேர்க்கப்பெற்ற மாலை காணப்படுகிறது. இம்மாலை ஒவ்வொரு நந்தியின் கழுத்திலும் ஒவ்வொருவிதமாக அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர மணிகள் கோத்த மூன்றுவடக் கயிற்றுப் பின்னலும் காணப்படுகிறது. நெற்றிப்பகுதியின் நடுவில் பூப்பதக்கம் தைத்த முகபடாம். அதன் குஞ்சலங்கள் செவிகளின் அருகே காட்டப் பட்டுள்ளன. திறந்த வாயும் இலேசாக வெளித்தள்ளிய

நாக்குமாய் அமைந்திருக்கும் இந்நந்திச் சிற்பங்கள் பல்லவர் கால எழில்மிகு நந்திகளை ஒத்தமைந்துள்ளன.

நந்திகளுக்கு உட்பட்ட பகுதியில், கிரீவம் சதுரமாக அமைந்துள்ளது. கிரீவ சுவரின் திருப்பங்களில் எளிமையான உறுப்பு பேதமற்ற நான்முக அரைத்தூண்கள். இவற்றின் தலையிலமரும் உத்திரம், போதிகைத் தாங்கலின்றிக் காட்டப் பட்டுள்ளது. உத்திரத்தின் மேல் வாஜனமும் வாஜனத்தின் மேல் வலபியும் உள்ளன. இந்த வலபியும் இரண்டாம் தள வலபி போலவே அன்னவரியால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கீழ் வலபியில் உள்ள அன்னங்கள் மார்பு காட்டிய நிலையில், இலேசாக இறக்கைகளை விரித்தபடி அமர்ந்துள்ளன. ஆனால் இங்குள்ள அன்னங்களோ பக்கவாட்டில் நகர்வன போல் காட்டப்பட்டுள்ளன.[85] இவற்றுள் சில நீண்டு சுருண்ட அழகிய தோகைகளைக் கொண்டுள்ளன.[86] இவற்றின் தலைப்பகுதி யிலிருந்து கொத்தாகச் சில முடிக்கற்றைகள் தொங்குவது அழகுறக் காட்டப்பட்டுள்ளது. கிரீவ சுவர்களின் நாற்புறமும் நடுப்பகுதியில் மகாநாசிகைகளுக்கான கோட்டங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் இறைத்திருமேனிகள் உள்ளன. இக்கோட்டங்கள் வேதிகையிலிருந்து எழும் நான்முக அரைத்தூண்களால் அணைக்கப்பட்டுள்ளன. உரிய அனைத்து உறுப்புகளும் கொண்டுள்ள இத்தூண்களின் விரிகோணப் போதிகைகள் உத்திரம் தாங்க, மேலே வலபி. இவ்வலபியும், இதற்கு மேலுள்ள வளைவுத்தோரணத்துடன் கூடிய கூடும்,

---

85. பக்கவாட்டில் நகர்வன போன்ற அன்னங்களைக் கொண்ட வரிமானத்தை மிக அரிதாகவே பல்லவர் கால வலபிகளில் பார்க்கமுடிகிறது. இறக்கைகளை விரித்தபடி மார்பு காட்டிய நிலையிலுள்ள அன்னங்களின் தொடரே மிகுதியாகக் காணப்படுகிறது. ஆனால் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த பெருங்குடி பெருமுடியீசுவரர் கோயில், திருச்செந்துறை சந்திரசேகரர் கோயில் போன்ற சில முற்சோழர் கோயில் விமான கிரீவ வலபிகளில் இது போன்ற அன்னத்தொடர் காட்டப்பட்டுள்ளது.

86. இந்தத் தோகைகளைச் சிற்பச் செந்நூல் அன்னவால் கருக்கு என்று பெயரிடுகிறது. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப-ள்.112-113.

சிகரத்திலிருந்து பிதுக்கமாகக் காட்டப்பட்டுள்ளன. இத்தோரணத்தின் உச்சியில் சிம்மத்தலை.

ஈ. சிகரம்

நாகரமாய் அமைந்துள்ள சிகரத்தின் நான்கு மூலைகளிலும் எடுப்பான கொடிக்கருக்குகள் காணப்படுகின்றன. கபோதங்களில் காட்டப்பட்டுள்ளாற் போல் சிகரத்தின் நாற்புறமும் அதன் கீழ்ப்பகுதியில் விளிம்பு தட்டி அதற்குக் கீழே உள்ள சிறு பகுதியில் சந்திரமண்டலம் காட்டியுள்ளனர். சிகர உச்சியில் நாகர தூபி. மகாநாசிகைத் தோரணவளைவுகளின் குழிவுப்பகுதியில் நாற்புறமும் ஒரு தள நாகர விமானங்கள்[87] காட்டப்பட்டுள்ளன. இவ்விமானங்கள் உயரமான கீழ்த்தளத்தையும் அதற்கேற்ற மேலுறுப்புகளையும் பெற்றுள்ளன. இவற்றில் ஒரு தள விமானத்திற்குரிய ஆறு உறுப்புகளும் ஒழுங்குறக் காட்டப்பட்டுள்ளன.

உ. கருவறை

விமானக் கீழ்த்தளத்தின் உட்பகுதியான கருவறையில் ஆவுடையாரும் லிங்கபாணமும் காணப்படுகின்றன. ஆவுடையாரின் கீழ்ப்பகுதியில் வேசர தளமும் ஊர்த்வ பெருந்தாமரைப் பகுதியும் இருக்க, இடைப்பட்ட கண்டத்திற்கு மேலே, கீழ்நோக்கிய பெருந்தாமரைப்பகுதியும் வேசர பட்டிகையும் காட்டப்பட்டுள்ளன. இதற்கு மேலே சற்று உள்ளடங்கிய நிலையில் கம்பு. இக்கம்பிற்குட்பட்ட தள நடுவே லிங்கபாணம். 2.70மீ. பக்கமுள்ள சதுரமாக அமைந்துள்ள கருவறையின் சுவர்கள் வெறுமையாக உள்ளன. மேலே கதலிகாகர்ண முறையில்[88] கற்களை ஒவ்வோர் அடுக்கிலும் சற்று முன்தள்ளி வைத்து, இரண்டாம் தளம் மற்றும் அதன் கூரையின் சுற்றளவைக் குறைத்து, இறுதியில் சிகர உச்சியில் கூரை

87. மகாநாசிகைத் தோரண வளைவுகளின் குழிவுகளில் இதுபோல் கோயில் கட்டுமானங்களைக் காட்டும் பழக்கம் பல்லவர் காலத்திலேயே தொடங்கப்பெற்றதாகும். மாமல்லபுரம் நகுலசகாதேவர் ரதத்தின் மகாநாசிகை சிறந்த எடுத்துக்காட்டாக அமையும். முற்சோழர் கற்றளிகளில் இந்த அமைப்பை அரிதாகவே காணமுடிகிறது.

88. K.R. Srinivasan, Temples of South India, Glossary, p.210.

சுருங்கிச் சிறியதான நிலையில், தூபியின் அடிப் பகுதியாலோ அல்லது அதனளவில் அமைந்த கல்லாலோ விமான உட்புறத்தை மூடியுள்ளனர். இது வடவாயில் ஸ்ரீகோயிலிலும் சுற்றாலைத் திருமுன்களிலும் பின்பற்றப்பட்டுள்ள அதே அமைப்பு முறையாகும்.

முகமண்டபம்

முகமண்டபம், விமானத்தைப் போலவே உபானத்தோடு, பிரதிபந்தத் தாங்குதளமும் துணைக்கம்பும் நான்முக அரைத்தூண்கள் பொருந்திய சுவரும் கொண்டமைந்துள்ளது. பக்கத்திற்கு இரண்டெனவ வட, தென்புறங்களில் அமைந்திருக்கும் நான்முக அரைத்தூண்கள் உரிய உறுப்புகள் அனைத்தையும் பெற்றுள்ளன. இவற்றின் போதிகைகள் விமானக் கீழ்த்தளப் போதிகைகள் போலவே தரங்கமும் குளவும் பெற்று, நடுப்பட்டையுடன் காணப்படுகின்றன. இப்போதிகைகள் தாங்கும் உத்திரத்தையடுத்து வாஜனமும் அதற்கு மேல் பூதவரி செதுக்கப்பெற்ற வலபியும் இருக்க, மேலே கூரை. கூரையின் முன்னிழுப்பாக உள்ள கபோதத்தில் இரண்டு கூடுகளும் அவற்றைச் சுற்றி வளைவுத்தோரணமும் காட்டப்பட்டுள்ளன. இந்தக் கூடுகளில் குரங்கு, புலி போன்ற விலங்குகள் சிற்றுருவச் சிற்பங்களாய்க் காட்டப்பட்டுள்ளன. முகமண்டபத்தின் வடபுறத் தாங்குதளத்திற்கு மேலே காணப்படும் துணைக்கம்பில் அளவுகோலொன்று காணப்படுகிறது. இரு கூட்டல் குறிகளுக்கு இடையில் காட்டப்பட்டுள்ள இந்த அளவுகோலின் நீளம் 62செ.மீ. ஆகும். இதை இக்கோயில் கட்டப் பயன்படுத்திய தச்சக்கோலாகக் கொள்ளலாம்[89]. முகமண்டபத் தாங்குதளத்தின் மேற்குப்பகுதி, முன்னாலுள்ள அந்தராளத் தரையமைப்பால் முற்றிலும் மறைக்கப்

---

89. இந்த அளவுகோல் களஆய்வின்போது கண்டுபிடிக்கப் பட்டதாகும். இதுபோன்ற தச்சக்கோல்கள் தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் உள்ளிட்ட பல கோயில்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. - தினமலர், 12 மார்ச் 1991.

பட்டுள்ளது. தாங்குதளத்தின் மேலமர்ந்துள்ள கம்புப்பகுதியை மட்டுமே பார்க்கமுடிகிறது. இக்கம்பின் மேலெழும் சுவர்ப்பகுதியின் நடுவில் முகமண்டபத்தின் நுழைவாயில் அமைந்துள்ளது. இந்நுழைவாயிலின் இருபுறத்திலும் மேற்குச் சுவரின் திருப்பங்களிலும் நான்முக அரைத்தூண்கள். இத்தூண்களுக்கு இடைப்பட்ட சுவர்ப்பகுதியில் இரண்டு கோட்டங்கள் உள்ளன. தென்கோட்டம் 2.02மீ. உயரமும் 59செ.மீ. அகலமும் கொண்டிருக்க, வடகோட்டம் 2.01மீ. உயரமும் 59செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. இக்கோட்டங்களில் வாயிற்காவலர் சிற்பங்கள் இருத்தப்பட்டுள்ளன. உரிய உறுப்புகளுடன் உள்ள நான்முக அரைத்தூண்களின் கலசம், கும்பம், பாலிகை ஆகியவை பூக்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. பாலிகையின் மேல்மடிப்புகளில் தோரணத்தொங்கல்கள் காட்டப்பட்டுள்ளன. போதிகைகள் குளவுடன் கூடிய தரங்கப் போதிகைகளாக உள்ளன. இவை தொடும் உத்திரத்திற்கு மேல் வாஜனமும் வலபியும். வலபி பூதவரியால் நிரப்பப்பட்டுள்ளது.

வலபிக்கு மேலுள்ள கூரையின் முன்னிழுப்பாய் அமைந்துள்ள கபோதம், நான்கு கூடுகளைக் கொண்டுள்ளது. இக்கூடுகளில் முதல் மூன்றில் கந்தருவர் தலைகள் காட்டப் பட்டுள்ளன.[90] நான்காவது கூடு வெறுமையாக உள்ளது. முதல் கூட்டிலுள்ள கந்தருவர் செவிகளில் பனையோலைக் குண்டலங்களும் நெற்றிப்பகுதியில் பூப்பதக்கத்தோடு கூடிய நெற்றிச்சுட்டியும் காட்டப் பட்டுள்ளன. புடைத்த விழிகளும்

---

90. கபோதக் கூடுகளில் கந்தருவர் தலைகளைக் காட்டும் பழக்கத்தை முதல்முதலாகத் தளவானூர் சத்ருமல்லேசுவரம் குடைவரையில்தான் காணமுடிகிறது. இக்கந்தருவர் தலைகள் மிகத் தெளிவாகவும் கலைநுட்பத்துடனும் செதுக்கப் பட்டிருக்கின்றன. தென்வாயில் ஸ்ரீகோயிலின் முகமண்டபத்துக் கபோதக் கூடுகளிலுள்ள கந்தருவர் தலைகள் செதுக்கு நேர்த்தியில் சத்ருமல்லேசுவரத்திற்கு இணையானவை என்று கூறலாம்.

வளைந்து விரிந்த புருவங்களுமாய்க் காட்சியளிக்கும் இவரது முகக்குறிப்பில் வியப்பு தெரிகிறது. இரண்டாவது கூட்டிலுள்ள முகம் அகலமானதாகவும் அளவில் முதலாமவருடையதைவிடச் சற்றுப் பெரியதாகவும் காட்டப்பட்டுள்ளது. இந்த வடிவத்தின் செவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள். மூன்றாவது கூட்டிலுள்ள கந்தருவர் முகம் முதலாமவருடையது போலவே உள்ளது. இவரும் பனையோலைக் குண்டலங்களே அணிந்துள்ளார்.

திருநிலைக் கால்களும், மேல், கீழ் நிலைகளும் கொண்டு நன்கு வடிவமைக்கப்பட்டுள்ள முகமண்டப நுழைவாயிலின் அகலம் 86.5செ.மீ.; உயரம் 1.74மீ. முகமண்டபத்தின் உட்புறத்தே தென், வட சுவர்களையொட்டிப் பக்கத்திற்கு இரண்டென நான்கு அரைத்தூண்களும் நடுப்பகுதியில் வரிசைக்கு இரண்டென நான்கு முழுத்தூண்களும் உள்ளன. இவற்றுள் சில நன்கு செதுக்கப்பட்டு முழுமையடைந்துள்ளன. சிலவற்றில் மாலைத்தொங்கல் பகுதியும் தாமரைக்கட்டுப் பகுதியும் சரிவர அமைக்கப்படாமல் விடப்பட்டுள்ளன. சதுர பாதமும் எட்டுப்பட்டைகள் கொண்ட கட்டும் கொண்டெழும் இத்தூண்களில் அடுத்து, மாலைத்தொங்கலும் தாமரைக் கட்டும் காட்டப்பட்டுள்ளன. கலசமும் கும்பமும் நன்கு அழகுபடுத்தப்பட்டுள்ளன. வீரகண்டத்தின் மேலிருந்து கிளைக்கும் போதிகைகள் தரங்கமும் குளவும் கொண்டுள்ளன. தரங்க எழுச்சிகளின் நடுவே கொடிகள் படந்த பட்டை காட்டப்பட்டுள்ளது. இத்தரங்கப் போதிகைகள் தாங்கும் உத்திரத்தின் மேல் வாஜனமும் அதற்கு மேல் வரிமானமற்ற வெறுமையான வலபியுமிருக்க, மேல்தள முடிப்பாய்க் கூரையிடப்பெற்றுள்ளது. இந்த இரு வரிசைத் தூண்களின் இருப்பால் முகமண்டபத்தின் கூரை மூன்று பிரிவுகளாக்கப் பட்டுள்ளது.

இவ்வகையில் தென்வாயில் ஸ்ரீகோயில் முகமண்டபமும் வடவாயில் ஸ்ரீகோயில் முகமண்டபமும் ஒன்றுபோல அமைந்துள்ளன.

முகமண்டபத்தின் கிழக்குச் சுவர் நடுவே கருவறைக்குள் நுழைய வாயில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாயிலும் முகமண்டப வாயில் போலவே திருநிலைக்கால்களும் மேல், கீழ் நிலைகளும் பெற்றுள்ளது. இவ்வாயிலின் அகலம் 86 செ.மீ.; உயரம் 1.74மீ. இவ்வாயிலின் மேல்நிலைக்கு மேலே கண்டப்பகுதி காட்டப்பட்டுள்ளது. முகமண்டபத்திலிருந்து கருவறைக்குள் நுழைய, வாயிலின் கீழ் நிலைக்குக் கீழே, ஒரு படி காட்டப்பட்டுள்ளது. கருவறையின் வாயிலையொட்டி அணைவாகப் பக்கத்திற்கொன்றென இரண்டு நான்முக அரைத்தூண்கள் உள்ளன. முகமண்டப மேற்குச் சுவர்த் தூண்களைப் போலவே இவையும் அனைத்து உறுப்புகளும் பெற்றெழக் காணலாம். இவற்றின் போதிகைகள் மட்டும் முகமண்டப மேற்குச் சுவர்த் தூண்களிலிருந்து வேறுபட்டு விரிகோணப் போதிகைகளாய் உத்திரம் தொடுகின்றன. மேலே வாஜனமும் வரிமானமற்ற வலபியும் அடுத்துக் கூரையும் காட்டப்பட்டுள்ளன. வடக்குத் தெற்காக 2.75மீ. அகலமும், கிழக்கு மேற்காக 4.42மீ. நீளமும் கொண்டமைந்துள்ள முகமண்டபத்தின் உள்ளே வட, தென் பக்கங்களில் சுவரையொட்டிச் சற்று உயரமான திண்ணை பிற்காலத்தே எழுப்பப்பெற்றுள்ளது.

ஏ. அந்தராளம்

தென்வாயில் ஸ்ரீகோயில் முகமண்டபத்திற்கு முன்னால் மகாமண்டபமொன்று அமைந்துள்ளது. இம்மண்டபம் எழுப்பப்பட்ட காலத்தில் தனிமண்டபமாய், முகமண்டபத் தோடு எந்தவிதத் தொடர்புமில்லாமல் இருந்திருக்கவேண்டும். பின்னாளில் முகமண்டபத்தோடு இம்மண்டபத்தை இணைக்கக் கருதியவர்கள் தென்புறத்தேயும் வடபுறத்தேயும் இரண்டு சுவர்கள் எடுத்து, இருமண்டபங்களையும் ஓர் அந்தராள அமைப்பின் மூலம் இணைத்துள்ளனர். இந்த இணைப்பால் முகமண்டபத்தின் தென், வட சுவர்களின் கல்வெட்டுகள் சில தொடர்பிழந்துள்ளன.

பின்னாளில் உருவாக்கப்பெற்ற இந்த அந்தராளத்திற்கு முகமண்டபத்தின் வாயிலமைந்த மேற்குச் சுவரே கிழக்குச் சுவராகவும் மகாமண்டபத்தின் கிழக்குச் சுவரே மேற்குச் சுவராகவும் அமைந்துள்ளன. புதிதாக எடுக்கப்பெற்ற வட, தென் சுவர்கள் கிழக்கில் திரும்பி முகமண்டபத்தின் வட, தென் சுவர்களோடு இணைகின்றன. இந்தத் திருப்பம் வடபுறத்தே 1.66மீ. அகலமும் தென்புறத்தே 2.12மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. இவ்விரு திருப்பங்களில் தென்புறத்தே மட்டும் ஒரு வாயில் காட்டப்பட்டுள்ளது. 57செ.மீ. அகலமும் 1.42மீ. உயரமும் கொண்டமைந்துள்ள இவ்வாயில், திருநிலைக்கால்களும் மேல், கீழ் நிலைகளும் கொண்டமைந்துள்ளது. திருநிலைக்கால்களின் கீழ்ப்பகுதியில் சிறிய அளவிலான நாகபந்தமும் அதற்குமேல் ஊர்த்வ தாமரையிதழ்வரியும் காட்டப்பட்டுள்ளன. நாகபந்த அமைப்பு வாயில்களிலும் தூண்களிலும் இடம்பெறுவது கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில்தான். இந்தக் குறுக்குச் சுவர்கள் பின்னாளையன என்பதற்கு இந்நாகபந்த அமைப்பும் ஒரு சான்றாகும்.

குறுகலான, செவ்வக நடைப்பகுதியாய் விளங்கும் இந்த அந்தராளத்தின் அகலம் 1.96மீ. நீளம் 6.51மீ. கிழக்குச் சுவரின் தென்பகுதியிலுள்ள வாயில் தவிர மேலும் இரண்டு வாயில்கள் இந்த அந்தராளத்திற்கு உள்ளன. ஒன்று வடபுறச் சுவரிலும் மற்றொன்று முன்னாலுள்ள மகாமண்டபத்தின் கிழக்குச் சுவரிலும் அமைந்துள்ளன.

வடக்கு வாயில் 61செ.மீ. அகலமும் 1.71மீ. உயரமும் கொண்டு, கீழ்நிலை, மேல்நிலை, திருநிலைக்கால்கள் பெற்றமைந்துள்ளது. இதன் கீழ்நிலையில் தாமரை மலரொன்று வெட்டப்பட்டுள்ளது. இவ்வாயிலின் இருபுறமும் வெளிப்புறத்தே அனைத்து உறுப்புகளுடனும் கூடிய இரண்டு நான்முக அரைத்தூண்கள் காணப்படுகின்றன. போதிகை

களின்றி வீரகண்டத்துடன் நிற்கும் இத்தூண்களையடுத்து அந்தராள வடசுவரின் கிழக்குத் திருப்பத்தில் மேலுமொரு நான்முக அரைத்தூண். இதன் போதிகை விரிகோணத்தில் திரும்பி உத்திரம் தொடுகிறது. உத்திரத்திற்கு மேல் வாஜனமும் அதற்கு மேல் வலபியும் உள்ளன. வலபியில் பூதவரி காணப்படுகிறது. இந்தப் பூதவரிக்கும் முகமண்டபம், விமானம் ஆகியவற்றில் காணப்படும் பூதவரிக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. இப்பூதவரி காலத்தால் பிற்பட்டதென்பது அமைப்பிலும் கலைமுறையிலும் தெளிவாய்த் தெரிகிறது. பூதவரிக்கு மேல் கூரை, கருங்கற்களால் அமைக்கப் பட்டுள்ளது. இந்த அமைப்புக்கு மேல், மேலும் ஒரு பூதவரியுள்ள வலபிப் பகுதி, வாயிலுக்கு மேலே பிற்காலத் திருப்பணிகளின் விளைவாய் நுழைக்கப்பட்டுள்ளது.

இந்த வடக்கு வாயிலுக்கு எதிரில்தான் தென்பார்வையாகச் சண்டேசுவரர் அமர்ந்திருக்கும் சுற்றாலைக் கோயில் உள்ளது. சண்டேசுவரர் திருமுன்னின் மேற்குச் சுவரையும் அந்தராளத்திற்கு முன்னுள்ள மகாமண்டபத்தின் வடசுவரையும் இணைத்து ஒரு சுவரெழுப்பியுள்ளனர். இது எக்காலத்து நிகழ்ந்திருக்கக்கூடும் என்பதை அறியக் கூடவில்லை.

அந்தராளத்தின் வட, தென் சுவர்களும் அவற்றின் கிழக்குத் திருப்பங்களும் முறையான தாங்குதளமின்றி எழுப்பப்பட்டுள்ளன. வழக்கமாகச் சுவர்ப்பகுதிகளை அலங்கரிக்கும் அரைத்தூண்களும் இச்சுவர்களில் இடம்பெறவில்லை. அதனால் உத்திரம், வாஜனம், வலபி போன்ற கூரையுறுப்புகளையும் இனம்பிரித்துப் பார்க்க முடியவில்லை. இந்தச் சுவர்களை எழுப்பியவர்கள் கட்டடக் கலை மரபுகளையோ நெறிகளையோ பின்பற்றியதாகத் தெரியவில்லை.

ஏ. மகாமண்டபம்

கிழக்கு மேற்காக 6.77மீ. அளவும் தெற்கு வடக்காக 7.49மீ. அளவும் கொண்டமைந்துள்ள மகாமண்டபம், தென்வாயில் ஸ்ரீகோயிலுக்குப் பெருமைசேர்க்கும் கட்டடமாக எழுந்துள்ளது. தென்வாயில் ஸ்ரீகோயிலின் கருவறையும் முகமண்டபமும் கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருக்க, இம்மகாமண்டபம் மணற்கற்களால் கட்டப்பட்டுள்ளது. தென்வாயில் ஸ்ரீகோயிலின் விமானமும் முகமண்டபமும் கட்டப்பட்ட காலத்திலேயே இம்மண்டபமும் எழுப்பப்பட்டிருக்க வேண்டும்.[91]

இதன் பிரதிபந்தத் தாங்குதளம் உருள்குமுதத்தின் கீழ்ப்பாதிவரை மண்ணில் புதைந்துள்ளது. அதனால் குமுதத்தின் கீழுள்ள ஜகதி எத்தகையது என்பதை அறியக்கூடவில்லை. பார்வையில்படும் உருள்குமுதப்பகுதிக்கு மேலாக ஊர்த்வ தாமரைவரியும் அதற்கு மேல் பிரதிவரியும் காணப்படுகின்றன. பிரதிமுகங்களாய் யாளிகள் காட்டப் பட்டுள்ளன. இவற்றுள் மிகச் சில யாளிகளே வேழயாளி களாய்க் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் துதிக்கைகள் நுனியில் சுருண்டும் நீளமாய் நெகிழ்த்தப்பட்டும் அமைக்கப் பட்டுள்ளன. பிரதிவரியின் வடமேற்குத் திருப்பத்தில் மகரதலை, சுருட்டிய துதிக்கையும் அங்காத்த வாயுமாய்க் காட்சியளிக்கிறது.

---

91. அகத்தீசுவரமாகிய தென்வாயில் ஸ்ரீகோயிலின் கருவறை, அர்த்தமண்டபம், அந்தராளம், முகமண்டபம், நந்தி, கொடிமரம், கோபுரம் ஆகிய யாவும் ஒரே அச்சில் உள்ளன. எனவே, இவை யாவும் ஒரே காலத்தில் எடுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது என்னும் எஸ். ஆர் பாலசுப்பிரமணியத்தின் கூற்று சரியன்று. - எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், சோழர் கலைப்பாணி, (சென்னை, பாரி நிலையம், 1966), ப.57. கட்டுமானப் பொருளும் கட்டட அமைப்பிலுள்ள மாற்றங்களும் அந்தராளப்பகுதி காலத்தால் தென்வாயில் விமானத்திற்கு மிகப் பிற்பட்டதென்பதைத் துல்லியமாகப் புலப்படுத்துகின்றன.

இந்தப் பிரதிவரியின் மீது உள்ளடங்கிய நிலையில் கண்டம் காட்டப்பட்டுள்ளது. இக்கண்டம் மேலும் கீழும் கம்புகளால் அணைக்கப்பட்டுள்ளது.[92] மேற்கம்பின் மேலே வேதிகை[93] இடம்பெற்றுள்ளதால் இக்கண்டப்பகுதியை வேதிக்கண்டம் என்று கூறலாம்.[94] வேதிகையை அடுத்து உள்ளடங்கிய நிலையில் மற்றொரு கம்பு. இந்தக் கம்பின் மேலெழும் சுவரில் நான்முக அரைத்தூண்கள் பொருந்தியுள்ளன. இந்தத் தூண்களின் பாதங்களைக் கீழுள்ள கண்டத்தில் காட்டியிருப்பதன் மூலம் இவை அங்கிருந்து எழுவது போல் சித்திரித்துள்ளனர். கண்டப்பகுதியில் காட்டப்பட்டிருக்கும் தூண் பாதங்களைக் கண்டபாதங்கள் என்றழைக்கலாம். இக்கண்டபாதங்களில் கலைநயம் மிக்க சிற்றுருவச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.[95] இவற்றுள் பெரும்பான்மையன பேரளவில் சிதைந்திருந்த போதும்

---

92. பல்லவர் குடைவரைகளிலேயே கண்டப்பகுதியைத் தாங்குதள உறுப்பாகப் பார்க்கமுடிகிறது. பாதபந்தத் தாங்குதளத்தின் நான்கு முக்கிய உறுப்புகளுள் கண்டமும் ஒன்றாகும். மாமண்டூர் மூன்றாம் குடைவரையிலுள்ள பின்சுவர்க் கருவறைகளின் பாதபந்தத் தாங்குதளத்தில் கண்டம் காட்டப்பட்டுள்ளது.

93. வேதிகை எனும் உறுப்பு பல்லவர் கற்றளிகளான மாமல்லபுரத்து ராஜசிம்மேசுவரம், க்ஷத்திரிய சிம்மேசுவரம், உலக்ககணேசுவரம் ஆகியவற்றிலேயே முதல்முறையாகக் காட்டப்பட்டுள்ளது.

94. பாதபந்தத் தாங்குதள அமைப்பில் ஒரு கண்டப்பகுதி இடம்பெறுவதால் அதனின்றும் வேறுபடுத்திக் காட்டுவதற்காக வேதிகையின் கீழ் அமையும் கண்டத்தை வேதிக்கண்டம் என்பது வழக்காகும்.

95. கண்டபாதங்களில் சிற்றுருவச் சிற்பங்கள் அமைக்கும் மரபு முற்சோழர் காலத்ததாகும். தாங்குதளக் கண்டபாதம், வேதிக் கண்டபாதம் எனும் இரண்டிலுமே சிற்றுருவச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருப்பதைப் புள்ளமங்கை ஆலந்துறையார் கோயில், கிராமம் மௌலீசுவரர் கோயில் ஆகியவற்றில் பார்க்கலாம். பிரதிபந்தத்திற்கு மேலமரும் வேதிக்கண்டத்தின் பாதங்களில் சிற்றுருவச் சிற்பங்கள் இடம் பெறுவதை லால்குடி சப்தரிஷீசுவரர் கோயிலில் பார்க்கமுடிகிறது.

எஞ்சியிருக்கும் பகுதிகள் கொண்டு பார்க்கும்போது. இவற்றை ஆடற்சிற்பங்களாக அடையாளம் காணமுடிகிறது.[96]

சுவர்களில் பொருந்திய நான்முக அரைத்தூண்களும் சிதைந்துள்ளன. அனைத்து உறுப்புகளும் இத்தூண்களில் இடம்பெற்றிருந்தபோதும் சில தூண்களில் சில உறுப்புகள் சிதைவின் காரணமாக முற்றிலும் அழிந்துள்ளன. இத்தூண்களில் குளவுடன்கூடிய தரங்கப் போதிகைகள் நடுவில் பட்டையுடன் உத்திரம் தொட, மேலே வலபியில் பூதவரி காணப்படுகிறது. உத்திரத்திற்கும் வலபிக்கும் இடைப் பட்ட வாஜனம் பல இடங்களில் சிதைந்துள்ளது. சில இடங்களில் கற்கள் பெயர்ந்து விழுந்திருப்பதால் பின்னாளில் அவ்விடங்களில் செங்கற்கள் வைத்துக் காரை பூசி நிரப்பியுள்ளனர். கூடுகள் பொருந்திய கபோதமும் தொடர்ச்சியின்றிச் சிதைந்து காணப்படுகிறது. கூரைக்கு மேலே காரைப் பூச்சாய் வேதிகை முகப்பு காட்டப் பட்டுள்ளது.

மேற்குச் சுவரின் நடுப்பகுதியில் பின்னாளில் திறப்பேற்படுத்தி அதன் மேற்கு நீட்டலாகவே நந்தி மேடை அமைக்கப்பட்டுள்ளது. நிலைகளோ நிலைக்கால்களோ இல்லாத இந்தத் திறப்பு தற்போது மகாமண்டபத்தின் மேற்கு நுழைவாயிலாகச் செயற்படுகிறது. இது எக்காலத்து நிகழ்ந்தது என்பதையறியச் சான்றுகள் ஏதுமில்லை. நந்திமேடையின் மேல்தளமும், மகாமண்டபத்தின் தரையும் ஒரே மட்டத்தில் இருக்குமாறு உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திறப்பின் அகலம் 71செ.மீ. உயரம் 1.44மீ. இதேபோல் மற்றொரு திறப்பு வடசுவரில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அகலம் 60செ.மீ. உயரம் 1.22மீ.

மகாமண்டபத்தின் தென்புறத்தே பின்னாளில் விரிவாக்கம் கருதிப் புதிய கட்டடப்பகுதியொன்று இணைக்கப்

96. இதுபோன்ற ஆடற்சிற்பங்கள் புள்ளமங்கை ஆலந்துறையார் கோயில் கண்டபாதங்களில் இடம்பெற்றுள்ளன.

பட்டுள்ளது. இப்பகுதி மேற்கில் 1.70மீ அகலமும் கிழக்கில் 1.49மீ. அகலமும் கொண்டு கிழக்கு மேற்காக 8.50மீ. நீளத்தில் அமைந்துள்ளது.

இப்புதிய பகுதியின் தென்புறச் சுவரில் நான்கு அரைத்தூண்கள் உள்ளன. மாலைத்தொங்கல், இடைக்கட்டு தவிர ஏனைய அனைத்து உறுப்புகளும் கொண்டுள்ள இவ்வரைத்தூண்களின் போதிகைகள் வெட்டுப் போதிகைகளாக[97] உள்ளன. இவை தொடும் உத்திரத்திற்கு மேல் வாஜனமும் வலபியும் காட்டப்பட்டுள்ளன. முதலிரண்டு தூண்களுக்கும் இறுதி இரண்டு தூண்களுக்கும் இடைப்பட்ட வலபிப்பகுதியில் பூதவரி காட்டப்பட்டுள்ளது. இரண்டாவது தூணுக்கும் மூன்றாவது தூணுக்கும் இடைப்பட்ட பகுதியில் வலபி சிதைந்துபோன காரணத்தால் செங்கல் வைத்து காரைப்பூச்சு செய்துள்ளனர். முதலிரண்டு தூண்களுக்கு இடைப்பட்ட வலபிப்பகுதியிலும் பூதவரி முழுமையாக இல்லை. தென்சுவரின் திருப்பங்களில் கிழக்கிலும் மேற்கிலும் உத்திரத்தின் மீது யாளித்தலைகள். கிழக்குத் திருப்பத்தை ஒட்டியுள்ள தூணுக்கு மேலேயிருக்கும் உத்திரப்பகுதியில் அமர்ந்த நந்தியின் சிற்பம் காட்டப்பட்டுள்ளது. கூரையின் முன்னிழுப்பான கபோதம் வளைவுத் தோரணமில்லாக் கூடுகளுடன் சிதைந்த நிலையில் காணப்படுகிறது. இதன் கீழ்விளிம்பில் சந்திரமண்டலம் இடம்பெற்றுள்ளது.

இந்த விரிவாக்கப் பகுதியின் தென்சுவர் நடுவில் அமைந்துள்ள வாயில் 74செ.மீ. அகலமும் 1.63மீ உயரமும் கொண்டுள்ளது. மேல், கீழ் நிலைகளும் திருநிலைக்கால்களும் கொண்டுள்ள இவ்வாயிலின் கீழ்நிலைக்குக் கீழே

---

97. வெட்டுப் போதிகைகள் நடுக்காலச் சோழர்களின் காலத்தில்தான் வழக்கிற்கு வந்தன. இவற்றைப் பல்லவர், பாண்டியர், முற்சோழர் காலக் கட்டுமானங்களில் பார்க்கமுடிவதில்லை. முதலாம் இராசராசரின் தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்து விமானத்தில் உள்ள தூண் போதிகைகள் வெட்டுப் போதிகைகளாக அமைந்துள்ளன. இவ்வமைப்பு முறை பின்னாள்களிலும் தொடர்ந்து பயிலப்பட்டது.

கண்டப்பகுதி காட்டப்பட்டுள்ளது. திருநிலைக்கால்களின் வெளி விளிம்பில் அடுக்குகள் வெட்டப்பட்டுள்ளன. இவ்வாயில், மகாமண்டபத்துக்குள் நுழைய ஏற்படுத்தப்பட்ட பிற்காலத் திறப்பாகும். தூண் போதிகைகள் கொண்டு இம்மண்டப விரிவாக்கம் பதினைந்து அல்லது பதினாறாம் நூற்றாண்டளவில் ஏற்பட்டதாகக் கருதலாம்.

மகாமண்டப விரிவாக்கத்தின் மேற்குச் சுவரின் கீழே கண்டப்பகுதியும் பட்டிகையும் காணப்படுகின்றன. இவை பாதபந்த அதிட்டானத்தின் வெளித்தெரியும் பகுதிகளா அல்லது துணைத்தளத்தின் பகுதிகளா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. கண்டப்பகுதி பழைய மகாமண்டபக் கட்டுமானத்தின் உருள்குமுத அளவிற்கும், பட்டிகைப்பகுதி பிரதிவரி அளவிற்குமாய் அமைந்துள்ளன. மேலே உள்ள சுவர் கல்லடுக்குச் சுவராய் அரைத்தூண்களின்றி வெறுமையாக உள்ளது. மேலே உத்திரம், வாஜனம், பூதவரியுடன் கூடிய வலபி, கூரையின் முன்னிழுப்பாய்க் கபோதம் ஆகியன காணப்படுகின்றன. கபோதம் பெரிதும் சிதைந்து சிறுசிறு பகுதிகளாய் உள்ளது.

தெற்கிலும் வடக்கிலும் திரும்பும் விரிவாக்கத்தின் கிழக்குச் சுவர்ப்பகுதிகளிலும் அரைத்தூண்கள் இல்லை. மேலே உத்திரமும் பூதவரியும் தொடர்பற்ற கபோதமும் உள்ளன. கூரைக்கு மேலே செங்கல் மற்றும் காரையால் ஆன சிறு தடுப்புச் சுவர்.

தென்புறத்தே இவ்விரிவாக்கத்தையொட்டி 3.45மீ. அகலமும் 5.48மீ. நீளமும் கொண்ட மண்டபமொன்று கட்டப்பட்டுள்ளது. எட்டுத் தூண்கள் தாங்கும் இம்மண்டபத்தையடைய வளாகத்தின் தரையிலிருந்து நான்கு படிகள் மேற்கில் இணைக்கப்பட்டுள்ளன. மகாமண்டபத் தென்சுவரின் நடுப்பகுதியில் அமைந்துள்ள இம்மண்டபத்தின் தூண்களில், ஆறு, ஒன்று போல உள்ளன. சதுரம், கட்டு, சதுரம் என்றமைந்துள்ள இத்தூண்களுள் சில வெட்டுப் போதிகைகள் கொண்டுள்ளன. சில தரங்கத்துடன் பூமொட்டு

மற்றும் நாணுதல் கொண்ட போதிகைகளைப்[98] பெற்றுள்ளன. இரண்டு தூண்கள் முழுமையடையாமல் இருக்கின்றன. மண்டபத்தின் தென் முகப்பின் நடுவிலுள்ள இரண்டு தூண்கள், பிற தூண்களிலிருந்து அமைப்புமுறையில் வேறுபட்டுள்ளன. இவை தாமரைத்தளத்தின் மீது சதுர பாதம் கொண்ட உருளைத்தூண்களாய் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தூண்களின் அனைத்து உறுப்புகளும் உருளை வடிவத்திலேயே உள்ளன. போதிகைகள் வெட்டுப் போதிகைகளாய் உத்திரம் தாங்குகின்றன. முன்னிரு வரிசைத் தூண்கள் தாங்கும் உத்திரங்களின் மேல், தெற்கிலும் வடக்கிலுமாய் வாஜனம் காட்டப்பட்டுள்ளது. மேலே கற்கள் பாவிய கூரை, இம்மண்டபத்திற்குக் கபோதம் காட்டப் பெறவில்லை. வாஜனத்திற்கும் கூரைக்கும் இடையில் பொதுவாக இடம்பெறும் வலபியும் காட்டப்பெறவில்லை.

தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு என நான்கு திசைகளிலும் பல்வேறு அளவுகளிலான திறப்புகளைக் கொண்டுள்ள மகாமண்டபம் உட்புறத்தே அற்புதமான வேலைப்பாடுகள் கொண்ட இருபத்திரண்டு தூண்களால் தாங்கப்படுகிறது. வரிசைக்கு நான்கென ஐந்து வரிசைகளாய் அமைந்த தூண்கள் மண்டபம் முழுவதும் வியாபித்திருக்க,

---

98. நாணுதலுடன் கூடிய போதிகைகளை முதலாம் குலோத்துங்கர் காலத்துக் கோயிலான மேலைக்கடம்பூர் அமிர்தகடேசுவரர் கோயிலில்தான் முதன்முறையாகப் பார்க்கமுடிகிறது. இதன் வளர்நிலைகளைத் தாராசுரத்திலுள்ள இராஜராஜேசுவரம் கோயிலில் காணலாம். பின்னாளில் இப்போதிகையின் தொடக்கப்பகுதியில் தரங்கம் போல் கோடுகள் வெட்டியும் காட்டியுள்ளனர். ஏறத்தாழக் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட கட்டட அமைப்புகளில் இத்தகு தரங்கம் வருவிய போதிகைகளைக் காணமுடிகிறது. திருக்கோளக்குடிக் குடைவரைக்கு முன்னாலுள்ள மகாமண்டபம் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதில் பிற்காலப் பாண்டியர்களின் கல்வெட்டுகள் நிறைந்துள்ளன. இக்கல்வெட்டுகளின் அடிப்படையில் இம்மண்டபத்தைக் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாக உறுதிப்படுத்தலாம்.

எஞ்சிய இரண்டு தூண்கள் மண்டபத்தின் கிழக்கு வாயிலை அலங்கரிக்கின்றன. இத்தூண்களில் நான்கு தவிர ஏனைய பதினெட்டும் விலங்கடித் தூண்கள்." இவற்றுள் பதினாறு தூண்கள் சிங்கங்களையும் இரண்டு தூண்கள் யாளிகளையும் தங்கள் பாதங்களாகப் பெற்றுள்ளன.

அ. விலங்கடித் தூண்கள்

விலங்கடித் தூண்கள் ஒவ்வொன்றும் தாமரை அல்லது பத்ர தளத்தின் மீது தொடங்குகின்றன. இந்தத் தளங்களின் உயரம் ஒன்று போல் இல்லை. சில பத்ர தளங்கள் இரு அடுக்குக் கொண்டவையாக உள்ளன. பெரும்பாலான தளங்கள் தாமரைத் தளங்களாகவே அமைந்துள்ளன. இவற்றின் தள முகப்பில் காட்டப்பட்டுள்ள தாமரை இதழ் களின் நுனிகள் மேல்நோக்கி உள்ளன. தளங்களின் மேல் அமர்ந்த நிலையில் காணப்படும் சிங்கங்களும் யாளிகளும் வாலைப் பின்னுக்குச் சுருட்டி முதுகுப்புறத்தே காட்டியவாறு உள்ளன. இவற்றுள் சில தென்பார்வையாகவும் சில வடபார்வையாகவும் இருக்கச் சில மேற்கிலும் கிழக்கிலும் பார்த்தவாறு உள்ளன.

சிங்கங்களின் பிடரி மயிரமைப்பு பல்வேறுவிதமாகக் காட்டப்பட்டுள்ளது. சில சிங்கங்களின் நெற்றிப்பகுதியில் ஓரடுக்கு முடிச்சுருள்களும் சிலவற்றின் நெற்றிப்பகுதியில் இரண்டடுக்கு முடிச்சுருள்களும் வேறு சிலவற்றின்

---

99. இத்தகு விலங்கடித் தூண்களைத் தமிழ்நாட்டில் பல்லவர் குடைவரைகளில்தான் முதல்முறையாகப் பார்க்கமுடிகிறது. மாமல்லபுரம் வராகர் குடைவரை சிறந்த எடுத்துக்காட்டாகும். ஒருகல் தளிகளிலும் இத்தகு தூண்கள் காணப்படுகின்றன. மலையடிப்பட்டி ஒளிபதி விஷ்ணு கிருகத்தின் முகப்புத் தூண்கள் விலங்கடித் தூண்களாக உள்ளன. இது முத்தரையர் படைப்பாகும்.

மகாமண்டபத்தில் அமைந்திருப்பது போன்ற பேரளவிலான, பரவலான விலங்கடித் தூண்களை இதற்குக் காலத்தால் முற்பட்ட வேறெந்தத் திருக்கோயிலிலும் காணமுடியவில்லை. அவ்வகையில் இம்மண்டபம் தனித்துவம் பெறுகிறது.

நெற்றிப்பகுதியில் மூன்றடுக்கு முடிச்சுருள்களும் காட்டப்பட்டுள்ளன. இதுபோலவே கழுத்து மற்றும் பக்கங்களில் இறங்கும் முடிக்கற்றைகளும் அடுக்குகளாக வடிக்கப்பட்டுள்ளன. அனைத்துச் சிங்கங்களின் வாய்களும் அகலத் திறந்துள்ளன. கீழ்த்தாடையில் இயல்பான பற்கள் காட்டப்பட்டுள்ளன. மேல்தாடையில் மூன்று இணை கோரைப்பற்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் இணை மிக நீண்டு அமைந்துள்ளது. பிடரி மயிர் போலவே காதுகளும் பலவிதமாகச் செதுக்கப்பட்டுள்ளன. கூர்மையான நகங்களும் தீட்சண்யமான பார்வையுமாய் அமர்ந்திருக்கும் இச்சிங்கங்கள் அனைத்துமே காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் கோயிலில் காணப்படும் பல்லவர் காலச் சிங்கங் களைப் பெருமளவு ஒத்துள்ளன.

யாளிகள் இரண்டும் மண்டபத்தின் தென்கோடி யிலுள்ள ஐந்தாம் வரிசையில் இடம்பெற்றுள்ளன. இவையிரண்டுமே தாமரைத்தளங்களில் அமர்ந்த வேழயாளிகளாகச் சுருட்டிய துதிக்கைகளுடன் காட்சி தருகின்றன. நன்கு வளர்ந்த கொம்புகள் தலையிலிருந்து பின்னோக்கி வளைந்துள்ளன. சிங்கங்களைவிடப் பெரிய காதுகளும் சுருளின்றித் தழைத்துத் தொங்கும் பிடரி மயிரும் தந்தங்களும் கொண்டு விளங்கும் இவ்விரண்டனுள், ஒன்று கிழக்கிலும் ஒன்று மேற்கிலும் பார்த்தவாறு அமைந்துள்ளன.

இங்குள்ள சிங்கத்தூண்களுள் கிழக்கு வாயில் தூண்கள் இரண்டு தவிர ஏனைய அனைத்தும் முழுத்தூண்களாக அமைக்கப்பட்டுள்ளன. யாளித்தூண்கள் இரண்டுமே அரைத் தூண்களாக அமைந்துள்ளன. இந்த யாளி அரைத்தூண்கள் பொருந்தியிருக்கும் சுவர்கள் மகாமண்டபத்தின் பழைய தென்சுவரின் பகுதிகளாகும். இவற்றின் கீழ், கண்டபாதங் களோடு கூடிய பழைய தாங்குதளப்பகுதி நன்கு தெரிகிறது. இந்தக் கண்டபாதங்களிலிருந்து எழும் சுவர் சார்ந்த நான்முக அரைத்தூண்களும் போதிகைகளுடன் காணப்படுகின்றன. இவை தொடும் உத்திரம் சிதைந்துள்ளது. விரிவாக்கம்

திகழ்வதற்கு முற்பட்ட காலத்தில் இம்மகாமண்டபத்தின் திறப்பு தென்புறமே இருந்திருக்க வேண்டும். யாளித் தூண்களுடன் கிழக்கு, மேற்குச் சுவர்களின் தென் திருப்பங்கள் நின்று விடுவதால் இவ்வரிசையில் அமைந்துள்ள நான்கு தூண்களுக்கு இடைப்பட்ட பகுதிகள், மண்டபத் திற்குள் நுழைவதற்கான வழிகளாகப் பயன்பட் டிருக்கவேண்டும். இந்தப் பகுதியின் தாங்குதள முகப்பு பின்னாளைய விரிவாக்கப் பணியால் முற்றிலுமாய் மறைக்கப்பட்டிருப்பதால், இந்த மண்டபத்திற்குப் படிகள் அமைக்கப்பட்டிருந்தனவா அல்லது வேறுவகையான தள அமைப்புகள் இருந்தனவா என்பதை அறியக்கூடவில்லை.

அமர்ந்திருக்கும் சிங்கங்கள் மற்றும் யாளிகளின் மேல் எழும் தூண்களின் மாலைத் தொங்கல்களும் பத்மகட்டும் இந்திரகாந்தமாயிருக்க,[100] தாடி, கும்பம், பாலிகை போன்ற மேலுறுப்புகள் ருத்ரகாந்தமாக உள்ளன. கலசம், கருக்கணிகள் பெற்றுள்ளது. இவற்றின் மாலைத்தொங்கல்களில் செதுக்கப் பட்டுள்ள பூத்தொங்கல்களும் கொடிக்கருக்குகளும்

---

100. இத்தூண்களை இந்திரகாந்தத் தூண்கள் என்று கூ.ரா. சீனிவாசன் தம் கட்டுரையில் குறித்துள்ளார். Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa. p.162.

ஆனால் விலங்குகளின் தலைக்கு மேல் காட்டப்பட்டிருக்கும் மாலைத் தொங்கல்கள், பத்மகட்டு ஆகியவை மட்டுமே இந்திரகாந்தமாக உள்ளன. கலசங்களில் கருக்கணி காட்டப் பட்டுள்ளது. தாடி, கும்பம், பாலிகை என்பன ருத்ரகாந்தமாக உள்ளன. அனைத்து உறுப்புகளும் இந்திரகாந்தமாக இருந்தால்தான் அந்தத் தூணை இந்திரகாந்தத் தூண் என்றழைக்க முடியும்.

வைகுந்தப்பெருமாள் கோயில் திருச்சுற்று மாளிகையில் உள்ள சிம்மபாத இந்திரகாந்தத் தூண்களில் மாலைத்தொங்கல் தொடங்கி, பாலிகைவரை அனைத்து உறுப்புகளும் இந்திரகாந்தமாக இருப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. ஆனால் தென்வாயில் ஸ்ரீகோயிலின் மகாமண்டபத் தூண்களில் இதற்கு மாறாக மாலைத்தொங்கல்களும் பத்மகட்டும் இந்திரகாந்தமாக இருக்க, தாடி, கும்பம், பாலிகை என்பன ருத்ரகாந்தமாக அமைந்திருப்பதால் இத்தூண்களை இவ்விரண்டனுள் எவ்வகையில் சேர்ப்பதென்பது தெரியவில்லை.

ஒவ்வொரு தூணிலும் ஒவ்வொருவிதமாக அமைந்துள்ளன. தாமரைக்கட்டு சில தூண்களில் தாமரையிதழ்களின் வடிப்பாகவும் வேறு சில தூண்களில் வளையம் பதித்த மணிக்கோவைகளாகவும் காட்டப்பட்டுள்ளது. கலசம், கும்பம் இரண்டின் வெளிப்புறத்திலும் கருக்கணிகளும் பூப்பதக் கங்களும் பல்வேறுவிதமாகக் காட்டப்பட்டுள்ளன. பாலிகை யிலும்கூட மலர்ச் செதுக்கல்கள். வீரகண்டத்திலிருந்து கிளைக்கும் போதிகைகள் குளவுடன் கூடிய தரங்கப் போதிகைகளாய் நடுவில் பட்டையுடன் காணப்படுகின்றன. இப்போதிகைகளின் தரங்கங்கள் கீழ்க்கைகளில் பேரளவினவாகவும் மேற்கைகளில் மேலே செல்லச் செல்ல சிறியனவாகவும் வடிக்கப்பட்டுள்ளன. போதிகைகளின் கீழ்க்கைகள் மேற்கைகளைவிட நீளமாக உள்ளன. கீழ்க்கைகள் மேற்கைகளாகத் திரும்பும் இடத்தி குளவு காட்டப்பட்டுள்ளது.

மேற்கு யாளித்தூணின் மாலைத்தொங்கல் மற்ற தூண்களின் மாலைத்தொங்கல் அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது. இந்தப்பகுதி முழுவதும் குறுக்கு மற்றும் நெடுக்குக் கோடுகளால் சிறுசிறு சதுரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதுபோல் சதுரப்படுத்தப்பட்ட மாலைத்தொங்கல் அமைப்பை இங்குள்ள வேறெந்தத் தூணிலும் பார்க்கமுடியவில்லை.

தெற்கு வரிசைத் தூண்களில் நடுவிலுள்ள சிங்கத் தூண்களின் பாலிகை அடிப்பரப்பில் கூட்டல் குறிகள் தென்படுகின்றன. இவற்றுக்கு இடையே உள்ள நீளம் 1.53மீ. இது அக்காலத்தே பயன்படுத்தப்பட்ட ஓர் அளவு கோலாகலாம்.[101]

---

101. இந்த அளவுகோல் களஆய்வின்போது கண்டுபிடிக்கப் பட்டதாகும். இது போன்ற அளவுகோல்கள் தமிழ்நாட்டுக் கோயில்களில் பலவாகக் கிடைத்துள்ளபோதிலும் தூண் பாலிகை அடிப்பரப்பில் கிடைத்துள்ள அளவுகோல் இது ஒன்றேயாகும்.

விலங்கடியில்லாமல் மண்டபத்தின் நடுப்பகுதியில் அமைந்திருக்கும் நான்கு தூண்களும் உருளைத் தூண் களாகும். இவற்றுள் தெற்குத் தூண்களுக்குப் பாதமில்லை. வடதூண்களுக்கு மட்டுமே பாதம் காட்டப்பட்டுள்ளது. இவ்வட தூண்களில் கிழக்குத் தூணின் பாதம் மட்டும் சற்று முன்னோக்கி நீண்டுள்ளது. விலங்கடித் தூண்கள் ஒவ்வொன்றும் ஒரே கல்லால் உருவாக்கப்பட்டவை. ஆனால் உருளைத் தூண்கள், பாதம் தனியாகவும் தூண் தனியாகவும் உருவாக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன. இந்த உருளைத் தூண்கள் எந்த உறுப்புப் பேதமுமின்றிக் காட்சியளிக்கின்றன. இவற்றின் மீது வெட்டுப் போதிகைகள் கிளைத்து உத்திரம் தொடுகின்றன. பாதம் போல், இப்போதிகைகளும் தனிக்கற்களால் உருவாக்கப்பட்டுத் தூண்களின் மீது பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வுருளைத் தூண்களுள் இரண்டில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.[102] இக்கல்வெட்டுகள் பதினோராம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளன. அதுபோலவே இம்மண்டபத்தின் தென் பகுதியிலுள்ள சிங்கத் தூண்கள் நான்கில் கல்வெட்டுகள் உள்ளன.[103] இவை ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கால எழுத்தமைதியில் உள்ளன.

இம்மண்டபத்திலுள்ள நான்கு உருளைத் தூண்களும் பிற சிங்கத் தூண்களுக்குக் காலத்தால் பிற்பட்டவை. இவற்றின் போதிகையமைப்பு, இவற்றுள் இரண்டின் மீது காணப்படும் கல்வெட்டுகளின் எழுத்தமைதி கொண்டு, இவை பதினோராம் நூற்றாண்டளவில் இணைக்கப்பட்டதாகக் கொள்ளலாம்.

கூரை

தூண்களின் போதிகைகள் தொடும் உத்திரங்கள் கிழக்கு மேற்காக அமைந்து கூரையைத் தாங்குகின்றன. இந்த உத்திரங்களுக்கும் கூரைக்கும் இடைப்பட்ட பகுதியில்

---

102. ARE. 375 of 1924.
103. ARE 376 of 1924

வாஜனம் மட்டும் காட்டப்பட்டுள்ளது. வலபி இடம் பெறவில்லை. உருளைத்தூண்களின் போதிகைகள் தொடும் உத்திரத்தை அடுத்துள்ள வாஜனத்தையொட்டி அமைந்திருக்கும் கூரைப்பகுதி பிற கூரைப்பகுதிகளைவிடச் சற்று உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது. இப்படி உத்திரத்தையடுத்து வாஜனமும் வாஜனத்தையடுத்து வலபியில்லாமல் கூரையும் அமைவது குடைவரைகளில் மட்டுமே பார்க்கமுடியும் அமைப்பாகும்.

இதுபோன்ற அமைப்புடைய மகாமண்டபம் தென்வாயில் ஸ்ரீகோயிலுக்குக் காலத்தால் முற்பட்ட வேறெந்தத் திருக்கோயிலிலும் காணப்படாமை குறிப்பிடத்தக்கது. காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலின் மகாமண்டபத்தில்கூட இத்தகைய நுட்பமான வேலைப்பாடுடைய விலங்கடித் தூண்கள் எண்ணிக்கையில் பலவாகவும் கலைநயத்தில் சிறப்பாகவும் அமையாமை குறிப்பிடத்தக்கது.

காலத்தால் தென்வாயில் ஸ்ரீகோயிலுக்குப் பிற்பட்ட கோயில்களிலும் இதற்கிணையான மகாமண்டபத்தைப் பார்க்கமுடியவில்லை. தாராசுரத்து இராஜராஜேசுவரத்தில் காணப்படும் இராஜகம்பீரன் மண்டபம்கூட அதன் தொடக்கப் பகுதியில் மட்டுமே விலங்கடித் தூண்களைக் கொண்டுள்ளது.

சிற்பச் செறிவுடைய கண்டபாதங்களைப் புறப் பகுதியிலும் வேலைப்பாடும் கலைநுட்பமும் பொருந்திய விலங்கடித் தூண்களை உட்பகுதியிலும் கொண்டுள்ள இம்மண்டபம் முற்சோழர் காலத்தில் படைக்கப்பட்ட பழுவேட்டரையர் கலைமுறையின் தனித்துவம் வாய்ந்த கட்டுமானமாகும்.

2. சிற்பங்கள்

தென்வாயில் ஸ்ரீகோயில் சிற்பங்களை அவை இருக்கும் இடம் கருதிக் கோட்டச் சிற்பங்கள், நாசிகைச் சிற்பங்கள், பூதவரிச் சிற்பங்கள், மகரதோரணச் சிற்பங்கள், மாலைத்தொங்கல் சிற்பங்கள், கண்டபாதச் சிற்பங்கள்,

தனிச்சிற்பங்கள் எனப் பிரிக்கலாம். இவை பல்வேறு அளவுகளில் அமைந்துள்ளன. வாயிற்காவலர் சிற்பங்களும் விமானக் கீழ்த்தளக் கோட்டச் சிற்பங்களும் பேரளவினவாக இருக்க, மகாநாசிகைச் சிற்பங்கள் இவற்றுக்கு அடுத்த அளவில் அமைந்துள்ளன. சாலைகளின் தளக்கோட்டச் சிற்பங்கள் இவற்றினும் சற்றுச் சிறிய அளவில் இருக்க, நாசிகைச் சிற்பங்களை அடுத்த அளவினவாகக் கொள்ளலாம். பூதவரிச் சிற்பங்கள் அவற்றுக்கே உரிய அளவில் அமைந்துள்ளன. சிற்றுருவச் சிற்பங்கள் மகரதோரணங்களிலும் மகாமண்டபக் கண்டபாதங்களிலும் விமானக் கீழ்த்தளக் கிழக்குச் சுவர் அரைத்தூண் ஒன்றின் மாலைத் தொங்கலிலும் காணப்படுகின்றன. தனிச்சிற்பங்கள் வேறுபட்ட அளவுகளில் உள்ளன.

வடவாயில் ஸ்ரீகோயில் சிற்பங்கள் அனைத்துமே சிற்ப நூல்களின் படிம வரையறைகளுக்குள் பொருந்துமாறு அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் தென்வாயில் ஸ்ரீகோயிலில் காணப்படும் சிற்பங்கள் சிலவற்றைச் சிற்பநூல்களின் படிம வரையறைகளுக்குள் பொருத்திப் பார்க்க இயலவில்லை. இவையனைத்துமே சிவபெருமானின் சிற்பங்கள்தான் என்றாலும், இந்தச் சிற்பம் இந்தத் திருத்தோற்றத்தைப் புலப்படுத்துவதாய் அமைந்துள்ளது என்று உறுதியிட்டுப் பெயரிட முடியாதபடி அமைந்துள்ளன. சில சிற்பங்களில் பின்கைக் கருவிகள் சிதைந்து போயிருப்பதாலும் சில சிற்பங்களில் அமர்வுநிலைகள், கருவிகள் வழக்கத்திற்கு மாறாய் அமைந்திருப்பதாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

கோட்டச் சிற்பங்கள்

தென்வாயில் ஸ்ரீகோயில் விமானத்தின் கீழ்த்தளத்தில் அமைந்துள்ள தெற்கு, கிழக்கு, வடக்கு ஆகிய மூன்று கோட்டங்களிலும் நின்ற கோலத்தில் இறைத்திருமேனிகள் காட்டப்பட்டுள்ளன. தெற்கில் சிவபெருமானும் கிழக்கில் முருகனும் வடக்கில் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர்.

இதுபோலவே ஆறங்கச் சாலைகளின் சுவர்ப் பகுதிகளிலும் தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு ஆகிய நாற்புறத்தும் கோட்டங்கள் உள்ளன. இவற்றுள் தெற்கு மற்றும் வடக்குக் கோட்டங்களில் மட்டும் சிற்பங்கள் உள்ளன.

விமானக் கீழ்த்தளக் கோட்டச் சிற்பங்கள்

தெற்குக் கோட்டம்

இக்கோட்டத்தில் சிவபெருமான் சமபாதங்களுடன் கருங்கல் தளத்தின் மேல் காட்சி தருகிறார். இடையில் சிற்றாடையும் மேற்கைகளில் நாககங்கணங்களும் மணிக்கட்டுகளில் அடுக்கிய வளைகளும் கழுத்தில் சரப்பளி, கண்டிகை போன்ற அணிகலன்களும் கொண்டுள்ள இப்பெருமானின் வலச்செவியில் மகரகுண்டலம்; இடச்செவியில் பனையோலைக் குண்டலம்; சடைமுடிகளை நன்கு சேர்த்து, மடித்துக் கட்டி மகுடமாக்கியுள்ளார். முன்கைகளில் வலக்கை அபயம் காட்ட, இடக்கை ஊரு அஸ்தமாய் உள்ளது.[104] பின்கைகளில் வலப்புறம் மழுவும் இடப்புறம் மானும் உள்ளன. இப்பெருமானை அறிஞர்கள் சந்திரசேகரர் என இனங்கண்டுள்ளனர்.[105]

சந்திரசேகரர் திருத்தோற்றத்தில், சிவபெருமானின் சடைமகுடத்தில் பிறை வடிவத்தில் சந்திரன் இடம்பெறுதல் இன்றியமையாததாகும்.[106] ஆனால் இங்குள்ள சிவபெருமானின் சடைமகுடத்தில் சந்திரன் காட்டப்படவில்லை.

---

104. கையைக் கீழ்நோக்கி நேராக நீட்டி, கைத்தலத்தையும் விரல்களையும் தொடை மீது பொருத்தி, மென்மையாக ஊன்றியிருக்கும் நிலையினையுடையது ஊரு அஸ்தம் எனப்படும். - வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.41.

105. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் - முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், படம் எண். 19.

106. T.A. Gopinatha Rao - Elements of Hindu Iconography, Vol, I, Part. I, pp. 113-120

அதனால் இத்திருமேனியை சந்திரசேகரராகக் கொள்வது பொருந்தாது. அதே சமயம் இத்திருமேனியைச் சிவபெருமானின் இன்ன திருத்தோற்றம் என்று உறுதியாகக் கூறவும் இயலவில்லை. சிற்ப நூல்களில் இத்திருமேனி பற்றிய விளக்கமோ இதற்கான பெயரோ காணப்படாமையின் இதைச் சிவபெருமானின் திருத்தோற்றம்[107] என்று குறிப்பதோடு நிறைவடைய வேண்டியுள்ளது.

கிழக்குக் கோட்டம்

கிழக்குக் கோட்டத்திலுள்ள முருகன் உயரமான கருங்கல் தளத்தின் மீது நிறுத்தப்பட்டுள்ளார். சற்றே விலகிய திரயச்ர பாதங்களுடன் நிற்கும் முருகனின் பின்கைகளில் வலப்புறம் சக்தியும் இடப்புறம் சூலமணியும் உள்ளன. முன்கைகளில் வலக்கை அபயம் காட்ட, இடக்கை ஊரு அஸ்தமாய் உள்ளது. தலையில் கரண்டமகுடம். நெற்றியில் சென்னி, செவிகளைப் பெரிய அளவிலான பனையோலைக் குண்டலங்கள் அலங்கரிக்கின்றன. மார்பில் சன்னவீரம் மிக அழகாகக் காட்டப்பட்டுள்ளது. இடையின் இருபுறமும் இடைக்கட்டின் முடிச்சுத் தொங்கல்கள். இடுப்பிலுள்ள சிற்றாடையின் மேல் அரைப்பட்டிகை இறுக்கப்பட்டுள்ளது. கழுத்தில் பதக்கம் கோத்த அணிகலன். மேற்கைகளில் அலங்காரக் கங்கணம். கைகளில் வளைகள். முருகனின் தலைக்கு மேல் குடை போன்ற அமைப்பு காட்டப்பட்டுள்ளது.

வடக்குக் கோட்டம்

இக்கோட்டத்தில் சற்றே விலகிய திரயச்ர பாதங்களுடன், இடையிலிருந்து கணுக்காலுக்குச் சற்று மேல் வரை நீளும் பட்டாடையுடன், நிற்கும் நான்முகனின் முன்கைகளுள் வலக்கை அபய முத்திரையிலிருக்க, இடக்கை ஊரு அஸ்தமாய் உள்ளது. பின்கைகளில் வலப்புறம் அக்கமாலையும் இடப்புறம் குண்டிகையும் உள்ளன. சடைகளை மகுடமாய் முடிந்துள்ள இவரது செவிகளில் வளையக் குண்டலங்கள். இவருக்கும்

---

107. Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa, p.217.

முருகனைப் போலவே கைகள், கால்கள், கழுத்து ஆகிய பகுதிகளில் உரிய அணிகலன்கள் காட்டப்பட்டுள்ளன.

சாலைகளின் சுவர்க்கோட்டச் சிற்பங்கள்

சாலைகளின் சுவர்களில் அமைந்துள்ள கோட்டங்களில் கிழக்கில் சிற்பமில்லை. மேற்குக் கோட்டம் முகமண்டபக் கூரையால் மறைக்கப்பட்டுள்ளது. வடபுறத்தும் தென்புறத்தும் சிவபெருமானின் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. பொதுவாக வடபுறத்தில் நான்முகனின் சிற்பம் இடம்பெறுவதே மரபு என்றாலும், இங்கு மரபுக்கு மாறாகச் சிவபெருமானின் சிற்பம் காணப்படுகிறது.

தெற்குக் கோட்டம்

இக்கோட்டத்தில் சிவபெருமான் சுகாசனத்தில் அமர்ந்துள்ளார். வல முன்கை அபயத்திலிருக்க இட முன்கை முழங்கால் மேல் இருத்தப்பட்டுள்ளது. பின்கைகளில் வலப்புறம் முத்தலையீட்டியும் இடப்புறம் தலையோடும் கொண்டுள்ளார். சடைகளை முடிந்து மகுடமாய்க் கட்டியுள்ள இப்பெருமானின் செவிகளில் பனையோலைக் குண்டலங்கள் உள்ளன.

சிற்ப நூல்கள் சுட்டும் பாசுபதமூர்த்தி வடிவத்திற்கும்[108] இத்தோற்றத்திற்கும் நிறைய ஒற்றுமைகள் உள்ளன. தலைமுடியமைப்பு மட்டுமே மாறுபட்டுள்ளது. அதனால் இத்திருத்தோற்றத்தைப் பாசுபதமூர்த்தியாகக் கொள்ளலாம்.[109]

வடக்குத் கோட்டம்

இக்கோட்டத்தில் நான்முகனுக்குப் பதிலாகச் சிவபெருமானின் சிற்பம் காட்டப்பட்டுள்ளது. மகாராஜ

108. T.A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol. II Part. I, p.125; V. Gopala Iyengar, Sakaladhikara of Sage Agastya (Translator), (Thanjavur, Sarasvathi Mahal Library, 1973), p.147.
109. எம்.ஏ.டாக்கி, இச்சிற்பத்தை தட்சிணாமூர்த்தியென்று குறிப்பிட்டுள்ளார். Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa. p.217.

லிலாசன அமர்வில்[110] இலேசாய் இடப்புறம் சாய்ந்து அமர்ந்துள்ள பெருமானின் இடக்கைகளுள் முன்கை, குத்துக்காலாய் இருக்கும் இடக்காலின் முழங்கால் பகுதியில் தாங்கலாய் இருத்தப்பட்டுள்ளது. பின்கையில் அக்கமாலை ஏந்தியுள்ளார். வல முன்கையின் முழங்கை, அமர்ந்துள்ள ஆசனத்தின் மீது தாங்கலாய்க் காட்டப்பட்டுள்ளது. அழகிய சடைமகுடமும் உதரபந்தமும் முப்புரிநூலும் வாய்க்கடையில் கோரைப்பற்களும் கொண்டிலங்கும் இவரது முதுகிற்குப் பின், வலப்புறத்தே லிங்கபாணம் காட்டப்பட்டுள்ளது. வலப் பின்கை மேலே உயர்ந்து வளைந்து இந்த பாணத்தின் தலைப்பகுதியைத் தொட்டவாறு உள்ளது.

இதே போன்றதொரு சிற்பத் திருமேனியை இருக்கு வேளிர் பணியான கொடும்பாளூர் நடுத்தளியின் வடக்கு கிரிவக் கோட்டத்தில் காணமுடிகிறது. இதைச் சிவலிங்கம் என்று கே.வி. சௌந்தரராஜனும் அமர்ந்த நிலைச் சிவபெருமான் என்று எஸ்.ஆர். பாலசுப்பிரமணியமும் டக்ளஸ் பாரட்டும் குறித்துள்ளனர்.[111]

இச்சிற்பத்தைச் சிவலிங்கம் என்பது பொருந்துவ தாகாது. சிவபெருமானின் திருத்தோற்றம் முழுமையுறக் காட்டப்பட்டிருக்கும் நிலையில் இதை அமர்நிலைச் சிவபெருமான் எனக் கொள்வதே பொருந்துவதாகும். இச்சிற்பத்தில் இடம்பெற்றிருக்கும் லிங்கபாணம் எதைக் குறிக்கிறதென்பதை அறியக்கூடவில்லை. சிற்பரத்னா,

---

110. லளிதாசனக் கோலத்தில் அமர்ந்து, வலக்கையினை, மடித்துத் தூக்கி நிறுத்திய முழங்கால் மீது வைத்து நீட்டி அல்லது மார்பை நோக்கி அமைத்து, இடக்கையைப் பக்கவாட்டில் ஒய்யாரமாக ஊன்றி, உடலைச் சுகமாக வளைத்து அமர்ந்திருக்கும் நிலை மகாராஜ லீலாசனம் - வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப. 59.

111. Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa, p. 208; எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், ப.320; Douglas Barrett, Early Chola Architecture and Sculpture, p.320, Plate 41.

காசியபம், ஸ்ரீதத்துவநிதி, சகளாதிகாரம் போன்ற சிற்ப நூல்களிலும் லிங்க புராணம், சிவபுராணம், சிவமகா புராணம் போன்ற புராணங்களிலும் இதற்கான விளக்கம் கிடைக்கவில்லை. அதனால் இச்சிற்பத்தை சிவபெருமானின் இன்ன தோற்றம் என்று உறுதியாகக் கூறக்கூடவில்லை[112].

முகமண்டப நுழைவாயில் கோட்டச் சிற்பங்கள்

முகமண்டப வாயிலின் இருபுறமும் பக்கத்திற் கொருவராக நிற்கும் வாயிற்காப்போர் இருவருமே பழுவேட்டரையர் காலத்து வடிப்புகள். இரண்டு காவலருமே பத்ரதளத்தில் நின்றவாறு கருவறைக்காய் உடலைத் திருப்பியுள்ளனர். ஆனால் முகம் நேர்நோக்கிய நிலையில், வருவோரை எதிர்கொள்ளுமாறு உள்ளது. இருவருமே இடுப்பில் முடிவுக்கொத்த சிற்றாடையுடன், இடைக்கட்டின் தொங்கல்களும் மரவுரியை பக்கவாட்டிலும் கால்களுக் கிடையிலும் தொங்குமாறு, ஒரு காலை உயர்த்தி, ஒரு காலைத் தளத்தில் இருத்தி நிற்கின்றனர். கைகளின் மேற்பகுதியில் இருவருமே பெரிய அளவிலான யாளிமுகக் கங்கணங்கள் அணிந்துள்ளனர். மணிக்கட்டுகளில் அடுக்கிய வளைகள். இருவரது கணுக்கால்களிலும் சதங்கைகள் சேர்ந்த வளையங்கள். இச்சதங்கை மணிகள் கிளிஞ்சல் ஓடுகள் போன்ற உலோக மூடிகளுடன் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற கால் அணிகலன்கள் பொதுவாக இக்காலகட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான முற்சோழர் கோயில் வாயிற்காவலர்தம் கால்களில் காணப்படுவதில்லை என்பது இங்கு நினைக்கத்தகுந்தது.

---

112. எம்.ஏ. டாக்கி, இதைக் கமலாசனன் என்று குறித்துள்ளார். Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa, p. 217; ஆனால் இச்சிற்பத்தில் சிவபெருமான் கமலாசனமான பத்மாசனத்திலோ அல்லது பத்ம பீடத்திலோ அமர்ந்திருக்கவில்லை. - வை. கணபதி ஸ்தபதி. சிற்பச் செந்நூல், ப. 59. கமலாசனன் என்னும் பெயர் எந்த நோக்கில் தரப்பட்டுள்ளது என்பதை அறியக்கூடவில்லை.

இரு காவலருமே சடைகளை முடிந்து மகுடமாக்கியுள்ளனர். இந்தச் சடைமகுடத்தில், முகப்புகளும் பல்வேறு அணிகளும் பூக்களும் காணப்படுகின்றன. மகுடம் மீறிய சடைப்புரிகள் வளையங்களாகவும் பூப்பதித்த தொங்கல்களாகவும் தலையின் இருபுறமும் பரந்து படர்ந்துள்ளன. இருவருக்குமே கடைவாயருகே கோரைப் பற்கள்.

வடபுறத்தார் வேருடன் பிடுங்கிய மரத்தைக் கருவியாகக் கொண்டு, அதன்மீது இடக்கையைத் தாங்கலாக நிறுத்தி, உயர்த்திய வலப்பாதத்தை அம்மரத்தின் முறிந்த கிளையொன்றின் மீது இருத்தியுள்ளார். இவரது வலக்கை கருவறைக்காய் நீண்டு தர்ஜனி காட்டுகிறது. வலச்செவியில் பனையோலைக் குண்டலம்; இடச்செவியில் ஆந்தைக் குண்டலம். இவர் தாங்கியுள்ள மரத்தைப் பாம்பொன்று சுற்றியுள்ளது. இவரது வலச் சடைப்புரிகளின் பக்கத்தில், படமெடுத்த நிலையில் மற்றொரு பாம்பு. பாத விரல்களில் வளையங்கள்; கைவிரல்களில் மோதிரங்கள்; மார்பில் மலர்ப்பதக்கங்கள் கோத்த, நன்கு அலங்கரிக்கப்பட்ட முப்புரிநூல்; மார்பிற்கும் வயிற்றுக்கும் இடையே பட்டையான உதரபந்தம்; இடுப்பாடை சிற்றாடையாக மிக நுண்ணிய வேலைப்பாடுகளுடன், தற்போதைய லேஸ் பின்னல் போன்ற அமைப்பில் பழுவேட்டரையர் காலச் செதுக்குக் கலையின் நுட்பங்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

தென்புறத்தார் பேரளவிலான மழுவைக் கொண்டுள்ளார். இடக்கை மழுவின் மீது தாங்கலாக அமர, இடக்கால் பாதம் உயர்த்தப்பட்டு மழுவின் கத்திப்பகுதியில் இருத்தப்பட்டுள்ளது. இவரது வலக்கை கருவறைக்காய் உயர்ந்து விஸ்மயம் காட்டுகிறது. செவிகளில் வலப்புறம் அன்னக் குண்டலம்; இடப்புறம் பனையோலைக் குண்டலம். சடை மகுடத்தில் மிகத் துல்லியமாகச் செதுக்கப்பட்டுள்ள யாளிமுகம் முகப்பாய்ப் பொருத்தப்பட்டுள்ளது. மலர்கள் பதித்த திரட்சியான முப்புரிநூல்; மணிகள் கோத்த உதரபந்தம்;

இவரது சிற்றாடையும் வலப்புறத்தார் போலவே அலங்கார வேலைப்பாடுகள் கொண்டுள்ளது.

நாசிகைச் சிற்பங்கள்

தென்வாயில் ஸ்ரீகோயிலில் மூன்று வகையான நாசிகைகளைக் காணமுடிகிறது. கர்ணகூடங்களிலும் ஆரச்சுவர்களிலும் சூத்ரநாசிகைகளும் சாலைகளின் கிரீவங்களில் அல்ப நாசிகைகளும் கிரீவத்தில் மகாநாசிகைகளும் அமைந்துள்ளன. இந்நாசிகைகளுள் பெரும்பாலானவற்றில் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

அ. சாலைகளின் கிரீவ நாசிகைகள்

தெற்கு

சடைமகுடராய்ச் சுகாசனத்தில் அமர்ந்துள்ள சிவபெருமானின் வலக்கை அபயத்தில் உள்ளது. இடக்கை கடக அஸ்தமாய்த் தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. பின் கைகளிலுள்ள கருவிகள் சிதைந்துள்ளமையால் இச்சிற்ப வடிவை சிவபெருமானின் இன்ன தோற்றம் என்று உறுதிப் படுத்தக்கூடவில்லை.[113]

கிழக்கு

இங்கும் சிவபெருமானே காட்டப்பட்டுள்ளார். சடைகளை மகுடமாய் முடிந்து சுகாசனத்திலிருக்கும் பெருமானின் வலச்செவியில் மகரகுண்டலமும் இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் உள்ளன. வல முன்கை சிதைந்துள்ளது. இட முன்கை தளத்தின் மீதுள்ளது. பின்கைகளிலுள்ள கருவிகளைச் சிதைவின் காரணமாக இன்னவையென்று அறியக்கூடவில்லை.

---

113. இத்தோற்றத்தை தட்சிணாமூர்த்தியின் வடிவமாக எம்.ஏ. டாக்கி இனங்கண்டுள்ளார். Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa, p. 217;

கைகளின் நிலைகளும் அவற்றிலுள்ள கருவிகளும் தெரியாத நிலையில் இச்சிற்ப வடிவத்தை சிவபெருமானின் இன்னதோற்றம் என்று உறுதியாகக் கூறக்கூடவில்லை.[114]

வடக்கு

வடக்கு நாசிகையில் இடக்காலை மடக்கிக் குத்துக்காலாய்த் தளத்தின் மீது இருத்தி, வலக்காலைச் சாய்வாக மடக்கிப் பாதம், தள முகப்பிலிருக்கும்படி நீட்டியமர்ந்துள்ள சிவபெருமானின் உத்குடியாசனத் திருக்கோலம் காணப்படுகிறது. சடைக்கற்றைகளையே மகுடமாய்ப் புனைந்து, செவிகளில் பனையோலைக் குண்டலங்கள் கொண்டு மலர்ந்த முகத்துடன் அமர்ந்துள்ள பெருமானின் இட முன்கை, இட முழங்காலருகே காலைத் தொட்ட நிலையில் காட்டப்பட்டுள்ளது. வலப் பின்கையில் முத்தலையீட்டி. வல முன்கை மார்பருகே சின்முத்திரையில் உள்ளது. இடப் பின்கையில் கவரி. கழுத்தில் அட்டிகையும் மார்பில் முப்புரிநூலும் அணிந்துள்ள இவ்வடிவத்திற்கு நெற்றிக் கண்ணும் காட்டப்பட்டுள்ளது. வடக்குச் சாலையில் பொதுவாக நான்முகன் இடம்பெறுவது மரபு. இங்கு மாறாக சிவபெருமானின் தோற்றம் இடம்பெற்றிருப்பது மாறுபட்ட கலைமுறையாக அமைந்துள்ளது.

இப்பெருமானின் வல முன்கை சின்முத்திரையி லிருப்பதாலும் அமர்நிலை உத்குடியாசனமாக இருப்பதாலும்

---

114. இத்தோற்றதை முருகன் என்று எம்.ஏ. டாக்கி சுட்டியுள்ளார். முருகனுக்குரிய மகுடமோ, சென்னியோ, சன்னவீரமோ, கைக்கருவிகளோ இல்லாத நிலையில் இத்திருமேனியை முருகன் என்பது பொருந்துவதாக இல்லை. முருகனுக்குக் கரண்ட மகுடமே காட்டப்படும் நிலையில், இங்குள்ள திருமேனி சடைமகுடத்துடன் இருப்பது குறிப்பிடத்தக்கது. Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa, p. 217;

இவரை யோகதட்சிணாமூர்த்தியாகக் கொள்ளலாம்.[115] பொதுவாக யோக தட்சிணாமூர்த்தி சிற்பம் தெற்கில்தான் காட்டப்படும். இங்கு வடபுற நாசிகையில் காட்டப்பட்டிருப்பது மரபுக்கு மாறானதாக அமைந்துள்ளது.

மேற்கு

சுகாசனத்தில் அமர்ந்துள்ள சிவபெருமானின் பின்கைகளில் வலப்புறம் பாம்பு, இடப்புறம் அக்கமாலை. வல முன்கை தளத்தின் மேல். இட முன்கை கடக முத்திரையில் உள்ளது. முகத்தை இடப்புறமாகச் சாய்த்தபடி பக்கவாட்டில் திரும்பி அமர்ந்துள்ளார். வலச்செவி குண்டலமற்ற நீள் செவியாக உள்ளது. இடச்செவியைப் பனையோலைக் குண்டலம் அலங்கரிக்கிறது. உதரபந்தமும் முப்புரிநூலும் உரிய இடங்களில் விளங்க, கழுத்தில் கண்டிகை அணிந்து நெற்றிக்கண் விளங்கும் திருமுகத்துடன், நாக கங்கணங்களும் வளைகளும் பூண்டு சிறக்கத் தோன்றும் சிவபெருமானின் அரையில் சிற்றாடை. மகுடம் வழக்கம் போலச் சடை முடிந்த மகுடந்தான். சுகாசனக் கோலத்தில் இருப்பதால் இவரைச் சுகாசனமூர்த்தியாகக் கொள்ளலாம்.

ஆ. கர்ணகூட நாசிகைச் சிற்பங்கள்

தென்வாயில் ஸ்ரீகோயில் விமானத்தின் முதல் தளக்கூரையில் அமர்ந்துள்ள நாற்புற கர்ணகூடங்களின் நாசிகைகளிலும் சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. இவை மலரேந்தியும் போற்றியும் தவநிலையில் அமர்ந்துமிருக்கும் ஆடவர் மற்றும் மகளிர் வடிவங்களாக அமைந்துள்ளன. இவர்களைத் தேவர்களாகக் கொள்வது மரபாகும். 'அந்தரத்தில் கந்தருவர், அமரர் ஏத்த' என்னும் அப்பரடிகளின் தேவாரத் திருவரிகளுக்கேற்ப[116] இச்சிற்பங்கள் அமைந்திருப்பது சிறப்புக்குரியதாகும்.

---

115. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.60.
116. ஆறாம் திருமுறை, பதிக எண் 40, பா.எ. 402.

தெற்கு

தெற்கிலுள்ள இரண்டு கர்ணகூட நாசிகைகளிலும் சிற்பங்கள் உள்ளன. தென்மேற்குக் கர்ணகூட நாசிகையில் லளிதாசன அமர்வில் ஆடவர் சிற்பமொன்று காட்டப்பட்டுள்ளது. இடச்செவி குண்டலமின்றி வெறுஞ்செவியாயிருக்க வலச்செவியில் பனையோலைக் குண்டலம் காணப்படுகிறது. மேற்கைகளில் கங்கணங்களும் மணிக்கட்டருகே வளைகளும் கொண்டு மார்பில் முப்புரிநூல் அணிந்துள்ள இவரது இடக்கை தொடை மீதிருக்க, வலக்கையில் மலர் காட்டப்பட்டுள்ளது.

தென்கிழக்குக் கர்ணகூட நாசிகையில் வலக்கையில் மலரேந்தி அமர்ந்த நிலையிலுள்ள ஆடவர் வடிவமே காட்டப்பட்டுள்ளது. இவரது இடக்கை தொடைமீது இருத்தப்பட்டுள்ளது. சுதைப் பூச்சினால் பிற விவரங்கள் அறியக்கூடவில்லை.

கிழக்கு

தென்கிழக்குக் கர்ணகூட நாசிகையில் அமர்ந்த நிலையில் சிதைந்த ஆண் வடிவமொன்று காட்டப்பட்டுள்ளது. வலக்கை தொடை மீதிருக்க, இடக்கை போற்றி முத்திரையில் காட்டப்பட்டுள்ளது. வடகிழக்குக் கர்ணகூடத்தில் சிற்பமேதும் இல்லை.

வடக்கு

வடக்கில் இரண்டு நாசிகைகளிலும் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. வடகிழக்குக் கர்ணகூட நாசிகையில் அர்த்த பத்மாசனத்தில் முனிவர் ஒருவரின் சிற்பம் காட்டப்பட்டுள்ளது. கைகள் மடியில் வைக்கப்பட்டுள்ளன.

வடமேற்கு நாசிகையில் அழகிய பெண் வடிவம் ஒன்று அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. வலக்கையில் மலர் கொண்டுள்ள இப்பெண்ணின் இடக்கை தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. இரு செவிகளையும் பனையோலைக் குண்டலங்கள் அழகு செய்கின்றன. இச்சிற்பமும் மிகுந்த அழகுடன் செதுக்கப்பட்டுள்ளது.

மேற்கு

மேற்குக் கர்ணகூட நாசிகைகள் இரண்டிலும் சிற்பங்கள் உள்ளன. இவ்விரண்டுமே ஆடவர் வடிவங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் வடமேற்குக் கர்ணகூட நாசிகையில், வலக்கையில் கவரி கொண்டு சிரித்த முகத்துடன் லளிதாசனத்தில் அமர்ந்திருக்கும் ஆடவர் சிற்பம் காட்டப்பட்டுள்ளது. இடக்கை கடக முத்திரையிலுள்ளது. கழுத்தில் கண்டிகையும் மார்பில் முப்புரிநூலும் செவிகளில் பனையோலைக் குண்டலங்களும் கொண்டுள்ள இந்தச் சிற்பம் மிக்க அழகுடன் காணப்படுகிறது.

தென்மேற்குக் கர்ணகூட நாசிகையில் காணப்படும் ஆடவர் சிற்பமும் அமர்ந்த நிலையிலேயே காட்டப்பட்டுள்ளது. உடல் இடப்புறமாய்த் திரும்பியிருப்பதுபோல் காட்டப்பட்டுள்ளதால் இடக்கால் பகுதி இடம்பெறவில்லை. அதனால் அமர்வு நிலையை இன்னதென அறியக்கூடவில்லை. வலக்கையைத் தளத்தில் இருத்தி இடக்கையைக் கடகமாய் மார்பருகே கொண்டிருக்கும் இவரது செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். இச்சிற்பமும் மிகுந்த கலையழகுடன் வடிக்கப்பட்டுள்ளது.

இ. ஆரச்சுவர் நாசிகைச் சிற்பங்கள்

தெற்கு ஆரச்சுவர் நாசிகைகளில் தென்மேற்கில் அமர்ந்த நிலையில் ஓர் ஆடவரும், தென்கிழக்கில் அதே நிலையில் ஒரு பெண்ணும் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளனர். செவிகளில் பனையோலைக் குண்டலங்கள் அணிந்துள்ள இப்பெண் கையில் கண்ணாடி பிடித்தபடி மேற்கு நோக்கித் திரும்பியமர்ந்துள்ளார். ஆடவர் சிற்பம் சிதைந்துள்ளது.

கிழக்கு ஆரச்சுவர் நாசிகைகளில் அமர்ந்த நிலையிலான ஆண் சிற்பங்களைப் பார்க்க முடிகிறது. தென்கிழக்குச் சிற்பத்தின் வலக்கை தொடை மீதிருக்க, இடக்கையில் பழம்

உள்ளது. இது இன்ன பழமென உறுதியாகக் குறிப்பிட்டுச் சொல்லமுடியாத அளவுக்குச் சுதைப்பூச்சு மறைக்கிறது. முழந்தாளிட்டு அமர்ந்துள்ள வடகிழக்கு வடிவம் இரு கைகளையும் குவித்த நிலையில் அஞ்சலி முத்திரையில் கொண்டுள்ளது. இதன் அஞ்சலித்த கைகளில் மலர்கள் காட்டப்பட்டுள்ளன.

வடக்கு ஆரச்சுவர் நாசிகைகளிலும் அமர்ந்த நிலையிலான ஆடவர் சிற்பங்களே இடம்பெற்றுள்ளன. வடகிழக்கு நாசிகையில் உள்ள ஆடவர் இரு கைகளாலும் மலரொன்றைப் பற்றியுள்ளார். இடக்கையில் மலரும் வலக்கையில் அதன் தண்டும் உள்ளன. வடமேற்கு நாசிகையில் அமர்ந்திருக்கும் ஆடவர் இடக்கையைத் தொடையருகே வைத்துள்ளார். வலக்கையில் உள்ள பொருளை அறியக்கூடவில்லை.

மேற்கிலுள்ள ஆரச்சுவர் நாசிகைகளில் தென்மேற்கில் வலக்கையில் பதாக அஸ்தம் காட்டி அமர்ந்த நிலையில் பெண் சிற்பமொன்று காணப்படுகிறது. இதன் இடக்கையும் உடலின் கீழ்ப்பகுதியும் முகமண்டபக் கூரை உயர்வால் மறைந்துள்ளன. வடமேற்கு நாசிகையில் சிற்பமெதுவும் இல்லை.

இச்சிற்பங்களை, வழிபடும் நிலையிலுள்ள தேவர்கள் அல்லது கந்தர்வர்களாகக் கொள்ளலாம்.

ஈ. மகாநாசிகைச் சிற்பங்கள்

விமானத்தின் கிரீவத்தில் அமைந்துள்ள மகாநாசிகைகளில் நின்ற நிலையிலான இறைச்சிற்பங்கள் காணப்படுகின்றன. பல்லவர், பாண்டியர் கோயில்களில் மகாநாசிகைச் சிற்பங்கள் அமர்நிலையிலேயே காட்டப்பட்டிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இறவாதான் ஈசுவரம், வீரட்டானேசுவரம், முக்தேசுவரம், விக்கணம்பூண்டி விசலேசுவரம், திருத்தணி வீரட்டானேசுவரம், கழுகுமலை வெட்டுவான் கோயில், திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில் போன்ற பல கோயில்களை இதற்குச் சான்றுகளாகக் காட்டலாம்.

பல்லவர்களை அடுத்து வந்த சோழர்களின் தொடக்கக் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் பலவற்றுள், இம்முறை மாற்றம் பெறுவதைக் காணமுடிகிறது. அமர்நிலைச் சிற்பங்களையே பெற்று வந்த விமான மகாநாசிகைகளில், சோழர்களின் தொடக்கக் காலத்தில் நின்ற நிலைச் சிற்பங்களும் நிறுவப்பட்டன. இதற்கு எடுத்துக்காட்டாக இக்காலகட்டத்தில் கற்றளிகளாக்கப்பட்ட திருச்சோற்றுத் துறை ஓதவனேசுவரம், திருப்பழனம் ஆபத்சகாயேசுவரம், திருநெய்த்தானம் நெய்யாடியப்பர் கோயில், திருவேதிகுடி வேதபுரீசுவரம் ஆகிய திருக்கோயில்களைச் சுட்டலாம். இது முற்சோழர் காலத்தின் தொடக்கத்தில் நிகழ்ந்த ஒரு கலைமுறை மாற்றமாகும். இதே காலகட்டத்தில் எழுந்த கோயிலாதலால் தென்வாயில் ஸ்ரீகோயிலிலும் இப்புதிய மரபு கொள்ளப்பட்டது. ஆனால் அதேசமயம் இவ்வளாகத்தில் எழுந்த மற்றொரு கோயிலான வடவாயில் ஸ்ரீகோயிலில் பழைய மரபே பின்பற்றப்பட்டுள்ளமையை நோக்கும்போது, பழுவேட்டரையர்கள் பழைமையைக் கைவிடாது அதைப் போற்றும் விதத்தில் ஒரு கோயிலையும் புதுமையைத் தள்ளாது அதைக் கொள்ளும் விதமாக மற்றொரு கோயிலையும் ஒரே வளாகத்தில் அமைத்தனர் என்பதைத் தெள்ளிதின் உணரலாம். இது பழுவேட்டரைய அரசர்களின் கலைச் சமன்நிலையைக் காட்டுகிறது.

தென்வாயில் ஸ்ரீகோயிலின் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய மூன்று மகாநாசிகைகளில் சிவபெருமானும் கிழக்கு மகாநாசிகையில் முருகனும் இடம்பெற்றுள்ளனர்.

தெற்கு மகாநாசிகை

சமபாதராய் பின்கைகளில் பரசுவும் அக்கமாலையும் ஏந்தி, வல முன்கையில் சின்முத்திரை காட்டி நிற்கும் சிவபெருமானின் இட முன்கை கடக முத்திரையில் உள்ளது. இது சுவடியேந்தும் கை போல அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மார்புக்கும் வயிற்றுக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள உதரபந்தம் முத்துகள் பதிக்கப்பெற்று

அழகுபடுத்தப்பட்டுள்ளது. இடுப்பில் சிற்றாடை. தலையில் சடைகளை உயர்த்தி முடித்த மகுடம். கழுத்தில் மணிகள் பதித்த மாலைகள். கைகளின் மேற்பகுதியில் இருவளைவுக் கங்கணங்கள், மணிக்கட்டுகளில் வளைகள், இரு செவி களிலும் பனையோலைக் குண்டலங்கள்.

தென் திசையில் இருப்பதாலும் சின்முத்திரை காட்டுவதாலும் இடத்திருக்கை ஓலைச்சுவடி கொள்ளும் மெய்ப்பாட்டில் இருப்பதாலும் இத்திருமேனியைத் தென்திசைக் கடவுளான தட்சிணாமூர்த்தியாகக் கொள்ளலாம். பொதுவாக இது போன்ற தட்சிணாமூர்த்தி வடிவங்கள் அமர்நிலையில் காட்டப்படுவதுதான் மரபு. பல்லவர், பாண்டியர் கோயில்களிலும் சமகால முற்சோழர் கோயில்களிலும் அம்மரபே பின்பற்றப்பட்டுள்ளது. ஆனால் தென்வாயில் ஸ்ரீகோயிலில் இம்மரபினுக்கு மாறாகத் தென்திசைக் கடவுளை நின்ற கோலத்தில் காட்டியிருப்பது பழுவேட்டரையர் கலைமுறையின் புதுமை அவாவும் பண்பினைக் காட்டுவதாகக் கூறலாம்.

கிழக்கு மகாநாசிகை

கிழக்கில் நின்ற கோலத்தில் காட்சி தரும் முருகனின் பின்கைகளில் வஜ்ரமும் சக்தியும் உள்ளன. வல முன்கை அபயத்திலிருக்க, இட முன்கை ஊரு அஸ்தமாய்த் தொடை மீது பதிந்துள்ளது. கைகளில் மேற்பகுதியில் கங்கணங்கள்; மணிக்கட்டருகே வளைகள்; நெற்றிப் பகுதியில் சென்னி; மார்பில் சன்னவீரம்; செவிகளில் பனையோலைக் குண்டலங்கள்; சமபங்கராய்த் திரயச்ர பாதங்களோடு நிற்கும் முருகப் பெருமானின் இடுப்பைச் சிற்றாடையொன்று அலங்கரிக்கிறது.

மிகுந்த கலைநயத்தோடு படைக்கப்பட்டிருக்கும் இச்சிற்பம் தனித்துவம் வாய்ந்ததெனலாம். பல்லவர் காலக் கோயில்களில் கிழக்கு முக நாசிகைகளில் சிவபெருமானே

காணப்படுகிறார். அமர்ந்த கோலத்தில் காணப்படும் சிவபெருமானின் சிற்பங்களைக் காஞ்சிபுரத்து முக்தேசுவரம், திருத்தணி வீரட்டானேசுவரம் போன்ற கோயில்களில் இன்றும் காணலாம். கிழக்கு மகாநாசிகையில் முருகப் பெருமான் நின்ற கோலத்தில் இடம்பெறுவதைப் பல்லவர் கோயில்களிலோ, சமகாலப் பாண்டியர் கோயில்களிலோ பார்க்கமுடியவில்லை.

தென்வாயில் ஸ்ரீகோயில் கட்டப்பட்ட காலத்தையொட்டி எழுந்த முற்சோழர் கோயில்களிலும் கிழக்கு மகாநாசிகைகளில் சிவபெருமானே உமாசகிதராகவும் ஆலிங்கன சந்திரசேகரராகவும் காட்டப்பட்டுள்ளார். இவையனைத்தும் நோக்க கிழக்கு மகாநாசிகையில் முருகப் பெருமானின் நின்ற கோலம் முதன்முதலாக இடம்பெறுவது தென்வாயில் ஸ்ரீகோயிலிலேயே என்று துணியலாம். இது பழுவேட்டரையர் காலத்து நிகழ்ந்த மரபு மாற்றங்களுள் ஒன்றாகும்.

வடக்கு மகாநாசிகை

வடபுறத்தே நிர்வாணியாய்ப் பிச்சையுகக்கும் பெருமானாய்ச்[117] சிவபெருமானின் நின்ற கோலம். திரயச்ர பாதங்களுடன் சமபங்கராய் நிற்பவரின் வல முன்கையில் தலையோடு. இட முன்கையில் பாம்பு. பின் கைகளில் வலக்கை மானுக்குப் புல்லளிக்க, இடக்கை கவரி ஏந்தியுள்ளது. வலச்செவி நீள்செவியாய், வெறுமையாய்க் குண்டலமேதுமின்றியிருக்க, இடச்செவியில் பனையோலைச் சுருள். சடைகள் மகுடமாய்ப் புனையப்பட்ட நிலையில், ஙககளிலும் கழுத்திலும் அணிகலன்கள் திகழ, உதரபந்தமும்

117. இச்சிற்பத்தை பிரம்மா என்று எம்.ஏ. டாக்கி குறித்துள்ளார். Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa, p. 217.

முப்புரிநூலும் உரிய இடங்களில் விளங்க, அழகே உருவாய்க் காட்சிதரும் சிவபெருமானின் இடப்புறம் பூதகணமொன்று தன் இடக்கையிலுள்ள கருவியை வலக்கைக் கோலால் மீட்டியவாறு இசையெழுப்பி நிற்கிறது.

பிட்சாடனர் கோலத்தில் சிவபெருமானின் சிற்பங்கள் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் போன்ற பல்லவர் கற்றளிகளிலேயே காணப்பட்டாலும் மகாநாசிகைச் சிற்பமாக இக்கோலம் இடம்பெறுவது, அதுவும் நான்முகனுக்குரிய வடக்கு மகாநாசிகையில் இருத்தப்பெறுவது இதுவே முதல்முறையெனலாம். தென்வாயில் ஸ்ரீகோயிலின் சமகால முற்சோழர் கோயில்களின் வடக்கு மகாநாசிகைகளில் நான்முகனே இடம்பெற்றுள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. தென்வாயில் ஸ்ரீகோயிலை அடியொட்டி நான்முகனுக்குரிய வடக்கு மகாநாசிகையில் சிவபெருமான் இடம்பெற்றுள்ள மற்றொரு கோயில் திருப்பழனம் ஆபத்சகாயேசுவரமாகும். ஆனால் இங்கே சிவபெருமான் சந்திரசேகரராகக் காணப்படுகிறார்.[118]

மேற்கு மகாநாசிகை

மேற்கில் சிவபெருமான் வீணாதரராய்க் காட்சியளிக்கிறார். நாசிகைச் சிற்பங்களுள் இதுவே இணையற்ற கலைத்திறன் கொண்டு மிளிர்கிறது. வலக்காலை முழங்காலளவில் மடித்து வலப்பாதத்தை முன்னோக்கிய அஞ்சிதமாக நிறுத்தி, இடப்பாதத்தை திரயச்ரத்தில் திருப்பி நிற்கும் பெருமானுடைய பாதங்களில் தாள்செறியும் இடுப்பில் சிம்மமுகக் கச்சுடன் கூடிய சிற்றாடையும் காட்டப்பட்டுள்ளன. முன்னிரு கைகளுள் வலக்கை வீணையின் நரம்புகளை மீட்ட இடக்கை ஸ்வரதானங்களில் பதிந்துள்ளது. கழுத்தில் கண்டிகை, மணிமாலை; வலச்செவியில் பனையோலைக் குண்டலம்; இடச்செவியில் மகரகுண்டலம்; சடைமகுடராய் உதரபந்தமும் முப்புரிநூலும் உரிய இடங்களில் திகழப்

118. Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa, p. 158.

பின்கைகளில் பாம்பும் அங்குசமும் கொண்டு காட்சிதரும் பெருமானின் கைகளில் ஒற்றைச்சுருள் கங்கணங்களும் கடக வளைகளும் காட்டப்பட்டுள்ளன. வீணையின் குடம் இடத்தோளில் தாங்கலாய் நிறுத்தப் பட்டுள்ளது.

இது போன்ற நின்ற கோல வீணாதரர் சிற்பங்கள் முற்சோழர் காலக் கோயில்களான லால்குடி சப்தரிஷீசுவரம், துடையூர் விஷமங்களேசுவரம், கொடும்பாளூர் நடுத்தளி, திருப்பழனம் ஆபத்சகாயேசுவரம் ஆகிய கோயில்களின் தென்புறக் கோட்டங்களில் காணப்படுகின்றன. இவற்றுள் முதல் மூன்று கோயில்களில் வீணாதரர் ஆதிதளக் கோட்டச் சிற்பமாக இடம்பெற்றுள்ளார். ஆனால் திருப்பழனத்தில் வீணாதரர் தெற்கு மகாநாசிகையில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். இந்நான்கு வீணாதரர்களின் வீணையிலிருந்து, தென்வாயில் ஸ்ரீகோயில் வீணாதரரின் வீணை பெரிதும் மாறுபட்டுள்ளது. வீணையில் பாவியிருக்கும் கைகளின் நிலைகளும் மாறுபட்டுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகச் சிவபெருமானின் தலை யலங்காரம், நிற்கும் கோலம் ஆகியவற்றிலும் வேறுபாடு உள்ளது. ஒப்பீட்டு நோக்கில் இந்நான்கினும் தென்வாயில் ஸ்ரீகோயில் வீணாதரரே கலைச்சிறப்பில் விஞ்சி நிற்கிறார். பொதுவாக வீணாதரரைத் தெற்குக் கோட்டங்களிலேயே பார்க்கமுடிகிறது. அதனாலேயே அவருக்கு வீணாதர தட்சிணாமூர்த்தி என்ற பெயரும் உண்டு. ஆனால் தென்வாயில் ஸ்ரீகோயிலில், இந்த மரபுக்கு மாறாக வீணாதரர் மேற்கு மகாநாசிகையில் காட்டப்பட்டுள்ளார். இந்த மரபு மாற்றத்தை இக்காலகட்டத்தில் பழுவேட்டரையர் கலைமுறையில் மட்டுமே காணமுடிகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

பூதவரிச் சிற்பங்கள்

தென்வாயில் ஸ்ரீகோயிலின் முகமண்டபம் மற்றும் விமானக் கீழ்த்தள வலபிகளில் பூதவரி இடம்பெற்றுள்ளது.

திருமுறைகளில் பாடப்பெற்றிருப்பது போல் இப்பூதங்கள் குள்ளச் சிறு கணங்கள்;[119] பருத்த வடிவின; திண்டிவயிறும் சிறுகண்களும் கொண்டன;[120] சோர்வின்றி ஒவ்வொன்றும் ஏதேனும் ஒரு செயலைச் செய்துகொண்டிருப்பன. இயக்கமே உயிர்மூச்சாய், குறும்பும் கேளிக்கையுமாய் உணர்வுகளின் வெளிப்பாடாய் அமைக்கப்பட்டிருக்கும் இப்பூதவரி அக்காலத்து மக்களின் செயற்பாடுகளையும் சமுதாயத்தில் விளங்கிய கலை, பண்பாட்டு வரலாற்றுக் கூறுகளையும் எடுத்துரைப்பனவாக உள்ளன.

அ. முகமண்டபப் பூதவரி

முன்மண்டபத்தின் வடபுறத்தே உள்ள வலபியில் பதினெட்டுக் கணங்கள் காட்டப்பட்டுள்ளன. சடைமகுடம், சடைபாரம், விரிசடை, சுடர்முடி, சடைமண்டலம் போன்ற பலவிதமான தலைக்கோலங்களுடன், செவிகளில் பெரும்பாலும் பனையோலைக் குண்டலங்கள் அணிந்து காணப்படும் இக்கணங்கள் கைகளிலும் கழுத்திலும் அணிகலன்கள் கொண்டுள்ளன. சில, பூட்டுக் குண்டலங்கள் அல்லது வளையக் குண்டலங்கள் கொண்டுள்ளன. அனைத்துக் கணங்களுமே உதரபந்தம், முப்புரிநூல் அணிந்து சிற்றாடையுடன் காணப்படுகின்றன. இடுப்புக்கு மேற்பட்ட பகுதி ஆடை எதுவுமின்றிக் காட்டப்பட்டுள்ளது.

முதல் பதினைந்து கணங்கள் ஆடலிலும் இசையிலும் மூழ்கியுள்ளன. இவற்றுள் ஐந்து கணங்கள் ஆடல் நிகழ்த்த, இரண்டு கணங்கள் வாய்ப்பாட்டுப் பாடுகின்றன. பாடும் கணங்களின் வலக்கைகள் சின்முத்திரையில் உள்ளன. இவ்விரண்டனுள் ஒன்று நன்கு வாய் திறந்து பாட,

119. ஆறாம் திருமுறை, பதிக எண் 4, பா.எ. 35.
120. மேலது, பதிக எண் 93, பா.எ. 915.

மற்றொன்று இலேசாகத் திறந்து பாடுகிறது.[121] அளவில் மாறுபட்ட இலைத்தாளங்களுடன் மூன்று கணங்கள். நான்கு கணங்கள் தோல்கருவிகளை இயக்குகின்றன. ஒன்று குடமுழவில் திறம் காட்டுகிறது. ஒன்று தன் கையிலுள்ள இடக்கை[122] எனும் இசைக்கருவியில் இசையெழுப்புகிறது. இரண்டு கணங்கள் தண்ணுமை மற்றும் மத்தளம் கொண்டுள்ளன. ஒரு கணம் நரம்புக் கருவியொன்றை இடத்தோளின் மீது கிடத்தி, வலக்கைக் கோலால் இன்னிசை எழுப்பி நிற்கிறது. இறுதியாக உள்ள மூன்று கணங்களும் இந்தக் கூட்டியக் குழுவுக்குக் காவல் போலக் கைகளில் தடிகளேந்தி நிற்கின்றன.

முகமண்டபத்தின் தென்புறமும் பதினெட்டுக் கணங்களே காணப்படுகின்றன. இவற்றுள் ஆறு கணங்கள் ஆடல் தோற்றத்தில் உள்ளன. விரிசடையும் பனையோலைக் குண்டலங்களும் பெரிய முகமும் நன்கு வெளித்தெரியும் கோரைப்பற்களும் கொண்டுள்ள முதற்கணம் வலக்கையை வயிற்றருகே கொண்டு இடக்கையை முகத்தருகே பதாகமாய் உயர்த்தி ஆடுகிறது. ஒரு கணம், வலக்கையைத் தலையருகே

---

121. இதுபோல் வாய்ப்பாட்டுப் பாடும் மெய்ப்பாட்டில் அமைந்த பூதகணங்களைப் பல்லவர் கோயில்களிலோ கழுகுமலை வெட்டுவான் கோயில் உட்பட்ட பாண்டியர் கோயில்களிலோ அல்லது முற்சோழர் கோயில்களின் வலபி வரிகளிலோ காணமுடியவில்லை. இவ்விரு கணங்களும் தென்வாயில் ஸ்ரீகோயிலுக்குப் பெருமை சேர்க்கும் தனித்துவப் பாடகர்களாய் அமைந்துள்ளன.

122. இது ஒரு தோல் கருவியாகும். சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதை உரையில் அடியார்க்கு நல்லார் இதைக் குறிப்பிடுகிறார். சிலப்பதிகார மூலமும் ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரையும், ப.72; இவ்விசைக்கருவி பற்றிய விரிவான செய்திகள் தமிழிசைக் கலைக்களஞ்சியத்தில் இடம் பெற்றுள்ளன. - வீ.ப.கா. சுந்தரம், தமிழிசைக் கலைக் களஞ்சியம், முதல் தொகுதி, (திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகம், 1992), ப.182.

உயர்த்திப் பதாகம் காட்டியபடி, இடக்கையால் கஜ அஸ்தம் பிடிக்கிறது மற்றொன்று வலக்கையில் கடக முத்திரை காட்டி, இடக்கையை மார்பருகே இருத்தியபடி ஆடுகிறது. பிறிதொரு கணம் வலக்கையால் பதாகம் காட்டி, இடக்கையை அர்த்த ரேசிதத்தில் நெகிழ்த்தி ஆடல் நிகழ்த்துகிறது. இசைக் கலைஞர்களாய்ச் சில கணங்கள். நரம்புக்கருவிகளை இடத்தோளில் சாய்த்தவாறு, வலக்கைக் கோல்களால் சில இசையெழுப்ப, இலைத்தாளம், செண்டுதாளம் எனப் பல்வகைத் தாளங்களுடன் சில கணங்கள் தாளம் தருகின்றன. ஒரு கணம் வீணை வாசிக்கிறது. மூன்று கணங்கள் ஆடும் கணங்களைச் சுட்டுவது போலவும் பழிப்பது போலவும் அவற்றைப் பார்த்து அலங்கரித்துக் கொள்வது போலவும் காட்டப்பட்டுள்ளன.

ஆடும் கணங்களில் ஒன்று நான்கு கைகளுடன் காட்டப்பட்டுள்ளது. கிழக்கிலிருந்து ஐந்தாம் கணமாக இடம்பெற்றுள்ள இக்கணம் தனிச்சிறப்போடு வடிக்கப்பட்டுள்ளது. விரிசடையும் பனையோலைக் குண்டலங்களும் கொண்டுள்ள இக்கணத்தின் வல முன்கை கஜ அஸ்தத்தில் உள்ளது. வலப் பின்கையில் உடுக்கை. இட முன்கை அர்த்தரேசிதத்தில் இருக்க, இடப் பின்கை அபயம் காட்டுகிறது. வலப்புறமாய்ச் சாய்ந்த முகம் இடப்புறமாய் இலேசாய்த் திரும்பியுள்ளது. மண்டலநிலையில் கால்கள் அமைத்து ஆடும் இந்தக் கணம் சிவபெருமானைச் சித்திரிக்கிறதோ என்று கருதவேண்டியுள்ளது. திருமுறைகள் இறைவன் கணங்களோடு ஆடுவதை உகப்பவன் என்று பரவுகின்றன.[123]

இறைவன் கணங்களோடு கணமாய் நின்று ஆடியதாகச் சிற்பிகள் கருதிச் செய்தனரோ என்று வியக்குமாறு அரியதொரு கலைப்படைப்பாய் இச்சிற்பம் அமைந்துள்ளது. பொதுவாகப் பூதவரிகளில் ஆடும் கணங்கள் பலவாய்க் காணப்பட்டாலும், சிவபெருமானே கணநாதனாய் நின்று

---

123. ஆறாம் திருமுறை, பதிக எண் 20, பா.எ. 204.

ஆடும் இத்திருக்கோலம் இக்கோயிலின் தனிப்பெருமை எனலாம். ஒப்பீட்டாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமகாலக் கோயில்களிலோ, காலத்தால் முற்பட்ட பல்லவர் படைப்புகளிலோ இது போன்ற சிற்பம் காணப்படவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

மேற்குப் பூதவரியில் இருபது பூதங்கள் செதுக்கப் பட்டுள்ளன. இவற்றுள் முதல் பதினெட்டுப் பூதங்கள் ஆடற்கோலங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளன. செவிகளில் பனையோலைக் குண்டலங்களும் மார்பில் முப்புரிநூலும் மார்புக்கும் வயிற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் உதர பந்தமும் கொண்டு விளங்கும் இப்பூதங்களின் தலைக் கோலங்கள் ஒன்றுக்கொன்று பெரிதும் மாறுபட்டுள்ளன. சடை மகுடம், சடைபாரம், சுடர்முடி, விரிசடை எனப் பல்வகைத் தலைக்கோலங்கள். இவற்றுள் சடைமகுடமே பெரும்பான்மையும் உள்ளதெனினும் இச்சடை மகுடமும் பலவிதமாய்ப் புனையப்பட்டுள்ளது. பத்தொன்பதாவது பூதகணம் வலக்கையில் கொடுவாளைப் பிடித்தபடி இடக்கையால் வியப்பு முத்திரை காட்டுகிறது. இருபதாவது பூதகணம் இரு கைகளிலும் தடி கொண்டுள்ளது.

ஆ. கருவறைப் பூதவரி

விமானக் கீழ்த்தளத்தின் வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய முப்புற வலபிகளிலும் பூதவரி காணப்படுகிறது. பத்திப் பிரிப்புக்கு ஏற்றாற் போல் பத்தித் திருப்பங்களில் இவ்வலபிகளில் பாயும் யாளிகள் காட்டப்பட்டுள்ளன. இந்த யாளிகளின் இருபுறமும் போதிகைகளின் மேலமரும் வாஜனத்தின் மீது பக்கத்திற்கொன்றாகச் சிற்பங்கள் உள்ளன. இவை சில இடங்களில் பூதகணங்களாகவும் சில இடங்களில் வேறு வடிவங்களாகவும் உள்ளன. ஒவ்வொரு பத்தி வலபியிலும் ஐந்து அல்லது ஆறு கணங்கள் இடம் பெற்றுள்ளன. மூன்று பத்திகளுக்கும் சேர்த்து வடக்கில்

பதினேழு கணங்களும் கிழக்கில் பதினேழு கணங்களும் தெற்கில் பதினெட்டுக் கணங்களும் காட்டப்பட்டுள்ளன.

வடக்கு வலபி

வடபுற வலபிக் கணங்கள் விளையாட்டு, சண்டை, சமாதானம் என்ற நிலைகளில் காட்டப்பட்டுள்ளன. இந்த வரிசையில் வடமேற்குக் கர்ணபத்தி வலபியிலுள்ள முதற்கணம் வாஜனத்தின் மீது படமெடுத்து அமர்ந்துள்ள பாம்பின் வாலைப் பிடித்துக் குறும்பாக இழுக்கிறது. இரண்டாவது கணம் இட மேற்கைக் குழிவில் தடியை அடக்கிப் பிடித்தபடி அமைதி காக்கிறது. மூன்றாவது உயர்த்திய தடியுடன் சிரிக்கிறது. இதன் இடக்கை உயர்த்திய பதாகமாய் உள்ளது. இதைப் பார்த்து நான்காவது கணம் வாயைக் கிழிப்பது போல் மெய்ப்பாடு செய்து பழிப்புக் காட்டுகிறது. இதன் கழுத்தில் மாலையாய்ப் பாம்பு. சடைபாரமும், கோரைப்பற்களுமாய்க் காட்சியளிக்கும் இதன் வலக்கால் தரையிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. ஐந்து, ஆறாம் கணங்கள், வலக்கையில் கத்தியும் இடக்கையில் கேடயமுமாய்ச் சண்டையிடுகின்றன.

சாலை வலபியில் உள்ள ஆறு கணங்களில் முதலிரண்டும் உரையாடும் நிலையில் இருக்க, அடுத்த நான்கும் சச்சரவில் ஈடுபட்டுள்ளன. எதிரெதிர் பார்த்தபடி உரையாடும் கணங்களின் தலைகளுக்குப் பின்னால் சடைப்புரிகள் வளையத் தொங்கல்களாய்க் காட்டப்பட்டுள்ளன. அடுத்த நான்கு கணங்களுள் மூன்றாவது கணம், இரண்டாவது கணத்தாலும் நான்காவது கணத்தாலும் தாக்கப்படுகிறது. இவற்றுள், அடிக்கக் கை ஓங்கும் இரண்டாம் கணத்தை முதல் கணம் தடுக்கிறது. மூன்றாவது கணமோ, தாக்கட்டும் பார்க்கலாம் என்று நெஞ்சைக் கிழித்தபடி நிற்கிறது. நான்காவது கணம் ஃகயில் மாட்டியுள்ள கையுறைக் கத்தியால் இந்தப் பூதத்தைக் குத்துகிறது. இந்த நான்கு கணங்களுமே

வன்முறைச் சூழலைப் படம் பிடிக்கின்றன். நெஞ்சைக் கிழித்தபடி நிற்கும் கணம் நன்கு வடிக்கப்பட்டுள்ளது. கிழிக்கப்பட்டிருக்கும் தோலுக்கும் சதைக்கும் பின்னே எலும்புகள் காட்டப்பட்டிருப்பது மிக இயற்கையாக உள்ளது.[124]

வடகிழக்குக் கர்ணபத்தி வலபியில் காட்டப்பட்டிருக்கும் முதற்பூதம் அதன் இரு கைகளிலும் தாமரை மலரொன்றைத் தண்டுடன் பறித்துப் பிடித்துள்ளது. தாடியும் மீசையுமாய்க் காணப்படும் இதன் உதரபந்த முடிச்சு அழகுபடக் காட்டப்பட்டுள்ளது. அடுத்த நான்கில் இரண்டாவது பூதம் அச்சத்துடன் அலறுவது போல் உள்ளது. இதற்குக் காரணம் மூன்றாவது பூதம் தன் இடக்கையிலுள்ள பாம்பை இரண்டாவது பூதத்தை நோக்கி வீசியிருப்பதுதான். தன்னை நோக்கிப் படமெடுக்கும் பாம்பைக் கண்டதும் அஞ்சிய நிலையில் இரண்டாவது பூதம் அலறுகிறது. நான்காவது பூதம் அழுகிறது. ஐந்தாம் பூதம் அதை அணைத்து உச்சி மோந்து ஆறுதல் சொல்கிறது.[125] இந்தப் பூதத்தின் அழுகைக்கும் மூன்றாம் பூதமே காரணமாக இருக்கவேண்டும். பாம்பை முன்புறம் காட்டி இதை விரட்டிவிட்டுப் பிறகு பின்புறம் வீசி இரண்டாவதை அச்சுறுத்தும் குறும்பான விளையாட்டில் அது ஈடுபட்டுள்ளாற் போல் தோன்றுகிறது.

---

124. இதுபோல் நெஞ்சு கிழித்து நிற்கும பூதவடிவத்தைத் தென்வாயில் ஸ்ரீகோயிலுக்குக் காலத்தால் முற்பட்ட கோயில்களிலோ அல்லது சமகாலக் கோயில்களிலோ காணக்கூடவில்லை. வன்முறை காட்டும் பூதகண்ங்களைப் பலவாய்ப் பார்க்கக்கூடிய வலபி வரிகளில்கூட இதுபோல வீரம்காட்டி நிற்கும் கணத்தைக் காணமுடிய்வில்லை. எனவே இப்பூதம் இக்கோயிலின் சிறப்புக்குரிய சிற்பமாய் விளங்குகிறது எனலாம்.

125. இதுபோல அழும் பூதத்தை மற்றொரு பூதம் தாய்போல் அணைத்து ஆறுதல் சொல்லும் காட்சி பிற முற்சோழர் கோயில்களின் பூதவரிகளிலும் காணக்கிடைக்கின்றது.

கிழக்கு வலபி

கிழக்கு வலபிப் பகுதியின் கர்ணபத்திகளின் கீழுள்ள கணங்கள் ஆடலிலும் இசையிலும் ஈடுபட்டுள்ளன. ஆடும் கணங்கள் அனைத்தும் மண்டல நிலை கொண்டுள்ளன. சூசி, பதாகம், கடகம் எனும் ஒற்றைக் கை முத்திரைகளில் சிலவும் அர்த்த ரேசிதம், கஜஅஸ்தம் என அழகுக் கைகள் காட்டிச் சிலவும் ஆடுகின்றன. ஒரு கணம் செண்டுதாளம் வாசிக்கிறது.

சாலைப்பத்தியில் உள்ள ஆறு கணங்களில் மூன்று பூதங்கள் கையில் தடியுடன் காட்சியளிக்கின்றன. முதலிரண்டு கணங்களில் இரண்டாவது மிரட்ட, முதலாம் பூதம் அஞ்சுவது போல் நிற்கிறது. இதன் தாடியில் முடிச்சு ஒன்று காட்டப் பட்டுள்ளது. ஒரு பூதம் வலக்கையைக் கடகத்திலும் இடக்கையைப் பதாகத்திலும் கொண்டு ஆடுகிறது.

தெற்கு வலபி

தென்புற வலபியின் கர்ணபத்திகளிலும் ஆடல் மற்றும் இசையில் ஈடுபட்டுள்ள கணங்களே அதிகமாய் உள்ளன. தென்கிழக்குக் கணங்களில் நான்கு இசைக்கலைஞர்களாய் உள்ளன. ஒன்று குழலூத மற்றொன்று இலைத்தாளம் இயக்குகிறது. நரம்புக் கருவியை இடத்தோளில் ஏந்தி வலக்கைக் கோலால் அதை மீட்டுகிறது, மூன்றாம் கணம். நான்காம் கணமோ கைத்தாளம் போட்டு இசையாசிரியராய்க் காட்சி தருகிறது. எஞ்சிய இரண்டனுள் இறுதிப் பூதம் இடக்கையில் அர்த்தரேசிதமும் வலக்கையில் பதாகமும் காட்டி ஆடுகிறது. தொடக்கத்திலுள்ள கணத்தின் சடைமுடிச் சுருளைப் போதிகை மீதுள்ள வாஜனப் பகுதியில் அமர்ந்திருக்கும் ஆண் வடிவம் பிடித்திழுக்கிறது. வலி பொறுக்கமுடியாத பூதம் சடைமுடியைக் கையால் பற்றியவாறே அழுகிறது.

நான்முகனுக்கு வலப்புறமுள்ள கர்ணபத்திக் கணங்களுள் மூன்று ஆடல் நிகழ்த்துகின்றன. இடக்கையால்

தாடியைப் பற்றியவாறு வலக்கையால் தர்ஜனி காட்டுகிறது ஒன்று. மற்றொன்று இலைத்தாளம் கொண்டு இசை கூட்டுகிறது. இடையிலுள்ள பூதம் கைகளில் அடையாளம் காணமுடியாத பொருளொன்றைப் பிடித்துள்ளது.

சாலை வலபியிலுள்ள ஆறு கணங்களில் முதல் பூதம் கையில் திருவோடேந்தி தண்ணீர் குடிக்கிறது. இதற்குத் தன் கையிலுள்ள பாத்திரத்திலிருந்து நீர் ஊற்றும் பெண், போதிகையின் வலபியில் அமர்ந்திருக்கிறார். இரண்டாவது பூதமும் தண்ணீர் குடிக்க நிற்கிறது. இதன் வலக்கையில் திருவோடு. ஏனைய நான்கும் பல்வேறு செயற்பாடுகளில் உள்ளன.

முகமண்டபம், கருவறை ஆகியவற்றின் வலபிகளில் காணப்படும் இப்பூதவரிச் சிற்பங்களால் அக்காலத்தே வழங்கிய இசைக்கருவிகளையும் அவற்றை இயக்கும் முறைகளையும் அந்நாளைய ஆடல் அமைவுகளையும் வாய்ப்பாட்டுத் தொழில் முறைகளையும் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது. மனித வாழ்க்கையின் இயல்பான குறும்புகள், விளையாட்டுகள், வீரச்செயல்கள் போன்றவற்றையும் இப்பூதவரிச் சிற்பங்கள் சுட்டுகின்றன. வன்முறைக் காட்சிகளும் இங்கு விளக்கமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடவாயில் ஸ்ரீகோயில் பூதகணங்களினும் தென்வாயில் ஸ்ரீகோயில் பூதகணங்கள் மிகத் தெளிவாகவும் திருத்தமாகவும் கலையழகுடனும் வடிக்கப்பட்டுள்ளன. கழுகுமலை வெட்டுவான் கோயில் பூதகண வரிசைக்கு இணையானதொரு கணவரியாகத் தென்வாயில் ஸ்ரீகோயில் பூதவரியைக் கொள்ளலாம்.

மகரதோரணச் சிற்பங்கள்

தென்வாயில் ஸ்ரீகோயிலின் விமானக் கீழ்த்தளக் கோட்டங்கள் மூன்றின் மேலும் மகரதோரணங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் வடக்கு மகரதோரணம்

வெறுமையாக உள்ளது. கிழக்கு மகரதோரணத்தின் கீழ்வளைவில் கஜசம்காரமூர்த்தியும்[126] மேல்வளைவில் சிவபெருமானின் கரணச் சிற்பமொன்றும் காட்டப் பட்டுள்ளன. தெற்கு மகரதோரணத்தின் கீழ் வளைவில் சிவபெருமானின் ஊர்த்வஜாநு கரணச் சிற்பம் காணப்படுகிறது.

அ. கஜசம்காரர்

19செ.மீ. உயரமும், 23செ.மீ. அகலமும் கொண்டுள்ள தோரணக்குழிவில் கஜசம்காரமூர்த்தியின் சிற்றுருவச் சிற்பம் சிறக்க வடிக்கப்பட்டுள்ளது. கஜமுக அசுரனை அழித்த இறைவனின் திருக்கோலம் நடுப்பகுதியில் அமைய, வலப்புறத்தே கைகளில் தாளமேந்திய பூதமொன்று நிற்கிறது. இடப்புறத்தே இந்நிகழ்வால் அச்சமுற்ற உமையும் முருகனும் காட்டப்பெற்றுள்ளனர்.

கஜசம்காரரின் இடக்கால் ஊர்த்வஜாநுவாய் இடுப்பளவு உயர்த்தப்பட்டு வலப்புறத் திருப்பத்தில் சுழன்றிருக்க, வலக்கால் தரையில் நன்கு ஊன்றியுள்ளது. இறைவனின் மகுடச் சடைகளில், தலையோடு தனியே தெரிகிறது; அரையில் சிற்றாடை; செவிகளில் பனையோலைக் குண்டலங்கள்; எட்டுத் திருக்கைகளில் வலப்புற மூன்றும் இடப்புற மூன்றும் கிழித்த யானைத் தோலைப் பற்றிப் போர்த்தும் நிலையிலிருக்க

---

126. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், வெ. பாலாம்பாள் ஆகியோர் இச்சிற்பம் வடக்கு மகரதோரணத்தில் இருப்பதாகக் கூறியுள்ளனர். - எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், சோழர் கலைப் பாணி, ப. 58, படம் எண் 29; வெ. பாலாம்பாள், பழுவேட்டரையர்கள், ப. 68.

இக்கஜசம்காரச் சிற்பத்தைக் கொண்டு பழுவூரை அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்றாகவும் வெ. பாலாம்பாள் குறிப்பிடுகிறார். - வெ. பாலாம்பாள், பழுவேட்டரையர்கள், ப.72. இது சரியன்று. சிவபெருமான் கஜசம்காரம் செய்த இடம் வழுவூராகும். அதுவே அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்றாய்க் கொண்டாடப்படுகிறது. தி. இராசமாணிக்கம், அட்டவீரட்டத் தலங்கள், (சென்னை, கழக வெளியீடு 1985) ப-ள். 50-62.

எஞ்சிய இரு கைகளுள் வலக்கை முத்தலை ஈட்டி கொண்டுள்ளது; இடக்கை சூசி முத்திரையில் அமைந்துள்ளது.

ஆ. சிவபெருமானின் ஆடல் தோற்றம்

கஜசம்காரருக்கு மேலே உள்ள மகர தலைகளுக்கு இடைப்பட்ட நெற்றிக்குழிவில் சிவபெருமானின் ஆடல் தோற்றமொன்று காட்டப்பட்டுள்ளது. 12செ.மீ. உயரமும் 9.செ.மீ. அகலமும் கொண்ட சிற்றிடத்தில் இச்சிற்பம் பொலிவுற வடிக்கப்பட்டுள்ளது.[127] ஆடும் இறைவனின் வல முன்கை அபயத்திலிருக்க இட முன்கை அர்த்தரேசிதமாய்[128] அமைந்துள்ளது. பின்கைகளில் வலப்புறம் உடுக்கையும் இடப்புறம் பாம்பும் உள்ளன. சடைகளை மகுடமாய் முடிந்துள்ள இறைவன் மண்டல நிலையில், இடப்பாதத்தை திரயச்ரமாகவும் வலப்பாதத்தை சூசியிலும்[129] நிறுத்தியுள்ளார். இந்த ஆடற்கோலம் வினிவிருத்தக் கோலமாக விளக்கப் பட்டுள்ளது.[130]

இ. சிவபெருமானின் ஊர்த்வஜாநு கரணக்கோலம்

தெற்கு மகரதோரணத்தில் 17செ.மீ. உயரமும் 19செ.மீ. அகலமும் உள்ள கீழ்க் குழிவில் சிவபெருமானின் ஊர்த்வஜாநு கரணக்கோலம் காணப்படுகிறது. மேலே இருபுறமும் இவ்வாடல் கண்டு போற்றும் மெய்ப்பாட்டில் கந்தருவர் இருவர் காட்டப்பட்டுள்ளனர். கீழே சிவபெரு

---

127. இதே போன்றதொரு சிற்பம் புள்ளமங்கை ஆலந்துறையார் கோயில் விமானக் கீழ்த்தள வடபுறக் கோட்டத் தோரண மேற்குழிவில் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இச்சிற்பம் சிவபெருமானின் அழகு பொலிந்த ஆடற்தோற்றங்களுள் ஒன்றாகும்.

128. அர்த்தரேசிதம் பரதரின் நாட்டிய சாத்திரம் குறிப்பிடும் முப்பது நிருத்தக் கைகளுள் ஒன்றாகும். Manomohan Gosh, The Natya Sastra, (Calcutta, Manisha Granthalaya Private Ltd., 1967), p. 173.

129. பத்மா சுப்ரமணியம், பரதக்கலை (கோட்பாடு), ப. 51.

130. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப. 140.

மானின் வலப்புறத்தே குள்ளச்சிறு பூதமொன்று தாளம் தட்டுகிறது. அதையடுத்துக் குடமுழவு வாசிக்கும் இசைக்கலைஞர் காட்டப்பட்டுள்ளார். அவருக்கருகே புல்லாங்குழலை வாசித்தபடி மற்றொரு பூதம். சிவ பெருமானின் இடப்புறத்தே இரண்டு கணங்கள் உள்ளன. ஒன்று இடத்தோளில் சாய்த்த நரம்புக்கருவியை வலக்கைக் கோல் கொண்டு வாசிக்க, மற்றொன்று தாளம் தட்டுகிறது.

இவ்விசைக் கலைஞர்களின் நடுவே இறைவனின் ஆடற்கரணத் தோற்றம் அழகுற அமைந்துள்ளது. மண்டல நிலையில், இடக்கால் பார்சுவமாய் இருக்க, வலக்கால் முழங்காலளவில் மடக்கப்பட்டுப் பக்கவாட்டில் இடுப்பளவு உயர்த்தப்பட்டுள்ளது. உடலின் வளைவுகளும் ஆடை முடிச்சுகளின் தொங்கல்களும் கரண அசைவுகளுக்கேற்ப அமைந்துள்ளன. சடைமகுடம் பூண்டு, செவிகளில் பனையோலைக் குண்டலங்கள் அசைய ஆடும் இப்பெருமானின் எட்டுக் கைகளில் வல முன்கை அபயம் காட்டுகிறது. பிற வலக்கைகளில் கீழிருந்து மேலாக முத்தலை ஈட்டி, குறுந்தடி, துடி ஆகியன உள்ளன. இட முன்கை அர்த்தரேசிதமாய் அமையப் பிற இடக்கைகளில் தலையோடு, பாம்பு, தீயகல் ஆகியன காட்டப்பட்டுள்ளன.

முற்சோழர் காலத்தனவாகக் கிடைத்துள்ள சிவபெருமானின் ஆடல் தோற்றங்களுள் கலைநுட்பமும் செறிவும் நிறைந்ததொரு சிற்றுருவச் சிற்பமாக இதைக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் இதுநாள்வரை கிடைத்துள்ள சிவபெருமானின் ஊர்த்வஜாநு கரணச் சிற்பங்களுள் இதுவே இத்தனை இசைக்கலைஞர்கள் புடைசூழ, மிகுந்த கலையழகுடன் படைக்கப்பட்டுள்ள படைப்பென்பது குறிப்பிடத்தக்கது. பழுவேட்டரையர்களின் கலை மாண்பிற்கும் கற்பனைத் திறத்திற்கும் இச்சிற்பம் சிறந்ததோர் எடுத்துக்காட்டெனலாம்.

மாலைத்தொங்கல் சிற்பங்கள்

கருவறைப் புறச்சுவரின் கிழக்குப்பகுதியில் முருகன் கோட்டத்திற்கு வடபுறத்துள்ள நான்முக அரைத்தூணொன்றின் மாலைத்தொங்கலில் தேவியின் போர்க்கோலக் காட்சிகள் சிற்றுருவச் சிற்பங்களாக மிக அழகுபட வடிக்கப்பட்டுள்ளன.

அ. மகிடாசுரமர்த்தனி

இம்மாலைத்தொங்கல் பகுதி மேல், கீழ் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சதுரமாய் அமைந்துள்ள கீழ்ப்பகுதி கருக்கணி ஒன்றால் மேலும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இக்கருக்கணி சிம்மம் ஒன்றின் வாயிலிருந்து வெளிப்பட்டுப் பரவுவது போல் காட்டியுள்ளனர். கருக்கணியின் வலப்புறம் சிம்மவாகினியாய்க் கைகளில் ஓங்கிய வாளும் கேடயமும் கொண்டு கரண்ட மகுடராய்ப் போர்க்கோலத்தில் காட்சிதருகிறார் கொற்றவை. வலக்காலை உயர்த்தி மடக்கி இடக்காலைத் தரையில் ஊன்றிய நிலையில், கைகளில் கதையுடன் மகிடன். மகிடனின் சிற்பம் மாமல்லபுரம் மகிடாசுரமர்த்தனி குடைவரையில் காணப்படும் சிற்பத்தின் தோற்றத்தை ஒத்தமைந்துள்ளது.

ஆ. சும்ப – நிசும்ப வதம்

மேலே உள்ள செவ்வகப் பகுதியில் முத்தலையீட்டியுடன் காளிதேவியின் போர்க்கோலம் காட்டப்பட்டுள்ளது. அம்மையின் கைகளில் வாளும் கேடயமும் உள்ளன. எதிரே அசுரன் ஒருவன், கீழேயுள்ள மகிடனைப் போலவே நின்ற வண்ணம் ஓங்கிய வாளுடன் காட்சி தருகிறான். காளியின் பின்னால் ஒரு பெண்ணும், காளிக்கும் அசுரனுக்கும் இடையில் வீழ்ந்த நிலையில் மற்றோர் அசுரனும் காட்டப் பட்டுள்ளனர். இச்சிற்பம் காளிதேவியின் சும்ப, நிசும்ப வதத்தைக் குறிப்பதாகலாம்.

தூண்களின் மாலைத்தொங்கலில் அமைந்த சிற்பத் தொகுதியாக இது ஒன்றுதான் இக்கோயில் வளாகத்தில் காணப்படுகிறது. சிற்ப அமைப்பு, வடிப்புத் திறன், காட்சியின் சீர்மை அனைத்தும் கொண்டு இத்தொகுதியைப் பழுவேட்டரையர் காலத்தின் மிகச் சிறந்த சிற்றுருவச் சிற்பத் தொகுதிகளுள் ஒன்றாய்க் கொள்ளலாம்.

கண்டபாதச் சிற்பங்கள்

மகாமண்டபத்தின் தாங்குதளக் கண்டபாதத்தில் காணப்படும் சிற்றுருவச் சிற்பங்களுள் பெரும்பான்மையன இன்ன செயற்பாட்டிலுள்ளன என்பதைக்கூட அறியவியலாத வகையில் சிதைந்துள்ளன. செயற்பாட்டை ஊகிக்கக்கூடிய வகையில் அமைந்திருப்பவை மிகச் சிலவே. இவையனைத்தும் ஆடற் சிற்பங்களாகவே உள்ளன.

இவற்றில் காட்டப்பட்டிருக்கும் ஆண், பெண் வடிவங்கள் இரண்டுமே நல்ல நெடிய உருவங்களாக அமைந்துள்ளன. புள்ளமங்கை ஆலந்துறையார் கோயிலில் காணப்படும் ஆடற் சிற்பங்களையொத்த அழகும் அமைவும் கொண்டவையாய் உள்ள இச்சிற்பக் காட்சிகளில், பெண்கள் ஆடல் நிகழ்த்த ஆடவர்கள் இசைக்கருவிகளை இயக்குபவர் களாய்க் காட்டப்பட்டுள்ளனர். மத்தளம், இலைத்தாளம், இடக்கை போன்ற இசைக்கருவிகளை ஆடவர்கள் இயக்க, பதாகம், கடகம் போன்ற ஒற்றைக்கை முத்திரைகளும் அர்த்தரேசிதம், டோல அஸ்தம் போன்ற ஆடல் கைகளும் காட்டிப் பெண்கள் மண்டலநிலையில் ஸ்வஸ்திகக் கரணம் நிகழ்த்துமாறு சிற்பங்கள் அமைந்துள்ளன.

ஆடற்சிற்பங்கள் தவிர கண்டபாதமொன்றில் யானையை அழித்த மூர்த்தியின் சிதைந்த கோலத்தைக் காணமுடிகிறது. கீழ்ப்பகுதி முழுவதுமாய்ச் சிதைந்திருக்கும் இச்சிற்பத்தின் மேற்பகுதியில் இறைவன் தாம் கிழித்த யானையின் தோலைப்பற்றியவாறு நிற்பது காட்டப்பட்டுள்ளது. அவரது கையொன்றில் முத்தலையீட்டி உள்ளது.

தனிச்சிற்பங்கள்

அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்தில் ஜேஷ்டை, சூரியன், கங்காதரர், பைரவர், நான்முகன் ஆகிய சிற்பங்கள் தனிச்சிற்பங்களாகக் காணக்கிடக்கின்றன. இவற்றுள் ஜேஷ்டை, சூரியன், கங்காதரர் ஆகிய மூன்றும் சோழர் காலச் சிற்பங்கள்.

அ. ஜேஷ்டை

வடவாயில் ஸ்ரீகோயிலின் வடபுறத்தே உள்ள புல்வெளியில் ஜேஷ்டையின் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பத்தொகுதியில் நடுநாயகமாக ஜேஷ்டையும் வலப்புறம் ஜேஷ்டையின் மகன் நந்திகேசுவரரும் இடப்புறம் மகள் அக்னிமாதாவும் அமர்ந்த கோலத்தில் உள்ளனர். ஜேஷ்டையின் வலக்கையில் மலர்; இடக்கை தளத்தின் மீது இருத்தப்பட்டுள்ளது. எளிமையும் இளமையுமாய்க் காட்சியளிக்கும் இத்தேவியின் இடப்புறம் உள்ள அக்னிமாதா உத்குடியாசனத்தில் அமர்ந்துள்ளார். இவரது வலக்கை அபயத்திலிருக்க, இடக்கை நெகிழ் கரமாய் உள்ளது.

ஆ. சூரியன்

தென்வாயில் ஸ்ரீகோயிலின் மகாமண்டபத்தில் காணப்படும் சூரியனின் சிற்பம் சோழர் காலத்ததாகும். சமபங்கத்தில் சமபாதராய் நிற்கும் சூரியனின் இரு கைகளிலும் தாமரை மலர்கள். இவற்றின் தண்டுப் பகுதிகள் சிதைந்துள்ளன. இடையில் சிற்றாடை காணப்படுகிறது.

இ. கங்காதரர்

கங்காதரர் சிற்பம் தென்வாயில் ஸ்ரீகோயில் மகாமண்டபத்தின் கிழக்குச் சுவரருகே இருத்தப்பட்டுள்ளது. இதில் சிவபெருமானும் அவரது இடப்புறத்தே உமையும் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றனர். இறைவனின் வல முன்கை இறைவியின் வல மார்பகத்தைத் தொட்டபடி இருக்க, இட

முன்கை இறைவியை அணைத்தவாறுள்ளது. பின்கைகளில் வலக்கை தலைமுடியின் ஒரு புரியில் கங்கையை ஏற்கிறது. இடக்கையோ தேவியின் கரண்டமகுடத் தலையைத் தொட்டவாறு உள்ளது. சடைமகுடராய், மகுடமுகப்பில் தலையோடு கொண்டிலங்கும் பெருமானின் வலச்செவி வெறுஞ்செவியாய் இருக்க, இடச்செவி பனையோலைக் குண்டலம் கொண்டுள்ளது. இடையில் சிற்றாடை; மேற்கைகளில் கங்கணங்கள்; கைகளில் வளைகள்; கழுத்தணிகள் விளங்கும் மார்பில் முப்புரிநூலும் இடம் பெற்றுள்ளது.

இறைவியின் வலக்கை வயிற்றருகே அமைய, இடக்கை முழங்கையளவில் மடங்கி இடத்தோளுக்காய்த் திரும்பி யுள்ளது. இறைவியின் பட்டாடை கணுக்கால் வரை காட்டப்பட்டுள்ளது. உடலெங்கும் காணப்படும் எளிமையான அணிகளும் சிற்பத்தின் அழகும் இதைச் சோழர் காலச் சிற்பமாகக் கொள்ளவைக்கின்றன.

பகைவிடை ஈசுவரம்

தற்போது சுந்தரேசுவரர் கோயிலென்று அழைக்கப்படும் பகைவிடை ஈசுவரம் மேலப்பழுவூரில், ஊரின் வடபுறத்தே, மேற்கிலும் வடக்கிலும் வயல்கள் சூழத் தென்புறம் திருச்சிராப்பள்ளி செயங்கொண்டம் நெடுஞ்சாலை அமையக் கிழக்குவாயிலுடன் காட்சிதருகிறது. இக்கோபுர வாயிலின் கிழக்கே வலப்புறம் வீடுகளும் இடப்புறம் அண்மைக் காலக் கோயிலொன்றும் உள்ளன.

கட்டட அமைப்பு

கோபுரம்

அ. கீழ்த்தளம்

கோபுரம், அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகக் கோபுரம் போலவே முத்தளக் கட்டுமானத்துடன் பத்திப்பிரிப்பு முறையில் அமைந்துள்ளது. தாங்குதளப்பகுதி முற்றிலுமாய்ப் பூமிக்கடியில் புதைந்துபோன நிலையில் சுவர்ப்பகுதியி லிருந்தே கோபுரக் கட்டுமானத்தைப் பார்க்கமுடிகிறது. சுவரில் அனைத்து உறுப்புகளும் கொண்ட நான்முக அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் குளவுடன் கூடிய தரங்கப் போதிகைகள் உத்திரம் தாங்க, மேலே வாஜனமும் வலபியும். வலபியில் பூதவரி, கிழக்குமுகம் முழுவதற்குமாய் அமைந்துள்ளது. மேலே கூரையின் முன்னிழுப்பாய்க் கபோதம். இதன் நடுப்பகுதியில் கோபுர வாயிலுக்கு மேலே சிதைந்த நிலையிலொரு சுதைச் சிங்கம்[1], பிற்காலப் பணியாய் அமர்ந்துள்ளது. கபோதத்திற்கு மேல் தளமுடிவு சுட்டும்

---

1. இதுபோன்ற சிங்க உருவங்களைத் தஞ்சாவூர் மராத்தியர்ச் சுதையுருவங்களிடையே காணமுடிகிறது. கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயில் கோபுரத்தில் இதே அமர்வில் சிங்க உடலும் மனித முகமும் கொண்ட வடிவங்கள் காணப்படுவது இங்கு நினைக்கத்தக்கது. இக்கோபுரத் திருப்பணி மராத்தியர் காலத்தில் மேற்கொள்ளப்பட்டமைக்கு இக்கபோதச் சிங்கங்கள் சான்றாகின்றன.

பூமிதேசம். கோபுரத்தின் வாயிலுள்ள நடுப்பத்தியான சாலைப்பத்தி, கர்ணபத்திகளினும் சற்றுப் பிதுக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

மேல்நிலை, கீழ்நிலை, திருநிலைக்கால்கள் பெற்றமைந் துள்ள கோபுரவாயிலின் இருபுறமும் உள்ள கோட்டங்களில் வாயிற்காவலர்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் தலைக்கு மேலுள்ள பகுதியில் மகரதோரணம் காட்டப்பட்டுள்ளது. இத்தோரணக் குழிவுகளிலுள்ள சிற்பங்கள் பெரிதும் சிதைந்துள்ளன. வலப்புற நிலைக்காலிலுள்ள கல்வெட்டு நாயகத்தான் சதா சேவை என்ற தகவலைத் தருகிறது.[2]

கீழ்த்தளப் பூமிதேசம் வரை கருங்கல்லால் ஆன இக்கோபுரத்தின் மேல்நிலைகள் அனைத்தும் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளன. கீழ்த்தளத்தின் கூரை மேலமரும் உறுப்புகளாகக் கர்ணகூடம், பஞ்சரம், சாலை, பஞ்சரம், கர்ணகூடம் என்பன அமைந்துள்ளன. இந்த ஆர உறுப்புகளை இணைக்கும் ஆரச்சுவரிலும் சாலை தவிர்த்த ஏனைய ஆர உறுப்புகளிலும் காணப்படும் நாசிகைகள் சுதையுருவங்கள் ஏதுமின்றி வெறுமையாக உள்ளன.

ஆ. இரண்டாம் தளம்

இவற்றின் பின்னே கோபுரத்தின் இரண்டாம் தளமான அரமியம் எழுகிறது. நான்முக அரைத்தூண்களுடன் கூடிய இதன் சுவர்ப்பகுதியைப் பார்க்கமுடிகிறது. இத்தூண்களின் போதிகைகள் தாங்கும் உத்திரத்தின் மேல் வாஜனமும் வலபியும் இடம்பெற, மேலே கபோதம் காட்டப்பட்டுள்ளது. கூரைமீது இரண்டாம் தளத்திற்கான மேலுறுப்புகள் கீழ்த்தளம் போலவே வரிசையாக ஆனால் சிறிய அளவினவாக அமைந்துள்ளன.

---

2. இக்கல்வெட்டு களப்பணியின்போது கண்டறியப்பட்டது.

இ. மூன்றாம் தளம்

இவற்றின் பின்னால் கோபுரத்தின் மூன்றாம் தள அரமியம், இரண்டாம் தள அரமியம் போல் மேற்பகுதி மட்டும் தெரியுமாறு உருவாக்கப்பட்டுள்ளது. தளக்கூரையின் மேல் கிரீவமும் அதன்மேல் சிகரமும் காட்டப்பட்டுள்ளன. கிரீவத்தின் நான்கு மூலைகளிலும் நந்திகள் அமர, மகாநாசிகைகள் திசைக்கொன்றாகச் சுதையுருவங்கள் ஏதுமின்றி வெறுமையாகக் காட்டப்பட்டுள்ளன. கிழக்கு, மேற்கு நாசிகைகளின் இருபுறத்தும் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகம் போலவே அல்ப நாசிகைகள் உள்ளன. சிகரத்தின் மேல் தூபிகள் இருந்து அழிந்துள்ளன.

கீழ்த்தளத்திலிருந்து மேல்தளம்வரை காட்டப்பட்டுள்ள சாலைகளின் நடுப்பகுதி திறப்பாக அமைந்துள்ளது. இத்திறப்புகளின் மேல் சுதையில் கீர்த்திமுகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. திறப்புகளின் இருபுறத்தும் வாயிற்காவலர்கள் காட்டப்பட்டுள்ளனர்.

ஈ. கோபுர உட்புற மேடைகள்

கோபுரவாயிலின் கிழக்கு, மேற்குச் சுவர்களுக்கு இடைப்பட்ட பகுதியில் தெற்கு, வடக்குச் சுவர்களையொட்டி மேடையொன்று எழுப்பப்பட்டுள்ளது. இதன் முகப்பில் ஊர்த்வ பத்மவரியும் தளத்தையொட்டித் தூணொன்றும் உள்ளன. இத்தூண் மூன்று சதுரங்களும், சதுரங்களுக்கு இடைப்பட்ட நிலையில் இரண்டு கட்டுகளுமென அமைந்துள்ளது. பக்கத்திற்கொன்றாய் அமைந்துள்ள இத்தூண்கள், தரங்கவரிகளோடு கூடிய வெட்டுப் போதிகைகளால் உத்திரம் தொட, மேலே கூரை. கோபுரத்தின் உட்பகுதி கீழ்த்தளத்திற்கு மேலே பொள்ளலாகவே அமைந்துள்ளது. கீழ்த்தளக் கூரையும் இரண்டு இடங்களில் திறப்பாக விடப்பட்டுள்ளது.

கோபுரத்தின் கீழ்த்தள அரைத்தூண்களின் அமைப்புக்கொண்டு பார்க்கும்போது இதன் காலத்தைக் கி.பி. பத்தாம் நூற்றாண்டாகக் கொள்ளலாம். உள்ளிருக்கும் மேடைக்கட்டுமானம், மேல் தளங்கள், வாயிற்காவலர் கோட்டங்களின் மேல் மகரதோரணங்கள் இடம்பெற்றிருக்கும் பாங்கு ஆகியன, இக்கோபுரம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டளவில் சீரமைப்புக்கு ஆளாகியிருக்கவேண்டும் என்பதை உணர்த்தி நிற்கின்றன.[3]

திருச்சுற்று

கோபுரவாயிலுள் நுழைந்ததும் பரந்து விரிந்த திருச்சுற்றும் அதன் நடுவே அமைந்துள்ள பகைவிடை ஈசுவரத்தின் மையக்கோயிலும் பார்வையில் படுகின்றன.

அ. கிழக்குச் சுற்றும் மாளிகைப்பத்தியும்

கோபுர வாயிலையொட்டித் தென்புறத்தும் வடபுறத்தும் கிழக்குச் சுற்றில் மாளிகைப்பத்தி அமைந்துள்ளது. தென்புற மாளிகைப்பத்தியில் திறந்த மண்டபமாக ஒரு சிறு பகுதியும் அதையடுத்துத் தொடரும்பகுதி நீண்டதொரு கூடமாக, அனைத்துப் பக்கங்களிலும் சுவர் மறைப்பு கொண்டு காட்டப்பட்டுள்ளன. வடபுறத்து மாளிகைப்பத்தியின் பெரும்பகுதி வாயிலையொட்டித் திறந்த மண்டபமாக விடப்பட்டுள்ளது. வடகிழக்குக் கோடியில் மட்டும் ஓர் அறை அமைக்கப்பட்டுள்ளது.

தென்மண்டபத்தில் சுகாசனத்தில் முனிவர் ஒருவரும், நின்ற கோலத்தில் சந்திரனும் காணப்படுகின்றனர். இம்முனிவரை ஜமதக்னி என இங்குள்ள அறிவிப்புப்பலகை சுட்டுகிறது. வடபுறத்தே கிழக்குச் சுவரையொட்டி அமைந்

3. அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்தின் கோபுரமும் இக்கோபுரமும் கட்டட அமைப்பில் பல ஒற்றுமைகளைக் கொண்டிருப்பதால் இரண்டும் ஒரே காலகட்டத்தில் திருப் பணிகளுக்கு ஆளானதாகக் கொள்ளலாம்.

துள்ள மேடையில் இடமிருந்து வலமாகப் பல தெய்வத் திருமேனிகள் காணப்படுகின்றன. சனீசுவரர், பிள்ளையார், சுகாசனக் கோலத்தில் உமாசகிதர், நாகங்கள், ரிஷபாந்திகர், பைரவர், விஷ்ணு, ஜேஷ்டை என வரிசையாகக் காணப்படும் இத்திருமேனிகளுள் ரிஷபாந்திகர், உமாசகிதர், விஷ்ணு, ஜேஷ்டை ஆகிய நான்கும் பழுவேட்டரையர் காலச் சிற்பங்களாகும்.

ஆ. தெற்குச் சுற்று

தென்சுற்றில் மதிலையொட்டிக் கோபுரவாயிலொன்று அரைகுறையாய் நிற்கிறது. உபானம், ஜகதி, கம்புகளின் அரவணைப்பில் பாதங்களோடு கூடிய கண்டம், பட்டிகை எனும் உறுப்புகள் கொண்டமைந்துள்ள துணைத்தளத்தின் மீது உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகளின் தழுவலில் கண்டம், பட்டிகை என்றமைந்த பாதபந்தத் தாங்கு தளம் காட்டப்பட்டுள்ளது. இதன்மீது முற்றுப் பெறாமல் வெறுமையாக நிற்கும் சுவரில் நான்முக அரைத்தூண்கள் காணப்படுகின்றன. இக்கோபுர அடித்தளத்தின் காலத்தை நிர்ணயிக்கக்கூடவில்லை. இந்தக் கோபுரத்தின் வாயில் இரும்புக் கதவொன்றால் பூட்டப்பெற்றுள்ளது. இக்கோபுர நிலையின்மீது சாய்த்து வைக்கப்பட்ட நிலையில் பழமையான அய்யனார் சிற்பமொன்று[4] உத்குடியாசனத்தில் காட்சிதருகிறது. இதன் இடுப்புக்கு மேற்பட்ட பகுதி சிதைக்கப்பட்டுள்ளது.

---

4. தமிழ்நாட்டின் மிகப் பழைமையான அய்யனார் கோயில், திருப்பிடவூரென்று கல்வெட்டுகளில் அழைக்கப்படும் திருப்பட்டூரில் அமைந்துள்ளது. முதலாம் இரோசந்திர சோழரின் இரண்டாம், ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளைக் கொண்டிருக்கும் இக்கோயில், கல்வெட்டுகளில் திருமண்டபம் உடைய நாயனார் கோயிலென்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் கருவறையில் அய்யனார் தன் இரு மனைவியருடனும் எழுந்தருளியுள்ளார். இவர் எழுந்தருளியுள்ள கல்தளத்தில்தான் முதலாம் இராசேந்திரரின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இடம்பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.
- S.R. Balasubrahmanyam, Middle Chola Temples, p.261.

கோபுர வாயிலின் இடப்புறம் மதிலையொட்டிச் செவ்வகமான அறையொன்று காணப்படுகிறது. அண்மைக் காலத்துக் கட்டுமானமான இவ்வறையில் கிழக்கில் ஊர்த்வதாண்டவரும் மேற்கில் பிள்ளையாரும் உள்ளனர். தென்சுவரையொட்டிக் கிழக்கிலிருந்து மேற்காக வீரபத்திரர், பிரம்மி, மயேசுவரி, கௌமாரி, வைணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி ஆகிய திருமேனிகள் வடபார்வையாக அமர்த்தப்பட்டுள்ளன.

இ. மேற்குச் சுற்று

மேற்குச் சுற்றின் தென்மூலையில் பிள்ளையாருக்கான சுற்றாலைத் திருமுன்னும் நடுப்பகுதியில் முருகனுக்கான சுற்றாலைத் திருமுன்னும் காணப்படுகின்றன.

ஈ. வடக்குச் சுற்று

வடக்குச் சுற்றுவெளியில் மையக்கோயில் விமானத்தின் அருகே சண்டேசுவரருக்கான திருமுன் காணப்படுகிறது.

உ. மதில் சுவர்

மதில்சுவரின் கீழ்ப்பகுதி கருங்கல்லால் கட்டப் பட்டிருக்க மேற்பகுதியைக் காரை, சிமெண்ட் கொண்டு எழுப்பியுள்ளனர். தெற்கு, வடக்குப் பகுதிகளில் பல இடங்களில் சிதைந்துள்ள இம்மதிலின் வடபுறத்தே, சில இடங்களில் கல்வெட்டுள்ள கற்கள் காணப்படுகின்றன. இவை திருப்பணிக் காலத்து இடப்பெயர்வுகளாகலாம். மேற்கு மதில் சுவரின் பெரும்பகுதி இடிந்து விழுந்து தரைமட்ட மாகியுள்ளது. இதைக் கட்டும் பணி அண்மைக்காலத்தே தொடங்கப்பட்டுள்ளது.

சுற்றாலைத் திருமுன்கள்

அ. பிள்யைார் திருமுன்

சுற்றுவெளியின் தென்மேற்கு மூலையில் விமானம், முகமண்டபமென்ற அமைப்பில் பிள்ளையார் திருமுன்

அமைந்துள்ளது. வழக்கத்திற்கு மாறாக இவ்விமானம் துணைத்தளத்தின் மீது எழுமாறு காட்டப்பட்டுள்ளது. ஜகதி, கண்டம், மகாவாஜனம் எனும் உறுப்புகளோடு அமைந்துள்ள இத்துணைத்தளத்தின் மீது, நான்முக அரைத்தூண்களோடு கூடிய சுவர் காட்டப்பட்டுள்ளது. தென்புறச்சுவர், மரமொன்று முளைத்துள்ளதால் விரிசல்விட்டுச் சிதறியுள்ளது. தூண்களின் தரங்கப் போதிகைகள் உத்திரம் தாங்க, மேலே வலபியும் கூரையின் முன்னிழுப்பாய்க் கபோதமும் காட்டப்பட்டுள்ளன. இவ்வலபியும் கபோதமும் தொடர் ஒழுங்கின்றி உள்ளன. கூரையின் மீது விமான மேலுறுப்புகளான கிரீவம், சிகரம், தூபி ஆகியன காணுமாறு இல்லை. இவை காலப்போக்கில் சிதைந்திருக்கலாம்.

கருவறைக்கு முன்னாலுள்ள முகமண்டபம், விமானத்தின் கீழ்த்தளம் போன்றே, துணைத்தளத்தின் மீது எழுப்பப்பட்டுள்ளது. இதன் கூரையைத் தாங்கும் இரண்டு தூண்களும் நாகபந்தம் கொண்டு அமைந்துள்ளன. மண்டபக் கூரை பெரிதும் சிதைந்துள்ளது.

விமானத்தின் போதிகை, துணைத்தளம் போன்ற இடங்களில் கல்வெட்டுத் துணுக்குகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுச் சிதறல்களும் முறையான தாங்குதள அமைப்பின்மையும் இக்கட்டுமானம் பிற்காலத் திருப்பணியின் விளைவென்பதற்குச் சான்றுகளாகின்றன. மண்டபத் தூண்களின் நாகபந்த அமைப்பு மற்றும் போதிகை கொண்டு, இக்கட்டுமானம் கி.பி. பதினைந்தல்லது பதினாறாம் நூற்றாண்டளவில் நிகழ்ந்திருக்கலாமெனக் கொள்ளலாம். அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்திலுள்ள அம்மன் கோயில் கட்டுமானம் இக்கட்டட அமைப்பை ஒத்திருப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

ஆ. முருகன் திருமுன்

மேற்குச் சுற்றின் நடுவில் கிழக்குப்பார்த்த நிலையில் முருகன் திருமுன் அமைந்துள்ளது. ஜகதி, உருள் குமுதம்,

கம்புகளின் தழுவலில் பாதங்களோடு கூடிய கண்டம், பட்டிகை என்று பாதபந்தமாய் அமைந்துள்ள தாங்குதளத்தின் ஜகதிப்பகுதியும் உருள் குமுதத்தின் கீழ்ப்பகுதியும் மண்ணுக்குள் புதைந்துள்ளன. உருள் குமுதத்தின் கீழ்ப்பரப்பில் அதபத்மவரியும் மேற்பரப்பில் ஊர்த்வ பத்மவரியும் காட்டப்பட்டுள்ளன.

பாதபந்தத் தாங்குதளத்தின் மீது எழும் சுவரில் முப்புறமும் நான்முக அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. உரிய உறுப்புகள் அனைத்தும் பெற்றுள்ள இத்தூண்களுள் சில தரங்க வரிகளோடு கூடிய பூமுனைப் போதிகைகள் கொள்ளச் சில நடுப்பட்டையோடு கூடிய தரங்கப் போதிகைகள் கொண்டுள்ளன. இப்போதிகைக் கைகள் உத்திரம் தாங்க மேலே வாஜனத் தழுவலில் வலபி. அதன்மேல், தளக்கூரையின் முன்னிழுப்பாய்க் கூடுகளுடன் கூடிய கபோதம். கூரைக்கு மேலே வேதிகை. இதன் நாற்புறமும் பூமிதேசத்தைக் காட்டுவது போல ஆங்காங்கே யாளிமுகங்களைச் செதுக்கியுள்ளனர். கூரைக்கு மேல் கிரீவம், சிகரம், தூபி ஆகிய உறுப்புகள் காணுமாறு இல்லை.

ஜகதி முதல் வேதிகை வரை கருங்கல்லால் ஆக்கப்பட்டிருக்கும் இவ்விமானத்தின் முன்னுள்ள முகமண்டபமும் விமானத்தைப் போன்றே பாதபந்தத் தாங்குதளம் கொண்டுள்ளது. கருங்கல் கட்டமைப்பான இதன் மேலெழும் சுவர்ப்பகுதி செங்கற் கட்டடமாய் இருக்க மண்டபத்தைத் தாங்கும் தூண்களும் கூரையும் கருங்கல் அமைப்புகளாக உள்ளன. இத்தூண்கள், கீழே ஒரு சதுரமும் மேலே ஒரு சதுரமும் கொண்டு நடுப்பகுதியில் இடைக்கட்டும் அதன்மேல் இந்திரகாந்த உடலுமென அமைந்துள்ளன. மேற்சதுரத்தில் பூப்பதக்கங்கள் காட்டப்பட்டுள்ளன. இச்சதுரத்திலிருந்து கிளைக்கும் தரங்கவரிகளோடு கூடிய வெட்டுப் போதிகை உத்திரம் தாங்குகிறது. உத்திரத்தின் மீதமர்ந்துள்ள கூரையின் முன்னிழுப்பாய்க் கபோதம்.

முகமண்டபத்தினுள் கிழக்கு நோக்கிய நிலையில் கஜலட்சுமியின் மிகச்சிறிய சிற்பமும் தெற்கு நோக்கிய நிலையில் பழனியாண்டியின் சிறிய அளவிலான சிற்பமும் இடம்பெற்றுள்ளன. கருவறையில் முருகன் தேவியருடன் எழுந்தருளியுள்ளார்.

விமானம் மற்றும் முகமண்டபத் தூண்களில் போதிகைகள் கொண்டு இப்போதைய முருகன் கோயில் கி.பி. பதினைந்தல்லது பதினாறாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கொள்ளலாம்.

இ. சண்டேசுவரர் திருமுன்

வடக்குச் சுற்றுவெளியில் கருவறைக்கு அருகில் இத்திருமுன் அமைந்துள்ளது. தெற்கு நோக்கிய வாயிலுடன் அமைந்துள்ள இத்திருமுன் அடித்தளம், சுவர், கூரையென்ற அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. முறையான உறுப்புகள் கொண்ட துணைத்தளமோ தாங்குதளமோ இல்லாது இரண்டு வரிசை கல்லடுக்குகளை அடித்தளமாகக் கொண்டுள்ள இத்திருமுன்னின் சுற்றுச் சுவர்கள், அரைத்தூண்கள் ஏதுமின்றி வெறுமையாக உள்ளன. கூரை, கபோத இமுப்பின்றி எளிய அமைப்பாகக் காட்டப்பட்டுள்ளது. முறையான எத்தகு உறுப்புமில்லாக் காரணத்தால் இக்கட்டமைப்பின் காலத்தை நிர்ணயிக்கமுடியவில்லை. அமைப்புக் கொண்டு நோக்கும்போது இது பதினெட்டு அல்லது பத்தொன்பதாம் நூற்றாண்டுத் திருப்பணியெனக் கருதலாம்.

மையக்கோயில்

மதிலால் சூழப்பட்டிருக்கும் திருச்சுற்று வளர்கத்தின் நடுப்பகுதியில் விமானம், முகமண்டபம், மகாமண்டபம், முன்மண்டபம் என்ற அமைப்பில் மேற்கிலிருந்து கிழக்காக மையக்கோயில் அமைந்துள்ளது.

அ. விமானம்

ஐந்து பத்திப்பிரிப்புகளுடன் அமைந்துள்ள இந்த முத்தள விமானத்தின் தாங்குதளம் பாதபந்தமாக அமைந்தள்ளது. மேலும் கீழும் கம்புகளோடு கூடிய இதன் கண்டப்பகுதியே நிலமட்டத்திற்கு மேலே காணப்படும் முதலுறுப்பு. இதற்குக் கீழே உள்ள உறுப்புகளான குமுதமும் ஜகதியும் மண்ணில் புதைந்துள்ளன. கண்டப்பகுதியில் பாதங்கள் காட்டப்பட்டுள்ளன. கண்டத்திற்கு மேலுள்ள பட்டிகையில் தெற்கிலும் மேற்கிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. பட்டிகைக்கு மேலே உள்ளடங்கிய நிலையில் துணைக்கம்பொன்று காட்டப்பட்டுள்ளது. இதன் மீது எழும் சுவர் வழக்கத்தைவிடச் சற்று உயரமான அளவில்[5] கோட்டங்களின்றி[6] அமைந்துள்ளது.

சுவரின் புறத்தே நீளமான நான்முக அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. ஐந்து பத்திகளாகப் பிரிக்கப்பட்டுள்ள சுவரமைப்பில் ஒவ்வொரு பத்தியின் இருபுறமும் இந்நான்முக அரைத்தூண்கள் எல்லைக்கோடுகள் போல் நீளுகின்றன.

---

5. இதுபோன்ற சுவரமைப்புக் கொண்ட திருக்கோயிலொன்று பிற்காலப் பல்லவர் திருப்பணியாய் (தந்திவர்மப் பல்லவர் காலம்) ஆலம் பாக்கத்தில் காணப்படுகிறது. பெரும் சிதைவுக்கு ஆளாகியிருக்கும் இக்கோயில் இன்றையநாளில் வரதராசப்பெருமாள் கோயில் என்றழைக்கப்படுகிறது. இக்கோயில் விமானத்தின் கீழ்த்தளச் சுவரமைப்பும் துணைக்கம்பும் பெருமளவில் பகைவிடை ஈசுவர விமானத்தை ஒத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

6. விமானக் கீழ்த்தளப் புறச்சுவர்களில் தேவகோட்டங்கள் இல்லாத முற்சோழர் காலக் கோயில்களைப் பழுவூரிலும் பழுவூரைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காணமுடியவில்லை. அவ்வகையில் பகைவிடை ஈசுவர கிருகம் தனித்துநிற்கிறது.

   இதற்குக் காலத்தால் முற்பட்ட விசயாலய சோழீசுவரத்திலும் ஆதிதளப் புறச்சுவரில் கோட்டங்கள் இல்லாமை, இங்கு நினைக்கத்தக்கது. புதுக்கோட்டை மாவட்டக் கோயில்கள் சிலவற்றிலும் (விசலூர் மார்க்கசகாயேசுவரர் கோயில்), பாண்டி மண்டலத்துப் பழங்கோயில்கள் சிலவற்றிலும் (திருப்பத்தூர் திருத்தளிநாதர் திருக்கோயில்) விமானக் கீழ்த்தளப் புறச்சுவர்களில் தேவகோட்டங்கள் இல்லாமை இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

பத்திகளுக்கு இடைப்பட்ட சுவர்ப்பகுதிகள் நன்கு உள்ளடங்கிக் காணப்படுகின்றன. இப்பத்திகளுள் ஓரப்பத்திகள் கர்ணபத்திகளெனவும் நடுப்பத்தி சாலைப்பத்தியெனவும் அழைக்கப்பெறும். இவற்றுக்கு இடையிலுள்ள பத்தி பஞ்சரப்பத்தியாகும். பத்திப்பிரிப்பு செய்யும் நான்முகத் தூண்கள் கலசம், தாடி, கும்பம், பலகை, வீரகண்டம் ஆகிய உறுப்புகளை மட்டுமே பெற்றுள்ளன. இடைக்கட்டு, மாலைத்தொங்கல், பத்ம கட்டு ஆகியவை இத்தூண்களில் இடம்பெறவில்லை. மேலுறுப்புகள் அனைத்தும் எவ்வித அழகுபடுத்தலும் பெறாது எளிமையாகக் காணப்படுகின்றன. வீரகண்டத்திலிருந்து கிளைக்கும் முத்தலைப் போதிகைகள் விரிகோணத்தில் திரும்பி உத்திரம் தொடுகின்றன. உத்திரத்தின் மேல் வாஜனம், வலபி; வலபிக்கு மேல் மீண்டும் ஒரு வாஜனம் காட்டப்பட்டுள்ளது. வழக்கத்திற்கு மாறான இவ்வமைப்பு புனரமைப்பினால் நேர்ந்ததாகலாம். இப்புனரமைப்புகள் எக்காலத்து நிகழ்ந்திருக்கமுடியுமென்பதை அறியமுடியவில்லை.

வலபியில் வழக்கமான பூதவரிக்குப் பதிலாக மதலைகள் காட்டப்பட்டுள்ளன. இம்மதலைகள் செங்கல்லால் கட்டப் பட்டவை. உத்திரத்திற்கு மேலமர்ந்துள்ள கீழ்வாஜனம் வரையே இவ்விமானம் கற்றளியாக அமைந்துள்ளது. அதற்கு மேலுள்ள வலபி, வாஜனம், கபோதம் ஆகியவை செங்கல் மற்றும் காரைத் திருப்பணிகளாக உள்ளன. கூரையின் வெளியிழுப்பாக உள்ள கபோதம் கூடுகளுடன் கூடிய வளைவுத் தோரணங்களைப் பெற்றுள்ளது. இக்கூடுகளுள் சிற்பங்கள் ஏதுமில்லை.

கீழ்த்தள ஆர உறுப்புகள்

கூரையின் நடுப்பகுதியில் கூரைமேலமரும் உறுப்புகளான கர்ணகூடம், பஞ்சரம், சாலை ஆகியன வேதிகையொன்றின் உட்புறத்தே நாற்புறமும் காட்டப் பட்டுள்ளன. வழக்கமாகக் கூரையின் விளிம்பொட்டி, பூமிதேசத்திற்கு மேலே அமரும் இவ்வுறுப்புகள், இங்குக்

கூரையின் விளிம்பிலிருந்து நன்கு உட்தள்ளி நடுப்பகுதியில் அமைந்துள்ளமை முற்றிலும் மாறுபட்ட அமைப்பாகும். தள முடிவு காட்டும் பூமிதேசமும் இங்கு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கீழ்த்தள வாஜனத்திற்கு மேலுள்ள அனைத்துமே செங்கல் திருப்பணிகளாய் அமைந்திருப்பதும், மரபு மாற்றங்கள் காணப்படுவதும் பிற்காலத் திருப்பணி யொன்றை உறுதிப்படுத்துகின்றன.

கூரைமேல் கர்ணகூடம், பஞ்சரம், சாலை, பஞ்சரம், கர்ணகூடம் என வரிசையாய் அமைந்திருக்கும் ஆர உறுப்புகளை ஆரச்சுவர் இணைக்கிறது. நான்கு திசைகளிலும் இவற்றின் நாசிகைகள் வெறுமையாக உள்ளன.

இரண்டாம் தளமும் அதன் ஆர உறுப்புகளும்

இவற்றின் பின்னே இரண்டாம் தளத்தின் சுவரமைப்பு காட்டப்பட்டுள்ளது. இதிலுள்ள நான்முகத் தூண்களின் போதிகைகளும் முத்தலைப் போதிகைகளாகவே அமைந்துள்ளன. விரிகோணத்தில் மேல்நோக்கித் திரும்பும் இவை தாங்கும் உத்திரத்திற்கு மேல் வாஜனமும் வலபியும். இங்கும் வலபியில் மதலைகளே இடம்பெற்றுள்ளன. மேலே கூரையின் முன்னிழுப்பாய்க் கபோதம் கூடுகளுடன் அமைந்துள்ளது.

இரண்டாம் தளக் கூரையின் மேல், கீழ்த்தளம் போலவே ஆர உறுப்புகள் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் நாசிகைகளில் நாற்புறமும் சுதையுருவங்கள் இடம்பெற் றுள்ளன. புராணக் கதைகளும் ஊரக வாழ்க்கையும் பாலியல் நிகழ்வுகளும் இச்சுதையுருவங்கள் வழி வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

மூன்றாம் தளம்

இந்த ஆர உறுப்புகளின் பின்னால் விமானத்தின் மூன்றாம் தளம் காட்டப்பட்டுள்ளது. தூண்களின் மேற்பகுதியையும், போதிகைகளையும் மட்டுமே இங்குப் பார்க்கமுடிகிறது. போதிகைகள் கீழுள்ளவாறே,

விரிகோணத்தில் மேல் திரும்பி உத்திரம் தொட, அதன்மேல் வாஜனமும் வலபியும் காட்டப்பட்டுள்ளன. வலபியில் மதலைகள் உள்ளன. கபோதம் கீழிருப்பது போலவே கூடுகளுடனும் வளைவுகளுடனும் அமைந்துள்ளது. மூன்றாம் தளக் கூரையின்மேல் கிரீவமும் சிகரமும் நாகரமாக அமைந்துள்ளன. கிரீவ சுவரின் முன்னால், நான்கு திசைகளிலும் மகாநாசிகைக் கோட்டங்கள் காட்டப் பட்டுள்ளன. இவற்றில் பெரிய அளவிலான சுதையுருவங்கள் அமர்நிலையில் காணப்படுகின்றன. மேலே உள்ள சிகரத்தின் நாற்புறமும் மகாநாசிகைகளுக்கான கீர்த்திமுகங்கள் காட்டப்பட்டுள்ளன. சிகர உச்சியில் தூபி அமைந்துள்ளது.

கருவறை

இவ்விமானத்தின் உட்புறத்தே இரு சுற்றுச் சுவர்களும் இடையில் நடைவழியும் கொண்ட சாந்தார அமைப்பிலான கருவறை அமைந்துள்ளது. கிழக்கு மேற்காக 2.52மீ. அகலமும் தெற்கு வடக்காக 2.59மீ. நீளமும் கொண்டு அமைந்துள்ள கருவறையினுள் லிங்கத்திருமேனி நிறுவப்பட்டுள்ளது. கருவறையின் தரையும் சுவர்களும் வெறுமையாக உள்ளன. கூரைப் பகுதி மூடப்பட்டுள்ளது. திருநிலைக்கால்களும் கீழ், மேல் நிலைகளும் கொண் டமைந்துள்ள. கருவறையின் வாயில் 1.97மீ. உயரமும் 99செ.மீ அகலமும் கொண்டமைந் துள்ளது.

கருவறையைச் சுற்றிலுமாய் 90செ.மீ. அகலத்தில் அமைந்துள்ள சாந்தார வழி தற்போது பயன்பாட்டில் இல்லை. இதுபோல் அமையும் சாந்தாரக் கருவறை காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலிலேயே முதல்முதலாகக் காணப்படுகிறது. கருவறையின் அகச்சுவரும், புறச்சுவரும் மேலே பலகைக் கற்களால் மூடப்பட்டு அதன்மேல் விமானத்தின் இரண்டாம் தளம் எழும் நிலையைக் கயிலாசநாதர் கோயிலில் பார்க்கலாம். இங்கும் அதே முறை பின்பற்றப்பட்டுள்ளது. இத்தகு விமானங்களைச் சாந்தார விமானம் என்றழைப்பர். பின்னாளில்

இதே முறையைப் பின்பற்றித்தான் முதலாம் இராசராசர் தஞ்சாவூரில் இராஜராஜீசுவரத்தை எழுப்பினார் என்பது இங்கு அறியத்தக்கது. அவ்விதத்தில் பகைவிடை ஈசுவரத்தின் விமான ஆதிதளக் கட்டுமானம் கயிலாசநாதர் கோயிலுக்கும் இராஜராஜீசுவரத்திற்கும் இடைப்பட்ட மைல் கல்லாய் மிளிர்கிறது.[7]

ஆ. முகமண்டபம்

விமான ஆதிதளத்திற்குக் கிழக்கில் அதையொட்டி, அதன் தொடர்ச்சியாய் முகமண்டபம் அமைந்துள்ளது. ஆதிதளம் போன்ற அதே கட்டுமானத்துடன் பத்திப்பிரிப்புகள் கொண்டு கட்டப்பட்டுள்ள இம்மண்டபத்தின் சுவர்களும் தூண்களும் திருப்பணிகளுக்காளாகியிருப்பது தெளிவாய்த் தெரிகிறது. திருப்பணியின் காலத்தை அறியமுடியவில்லை. தூண்கள் பல இடங்களில் சிதைந்துள்ளன. முகமண்டபக் கூரையின் மேற்பகுதி வெறுமையாக உள்ளது.

மகாமண்டபத்திற்கும் கருவறைக்கும் இடைப்பட்ட பகுதியாக அமைந்திருக்கும் இம்முகமண்டபத்தின் உட்புறத்தே பக்கத்திற்கு இரண்டென நான்கு தூண்கள் உள்ளன. இத்தூண்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அமைப்பிலுள்ளன. ஒரு தூண் நான்கு சதுரங்களும் மூன்று கட்டுகளும் கொண்டமைந்துள்ளது. இத்தூணின் முதல் சதுரம் தரையின் தளவரிசையில் புதைந்துள்ளது. இதன் இரண்டாம் சதுரத்தில் கல்வெட்டொன்று காணப்படுகிறது.[8] இரண்டு தூண்கள் சிம்மபாதத் தூண்களாக உள்ளன. இச்சிம்மங்களின் கீழ்ப்பகுதி தரையின் தளவரிசையில் புதைந்துள்ளது. சிம்மபாதத்தின் மேலே வளரும் தூணுடலில் சதுரமும் கட்டும் காணப்படுகின்றன. வடகிழக்குப் பகுதியிலுள்ள தூண் சதுர

---

7. இது போன்ற சாந்தார விமான அமைப்பு திருவதிகை வீரட்டானத்திலும், உத்தரமேரூர், திருப்பட்டூர்க் கயிலாசநாதர் கோயில்களிலும் காணப்படுகிறது.
8. இக்கல்வெட்டு களஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டதாகும்.

பாதமும் உருளை உடலும் பத்ம கட்டும் கொண்டு கும்பத்துடன் முடிகிறது. இதன் மேல் கண்டம், கட்டு, சதுரம் போதிகையெனத் தனியமைப்பு இணைக்கப்பட்டுள்ளது. சிம்மத்தூண்களும் இதுபோன்றே பாதி பழந்தூணாகவும் மேற்பகுதி பின்னாள் இணைப்பாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. முகமண்டபத்தின் வடபுறம் சிதைந்த மேடையொன்று காணப்படுகிறது.

இத்தூண்களின் மேலமரும் உத்திரம், வாஜனம், வலபி ஆகியவற்றால் மண்டபக் கூரை மூன்று பகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மேற்காக 4.80மீ. நீளமும் தென்வடலாக 3.64மீ. அகலமும் கொண்டமைந்துள்ள இம்மண்டபத்தின் வாயில் கீழ், மேல் நிலைகளும் நிலைக்கால்களும் கொண்டமைந்துள்ளது.

இ. மகாமண்டபம்

முகமண்டபத்தின் முன்னே உள்ள மகாமண்டபம் தென்புறத்தே ஒரு திறப்பும் கிழக்கில் ஒரு திறப்பும் கொண்டுள்ளது. முறையான தாங்குதள அமைப்பின்றி எழுப்பப்பட்டுள்ள இம்மண்டபத்தின் சுவர்கள் அரைத்தூண்களின்றி வெறுமையாக உள்ளன. சுவர்களின் மேலே உத்திரமும் வாஜனமும் மதலைகளால் அணி செய்யப்பெற்ற வலபியும் காட்டப்பட்டுள்ளன. கூடுகளுடன் கூடிய கபோதம் கூரையின் முன்னிழுப்பாய் வளைந்து இறங்குகிறது. கூரைக்கு மேல் எவ்விதக் கட்டுமானமும் இடம்பெறவில்லை. இம்மண்டபத்தின் வடபுற நீட்டலாய் அம்மன் கோயில் அமைந்துள்ளது.

மகாமண்டபத்தின் தென்புற வாயில், முன்னாலொரு மண்டப அமைப்பு கொண்டு விளங்குகிறது. இம்மண்டபத்தை இரண்டு தூண்கள் தாங்குகின்றன. மூன்று சதுரங்களும் இரண்டு கட்டுகளும் கொண்டுள்ள இத்தூண்களின்

கட்டுப்பகுதிகளின் மேலும் கீழும் பத்மகட்டுகள் உள்ளன. சதுரங்களில் அன்னம், கலசம் எனப் பல்வேறு சிற்பங்கள் காணப்படுகின்றன. தூண்களின் போதிகைகள் மதலையும் பூமுனையில் முடியும் நாணுதலும் கொண்டுள்ளன. மேலே உத்திரம், வாஜனம், வலபி, கூரை. கூரையின் முன்னிழுப்பாய் இறங்கும் கபோதம், கொடுங்கையாய் வளைந்து நீளுகிறது. கூரையின் மேலே சிறிய அளவிலான வேதிகை. அதன் இருபுறமும் தென்கிழக்கு மற்றும் தென்மேற்குப் பார்வையாய் இரண்டு நந்திகள்.

மகாமண்டபத்தின் தெற்கு நுழைவாயில், நிலைகளும் நிலைக்கால்களும் பெற்று முறைப்படி அமைந்துள்ளது. நிலைக்கால்களில் காணப்படும் பெரிய அளவிலான நாகபந்தங்கள் இவ்வாயிலும் முன்னுள்ள மண்டபமும் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை என்பதை உறுதி செய்கின்றன.

மகாமண்டபத்தின் கிழக்கு வாயில், தென்வாயிலைவிட அலங்காரமாக அமைந்துள்ளது. வாயில் நிலைக்கால்களின் கீழ்ப்பகுதியில் இருபுறமும் கொடிப்பெண்கள் காட்டப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து மேல்நோக்கிப் பரவும் கொடியின் வளைவுகளில் முருகன், சேவல், காளிங்க நடனம் போன்ற பல்வேறு சிற்றுருவச் சிற்பங்கள் காட்டப் பட்டுள்ளன. நிலைக்கால்களின் விளிம்புகளில் தாமரை யிதழ்கள் ஊர்த்வ பத்மவரியாக அமைய, அதையடுத்து உருளைக்கால்கள் படுக்கைவசத்தில் செதுக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற உருளைக்கால் செதுக்கல்கள் திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயிலில் பல இடங்களில் தூண் அலங்கார மாய்க் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அக்கோயில் வளாகத்திலுள்ள பைரவர் திருமுன், கௌரி தாண்டவர் சபை போன்ற இடங்களில் இத்தகு உருளைக்கால் அமைப்பு சிறப்பிடம் பெற்றுள்ளது.[9] ஏறத்தாழ கி.பி. பதினாறாம்

9. இரா. கலைக்கோவன் - ஓராயிரம் பேருடையான் ஓங்கு கோயிலான், அமுதசுரபி, தீபாவளி மலர், 1990. ப-ள். 125-131.

நூற்றாண்டுக்குப் பிற்பட்ட கலைமுறைமையைச் சேர்ந்த இவ்வலங்கார அமைப்பு கொண்டும், நிலைக்கால்களின் கீழுள்ள நாகபந்தத்தின் அமைப்பு கொண்டும் இம்மண்டபத்தைக் கி.பி. பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட கட்டுமானமாகக் கொள்வது பொருத்தமாகும்.

வாயிலின் மேல்நிலைக்கு மேலே கஜலட்சுமியின் சிற்பம் காணப்படுகிறது. அதன் இருபுறமும் கின்னரர்கள் காட்டப்பட்டுள்ளனர். மேலே கூடுகளோடு கூடிய கபோதம். அதன்மீது பூமிதேசம் காட்டச் சிங்கத்தலைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மகாமண்டபத்தின் தென்புறம், முகமண்டப வாயிலையொட்டி மேடையொன்று காணப்படுகிறது. ஜகதி, கண்டம், கபோதம் என்ற அமைப்பில் துணைத்தளம் கொண்டு நிற்கும் இம்மேடை தற்போது வெறுமையாக உள்ளது. இம்மகாமண்டபத்தின் நடுப்பகுதியில், மூன்று சதுரங்களும் இடையில் கட்டுகளும் கொண்ட நான்கு நெடிய தூண்கள் காணப்படுகின்றன. இத்தூண்களின் மேற்சதுரங்களிலிருந்து எழும் வீரகண்டங்களிலிருந்து கிளைக்கும் பூமுனைப் போதிகைகளின் மதலைகள் உத்திரம் தொடுகின்றன. இந்நான்கு தூண்களுக்கும் இடைப்பட்ட கூரைப்பகுதி தனிப்பட்ட அலங்காரம் பெற்றுள்ளது. வடமுகத்தில், அமர்ந்த சிங்கமும் கிழக்கில், இரு மனிதத் தலைகளும் மேற்கு முகத்தில், லிங்கமும் தெற்கில், இரு மனிதத் தலைகளும் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன. தூண்களின் சதுரபகுதிகளில் பெரும்பாலும் சிற்பங்கள் உள்ளன.

அம்மன் திருமுன்

மகாமண்டபத்தின் வடபுறத்தே அம்மன் திருமுன் அமைந்துள்ளது. முகமண்டபம், கருவறை என்ற அமைப்பிலுள்ள இதன் வாயிற்கால்களிலும் நாகபந்தம் காணப்படுகிறது. நாகபந்தத்தின் மேலே உள்ள விளிம்புகளில் தாமரைவரி செதுக்கப்பட்டுள்ளது.

மகாமண்டபத்தின் தூண்கள், வாயில்கள் மற்றும் சுவர்களில் காணுமிடமெல்லாம் கல்வெட்டுகள் சிதறிக் கிடக்கும் பாங்கும், கட்டட அமைப்புகளில் காணப்படும் மரபு மீறல்களும், மண்டபத்தின் நடுப்பகுதியிலுள்ள நான்கு தூண்களுக்கு இடைப்பட்ட கூரையமைப்பில் காணப்படும் சதுரப்பட்டியும், மலரிதழ்களும், அவற்றின் நடுவிலிருந்து கீழிறங்கும் நீண்ட மலர்மொட்டும் இம்மகாமண்டபம் கட்டப்பட்ட காலத்திற்குப் பிறகும் திருப்பணிகளுக்கு ஆளாகியிருக்கக்கூடுமென்ற எண்ணத்தைத் தோற்று விக்கின்றன.

ஈ. முன்மண்டபம்

கோபுரத்தையடுத்துக் காணப்படும் முன்மண்டபம், மகாமண்டபத்திற்குக் கிழக்கில் அதன் தொடர்ச்சியாக அமைந்துள்ளது. கோபுர வாயிலுக்கும் முன்மண்டபத்திற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் யானைச் சிற்பமொன்று மண்ணில் புதையுண்டு கிடக்கிறது. அதற்கு முன்னால் கொடித்தளம்.

முன்மண்டபத்தில் பலித்தளமும் அதன்முன் பெரிய அளவிலான அமர்ந்த நந்தியும் காணப்படுகின்றன. நந்தியின் முகம் இறைவன் திருமுன் நோக்கி அமைந்துள்ளது. முன்மண்டபம் தென்புறத்திலும் கிழக்கிலும் திறப்பாக விடப்பட்டுள்ளது; வடக்கிலும் மேற்கிலும் சுவரெழுப்பி மூடப்பட்டுள்ளது. மேற்குச் சுவரின் நடுவில் மகா மண்டபத்திற்குள் நுழையும் வாயில் அமைந்துள்ளது.

முன்மண்டபத்தின் வடசுவர் முறையான தாங்குதளமோ அரைத்தூண்களோ இன்றி எழுப்பப்பட்டுள்ளது. சுவரின் மேற்பகுதியில் கூரையுறுப்புகளான உத்திரம், வாஜனம், மலரிதழ்களால் அலங்கரிக்கப்பெற்ற வலபி, கூடுகளோடு கூடிய கபோதம் ஆகியன காணப்படுகின்றன.

நடராசர் திருமுன்

முன்மண்டபத்தின் வடபுறத்தே மேடையெழுப்பி கோயில் வாகனங்களை நிறுத்தியுள்ளனர். இம்மேடையின்

மேற்குக்கோடியில் மகாமண்டப நுழைவாயில் அருகே நடராசருக்கென்று தனியாக ஒரு திருமுன் அமைக்கப் பட்டுள்ளது. இத்திருமுன்னின் மேல், கீழ் நிலைகள் மற்றும் நிலைக்கால்களின் விளிம்புகளில் தாமரைவரி காட்டப்பட் டுள்ளது. நிலைக்கால்களின் கீழே நாகபந்தம். இத்திருமுன் சுவரமைப்பில் மட்டும் நான்கு மெல்லிய அரைத்தூண்கள். அவற்றின் போதிகைகள் தாங்கும் உத்திரத்தின் மேல் வாஜனம், வலபி மற்றும் கபோதம் ஆகிய உறுப்புகள் அமைந்தள்ளன. கூடுகளோடு கூடிய கபோதத்தின் மேல் பூமிதேசம் காட்டுவது போல் சிம்மத் தலைகளை மட்டும் காட்டியுள்ளனர். இது மேற்கு வெளியிலுள்ள முருகன் திருமுன் கட்டுமானத்தை ஒத்துள்ளது. எனவே இவையிரண்டும் ஒரே காலகட்டத்தில் கட்டப்பட்டவையென்று கொள்ளலாம்.

முன்மண்டபத் தூண்கள் இரண்டு வகையாக உள்ளன. மூன்று சதுரங்களும் இரண்டு கட்டுகளும் கொண்டவை ஒரு வகை. இவற்றின் கட்டுகள் எட்டல்லது பதினாறு பட்டைகள் கொண்டுள்ளன. கட்டின் நடுவே குறுக்காக ஒரு பட்டையும் காணப்படுகிறது. கீழ்ச் சதுரங்களின் மேலே நாகபந்தங்கள் காட்டப்பட்டுள்ளன. நடுச்சதுரங்களின் மேலும், கீழும் உருளைக் கால்கள். மேற்சதுரத்தின் மேல் போதிகைகள் கிளைக்கும் வீரகண்டம். இவற்றிலிருந்து வெளிவரும் போதிகைகள் மேல்நோக்கிய மதலையும் கீழ்த்தாழ்ந்த நாணுதலும் கொண்டுள்ளன. நாணுதலின் கீழ்ப்பதக்கத்தில் பூமுனை காட்டப்பட்டுள்ளது. இத்தூண்களின் சதுர முகங்களில் பலவகையான சிற்பங்கள் காணப்படுகின்றன.

சில தூண்கள் சதுர பாதத்துடன் கூடிய உருளைத் தூண்களாக உள்ளன. இவையும் மதலை, நாணுதல்களுடன் கூடிய பூமுனைப் போதிகைகளே கொண்டுள்ளன. கட்டட அமைப்பு கொண்டு இம் முன்மண்டபத்தைப் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட கட்டுமானமாகக் கொள்ளலாம்.

மகாமண்டப வாயிலின் வலப்புறம் உள்ள மேடையில் பெரிய அளவிலான பிள்ளையார் சிற்பம் இருத்தப்

பட்டுள்ளது. வலத்தந்தம் உடைந்துள்ள இப்பெருமானின் துதிக்கை இடம்புரியாக உள்ளது. கருங்கல் தளத்தில் அமர்ந்தவராய்க் கரண்டமகுடத்துடன் காட்சிதரும் இவரின் கைகளில் மோதகங்களும் உடைந்த தந்தமும் காணப் படுகின்றன.

அம்மன் கோயில் விமானம்

மகாமண்டபத்திற்குள் ஒன்றிணைக்கப்பட்ட கட்டு மானமாய் அதனினும் உயரம் குறைந்து காணப்படும் அம்மன் திருமுன் வடசுற்றுவெளியில் அமைந்துள்ளது. ஜகதி, உருள் குமுதம், கம்புகள் மற்றும் பாதங்களோடு கூடிய கண்டம், பட்டிகை என்று இதன் தாங்குதளம் பாதபந்த அமைப்பிலுள்ளது. ஜகதிக்கும் குமுதத்திற்கும் இடையிலொரு கம்பு நுழைக்கப்பட்டள்ளது. ஜகதியின் மேற்பரப்பில் ஊர்த்வ பத்மவரியும் குமுதத்தின் கீழ், மேற்புறங்களில், புறத்திற்கொன்றாக இரு தாமரைவரிகளும் செதுக்கப் பட்டுள்ளன. பட்டிகைக்குக் கீழும் ஒரு தாமரைவரி காட்டப்பட்டுள்ளது.

பட்டிகைக்கும் மேலே உள்ளொட்டியோடும் துணைக்கம்பின் மீது சுவர் எழுகிறது. நான்முக அரைத்தூண் களோடு கூடிய இச்சுவரமைப்பும் தாங்குதளமும் பத்திப் பிரிப்பு கொண்டுள்ளன. சாலைப்பத்தி, கர்ணபத்திகளைவிட சற்றுப் பிதுக்கமாய் அமைந்துள்ளது. சுவரிலுள்ள நான்முக அரைத்தூண்கள் உரிய உறுப்புகள் அனைத்தும் பெற்று, வெட்டு மற்றும் தரங்கப் போதிகைகளுடன் உத்திரம் தாங்குகின்றன. மேலே வாஜனமும், மலரிதழ் அலங்கரிப்பு கொண்ட வலபியும் உள்ளன. கபோதம் கூடுகளுடன், திருப்பங்களில் மகர தலைகளுடன் உள்ளது. கபோதக் கூடுகளில் நந்தி, லிங்க வழிபாடு போன்ற சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன.

பூமிதேசத்திற்கு உள்ளடங்கி வேதிகையும் அதன்மீது திராவிட அமைப்பில் கிரீவமும் மேலே சிகரமும் அமைந்

துள்ளன. எண்பட்டை கிரீவத்தில் நான்கு முதன்மைத் திசைகளிலும் மகாநாசிகைகளும் கோணத்திசைகளில் அல்ப நாசிகைகளும் காட்டப்பட்டுள்ளன. இம்மகாநாசிகைக் கோட்டங்களின் அணைவுத் தூண்கள் நான்முக அரைத்தூண் களாய், அனைத்து உறுப்புகளும் பெற்றமைந்துள்ளன. இவற்றின் போதிகைகள் உத்திரம் தாங்க, மேலே வாஜனமும் வலபியும் கபோதமும் உள்ளன. நாசிகைகளின் தலைப்பில், சிகர இறக்கத்திலிருந்து பிதுக்கமாய்க் கீர்த்திமுகத் தோரணங்கள் காட்டப்பட்டுள்ளன. அல்ப நாசிகைகளும் இதே போன்ற கட்டமைப்புப் பெற்றுள்ளன. நாசிகைகள் எவற்றிலும் சிற்பங்களோ சுதையுருவங்களோ காணப்படவில்லை.

ஆதிதளச் சுவரின் மூன்று பக்கங்களிலும் சாலைப்பத்தியில் கோட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. இவை நான்முக அரைத்தூண்களின் அணைப்பில் அமைந்துள்ளன. தூண்களின் போதிகைகள் தொடும் உத்திரம், கோட்டங்களின் மேல்நிலையாக அமைந்துள்ளது. இதன்மீது வாஜனமும் வலபியும் மகரதோரணமும் இடம்பெற்றுள்ளன. இம்மகர தோரணங்கள் சிற்ப அமைவுகளின்றி உள்ளன.

அம்மன் கோயில் சுவர்களில் காணப்படும் கல்வெட்டுச் சிதறல்கள், முதலாம் இராசராசர் காலத்தே கண்டன் மறவனால் கட்டப்பட்டுப்[10] பின்னாளில் முதலாம் குலோத்துங்கர் காலத்தில் இலங்கேசுவரனால் திருப்பணி செய்யப்பட்ட[11] திருத்தோற்றமுடையார் திருக்கோயிலைச் சேர்ந்தவை. இக்கல்வெட்டுகளின் இருப்பும், கோயிற்கட்டட அமைப்பும், அம்மன் கோயில் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிறகு எழுப்பப்பட்டதை உறுதிசெய்கின்றன.

சிற்பங்கள்

பகைவிட ஈசுவரத்தின் சிற்பங்களுள் பெரும்பான்மை யானவை பழுவேட்டரையர் (முற்சோழர்) காலத்தவை.

10. S.I.I. Vol. XIII, Ins. No. 98.
11. A.R.E. 393 of 1924

அவற்றுள்ளும் குறிப்பிடத்தக்க எழில் வாய்ந்தவை, ஜேஷ்டையின் சிற்பமும் அன்னையர் எழுவர் சிற்பங்களும் தான். இவையனைத்துமே தனிச்சிற்பங்களாக உள்ளன. அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்திலுள்ள கோயில்களிலும் கீழப்பலூர் ஆலந்துறையார் கோயிலிலும் கிடைப்பது போல் இங்குத் திருக்கோயில் கட்டமைப்புடன் பொருந்திய பழஞ்சிற்பங்கள் ஏதும் காணுமாறு இல்லை. மதிற் சுவரிலும் கோபுரவாயிலிலும் காணப்படும் மகரதோரணங் களின் அமைப்பு, அவை இக்கோயிலின் பழங்கட்டுமானத்தில் இடம்பெற்றிருக்கக் கூடுமென்று கருதவைக்கின்றன. பின்னாளைய திருப்பணிகள், இவற்றின் இடப்பெயர்வுக்கும் சிதைவுக்கும் காரணமாகியிருக்கலாம்.

வெளிச்சுற்று மேடைச் சிற்பங்கள்

வெளிச்சுற்று மேடையிலுள்ள சிற்பங்களுள் சில பழுவேட்டரையர் காலத்தவை. சில பிற்சோழர் காலத்தவை. நாகர் வடிவம், சனீசுவரன் சிற்பம் போன்றவை பிற்காலத் தவை.

அ. பழுவேட்டரையர் காலச் சிற்பங்கள்

பழுவேட்டரையர் காலச் சிற்பங்களாக ஜேஷ்டை, ரிஷபாந்திகர், விஷ்ணு, உமாசகிதர் ஆகிய நான்கையும் குறிக்கலாம்.

ஜேஷ்டை

ஜேஷ்டையைத் தொண்டரடிப் பொடியாழ்வார் சேட்டை என்று குறிப்பார்.[12] இலக்குமித் தேவியின் மூத்த உடன் பிறப்பாகக் கருதப்படும் இவரைத் தவ்வை, மாமுகடி என்று திருக்குறள் அழைக்கும்.[13] ஜேஷ்டை வழிபாடு

---

12. நாலாயிர திவ்வியப்பிரபந்தம், திருமாலை, தொண்டரடிப் பொடியாழ்வார், பாசுர எண் 881.

13. மு. வரதராசனார் (உரையாசிரியர்), திருக்குறள், (சென்னை, கழக வெளியீடு, 1981), 167, 617.

தமிழ்நாட்டில் பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் செழித்திருந்தமைக்குப் பல சான்றுகள் உள்ளன. முதல்முதலாக ஜேஷ்டைதேவியின் திருவடிவத்தைக் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலின் வடபுறச் சுவரில்தான் பார்க்கிறோம். முற்சோழர் காலத்தில் ஜேஷ்டைக்குத் தனித்திருமுன் அமைத்து வழிபட்டமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.[14] பொதுவாக ஜேஷ்டையின் சிற்பம் தனியாகக் காட்டப்படுவதில்லை. மகன், மகள் ஆகியோருடன்தான் அம்மை காட்சிதருகிறார். இங்கும் இதுபோலவே கருங்கல் தளமொன்றின்மீது அமர்ந்த கோலத்தில் ஜேஷ்டை நடுவிருக்க, அவரின் இருபுறத்தும் அவரது மகனான நந்திகேசுவரனும் மகள் அக்னிமாதாவும் காட்டப் பட்டுள்ளனர்.

மேடையில் நடுநாயகமாக எளிதாக அமர்ந்த திருக்கோலத்தில் அம்மையின் வடிவம் பெரிதாகக் காட்டப்பட்டுள்ளது. இடையில் கனத்த பட்டாடை அதன் மடிப்புகள் கணுக்கால்வரை பரவியுள்ளன. இடுப்புக்கு மேல் ஆடையின்றிக் காணப்படும் அம்மையின் கழுத்தில் மணிகள் பதித்த மாலையொன்றும் முத்துக்கள் கோத்த மாலையொன்றும் காட்டப்பட்டுள்ளன. எழிலுற அமைந் திருக்கும் மார்பகங்களுக்கு இடையில் சுவர்ண வைகாக்ஷம் என்னும் அணிகலன் வீரச்சங்கிலி போல் இரு தோள்களிலிருந்தும் இறங்கி மார்புகளிடையே இணைந்து மீண்டும் பிரிந்து இடைப்பகுதிகளில் சென்று மறையுமாறு காட்டப்பட்டுள்ளது. செவிகளில் வளையக் குண்டலங்கள்; மேற்கைகளில் முகப்புத் தைத்த கங்கணங்கள்; மணிக் கட்டுகளில் அடுக்கிய வளைகள்; தலையில் சுரண்டமகுடம். அதையும் மீறிய சடைப்புரிகள் தலையின் வலப்புறம் வளையத் தொங்கல்களாய்க் காணப்படுகின்றன. அம்மையின் இடக்கை இருக்கையின்மீது கிடத்தப்பட்டுள்ளது. வலக்கையில் நீலோத்பல மலரேந்தியுள்ளார்.

14. S.I.I. Vol. II, Ins. No. 5.

ஜேஷ்டையின் வலப்புறம் நந்திகேசுவரரும் அக்னி மாதாவும் காட்டப்பட்டுள்ளனர். ஜேஷ்டையின் மகனாகக் கருதப்படும் நந்திகேசுவரர் இச்சிற்பத் தொகுப்பில் சுகாசனத்தில் உள்ளார். கரண்டமகுடம் கொண்டுள்ள இவரின் இடக்கை தொடை மீதிருக்க வலக்கையில் தடி கொண்டுள்ளார். அக்னிமாதா உத்குடியாசனத்தில் உள்ளார். அவரது வலக்கையில் நீலோத்பல மலர் காட்டப்பட்டுள்ளது. இடக்கையைத் தளத்தின் மீது இருத்தி, சற்றே வலப்புறம் சாய்ந்தபடி அமர்ந்திருக்கும் அம்மையின் தலையில் கரண்ட மகுடம். ஜேஷ்டைதேவி போல் அல்லாமல் இவரது மார்பகங்களின் மீது கச்சு அணிவிக்கப்பட்டுள்ளது. வலச்செவியில் மகர குண்டலமும் இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் அணிந்து, இடையிலிருந்து கணுக்கால்வரை பட்டாடை விரிய, கைகளில் வளைகளும் மேற்கைகளில் கங்கணங்களும் கொண்டமர்ந்துள்ளார் அக்னிமாதா. மகனும் மகளும் அம்மையின் மேற்கையளவே காட்டப்பட்டுள்ளனர். இது முற்றிலும் ஆகம மரபொட்டி[15] அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜேஷ்டைதேவியின் இடப்புறத்தே கொடித்தண்டொன்று செதுக்கப்பட்டுள்ளது. அம்மையின் இடக்கை அருகிருந்து எழும் இக்கொடித்தண்டின் மேற்பகுதியில் முடிச்சிட்ட இரண்டு துணித்துண்டுகள் கொடிபோல் பறக்குமாறு காட்டப்பட்டுள்ளன. தண்டின் உச்சியில் காகம் காட்டப்பட்டுள்ளது. ஜேஷ்டைதேவியின் கொடி காகக்கொடி என்றும் அவரின் வாகனம் கழுதை என்றும் ஆகமங்கள் குறிக்கின்றன.[16]

ரிஷபாந்திகர்

கவனிப்பற்ற போக்கால் ரிஷபாந்திகர் முகம் பெரிதும் தேய்ந்துபோயுள்ளது. தலையைச் சடைமகுடமும் இடையைச்

---

15. T.A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol. I, Part II, pp:390-400.

16. மேலது, p 394.

சிற்றாடையும் அழகு செய்கின்றன. முன்கைகளில் வலக்கை ஊரு அஸ்தமாய் அமைய, இடக்கை நந்தியின் தலை மீது இருத்தப்பட்டுள்ளது. பின்கைகளில் வலப்புறம் மழு; இடப்புறம் மான். வலப்பாதம் சமத்திலும் இடப்பாதம் அக்ரதல சஞ்சாரத்திலும் உள்ளன. வலச்செவியில் மகர குண்டலமும் இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் அணிந்துள்ள இப்பெருமானின் தோள்களில் ஸ்கந்த மாலை[17] காட்டப்பட்டுள்ளது. பின்னால் நிற்கும் நந்தி, பெருமானின் இடப்புறம் தலையை நீட்டியபடி அமைதியே உருவாய்க் காட்சிதருகிறது.

விஷ்ணு

சமபாதராய் நிற்கும் விஷ்ணுவின் இடையிலிருந்து கணுக்கால்வரை வரிவரியாய்ப் புரளும் பட்டாடை காட்டப் பட்டுள்ளது. தலையில் கிரீடமகுடம்; இரு செவிகளையும் மகர குண்டலங்கள் அணிசெய்கின்றன. பாதங்களில் தாள் செறிகளும் கைகளில் கங்கணங்களும் வளைகளுமிருக்கக் கழுத்தில் மணிமாலைகள். முன்கைகளில் வலக்கை அபயம் காட்ட, இடக்கை ஊரு அஸ்தத்தில் உள்ளது. பின்கைளில் வலப்புறம் சக்கரமும் இடப்புறம் சங்கும் காணப்படுகின்றன. பெருமானின் கையிலுள்ள சக்கரம் குறிப்பிடத்தக்க அமைப்பில் உள்ளது. பொதுவாகப் பல்லவர் சிற்பங்களிலும் முற்சோழர் சிற்பங்களிலும் பெருமாள் மற்றும் கொற்றவை கைச்சக்கரங்கள் வட்டமாக இல்லாது செவ்வகத்தைக் கோணவாக்கில் நிறுத்தினாற்போல் காட்டப்பட்டிருக்கும். காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலின் வடசுவரில் உள்ள கொற்றவை, திருக்கழுக்குன்றம் கீழ்க்கோயில் வளாகத்தில் உள்ள முதலாம் ஆதித்தர் காலக்கோயில் கொற்றவை, பெருங்குடி பெருமுடியீசுவரத்து கிரீவ மகாநாசிகையிலுள்ள பெருமாள், அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்து வடவாயில் ஸ்ரீகோயிலின் மேற்கு மகாநாசிகையிலுள்ள பெருமாள் ஆகிய

17. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப. 94.

திருமேனிகளின் இடப் பின்கைகளில் உள்ள சக்கர அமைப்புப் பகைவிடை ஈசுவரத்துப் பெருமாள் கைச்சக்கர அமைப்பை அப்படியே ஒத்துள்ளது. முகத்தோற்றமும் கனத்த ஆடையும் நீண்ட மகுடமும் அளவான அணிகலன்களும் சக்கர அமைப்பும் இப்பெருமாளைப் பழுவேட்டரையர் காலச் சிற்பமாய் உறுதி செய்கின்றன.

உமாசகிதர்

உமாவும் சிவபெருமானுமாய் அமர்ந்திருக்கும் சிற்பமொன்றும் இங்குக் காணப்படுகிறது. இதில் சிவபெருமான் சுகாசனத்திலும், உமா உத்குடியாசனத்திலும் உள்ளனர். சிவபெருமானின் முன்கைகளுள் வலக்கை அபயத்திலும் இடக்கை தொடை மீதும் இருக்கப் பின்கைகள் பரசுவும் மானும் கொண்டுள்ளன. சடைமகுடராய்ச் சிற்றாடை அணிந்து உரிய எளிய அணிகலன்களோடு காட்சிதரும் சிவபெருமானின் அருகே அதுபோலவே எளிய அணிகலன் களுடன் உமையன்னை வலக்கையில் மலரேந்தி இடக்கையைத் தொடை மீதிருத்தி அமர்ந்துள்ளார். இவர்கள் அமர்ந்துள்ள மேடை, ஜகதி, கண்டம், மகாவாஜனம் என்ற அமைப்பிலான துணைத்தளமாய்க் காட்டப்பட்டுள்ளது.

ஆ. பிற்சோழர் காலச் சிற்பங்கள்

பைரவர்

பைரவர் நின்ற கோலத்தில் நிர்வாணியாய்க் காட்சியளிக்கிறார். முன்கைகளில் வலப்புறம் முத்தலை ஈட்டியும் இடப்புறம் தலையோடும் கொண்டுள்ள இவரது பின்கைகளில் பாம்பு சுற்றிய உடுக்கையும் பாசமும் காணப்படுகின்றன. சுடர்முடியும் கோரைப்பற்களும் உக்கிரப்பார்வையும் கொண்டிலங்கும் இப்பெருமானின் வலச்செவியை மகர குண்டலமும் இடச்செவியைப் பனை யோலைக் குண்டலமும் அழகுசெய்கின்றன. கழுத்திலிருந்து கணுக்கால்வரை தலையோட்டு மாலையொன்று தழைந்துத்

தொங்குகிறது. பைரவருக்குப் பின்னால் கழுத்தில் மணிச்சரமணிந்த அவரது வாகனமான நாய் காட்டப் பட்டுள்ளது. தோற்றம், முக அமைப்பு, அணிகலன்கள் கொண்டு இச்சிற்பத்தைப் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகக் கொள்ளலாம். இதுபோன்ற பிற்சோழர் கால பைரவர் சிற்பங்கள் பிற பழுவூர்க் கோயில்களிலும் இடம்பெற்றுள்ளன.

ஜமதக்னி

கிழக்குத் திருச்சுற்றின் தென்புறத்தே கோபுர வாயிலையொட்டிய மாளிகைப்பத்தி மேடையில், ஜமதக்னி[18] முனிவரின் சிற்பம் காணப்படுகிறது. சுகாசனத்தில் அமைந்துள்ள முனிவரின் வலக்கை அபயக் குறிப்பு காட்ட, இடக்கை தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. சுடர்முடிய மைப்பில்[19] தலைமுடி காட்டப்பட்டுள்ளது. இது போன்ற முடியமைப்பு பைரவர், சாமுண்டி, காளி போன்ற உக்கிரமான

---

18. T.A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol. II Part II, pp. 567-568.

19. சுடர்முடி, தலையின் பின்புறத்தில் கேசத்தைச் தீச்சுடர்போல் அடுக்கடுக்காய் மேல்நோக்கி ஒரு சீராய் அமைக்கப்படும் தலைக்கோலமாகும். இஃது அரசிலைத் தோற்றத்தை ஒத்ததாய் அமைந்திருக்கும். மேலும், இது தலைக்கு இரு மருங்கிலும், தலைக்கு மேலும் தெரியும் வண்ணம் அமைக்கப்படும். இவ்வகைத் தலைக்கோல அமைப்பிற்கு அக்னி கேசம் என்றும் பெயர் உண்டு.

    இத்தலைக் கோலத்தில் நெற்றிப்பக்கத்தில் மணிவடங்கள் வட்டவட்டமாய்த் தலையைச் சுற்றியமையும். மணிவடங்களுக்கு மாறாகப் பட்டினால் ஆன நாடாவை வட்ட வட்டமாகத் தலையைச் சுற்றி அமைத்துக் காட்டுவதும் உண்டு. இதனைப் பூக்களால் ஆன சரத்தால் புனைவதும் உண்டு. இத்தகு அமைப்பு, தலையின் பின்புறத்தையும் விரிந்த சடையினையும் இணைத்து அத்தலைக் கோலத்திற்குப் பொலிவூட்டும். - வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், ப.82.

தெய்வங்களுக்கு மட்டுமே காட்டப்படும். ஜமதக்னி முனிவர் சினம் மிகுந்தவர் என்பதைக் காட்ட இம்முடியமைப்பைச் சிற்பிகள் பயன்படுத்தியுள்ளனரோ என்று கருதவேண்டியுள்ளது. மீசையும் தாடியும் கொண்டு இடையில் சிற்றாடையுடன் காட்சிதரும் ஜமதக்னி முனிவரின் பின்னே திருவாசி காட்டப்பட்டுள்ளது. இத்திருவாசி அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்து வடவாயில் ஸ்ரீகோயில் கிழக்குக் கோட்ட முருகனுக்குப் பின்னால் காணப்படும் திருவாசியினின்று பெரிதும் வேறுபட்டுள்ளது. பிற்சோழர் கலைத்தன்மையுடன் காணப்படும் இச்சிற்பம் பழுவூரில் இருந்து அழிந்த குலோத்துங்க சோழ ஈசுவரத்திற்கு உரியதாகலாம்.

இ. பிற்காலச் சிற்பங்கள்

சனீசுவரர்

சிறிய வடிவிலான சனீசுவரன் சிற்பமொன்று இங்குள்ளது. பொதுவாக சனீசுவரன் சிற்பங்கள் நவக்கிரக அமைப்பின் ஓரங்கமாய்க் காணப்படும். இங்குத் தனித்துக் காட்டப்பட்டிருப்பது சிறப்புக்குரியதாகும். கரண்ட மகுடம் அணிந்து வலப் பின்கையில் மலரும் இடப் பின்கையில் வில்லும் கொண்டு நிற்கும் சனீசுவரரின் வல முன்கையில் முத்தலை ஈட்டி உள்ளது. இட முன்கை வரதமாய் அருள் காட்டுகிறது. இவருக்குப் பின்னால் இவரது வாகனமான காக்கையின் வடிவம் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் தோற்ற அமைதி கொண்டு இதைப் பதினேழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட சிற்பமாகக் கொள்ளலாம்.

சுற்றாலைத் திருமுன்களின் சிற்பங்கள்

அ. அன்னையர் எழுவர் திருமுன் சிற்பங்கள்

இத்திருமுன்னில் வீரபத்திரர், அன்னையர் எழுவர், பிள்ளையார் என அமைந்த[20] சிற்பத் தொகுதியுடன்

---

20. T.A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol.I, Part II, p. 388.

சிவபெருமானின் ஊர்த்வதாண்டவக் கோலமும் காணப்படுகிறது.[21] இச்சிற்பம் திருமுன்னின் கிழக்குச் சுவர் அருகே மேற்குப் பார்வையாக நிறுத்தப்பட்டுள்ளது. சிற்பத்தின் அமைவு, ஆடையணிகலன்கள், திருத்தோற்றம் ஆகியவை கொண்டு இதைப் பிற்சோழர் காலத்துச் சிற்பமாகக் கொள்ளலாம். இது தவிர்த்த ஏனைய சிற்பங்கள் அனைத்தும் முற்சோழர் காலத்தவை. இவற்றுள் பிள்ளையார் தவிர ஏனைய அனைத்தும் தென்சுவர் அருகே வடபார்வையாக சுகாசனத்தில் அமர்ந்துள்ளன. பிள்ளையார் சிற்பம் மேற்குச் சுவர் அருகே, கிழக்குப் பார்வயையாக இருத்தப்பட்டுள்ளது.

ஊர்த்வதாண்டவச் சிற்பம்

கற்பலகையொன்றில் செதுக்கப்பட்டிருக்கும் ஊர்த்வதாண்டவரின் சிற்பம் அன்னையர் எழுவர் திருமுன்னின் கிழக்குச் சுவர்மீது மேற்குப் பார்வையாகச் சாய்த்து வைக்கப்பட்டுள்ளது. இதில் சிவபெருமான் தம் வலக்காலை வலத்தோளின் முன்புறமாய்த் தலைக்குச் சற்று மேலாக நீளும்படி உயர்த்தியுள்ளார். மண்டல நிலையில் உள்ள இடக்கால் கீழே குப்புறப் படுத்திருக்கும் முயலகனின் முதுகின் மீது ஊன்றியுள்ளது. முயலகனின் கையில் பாம்பு; சடைகளை முடிந்து மகுடமாய்ச் சுற்றி முகப்புகள் பொருத்தியிருக்கும் சிவபெருமானின் தலைக்கு மேல் குடை காட்டப்பட்டுள்ளது. இடச்செவியில் பனையோலைக் குண்டலம். வலச்செவி நீள்செவியாய்க் குண்டலமின்றிக் காட்டப்பட்டுள்ளது. இடுப்பில் மடித்துக் கட்டிய

---

21. சிவபெருமானின் ஊர்த்வதாண்டவச் சிற்பங்களைப் பல்லவர் கோயில்களிலேயே பார்க்கமுடிகிறது. முதற் குலோத்துங்கர் காலத்தில் ஊர்த்வ தாண்டவரைத் தேவகோட்டத்திலேயே இடம்பெறச் செய்தமைக்குச் சிந்தாமணி அகரத்திலுள்ள குலோத்துங்க சோழீசுவரம் சிறந்த எடுத்துக்காட்டாகும்

சிற்றாடையின் முடிச்சுகள், பக்கவாட்டிலும் கால்களுக்கு நடுவிலுமாய் அலைபாய்வது போல் காட்டப்பட்டுள்ளன. கைகளுள் வல முன்கை, உயர்த்தப்பட்டிருக்கும் வலக்காலுக்குப் பின்புறம் அபயம் காட்ட, இட முன்கை மேலே உயர்ந்து மகுடத்தருகே மேல்நோக்கிய பதாகமாய் அமைந்துள்ளது. பின்கைகளில் வலப்புறம் துடியும் இடப்புறம் பாம்பும் காட்டப்பட்டுள்ளன. கங்கணங்கள், வளைகள், கழுத்தணிகள், தாள்செறி, முப்புரிநூல் என அனைத்தும் பெற்றுள்ள இப்பெருமானின் முகம் கவனிப்பற்ற போக்கால் சிதைந்துள்ளது.

வீரபத்திரர்

தென்சுவரொட்டிக் காணப்படும் சிற்பத்தொகுதியில் வீரபத்திரர் சிற்பமே முதலாவதாக அமைந்துள்ளது. கருங்கல் தளமொன்றில் சுகாசனத்தில் அமர்ந்துள்ள இப்பெருமானின் வல முன்கை அபயம் காட்ட, இட முன்கை ஆகூய வரதமாய் இடத்தொடை மேல் அமர்ந்துள்ளது. பின்கைகளில் வலப்புறம் சிறியதொரு முத்தலை ஈட்டி; இடப்புறம் அக்கமாலை. வலச்செவியில் பனையோலைக் குண்டலமும் இடச்செவியில் மகர குண்டலமும் பூண்டவராய்ச் சடைகளை மகுடமாய் முடிந்து இடுப்பில் சிற்றாடையுடன் காணப்படும் இப்பெரு மானையடுத்து அன்னையர் எழுவர் அமர்ந்துள்ளனர்.

அன்னையர் எழுவர்

வீரபத்திரரை அடுத்துக் காணப்படும் அன்னையர் எழுவரும் தனித்தனித் தளங்களின் மீது சுகாசனத்தில் அமர்ந்துள்ளனர். இவர்தம் இடக்கால் தளத்தின் மீதிருக்க வலக்கால் கீழே இறக்கப்பட்டுள்ளது. இவ்வலக்காலை இருத்தக் கருங்கல் தளத்தின் கீழ்ப்பகுதியில் தாங்கலொன்று காட்டப்பட்டுள்ளது. இது போன்ற தாங்கல்கள் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்து அன்னையர் சிற்பங்களுக்கும் காட்டப்பட்டிருப்பது இங்கு நினைக்கத்

தகுந்தது. வடவாயில் ஸ்ரீகோயில் தேவகோட்டச் சிற்பங்களுக்கும் இது போன்ற தாங்கல்கள் காட்டப் பட்டுள்ளன.

மேற்கைகளில் கங்கணங்களும் மணிக்கட்டுகளில் வளைகளும் செவிகளில் குண்டலங்களும் கழுத்தில் கண்டிகை, சரப்பளி போன்ற கழுத்தணிகளும் பாதங்களில் தாள்செறியும் அணிந்துள்ள இவ்வம்மையருள் சாமுண்டி தவிர ஏனையர் அனைவருமே மார்பகங்களைக் கச்சொன்றால் மறைத்துள்ளனர். இவர்தம் வலக்கைகள் அபயத்திலிருக்க, இடக்கைகள் தொடை மீது கடகமாய் இருத்தப்பட்டுள்ளன. பின்கைகளில் அவரவர்க்குரிய கருவிகள் கொண்டுள்ள இவர்தம் இடைப்பகுதியில், சாமுண்டி தவிர்த்த ஏனைய அனைவர்க்கும் பட்டாடை காட்டப்பட்டுள்ளது. கணுக்கால் வரை நீண்டுள்ள இவ்வாடை பல மடிப்புகளுடன் அமைந்துள்ளது.

முதலில் அமர்ந்துள்ள பிரம்மியின் பின்கைகளில் வலப்புறம் அக்கமாலையும் இடப்புறம் குண்டிகையும் உள்ளன. சடைகளையே முடிந்து மகுடமாக்கியுள்ள இவ்வம்மை மூன்று முகங்களுடன், செவிகளில் பூட்டுக் குண்டலங்கள் அணிந்து காட்சி தருகிறார். அடுத்துள்ள மயேசுவரி சடை மகுடத்துடன், செவிகளில் மகர குண்டலங்கள் விளங்கப் பின்கைகளில் சக்தியும் மானும் கொண்டு முப்புரிநூல் விளங்க அமர்ந்துள்ளார். கௌமாரியின் செவிகளில் பனையோலைக் குண்டலங்கள்; தலையில் கரண்டமகுடம்; நெற்றியில் சென்னி; மார்பில் சுவர்ண வைகாக்ஷம். பின்கைகளில் சூலமணியும் சக்தியும். இந்தச் சூலமணி அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்து கௌமாரியின் கைகளிலும் காணப்படுவது இங்கே எண்ணத்தக்கது.

அடுத்துள்ள வைணவி கிரீடமகுடத்துடன் பின்கை களில் சக்கரமும் சங்கும் கொண்டு செவிகளில் மகர குண்டலங்களுடன் வீற்றிருக்க அவருக்குப் பக்கத்திலுள்ள

வராகி, பின்கைகளில் பாசமும் கலப்பையும் ஏந்திக் கிரீட மகுடமும் குண்டலங்களற்ற சிறு செவிகளுமாய் அமர்ந்துள்ளார். வராகியை அடுத்து இந்திராணி காணப்படுகிறார். கிரீடமகுடம் அணிந்துள்ள இவரது செவிகளை வளையக் குண்டலங்கள் அலங்கரிக்கின்றன. பின்கைகளில் வஜ்ரமும் அங்குசமும் ஏந்தியுள்ளார்.

இறுதியாகச் சாமுண்டிதேவி சடைமுடிகளை சடைபார அமைப்பில் விரித்துப்போட்டபடி அச்சுறுத்தும் கோலத்தில் காட்சிதருகிறார். இம்முடிபாரத்தின் முகப்பில் மண்டையோடு பொருத்தப்பட்டுள்ளது. அதன் இருபுறமும் படமெடுக்கும் பாம்புகள். நீளத்தொங்கும் வலச்செவியில் பிணக்குண்டலம். இடச்செவியில் அன்னக் குண்டலம். கச்சற்ற மார்புகளைச் சுற்றிப் பின்னிய நிலையிலொரு பாம்பு. மார்பில் இடப்புறமிருந்து வலப்புறமாக தலைகள் கோத்த முப்புரிநூல். கழுத்தில் எலும்புகள் கோத்த மணிமாலை. இடுப்பில் சிற்றாடை. பிதுங்கிய உதடுகளின் கடையோரத்தே கோரைப்பற்கள். பின்கைகளில் வலப்புறம் முத்தலை ஈட்டி; இடப்புறம் தலையோடு.

இவ்வம்மையின் தோற்றம், பலநிலைகளில் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்திலுள்ள சாமுண்டியை ஒத்திருப்பது இங்குக் கருதத்தக்கது. தோற்ற அமைப்பு, அணிகலன்கள், கருவிகள் கொண்டு இவ்வன்னையர் எழுவரையும் அவருடன் அமர்ந்துள்ள சிவபெருமானையும் பழுவேட்டரையர் காலச் சிற்பங்களாகக் கொள்ளலாம்.

பிள்ளையார்

இத்திருமுன்னின் மேற்கில் அமர்ந்துள்ள பிள்ளையார் பிற்காலச் சிற்பமாகும். அன்னையர் எழுவர் தொகுதியுடன் சேர்ந்த பிள்ளையார் சிற்பத்தை இவ்வளாகத்தில் காணமுடியவில்லை.

ஆ. பிள்ளையார் திருமுன்னிலுள்ள பிள்ளையார் சிற்பம்

தாமரைத் தளத்தில் பெரிய வடிவினராய் லளிதாசனத்தில் அமர்ந்திருக்கும் பிள்ளையார் பாம்பையே முப்புரிநூலாய்க் கொண்டுள்ளார். இவரது பின்கைகளில் பரசும் இடப்புறம் மலரும் உள்ளன. முன்கைகளில் வலப்புறம் தந்தமும் இடப்புறம் மோதகமும் கொண்டுள்ளார். இவரது தந்தங்களில் வலத்தந்தம் உடைந்துள்ளது. இடம்புரியாய்க் காட்டப்பட்டுள்ள துதிக்கையிலும் மோதகம். இவர் தலையில் அணிந்துள்ள கரண்டமகுடத்தின் முகப்பில் தோரண அலங்காரம் காட்டப்பட்டுள்ளது. கழுத்தில் சிறு மணிகள் பதித்த கண்டிகை. மேற்கைகளில் கங்கணங்கள் அணிந்து காணப்படும் பிள்ளையாரின் இச்சிற்பம் முற்சோழர் காலத்ததாகும்.

இ. முருகன்

சுற்றுவெளியின் மேற்கில் அமைந்துள்ள முருகன் திருமுன்னில் முருகப்பெருமான் தம் தேவியருடன் நின்ற கோலத்தில் காட்சிதருகிறார். சமபாதராய், வல முன்கையை அபயக் குறிப்பில் இருத்தி, இட முன்கையை ஊரு அஸ்தத்தில் வைத்திருக்கும் பெருமானின் பின்கைகளில் வலப்புறம் வஜ்ரம்; இடப்புறம் சேவல்.[22] முருகனின் தலையைக் கரண்ட

---

22. காலத்தால் முற்பட்ட முருகன் சிற்பங்களில் பின்கைகளில் பொதுவாக வஜ்ரமும் சக்தியுமே காணப்படும். கீழையூர் அவனிகந்தர்ப்ப ஈசுவரகிருக வளாகத்திலுள்ள முருகப்பெருமானின் திருக்கைகளுள் ஒன்றில் வஜ்ரத்திற்குப் பதிலாகச் சூலமணி காட்டியுள்ளமை தனித்துவம் வாய்ந்தது. பகைவிடை ஈசுவரத்திலும் அதுபோல வழக்கத்திற்கு மாறாக முருகனின் கைகளில் சேவல் காட்டப்பட்டிருப்பது சிறப்புக்குரியதாகிறது. பழுவேட்டரையர் காலச் சிற்பமாகக் கொள்ளத்தக்க இம்முருகனின் கையில் இடம்பெற்றிருக்கும் சேவல் இதே காலகட்டத்தைச் சேர்ந்த பிற சிற்பங்களில் இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது. முதலாம் இராசேந்திர சோழர் காலச் செப்புத் திருமேனியாகக் கொள்ளப்படும் கங்கை கொண்ட சோழீசுவரத்து முருகப் படிமம் ஒன்றின் பின்கைகளிலும் இதுபோல் சேவல் இடம்பெற்றிருப்பது, இம்மரபு பின்னாளில் சில இடங்களிலேனும் பின்பற்றப் பட்டமைக்குச் சான்றாகும்.

மகுடமும் செவிகளைப் பனையோலைக் குண்டலங்களும் மேற்கைகளைக் கங்கணங்களும் மணிக்கட்டுகளை வளைகளும் அலங்கரிக்கின்றன. இவை தவிர, கழுத்தணிகள், தாள்செறிகள், ஸ்கந்தமாலை போன்றவையும் காணப் படுகின்றன. நெற்றியில் சென்னியும் மார்பில் சன்னவீரமும் கொண்டுள்ள பெருமானின் வலப்புறம் தெய்வானையும் இடப்புறம் வள்ளியும் காட்டப்பட்டுள்ளனர். இவ்விருவரும் ஒரு கையில் மலரேந்தி மறுகையை டோல அஸ்தமாய் நெகிழ்த்தியுள்ளனர்.

ஈ. சண்டேசுவரர்

சுற்றுவெளியின் வடபுறத்தே மையக் கோயிலை யொட்டி அமைந்திருக்கும் திருமுன்னில் கருங்கல் தளமொன்றின் மீது பழுவேட்டரையர் காலச் சண்டேசுவரர் சிற்பம் சுகாசனக் கோலத்தில் காணப்படுகிறது. மடக்கி உயர்த்திய வலக்கையில் மழு; இடக்கை இடக்கால் மீது இருத்தப்பட்டுள்ளது. தலைமுடியமைப்பு சடை மண்டலமாய் அழகுபடுத்தப்பட்டுள்ளது. செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். கழுத்தில் கண்டிகை; முப்புரிநூலும் உதரபந்தமும் உரிய இடங்களில் இருக்க, இடையில் சிற்றாடையுடன் காணப்படும் இவரது தோற்றம் பெருமளவு கீழையூர் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்துச் சண்டேசுவரரை ஒத்துள்ளமை இங்கு நினைக்கத்தக்கது.

இக்கோயிலில் இருந்த சுற்றாலைக் கோயில்களுள் இன்று காணக்கிடப்பவை அன்னையர் எழுவர், பிள்ளையார், முருகன், சண்டேசுவரர் ஆகிய தெய்வங்களுடன் அமைந்திருக்கும் நான்கு திருமுன்கள்தா்ன். ஏனைய சந்திரன், சூரியன், ஜேஷ்டை, பைரவர் ஆகிய பரிவாரத் தெய்வங்களுக்கா்ன திருமுன்களை இன்று இவ்வளாகத்தில் காணமுடியவில்லை. ஆனால் எழிலார்ந்த பழுவேட்டரையர் கால ஜேஷ்டையின் சிற்பம் இக்கோயிலின் கிழக்கு மாளிகைப்பத்தியில் காணப்படுகிறது. இங்குள்ள சந்திரன்

மற்றும் பைரவர் வடிவங்கள் முற்சோழர் காலத்தனவல்ல வெனினும், அவற்றைப் பிற்காலத்தே இங்கிருத்தப்பட்ட பரிவாரக் கோயில் தெய்வங்களாகக் கொள்ளலாம். பழுவேட்டரையர் காலத்துப் படிமங்கள் சிதைந்ததன் விளைவாக இப்படிமங்கள் அக்கோயில்களில் இருத்தப்பட்டிருக்கலாம். இவ்விரண்டனுள் பைரவர் வடிவம் பிற்சோழர் காலத்தது.

தனிச்சிற்பங்கள்

அ. அய்யனார்

தென்சுற்றில் தனித்துக் காணப்படும் அய்யனார் சிற்பம் சோழர் காலச் சிற்பமாகும். உத்குடியாசனத்தில், வலக்கையைத் தளத்தின் மீதிருத்தி, இடக்கையை உயர்த்தப்பட்ட முழங்கால்மீது அமர்த்தி இடையில் சிற்றாடையுடன் அணிமணிகள் அதிகமின்றிக் காட்சியளிக்கும் இச்சிற்பத்தின் மார்புக்கு மேற்பட்ட பகுதி சிதைக்கப்பட்டுள்ளது.

ஆ. பிட்சாடனர்

தென்சுற்றில் மகாமண்டபத் தென்வாயில் அருகே சாய்த்து வைக்கப்பட்ட நிலையில் காணப்படும் பிட்சாடனர் சிற்பம் முற்சோழர் சிற்பமாகும். பின்கைகளில் கவரியும் உடுக்கையுமிருக்க வல முன்கையில் பாம்பைப் பிடித்தபடி இட முன்கையால் மானுக்குப் புல் தந்தபடி நடைபயிலும் கோலத்தில் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. கால்களில் மிதியடிகள். அரையில் சிற்றாடை. அதன்மீது அரைப் பட்டிகையாய்ப் பாம்பு பின்னிக்கொண்டுள்ளது. சடையை மகுடமாய் முடிந்துள்ளவரின் செவிகளில் பனையோலைக் குண்டலங்கள்; தலைமுகப்பிலோ மண்டையோடு; மேற்கைகளில் நாக கங்கணங்கள்.

பிட்சாடனரின் வலப்புறம் குள்ளச் சிறுபூதம் ஒன்று செவிகளில் பனையோலைக் குண்டலங்களுடன் சடைக் கற்றைகள் புரிகளாய்த் தோள்களில் புரள, இடக்கையிலுள்ள

சிரட்டைக் கின்னரியை வலக்கைக் குச்சியொன்றால் இயக்கிய வண்ணம் தன் தலைவரின் அடியொட்டி நடப்பது போன்ற மெய்ப்பாட்டில் நிற்கிறது.

வாயிற்காப்போர்

கோபுரத்தின் இருபுறமும் காணப்படும் வாயிற்காப்போர் சடைகளை முடிந்து மகுடமாக்கிச் செவிகளில் பனையோலைக் குண்டலங்களும் பூட்டுக் குண்டலமுமாய்க் கைகளில் மேற்புறம் கங்கணங்களும் கீழ்ப்புறம் வளைகளும் அணிந்து காவல் செய்கின்றனர். இருவருக்குமே இடையில் மடித்துக் கட்டிய சிற்றாடை; கணுக்கால்களில் சதங்கைகள் கோத்த சிலம்பு; கழுத்தில் பட்டையான அணிகலன். இருவரில் தென்புறத்தார் மரமொன்றையே பிடுங்கிக் கருவியாகக் கொண்டுள்ளார். அம்மரத்தின் மீது வலக்கையைத் தாங்கலாய் நிறுத்திச் சாய்ந்துள்ள இவரது இடக்கை தர்ஜனியில் உள்ளது. வடபுறத்தார் மழு கொண்டுள்ளார். இடக்காலும் வலக்கையும் மழுவைத் தாங்கலாய்க் கொள்ள இவரது இடக்கை விஸ்மயமாய் உள்ளது.

எழிலார்ந்த முற்சோழர் சிற்பங்களான இவையிரண்டும் கவனிப்பற்ற போக்கால் பெரிதும் பாழ்பட்டுள்ளன.

ஆலந்துறையார் கோயில்

கீழப்பழுவூரிலிருந்து தஞ்சாவூர் செல்லும் சாலையில் வலப்புறத்தே சற்று உள்ளடங்கிய நிலையில் அமைந்துள்ளது திருவாலந்துறையார் திருக்கோயில். இக்கோயில் வளாகத்தின் முன்னால் வடபுறத்தே கோயில் அலுவலகக் கட்டடமும் தென்புறத்தே மண்ணில் புதையுண்ட நிலையிலான சிறிய கோயிலொன்றும் காணப்படுகின்றன. அலுவலகக் கட்டடச் சுவர்களில் சிதைந்த, தொடர்பற்ற நிலையிலான கல்வெட்டுச் சிதறல்கள் காணப்படுகின்றன. இவை அக்காலத்தே இப்பகுதியிலிருந்த ஸ்ரீகண்ட ஈசுவரம் என்னும் பள்ளிப்படைக் கோயிலைச் சுட்டுகின்றன.[1]

வளாகத்தின் தென்புறத்தே, தாங்குதளம் வரை மண்ணில் புதையுண்ட நிலையில் சிறிய கோயிலொன்று கருவறை, முகமண்டபமென்ற அமைப்பில் காணப்படுகிறது. மணிசுவரர் கோயிலென அழைக்கப்படும் இக்கோயிலின் கருவறை, முகமண்டபம் ஆகிய இரண்டும் சுவர்ப்பகுதியிலிருந்துதான் வெளித்தெரிகின்றன. சுவரின் திருப்பங்களில் நான்முக அரைத்தூண்கள், பத்மகட்டு முதல் போதிகை வரையிலான அனைத்து உறுப்புகளும் பெற்று உத்திரம் தாங்க, மேலே வாஜனம், வலபி, கபோதம் ஆகிய உறுப்புகள் முறைப்படி அமைந்துள்ளன. கபோதக்கூடுகளில் லிங்கம் காட்டப்பட்டுள்ளது. கூரைக்கு மேலே வேதிகை மட்டுமிருக்க ஏனைய விமான மேலுறுப்புகள் காணுமாறு இல்லை. முகமண்டபத்தினுள் கிழக்குப் பார்வையாக அம்மன் திருமேனி ஒன்றும் பிள்ளையார் திருமேனி ஒன்றும் உள்ளன. கருவறையில் லிங்கம் அமைந்துள்ளது. கோயிலின் கட்டட அமைப்பும், உள்ளிருக்கும் அம்மன் திருமேனியும் கொண்டு பார்க்கும்போது இதன் காலத்தைப் பதினேழாம் அல்லது பதினெட்டாம் நூற்றாண்டுத் திருப்பணியாகக் கொள்ளலாம்.

---

1. ஸ்ரீகண்ட ஈசுவரம் என்றழைக்கப்பட்ட இப்பள்ளிப்படையைப் பற்றி சுவடழிந்த கோயில்கள் என்ற தலைப்பின் கீழ் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இக்கோயில் தொடர்பான மற்றொரு கல்வெட்டு பகைவிடை ஈசுவரத்தில் காணக்கிடக்கிறது.

ஆலந்துறையார் கோயில் கோபுரம் இவ்விரண்டு கட்டடங்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் சற்றே பின்தள்ளி அமைந்துள்ளது.

1. கட்டட அமைப்பு

கோபுரம்

சுதையுருவங்கள் நிரம்பிய இம்மூன்று தளக் கோபுரத்திற்குக் கபோதபந்தத் துணைத்தளமும்[2] பாதபந்தத் தாங்குதளமும் கீழ்நிலைகளாக அமைய, அவற்றின் மேல் ஐந்து பத்திகளாகப் பிரிக்கப்பட்ட சுவரமைப்பு எழுகிறது. சுவருக்கும் பாதபந்தத் தாங்குதளத்திற்கும் இடையில் கம்பு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. கர்ணம், பஞ்சரம், சாலை, பஞ்சரம், கர்ணம் என அமைந்துள்ள ஐந்து பத்திப்பிரிப்புகளின்[3] இடைப்பட்ட உள்வாங்கல்களில் கோட்டப் பஞ்சரங்கள்[4] காட்டப்பட்டுள்ளன. சாலைப்பத்தி கோபுர வாயிலாகியுள்ளது. சுவரமைப்பில் விஷ்ணுகாந்த அரைத்தூண்கள், உரிய உறுப்புகள் அனைத்தும் கொண்டு, குளவும் நடுப்பட்டையும் பெற்ற தரங்கப் போதிகைகளால்

---

2. கபோதபந்தத் துணைத்தளம் தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் திருக்கோயிலின் கோபுரங்களில் காணப்படுகிறது. இதற்கு முற்பட்ட காலக் கோபுரங்களில் இதுபோன்ற துணைத்தளம் இடம்பெற்றதா என்பதை அறியக்கூடவில்லை. இவ்வகைத் துணைத்தளம் உபானத்தில் தொடங்கிக் கபோதத்தில் முடிவதாய் அமைக்கப் பட்டுள்ளது.

3. கிழையூர் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்தின் கோபுரத்தில் மூன்று பத்திப்பிரிப்புகளே உள்ளமை இங்கு நினைக்கத்தக்கது. ஆனால் தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் கோபுரங்கள் ஐந்து பத்திப்பிரிப்புகளைக் கொண்டுள்ளன.

4. பத்திப்பிரிப்புகளால் நேரும் உள்வாங்கல்களில் கோட்ட அல்லது கும்பப் பஞ்சரங்களை அமைப்பது வழக்கமாக உள்ளது. தஞ்சாவூர் இராஜராஜீசுவரக் கோபுர உள்வாங்கல்களில் கும்பப் பஞ்சரங்கள் இடம்பெற்றுள்ளன. இது போன்ற அலங்கார உறுப்புகள் முற்சோழர் கால விமானங்களிலேயே இடம்பெறத் தொடங்கிவிடுவது குறிப்பிடத்தக்கது.

உத்திரம் தாங்குகின்றன. உத்திரத்தின் மேல் வெளிப்பிதுக்கமாய் வாஜனம். வலபிப்பகுதி பூதவரி கொண்டமைந்துள்ளது. இலேசாக வெளியிழுக்கப்பட்ட கூரை கபோதமாய் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலே பூமிதேசப் பகுதி யாளிவரியாய் அமைந்துள்ளது. தாங்குதளம் முதல் பூமிதேசம் வரை கற்கட்டடமாக நிற்கும் இக்கீழ்த்தளத்தின் கூரை மீது இரு முனைகளிலும் கர்ணகூடங்களும் நடுவில் சாலையும் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட பகுதிகளில் பஞ்சரங்களும் காட்டப்பெற்றுள்ளன. இவற்றை ஆரச்சுவர் இணைக்கிறது. கர்ணகூடங்கள், பஞ்சரங்கள், சாலை ஆகிய அனைத்தின் நடுப்பகுதிகளிலும் நாசிகைகள் காட்டப்பட்டுள்ளன. இவை சுதையுருவங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இக்கூரை மீதமர் உறுப்புகளின் பின்னால் கோபுரக் கட்டுமானத்தின் இரண்டாம் தளம் உயர்கிறது. இந்த இரண்டாம் தளத்துக் கூரை மீதும் கீழ்த்தளம் போலவே முனைகளில் கர்ணகூடங்களும் நடுவில் சாலையும் இடைப்பட்ட பகுதிகளில் பஞ்சரங்களும் அமைந்துள்ளன. இவற்றின் நாசிகைக் கோட்டங்களிலும் சுதையுருவங்கள். இவற்றின் பின்னால் மூன்றாம் தளக் கட்டுமானம் அமைய அதன் கூரை மீது நந்திகளால் சூழப்பட்ட கிரீவம் உள்ளடங்கிக் காணப்படுகிறது. இங்குள்ள நான்கு மகாநாசிகைகளிலும் சுதையுருவங்கள் காட்டப்பட்டுள்ளன. இதன்மேலுள்ள சிகரம் சாலையமைப்பில் ஐந்து தூபிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. சாலை சிகரத்தின் வட, தென் பக்கங்கள் கீர்த்திமுகங்களைக் கொண்டுள்ளன. கீழ்த்தள பூமிதேசத்திற்கு மேல் அமைந்திருக்கும் இவையனைத்தும் செங்கற் கட்டுமானங்களாகும்.

சுதையுருவங்கள்

கோபுரத்தின் கீழ்த்தள மற்றும் இரண்டாம் தளக் கூரை மீதமர்ந்துள்ள ஆர உறுப்புகளின் நாசிகைகளில்

காணப்படும் சுதையுருவங்கள், பல புராணக் கதைகளின் விளக்கங்களாக அமைந்துள்ளன. இவை கோபுரத்தின் நாற்புறத்தும் உள்ளன. இவற்றுள் பெரும்பான்மையானவை சிவபெருமான், திருமால் ஆகியோரின் திருத்தோற்ற விளக்கங்களாக அமைந்துள்ளன. இவற்றுடன் முனிவர்கள் மற்றும் மனிதர்களின் வடிவங்களும் காட்டப்பட்டுள்ளன. பாலுணர்வுச் சிற்பங்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இச்சுதையுருவங்களுள் குறிப்பிடத்தக்கவை கோபுரத்தின் கீழ்த்தளக் கூரைமீதுள்ள ஆர உறுப்புகளில் இடம் பெற்றுள்ளன. கிழக்குமுகத்தில், கர்ணகூட நாசிகைக் கோட்டங்களில், தென்புறம் யானையை அழித்தவரும் வடபுறம் இயமனை அழித்தவரும் இருக்கப் பஞ்சரக் கோட்டங்களில் பிச்சையேற்ற பெருமானும் ஊர்த்வ தாண்டவரும் இடம்பெற்றுள்ளனர். சாலையில் சாளரத் திறப்புக்கு இருபுறத்தும் வாயிற்காவலரும் கவரிப்பெண்களும் காட்டப்பட்டுள்ளனர்.

மேற்குமுகத் தென்புறத்தில் மந்தர மலையைக் கொண்டு பாற்கடல் கடையும் காட்சி காட்டப்பட்டுள்ளது. தேவர்களும் அசுரர்களும் ஆளுக்கொருபுறம் நின்று, வாசுகிப்பாம்பைக் கயிறாய்ப் பிடித்தபடி கடலைக் கடைகிறார்கள்.

தென்முக ஆரச்சுவர் பகுதிகளில் பாலுணர்வுச் சுதையுருவங்கள் உள்ளன. மேற்கு மகாநாசிகையில் பெருமாள் தேவியருடன் சுகாசனத்தில் காட்சி தருகிறார். அவருக்கு வடபுறம் காளிங்க நர்த்தனக் கண்ணனும் தென்புறம் கோவர்த்தனகிரி தாங்கிய கண்ணனும் காட்டப்பட்டுள்ளனர். வடக்கு மகாநாசிகையில் நான்முகன் தேவியருடன் இருக்கத் தெற்கு மகாநாசிகையில் தட்சிணாமூர்த்தி அமர்ந்த நிலையில் காட்சிதருகிறார். கிழக்கு

மகாநாசிகையில்சிவபெருமான் உமாசகிதராய் அமர்ந்துள்ளார்.

இக்கோபுரத்தின் மேல்தளக் கபோதத்தில் அமர்ந்த நிலையில் மனித முகமும் சிங்க உடலும் கொண்ட உருவங்கள்[5] காட்டப்பட்டுள்ளன. இதே போன்ற உருவம் பகைவிடை ஈசுவரக் கோபுரத்தின் கபோதத்திலும் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. கோபுரக் கீழ்த்தளக் கட்டுமானம், தூண்களின் போதிகைகள் ஆகியவை கோபுரம் கட்டப்பட்ட காலத்தைக் கி.பி. பத்தாம் நூற்றாண்டாகக் கொள்ளவைக்கின்றன. மேல்தளக் கபோதத்திலிருக்கும் மனிதமுகச் சிங்கங்கள் கொண்டும், சுதையுருவங்கள் சிலவற்றின் ஆடையமைப்புகள் மற்றும் தோற்றம் கொண்டும் கீழத்தளத்திற்கு மேலுள்ள செங்கல் அடுக்குகளை மராத்தியர் காலத் திருப்பணியாகக் கொள்ளலாம்.

வெளித் திருச்சுற்று

கோபுரத்தின் இருபுறமும் தொடரும் மதில் தெற்கிலும் வடக்கிலும் நீண்டு, மேற்கில் இணைந்து உட்புறத்தே திருச்சுற்றொன்றை ஏற்படுத்தியுள்ளது. இத்திருச்சுற்று இரண்டாம் கோபுரத்துடன் அமைந்திருக்கும் மையக் கோயிலைக் சுற்றி அதற்கு வெளியே அமைந்துள்ளதால்

5. இதுபோன்ற உருவத்தை மாமல்லபுரம் கோவர்த்தனகிரி சிற்பத் தொகுதியில்தான் முதல்முறையாகப் பார்க்கமுடிகிறது. பெரிய அளவில் அமைந்துள்ள இச்சிற்பம் ஆடவர் தலையும் சிங்க உடலும் கொண்டுள்ளது. பெண் தலையும் சிங்க உடலும் கொண்ட வடிவங்களைப் பிரதிவரியின் பிரதிமுகங்களுள் சிலவாய் நார்த்தாமலை பதினெண்பூமி விண்ணகர் குடைவரையின் முன்னுள்ள மகாமண்டபத் தாங்குதளத்திலும் சீனிவாசநல்லூர் குரங்கநாதர் கோயிலின் பிரதிபந்தத் தாங்குதளத்திலும் காணமுடிகிறது. எகிப்திய ஸ்பிங்ஸ் போன்று காட்சியளிக்கும் இவ்வடி ங்கள் மிக அருமையாகவே தமிழகத்துக் கோயில்களில் இடம்பெறறுள்ளன.

வெளித் திருச்சுற்றென்று பெயர் கொள்கிறது. இவ்வெளித் திருச்சுற்றின் தென்புறத்தே மதிலையொட்டி இரண்டு அறைகள் உள்ள கட்டட அமைப்பு காணப்படுகிறது. தென்கிழக்கில் கிணறும் அதையடுத்து மடைப்பள்ளியும் அமைந்துள்ளன.

யாக மண்டபம்

கிழக்கில் கோபுரத்தின் வடபுறத்தே யாகமண்டபம் பாதபந்தத் தாங்குதளத்துடன் காணப்படுகிறது. நான்முக அரைத்தூண்களுடன் கூடிய இதன் சுவர்கள் கோட்டங் களின்றி வெறுமையாக உள்ளன. அரைத்தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் உத்திரம் தாங்க, மேலே வாஜனம், வலபி, கூரையின் முன்னிழுப்பான கபோதம் ஆகியவை அமைந்துள்ளன. வலபியில் மலரிதழ்கள் செதுக்கப்பட்டுள்ளன. கபோதம் சில இடங்களில் தொடர் ஒழுங்கின்றியுள்ளது. இம்மண்டபத்து வாயில் நிலைக் கால்களின் விளிம்பில் வடபுறம் சங்கநிதியும் இடப்புறம் பத்மநிதியும் காட்டப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலே தாமரைவரி ஓடுகிறது. வாயிலை ஒட்டியுள்ள நான்முக அரைத்தூண்கள் மதலையும் பூமுனை நாணுதலும் கொண்டுள்ளன.

மண்டபத்தினுள் பல்வேறு அமைப்பிலான தூண்கள் உள்ளன. மண்டபம் பின்னாளைய கட்டுமானமாதலால் ஆங்காங்கே கிடைத்த கட்டடச் சிதைவுப் பொருள்களைக் கொண்டு இதைக் கட்டியுள்ளனர். தூணொன்று மண்டபத்தின் மையப்பகுதி கூரைக்குத் தாங்கலாகியிருப்பதே இதற்குப் போதுமான சான்றாகும். உட்சுவரமைப்பில் மூன்றிடங்களில் பொருந்தா இணைப்புகளாக் மகர தோரணங்கள் காணப்படுகின்றன. ஜகதி, கண்டம், மகாவாஜனத்துடன் கூடிய மேடை, மண்டப நடுவில் காணப்படுகிறது.

மண்டபத்தின் கூரைப்பகுதிக்குமேல் நாகர கிரீவமும் சிகரமும் தூபியும் காட்டப்பட்டிருப்பதால் இது உலாவரும் இறைத்திருமேனியை அமர்த்தும் திருமண்டபமாக இருந்திருக்க வேண்டுமென்பதும் பின்னாளில் யாகமண்டபமாக மாற்றப்பட்டிருக்கலாம் என்பதும் திண்ணமாகும். பலவகைத் தூண்கள் இடம்பெற்றிருப்பதால் இதன் காலத்தை உறுதியாகச் சொல்லக்கூடவில்லை.

தென்மதில் ஒட்டிய கட்டட அமைப்புகள்

தெற்கு மதிலையொட்டிக் காணப்படும் ஒரு தளக் கட்டமைப்பு ஜகதி, பெரிய அளவிலான உருள் குமுதம் என அமைந்த தாங்குதளத்தின்மீது நான்முக அரைத்தூண்களோடு கூடிய சுவர்ப்பகுதியைக் கொண்டுள்ளது. முதலாம் குலோத்துங்கரின் ஐம்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றைக்[6] கொண்டுள்ள இச்சுவரின் தூண் போதிகைகள் உத்திரம் தாங்க, அதன் வெளிப் பிதுக்கமாய் வாஜனம். அடுத்து வலபியும் கூரையின் வெளியிழுப்பாய் ஆழமற்ற கூடுகளுடன் கூடிய கபோதமும் காட்டப்பட்டுள்ளன. கூரைக்கு மேலே பூமிதேசம்.

மதிலையே பின்சுவராய்க் கொண்டுள்ள இந்தக் கட்டட அமைப்பின் முன் சுவரிலுள்ள இரண்டு வாயில்களையும் தனித்துக் காட்டுவதற்காக இவற்றின் முன், சிறிய அளவிலான முன்மண்டபங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் மேற்கு முகத்தில் யாளிமுகச் சுவரோடு கூடிய படிக்கட்டுகள் அமைந்துள்ளன. மண்டபத் தளத்தின் மீது இரண்டு விஷ்ணுகாந்தத் தூண்கள். சதுர பாதமும் எண்டட்டை உடலும் கொண்ட இத்தூண்களின் விரிகோணப் போதிகைகள் சிறுமடிப்புடன் உத்திரம் தொட, மேலுறுப்புகளாய் வாஜனமும் வலபியும். கூரையின் வெளியிழுப்பாய் வளைந்திறங்கும் கபோதம் கூடுகளோடு கூடிய வளைவு

6. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள், 289-290.

களைக் கொண்டுள்ளது. மதிலையொட்டி அமைந்துள்ள இவ்வறைகள் இரண்டும் தற்போது பண்டார அறைகளாகப் பயன்படுகின்றன.

தென்கிழக்கு மூலையிலுள்ள கட்டடம் மடைப் பள்ளியாகப் பயன்படுகிறது. உபானம், இருபுறமும் கம்புகளோடு கூடிய கண்டம், தாமரைவரி, கபோதம், துணைக்கம்பு என்றமைந்த துணைத்தளத்தின் மீது தூண்களற்ற சுவரைமைப்புக் கொண்டு, கூரை பெற்றுள்ள இக்கட்டடத்தின் முன்புறமும் ஒரு மண்டபம் காட்டப்பட்டுள்ளது. பண்டார அறைகளின் வாயில்களின் முன்னுள்ள முன்மண்டபங்கள் போலவே தாங்குதளம் கொண்டுள்ள இதன் தளத்தின் மீது இரண்டு ருத்ரகாந்தத் தூண்கள் நின்று கூரை தாங்குகின்றன. சதுர பாதத்தின் மீது உருளை உடல் கொண்டெழும் இத்தூண்களின் விரிகோணப் போதிகைகள் தாங்கும் உத்திரத்தின் மேல் வழக்கம் போல் வாஜனம், வலபி, கபோதம். இந்த முன்மண்டபத்தின் படிகள் வடக்கு நோக்கி அமைந்துள்ளன. இதற்கும் யாளிமுகப் பிடிச்சுவர் உள்ளது. இக்கட்டட அமைப்புகள் அனைத்துமே பிற்சோழர் காலத்தவை என்பதை இங்குள்ள குலோத்துங்கரின் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. பண்டார அறைகள் உள்ள கட்டடத்திற்கும் மடப்பள்ளிக்கும் இடையில் தென்மதிலையொட்டி உயரமான மேடையொன்று காணப் படுகிறது.

நடைமண்டபம்

கோபுர வாயிலுக்கு முன்னாலுள்ள திருச்சுற்றுப் பகுதியில் கொடிமரமும் பலித்தளமும் நந்தியும் அடுத்தடுத்து அமைந்துள்ளன. இப்பகுதியிலிருந்து இரண்டாம் கோபுரவாயில் வரை பக்கத்திற்கு ஏழெனப் பதினான்கு தூண்கள் தாங்கும் நடைமண்டபம் உள்ளது. செவ்வகம், சதுரம், செவ்வகம், இடையில் கட்டுகள் என அமைந்துள்ள

இத்தூண்களின் கீழ்ச்செவ்வகத்தின் நான்கு மேல் மூலைகளிலும் நாகபந்தம் காட்டப்பட்டுள்ளது. சதுர முகங்களில் தாமரைப் பதக்கங்கள், யாளி உருவங்கள், கருக்கணிகள் போன்றன காட்டப்பட்டுள்ளன. சில செவ்வக முகங்களிலும் கருக்கணிகள். இத்தூண்களின் போதிகைகள் பலவிதமாய் அமைந்துள்ளன. சிலவற்றின் போதிகைகள் தரங்கக் கோடுகளுடன் கூடிய வெட்டுப் போதிகைகளாய் உள்ளன. சில இவற்றுடன் மதலை, நாணுதல் என்னும் உறுப்புகளையும் கூடுதலாகக் கொண்டுள்ளன. சில வெட்டுப் போதிகை மட்டும் கொண்டுள்ளன. பதினேழு அல்லது பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகக் கொள்ளத்தக்க இந்நடைமண்டபத்தின் வடபுறத்தே முதலில் அம்மன் திருமுன்னும் அடுத்து வாகன மண்டபமும் அமைந்துள்ளன.

அம்மன் திருமுன்

வெளித்திருச்சுற்றின் வடகிழக்குப் பகுதியில் நடைமண்டபத்தின் வடபுறத்தே தென்பார்வையாக அம்மன் திருமுன் அமைந்துள்ளது. முன்மண்டபம், முகமண்டபம், கருவறை என்றுள்ள இக்கட்டுமானத்தின் பின்னிரண்டு பகுதிகள் நாயக்கர் காலத்து அமைப்பாகும்.

அ. முன்மண்டபம்

பத்ம உபானம், கம்பு, பாதங்களோடு கூடிய கண்டம், கூடுகளோடு கூடிய கபோதம் என்றமைந்த துணைத் தளத்தின்மீது முன்மண்டபத்தின் தரை பரவியுள்ளது. இது 6.07மீ. நீளமும் 4.63மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. மண்டபக் கூரையை மூன்று சதுரங்களும் இடையில் கட்டுகளும் கொண்ட நான்கு தூண்கள் தாங்குகின்றன. சதுர முகங்களில் பல்வேறு சிற்பங்கள். கட்டுகளின் மேலும் கீழும் பத்மகட்டும் இடைப்பட்ட பகுதிகளில் பூவேலைப்பாடுகளும் உள்ளன. கீழ்ச்சதுரங்களில் நான்கு மேல் முனைகளிலும்

நாகபந்தங்கள். மண்டபத் தரையில் சிறிய அளவிலான பலித்தளமும் நந்தியும் வடக்கு நோக்கி ஒரே தளத்தில் அமைக்கப்பட்டுள்ளன. சிற்ப அமைப்புக் கொண்டு இதன் காலத்தைப் பதினேழு அல்லது பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகக் கொள்ளலாம்.

ஆ. முகமண்டபம்

முகமண்டபத்தின் தெற்குத் தாங்குதள முகப்பு பிற்காலத்தில் ஏற்பட்ட முன்மண்டப இணைப்பால் மறைக்கப்பட்டுள்ளது. இத்தாங்குதளத்தின் கபோதப்பகுதி மட்டுமே தெரிகிறது. முகமண்டபச் சுவர் இந்திரகாந்த மற்றும் விஷ்ணுகாந்த அரைத்தூண்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவற்றின் பாதங்களில் நாகபந்த அமைப்பும் சிறிய அளவிலான சிற்பங்களும் காட்டப்பட்டுள்ளன. சிதைந்த நிலையிலான கல்வெட்டுத் தொடர்கள் சில இச்சுவரில் காணப்படுகின்றன.

78செ.மீ. அகலமுள்ள முகமண்டப வாயிலின் இருபுறமும் அமைந்துள்ள கோட்டப் பஞ்சரங்களில் பக்கத்திற்கொருவராக இரண்டு வாயிற்காவல் பெண்டுகள். வலப்புறப் பெண் இடக்கையில் உருள் பெருந்தடி பிடித்து வலக்கையில் தர்ஜனீ முத்திரை காட்ட, இடப்புறப் பெண் வலக்கையில் உருள் பெருந்தடி கொண்டு இடக்கையில் தர்ஜனீ காட்டுகிறார். இருவருமே கரண்டமகுடமும் பனையோலைக் குண்டலங்களும் கணுக்கால்வரை நீண்டு விரியும் ஆடைகளும் அணிந்துள்ளனர். இருவரின் பக்கங்களிலும் கவரிப்பெண்கள்.

3.21மீ. நீளமுள்ள 2.30மீ. அகலமும் கொண்டமைந்துள்ள முகமண்டபத்தின் வாயில், கீழ் மேல் நிலைகள் மற்றும் நிலைக்கால்கள் கொண்டுள்ளது. வாயில் மேல்நிலையின்

நடுவில் தாமரைப் பதக்கம் காணப்படுகிறது. கீழ்நிலை உலோகத் தகட்டால் மூடப்பட்டுள்ளது. அதற்கு மேலே தெரியும் நிலைக்கால்களின் கீழ்ப்பகுதியில் இரு கபோத அடுக்குகள் தெரிகின்றன. இரண்டாம் கபோத அடுக்கிற்கு மேலாகக் குத்துக்காலிட்டு அமர்ந்த நிலையிலான மூன்று கந்தர்வர்கள். இவர்களின் தலைமேல் கால்வைத்தபடி நிற்கும் மகரம். இதன்மீது ஸ்வஸ்திகமாய்க் காலமைத்து நிற்கும் கொடிப் பெண்கள். இவர்தம் கைகளிலிருந்து வளரும் வளையங்களுக்குள் ஆடற்பெண்களும் இசைக் கலைஞர்களும் கந்தர்வர்களும் காட்டப்பட்டுள்ளனர். இந்த வளையத்தின் உச்சியில் இருபுறமும் பறவைகள் காட்டப்பட்டுள்ளன. நிலைக்கால்களின் விளிம்புகளில் கீழே பெரிய அளவிலான நாகபந்தமும் அதன் மேல் யானை, யாளி அடுக்குகளும் காணப்படுகின்றன. இதன்மேலே உள் செதுக்கலாய்த் தாமரைவரியும் வெளிச் செதுக்கலாய்ப் பூங்கொத்தும் அதைச் சுற்றிலும் உருளைக்கால்வரியும் காட்டப்பட்டுள்ளன.

முகமண்டபத் தாங்குதளத்தின் கிழக்கு, மேற்கு மற்றும் வடக்குப்பகுதிகள் முழுமையாகப் பார்வைக்குக் கிடைக் கின்றன. ஜகதி, தாமரைவரிகளால் தழுவப்பட்டிருக்கும் சிலம்புவரிக் குமுதம், பாதங்களோடு கம்புகளோடும் அமைந்த கண்டம், அதன்மேல் கூடுகளோடு வளைத்துக் காட்டப் பட்டிருக்கும் சிலம்புவரிக் கபோதம் என அமைந்த கபோதபந்தத் தாங்குதளத்தின்[7] மேல் வேதிக்கண்டமும்

---

7. கபோதபந்தத் தாங்குதளத்தின் முதல் வடிப்புப் பல்லவர் பழமையது. மாமல்லபுரம் தர்மராசர் ரதத்தின் தாங்குதளம் கபோதபந்தத் தாங்குதளம்தான். முற்சோழர் கற்றளியான புள்ள மங்கை ஆலந்துறையார் கோயில் கபோதபந்தத் தாங்குதளமே பெற்றுள்ளது. தொடக்கக் காலங்களில் பிரதிபந்தத்தின் ஒரு வகையாக இருந்த கபோதபந்தத் தாங்குதளம் பின்னாட்களில் பாதபந்தத்தோடும் இணைத்துக் கொள்ளப்பட்டது.

வேதிகையும் பெற்று, முகமண்டபச் சுவர்கள் எழுகின்றன. சுவர்களை விஷ்ணுகாந்த, இந்திரகாந்த அரைத்தூண்களும் கோட்டப்பஞ்சரங்களும் அழகு செய்கின்றன. தூண்களின் பாதங்களில் யாளி, சிங்கம் போன்ற விலங்குருவங்களும் சிறிய அளவிலான வாயிற்காப்போர் சிற்பங்களும் காட்டப் பட்டுள்ளன. அனைத்து உறுப்புகளும் கொண்டுள்ள தூண்களின் மதலைகள் உத்திரம் தாங்க, நாணுதல்கள் சிறு பூமுனைகளுடன் கீழ்வளைந்துள்ளன. உத்திரத்தின் மேல் வாஜனமும் தாமரையிதழ் காட்டப்பட்ட வலபியுமிருக்க, மேலே கூரையின் வெளியிழுப்பாகக் கபோதம் கூடுகளுடன் காட்டப்பட்டுள்ளது. இக்கூடுகளில் பறவைகள், கொடிக் கருக்குகள், கந்தருவர் தலைகள் காட்டப்பட்டுள்ளன. கபோதத்தின்மீது பூமிதேசவரி இடம்பெற்றுள்ளது.

இ. *விமானம்*

முகமண்டபத்திற்கமைந்திருக்கும் அதே தாங்குதள அமைப்பும் சுவர் மற்றும் கூரையுறுப்புகளும் கொண்டிலங்கும் இந்த இருதள விமானத்தின் புறச்சுவர் மூன்று பத்திகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நடுப்பத்தியான சாலைப்பத்தியில் கோட்டங்கள் அமைத்து அம்மன் திருமேனிகள் எழுந்தருளுவிக்கப்பட்டுள்ளன. தாங்குதளத்தின் மேல் காட்டப்பட்டுள்ள வேதிக்கண்டத்தின் பாதங்களிலிருந்து வேதிகை தாங்குவனவாய்ச் சில சிற்றுருவங்கள் காட்டப் பட்டுள்ளன. இது புதுமையான அமைப்பாகும். பிற பழுவூர்க் கோயில்களிலோ அல்லது இப்பகுதியிலுள்ள நாயக்கர் கால இணைப்புகள் பெற்றுள்ள பிற முற்சோழர் கோயில்களிலோ இது போன்ற சிற்ப அமைப்புகள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜகதி முதல் பூமிதேசம்வரை கல்லால் கட்டப் பட்டிருக்கும் கீழ்த்தளத்தின் கூரை மீது கர்ணகூடம், சாலை, கர்ணகூடம் என்ற அமைப்பில் ஆரஉறுப்புகள்

காட்டப்பட்டுள்ளன. இவை ஆரச்சுவரால் இணைக்கப் பட்டுள்ளன. இவற்றின் பின் விமானத்தின் இரண்டாம் தளம் அளவில் சிறுத்து எழுந்து கபோதத்தில் முடிகின்றது. அடுத்து கிரீவமும் சிகரமும் எண்பட்டையாய் அமைந்துள்ளன. கிரீவத்தின் நான்கு முதன்மைத் திசைகளிலும் மகாநாசிகைகள் காட்டப்பட்டுள்ளன. கோணத் திசைகளில் அல்பநாசிகைகள். இவற்றின் கோட்டங்களிலும், கிரீவசுவரிலும், சாலை, கர்ணகூடம் போன்ற ஆரஉறுப்புகளின் நாசிகைக் கோட்டங் களிலும், இவற்றை இணைக்கும் ஆரச்சுவர் முகப்புகளிலுமாய் எண்ணற்ற சுதையுருவங்கள் காட்டப்பட்டுள்ளன. இவையனைத்துமே அம்மனின் பல்வேறு தோற்றங்களைக் காட்டுவனவாய் வடிவமைக்கப்பட்டுள்ளன. கீழ்த்தள பூமிதேசத்திற்கு அம்மன் கோயில் விமான உறுப்புகள் அனைத்துமே செங்கற் கட்டுமானங்களாகும்.

கருவறை

79 செ.மீ. அகலமுள்ள கருவறை வாயிலின் இருபுறமும் விஷ்ணுகாந்தத் தூண்கள் காட்டப்பட்டுள்ளன. இத்தூண்களின் பாதங்களில் அமர்ந்த நிலையிலான சிங்கங்கள் காணப்படுகின்றன. கருவறை வாயிலின் கீழ்நிலை நடுவில் தாமரைப் பதக்கம். நிலைக்கால்களில் நாகபந்தம். கருவறை வடக்குத் தெற்காக 2.60மீ. நீளமும், கிழக்கு மேற்காக 2.28மீ. அகலமும் கொண்டுள்ளது. உள்ளே தாமரைத் தளத்தின் மீது நேர்நின்ற கோலத்தில் சடையை மகுடமாய்ப் புனைந்து, நீள் செவிகளுடன் முன்கைகளில் அபயமும் வரதமும் காட்டிப் பின்கைகளில் தாமரை மலர்கள் ஏந்திச் சமபங்கத்தில் காட்சிதருகிறார் அம்மன். இவர் திருப்பெயர் அருந்தவநாயகி. கருவறையின் கூரை உட்புறம் மூடப் பட்டுள்ளது.

வாகன மண்டபம்

நடைமண்டபத்திற்கு எதிரே இரண்டாம் கோபுர வாயிலான விக்கிரம சோழன் திருவாயில் அமைந்துள்ளது.

இதன் வடபுறத்தே மண்டபமொன்று காணப்படுகிறது. அதன் முன்னால் இருபக்கத்திலும் பிற்கால மேடைகள் உள்ளன. மண்டபத்திற்கான படிகள் இப்பின்னிணைப்புகளுக்கு இடையில் அமைந்துள்ளன. இதனால் மண்டப முகப்பின் அமைப்பை அறியக்கூடவில்லை. மண்டபத்தூண்கள் மூன்று சதுரங்களும் சதுரங்களுக்கு இடையில் கட்டுகளுமாய் அமைந்து வெட்டுப் போதிகைகளுடன் உத்திரம் தொடுகின்றன. இந்தத் தூண்களின் சதுரமுகங்களில் பல்வேறு தொன்மஞ்சார்ந்த சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கண்ணன் ஆடை எடுத்துக் குருந்த மரமேறிக் கோபியரை வருத்தும் காட்சி, தேவியொருவர் கத்தி முனையில் ஒருபாதம் நிறுத்தி மறுகால் மடித்து உயர்த்தித் தவமிருக்கும் நிலை மற்றும் ரிஷபாரூடர், பிள்ளையார் போன்ற தெய்வ வடிவங்கள் இச்சிற்பங்களுள் அடங்கும். மண்டபத்துக் கிழக்குச் சுவரில் மூன்றாம் குலோத்துங்கர் காலத்துச் சிதைந்த கல்வெட்டொன்று காணப்படுகிறது. சிற்பங்களின் தோற்றம் மற்றும் மண்டபக் கட்டமைப்புக் கொண்டு இக்கட்டடப் பகுதியையும் பதினேழு அல்லது பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகக் கொள்ளலாம்.

இக்கோயிலுக்குரிய உலாத் திருமேனிகளைச் சுமந்து செல்லும் பழுதுபட்ட வாகனங்கள் சில இம்மண்டபத்தில் கிடத்தப்பட்டுள்ளன. முன்னுள்ள மேடையிணைப்புகள் கோயில் பணியாளர்கள் ஓய்வெடுக்கப் பயன்படுகின்றன.

இரண்டாம் கோபுரவாயில்

விளந்தை சேவகப் பெருமாள் கச்சியராயரால் திருப்பணி செய்யப்பட்டதாக இங்குள்ள கல்வெட்டு அறிவிக்கும் விக்கிரம சோழன் திருவாசல்.[8] இரண்டாம் கோபுரவாயிலாக அமைந்துள்ளது. உபானம், துணைஉபானம், ஜகதி, உருள் குமுதம், கம்புகளும் பாதங்களும் கொண்ட கண்டம், பட்டிகை

8. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப. 296.

எனக் கோபுரத் தாங்குதளம் பாதபந்தமாய் அமைந்துள்ளது. இதன் மீது நான்முக அரைத்தூண்கள் காட்டப்பெற்ற சுவர்ப்பகுதி. அரைத்தூண்களின் போதிகைகள் உத்திரம் தொட, மேலே வாஜனமும் வலபியும். வலபியில் பூதவரி. அதன்மேல் கூரையின் வெளியிழுப்பு கபோதமாய் வளைந்து இறங்குகிறது. தூண்களின் போதிகைகள் வாயிலையொட்டி வெட்டுப் போதிகைகளாகவும் பக்கங்களில் குளவு பெற்ற தரங்கப் போதிகைகளாகவும் அமைந்துள்ளன.

கோபுர ஆதிதளத்தின் மேல், இரண்டாம் தளம் எழுகிறது. வழக்கத்திற்கு மாறாகக் கூரை மேலமரும் சிறு விமானங்கள் ஏதுமின்றி இத்தள அமைப்பு காட்டப் பட்டுள்ளது. ஆதிதள பூமிதேசத்திற்குமேல் வேதிக் கண்டம், வேதிகை, நான்முக அரைத்தூண்களோடு கூடிய சுவர் ஆகியன அமைந்துள்ளன. தூண்களின் வெட்டுப் போதிகைகள் உத்திரம் தாங்க வாஜனம், வலபி, கபோதமெனக் கூரை அமைந்துள்ளது. வலபியில் தாமரை இதழ்கள். கபோதக் கூடுகள் கொடிக்கருக்குகள் கொண்டிருக்கக் கபோதத்தில் கோடிப்பாளையும் நடுப்பாளையும் உள்ளன. இத்தளக் கூரையின் மீது சாலை, பஞ்சரம், கர்ணகூடங்கள் அமையப் பின்னால் மூன்றாம் தளம் காட்டப்பட்டுள்ளது. அதன்மீது கிரீவமும் சாலை சிகரமும் காட்டப்பட்டுள்ளன. கிரீவ நாசிகைகள் வெறுமையாக உள்ளன. இக்கோபுரத்தின் முதல் இரு தளங்கள் கருங்கல்லால் அமைய ஏனைய உறுப்புகள் செங்கற் கட்டுமானமாய் அமைந்துள்ளன.

இரண்டாம் கோபுரவாயிலின் இருபுறமும் உள்ள கோட்டங்களில் வாயிற்காவலரும் அவர்களையடுத்துக் கவரிப்பெண்களும் காட்டப்பட்டுள்ளனர். தென்காவலர் பின்கைகளில் மழுவும் பாசமும் கொண்டு, இட முன்கையை உருள் பெருந்தடியின் மீது தாங்கலாக நிறுத்தியுள்ளார். கடக

முத்திரையிலுள்ள இவரது வல முன்கை சேதப்படுத்தப் பட்டுள்ளது. வட காவலர் பின்கைகளில் அதே கருவிகளைக் கொண்டு வல முன்கையை உருள் பெருந்தடியின் மேல் வைத்துள்ளார். இவரின் இட முன்கை சிதைந்துள்ளது. இருவருமே சடையைச் சுற்றிப் பின்னி மகுடமாக்கியுள்ளனர். கோரைப் பற்களும் பனையோலைக் குண்டலங்களும் அளவான அணிகலன்களும் கொண்டுள்ள இவர்களின் ஒரு பாதம் தாமரைத்தளத்திலும் மறுபாதம் உருள் பெருந்தடியின் மீதும் இருத்தப்பட்டுள்ளன.

விக்கிரம சோழன் திருவாயிலின் முன்பு பிடிச்சுவருடன் கூடிய இரண்டு படிகள் உள்ளன. இவை உள் திருச்சுற்றுக்குள் அழைத்துச் செல்கின்றன. கோபுரத்தின் இருபுறமும் நெடிய மதிற்சுவர்கள். இவை வெளிமதில் போலவே தெற்கிலும் வடக்கிலும் நீண்டு மேற்கில் இணைகின்றன. இம்மதிற்சுவரின் நாற்புறமும் நடுக்கால மற்றும் பிற்காலச் சோழர்களின் கல்வெட்டுகள் வெட்டப் பட்டுள்ளமையால் இதைச் சோழர் திருப்பணியாகக் கொள்ளலாம். சோழர் காலக் கோபுர வாயிலைப் பின்னாளில் கச்சியராயர் திருப்பணி செய்திருக்க வேண்டும். விக்கிரம சோழன் திருவாசல்[9] என்ற பெயர் குறிப்பிடத்தக்கது. இது முதலாம் இராசேந்திரரைக் குறிப்பதாகலாம்.

பிள்ளையார் திருமுன்

கிழக்கில் இம்மதிலையொட்டிக் கோபுரவாயிலின் வலப்புறம் பிள்ளையார் திருமுன் ஒன்று உருவாக்கப்

---

9. தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் திருக்கோயில் விமானத்தின் தெற்குவாயில் விக்கிரம சோழன் திருவாசல் என்று அழைக்கப்படுகிறது. இதைக் குறிக்கும் கல்வெட்டு தெற்கு வாயிலின் மேல்நிலையில் வெட்டப்படுள்ளது. முதலாம் இராசேந்திரரின் பல்வேறு சிறப்புப் பெயர்களுள் விக்கிரம சோழன் என்பதும் ஒன்றாகும். அவர் பெயராலேயே இவ்வாயில் விக்கிரம சோழன் திருவாயில் என்றழைக்கப்படுவதாக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
- S.R. Balasubramanyam, Middle Chola Temples, p.21.

பட்டுள்ளது. உபானம், கண்டம், மகாவாஜனம் என்றமைந்துள்ள துணைத்தளக் கட்டுமானத்தின் மீது பிள்ளையார் இருத்தப்பட்டுள்ளார். இத்திருமுன் கூரையைத் தாங்குவன்வாய் முன்னால் சிறு தூண்கள். மூன்று சதுரங்களும் இடையில் இரண்டு கட்டுகளுமாய் அமைந்துள்ள இத்தூண்களின் சதுரங்களில் ஆடற்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தூண்களின் வெட்டுப் போதிகைகள் விரிந்து உத்திரம் தாங்க மேலுறுப்புகளாய் வாஜனம், வலபி. கபோதம் இரண்டு கூடுகளுடன் காட்டப்பட்டுள்ளது. கபோதத்தின் மேல் பூமிதேசம். மேலே வேதிகையும், வேசரமாய் கிரீவமும், சிகரமும் காட்டப்பட்டுள்ளன. சிகரத்தின் மேல் செம்பாலான தூபி. கிரீவ நாசிகைகளில் கிழக்கில் பிள்ளையாரும் தெற்கில் தட்சிணாமூர்த்தியும் வடக்கில் நான்முகனும் காட்டப்பட்டுள்ளனர். இடைப்பட்ட கிரீவ சுவர்ப்பகுதிகளில் முனிபுங்கவர்கள். வேதிகையின் மீது பிள்ளையாரின் இருபுறத்தும் நந்திகள்.

திருமுன் உள்ளே கல்தளத்தின்மீது பிள்ளையார் ஊர்த்வஜாநு கரணத்தில்[10] ஆடல் நிகழ்த்துகிறார். அவருடைய இடப்பாதம் பார்சுவமாய்த் தரையில் இருக்க, வலக்கால்

---

10. ஊர்த்வஜாநு கரணம் பரதரின் நாட்டிய சாத்திரத்தில் தாண்டவ லட்சணப் பகுதியில் இடம்பெற்றுள்ள நூற்றியெட்டுக் கரணங்களுள் ஒன்றாகும். ஊர்த்வஜாநு கரணத்தில் சிவபெருமானின் சிற்பத்தையே முதன்முதலாகப் பார்க்கமுடிகிறது. பல்லவர் பகுதியில் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலிலும் திருப்பட்டூர்க் கயிலாசநாதர் கோயிலிலும் சிவபெருமானின் ஊர்த்வஜாநு சிற்பம் இடம்பெற்றுள்ளது. முற்சோழர் கோயில்களான சீனிவாசநல்லூர் குரங்கநாதர் கோயில் முகமண்டபத்தின் வடசுவர் தூணிலும் துடையூர் விஷமங்களேசுவரர் கோயிலின் கண்டபாதத்திலும் சிற்றுருவச் சிற்பங்களாக இவ்வடிவம் காணப்படுகிறது. பின்னாள்களில் பிள்ளையாரையும் ஊர்த்வஜாநு கரணத்தில் காட்டும் பழக்கம் ஏற்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் வேங்கடத்தான் துறையூரில் காணப்படும் பிற்சோழர் கோயிலொன்றில் முகமண்டபக் கோட்டத்தில் உள்ள பிள்ளையார் ஊர்த்வஜாநு கரணத்தில் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

முழங்கால் அளவில் மடிக்கப்பட்டு இடுப்புக்கு மேல் உயர்த்தப்பட்டுள்ளது. பின்கைகளில் அங்குசமும் மோதகமும். வல முன்கை அபய அஸ்தமாயிருக்க, இட முன்கை அர்த்த ரேசிதத்தில் உள்ளது. கரண்ட மகுடமும் முப்புரிநூலும் இடையாடையும் கொண்டுள்ள இவருக்கு முன்னால் மூஞ்சூறு வடிவம் ஒன்று அமர்த்தப்பட்டுள்ளது. இத்திருமுன் பதினாறு அல்லது பதினேழாம் நூற்றாண்டுத் திருப்பணியாகலாம்.

உள் திருச்சுற்று

1.43மீ. அகலமுள்ள விக்கிரம சோழன் திருவாயில், மையக்கோயிலைச் சுற்றியமைந்திருக்கும் உள்திருச்சுற்றிற்கான வாயிலாக அமைந்துள்ளது. உள்திருச்சுற்று கிழக்கில் சற்று உயரமான மண்டபமாய் விரிந்து, தெற்கிலும் வடக்கிலும் தாழ்வான சுற்றாக வளர்ந்து மேற்கில் இணைகிறது. மண்டபப் பகுதியை இருபத்திரண்டு தூண்கள் தாங்குகின்றன. இவை வெளிநடைத் தூண்கள் போலவே, மூன்று சதுரங்களும் அவற்றுக்கு இடையில் இந்திரகாந்தக்கட்டுகளும் கொண்டு அமைந்துள்ளன. இவ்விந்திரகாந்தக் கட்டுகளின் மேலும் கீழும் தாமரைக் கட்டுகள். இத்தூண்களின் போதிகைகள் தரங்கவரிகளும் பூமொட்டும் கொண்டுள்ளன. உத்திரம், வாஜனம், வலபி என்றமைந்துள்ள தாங்குறுப்புகளின் மேல் கூரை. இம்மண்டபப் பகுதியின் தெற்கிலும் வடக்கிலும் திருச்சுற்றுக்கான கதவு பொருத்தப்பட்ட வழிகள் உள்ளன. இவ்வழிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் மையக் கோயிலின் மகாமண்டப வாயில் அமைந்துள்ளது.

திருச்சுற்று மண்டபத்தின் கிழக்கில், மேற்குப் பார்வையாகக் கதிரவன், சந்திரன் திருமேனிகள் நிறுவப்பட்டுள்ளன. சமபாதத்தில் நின்ற கோலத்தில், உயர்த்திய இரு கைகளிலும தாமரை மலர்களேந்திக் கரண்ட மகுடராகக் கதிரவனும் அதே கோலத்தில் கைகளில் மலர் மொட்டுகளுடன் சந்திரனும் நிறுவப்பட்டுள்ளனர். விக்கிரம

சோழன் திருவாயிலுக்கு வடபுறம் கிழக்குச் சுவரருகே பைரவர் திருமேனியொன்று காணப்படுகிறது. சமபாதராய், நிர்வாணியாய், இருசெவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள் அழகு செய்ய, உடலை மண்டையோட்டு மாலை அலங்கரிக்கச் சடைபாரத்தோடு காட்சிதரும் பைரவரின் பின்கைக் கருவிகள் சிதைந்துள்ளன. வல முன்கைக் கருவியும் சிதைந்துள்ளது. இட முன்கையில் தலையோடு காட்டப் பட்டுள்ளது. இம்மூன்று சிற்பங்களையும் அவற்றின் தோற்றம், ஆடையணிகள் கொண்டு பிற்சோழர் காலத்தனவாகக் கொள்ளலாம்.

பைரவருக்குப் பின்னால் மேற்குப் பார்வையாக சுவரோடு பதித்த சிற்பமொன்று காணப்படுகிறது. அரையாடையும் ருத்திராக்க மாலையும் அஞ்சலி அஸ்தம் காட்டும் கைகளுமாய் ஓர் அடியவர் போல் காட்சியளிக்கும் இவ்வாடவரின் சிற்பம் கோயிலாரால் சிற்றம்பலம் என்பாரைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. இவருக்கும் கோயிலுக்கு முள்ள தொடர்பு குறித்து யாருக்கும் எந்தத் தகவலும் தெரியவில்லை.

ஆடவல்லான் திருமுன்

மண்டபத்தின் வடபுறத்தே காணப்படும் ஆடவல்லான் திருமுன் உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகளின் தழுவலில் பாதங்கள் கொண்ட கண்டம், பட்டிகை என அமைந்த பாதபந்தத் தாங்குதளத்தின் மீது துணைக்கம்பும் அதன் மீது நான்முக அரைத்தூண்கள் கொண்டெழும் சுவருமாய் அமைந்துள்ளது. தாமரைக்கட்டில் தொடங்கி அனைத்து உறுப்புகளும் கொண்டுள்ள இத்தூண்களின் போதிகைகள் மண்டபத் தூண்கள் போலவே தரங்கவரிகளும் பூமொட்டும் கொண்டுள்ளன. இப்போதிகைகள் தாங்கும் உத்திரத்தின் மேலே வாஜனம், வலபி, கூரை. இத்திருமுன்னின் மேற்குச் சுவரில் காணப்படும் பிற்சோழர் கல்வெட்டு

இக்கட்டுமானத்தின் காலமறிய உதவுகிறது." இந்நடராசர் திருமுன்னில் ஆடவல்லானும் உமையும் செப்புத்திருமேனியராய்க் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளனர். இத்திருமுன் வாயிலின் வலப்புறம் மேடையொன்று அமைத்துச் சந்தனம் அரைக்கும் கல்லைப் பதித்துள்ளார்கள்.

திருச்சுற்று மாளிகை

மையக் கோயிலைச் சுற்றிவரும் உள் திருச்சுற்றின் முத்திசைகளிலும் வெளிமதிலையொட்டி மாளிகைப்பத்தி அமைக்கப்பட்டுள்ளது. தென்பகுதியில் இப்பத்தியின் தாங்குதளம் பாதபந்தத் தாங்குதளமாக அமைந்துள்ளது. இதன்மீதுள்ள துணைக்கம்பின் மேற்பரப்பே மாளிகைத் தரையமைப்பாய்ப் பரந்துள்ளது. கண்டபாதங்களிலிருந்து எழும் தூண்கள், மூன்று சதுரங்களும் சதுரங்களுக்கு இடையில் கட்டுகளும் கொண்டு தரங்கவரிகளோடு கூடிய பூநுனிப் போதிகைகளுடன் உத்திரம் தாங்குகின்றன. உத்திரத்தின் மேல் வாஜனமும் வலபியும் கூரையின் இழுப்பாய்க் கபோதமும் உள்ளன. கபோதத்தின் மேலே பிடிச்சுவர் காட்டப்பட்டுள்ளது.

இதே மாளிகை மேற்கிலும் வடக்கிலும் தாங்குதள அமைப்பில்லாமல் துணைத்தள அமைப்போடு உபானம், ஊர்த்வ பத்மவரி, கம்புகளோடு கூடிய கண்டம், அதபத்மவரி, மகாவாஜனம் என்னும் உறுப்புகள் கொண்டமைந்துள்ளது. மகாவாஜனத்தின் மீதுள்ள துணைக் கம்பின் மேற்பரப்பே இப்பகுதிகளில் மாளிகையின் தரைப்பரப்பாகியுள்ளது. இப் பகுதித் தூண்கள் உபானத்திலிருந்தே எழுமாறு பொருத்தப்பட்டுள்ளன. இவை உருளைத் தூண்களாகவும் சதுரம், கட்டு, சதுரம் என்றமைந்த தூண்களாகவும் உள்ளன. இவற்றின் வெட்டுப் போதிகைகள் உத்திரம் தாங்க, மேலே வழக்கமான கூரையுறுப்புகள்.

---

11. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், பக்-300.

திருச்சுற்று மாளிகையின் தென்பகுதி முழுவதும், சுவரோரமாக மேடையமைத்து, இறைத்திருமேனிகளை எழுந்தருளுவித்துள்ளனர். இத்திருமேனிகளின் பின்புறமுள்ள சுவரில் உத்திரம் காட்டி, அதன் மேல் வாஜனமும் வலபியும் காட்டி, மேலே பாதங்களோடு கூடிய கண்டப்பகுதி அமைத்துள்ளனர்.

அ. சுற்றுமாளிகையின் தெற்குப்பகுதி

தெற்குப்பகுதி மாளிகைத் தளத்தின் மேடை மீது பல சிற்பங்கள் வரிசையாக நிறுவப்பட்டுள்ளன. கிழக்கிலிருந்து மேற்காகப் பிள்ளையார், நான்முகன், அம்மையப்பர், அம்மன், சண்டேசுவரர், சந்திரன், சூரியன், கொற்றவை, சண்டேசுவரர், முனிவர், சுந்தரர், சம்பந்தர், அப்பர், முனிவர்கள், தென்திசைக் கடவுள், முனிவர்கள், வீரபத்திரர், அன்னையர் எழுவர், பிள்ளையார் வடிவங்கள் என இவை அமைந்துள்ளன. இவற்றுள் இரண்டு பிள்ளையார் சிற்பங்களுக்குப் பின்னால் உள்ள பகுதியில், அதாவது சுற்றுமாளிகையின் தென்மேற்கு மூலையில், பூப்பலகை ஒன்று கல்வெட்டெழுத்துகளுடன் கவனிப்பாராற்றுக் கிடக்கிறது.[12]

கருங்கல்லாலான இப்பூப்பலகை முதலாம் இராசராசருக்கு முற்பட்ட காலத்ததாகும். இதன் மீதிருக்கும் கல்வெட்டால் சேரமான் கைக்கோமாணி மாதேவன் பரமேசுவரன் என்பாரே இப்பூப்பலகையை வழங்கியவர் என்பதை அறியமுடிகிறது. திருவாலந்துறையைச் சேர்ந்த இப்பெருமகனாரே "கொல்லிப்பெரியான்" என்ற பெயரில் இத்திருச்சுற்றாலையையும் எடுப்பித்துள்ளார். சுந்தர சோழர் காலத்ததாகக் கருதத்தக்க இக்கல்வெட்டின் துணையால்

12. 'இப்பூப்பலகை களஆய்வின்போது கண்டுபிடிக்கப் பட்டதாகும். இதிலுள்ள கல்வெட்டு சோழர்க்கும் சேரர்க்கும் இருந்த உறவின் நெருக்கத்தைக் காட்டுவதாக அமைந் துள்ளதோடு திருச்சுற்று மாளிகையின் காலத்தையும் நிர்ணயிக்க உதவுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்திருச்சுற்று மாளிகை முற்சோழர் காலத்தே எடுக்கப்பட்ட உண்மை தெளிவாகிறது. பின்னாளில் இது திருப்பணிகளுக்கு ஆளானமை, இன்றுள்ள கட்டட அமைப்பாலும் இங்குள்ள விசயநகரக் காலத்துக் கல்வெட்டுகளாலும் உறுதிப்படுகிறது.

ஆ. சுற்றுமாளிகையின் மேற்குப்பகுதி

மேற்கு மாளிகைப்பத்தி பல திருமுன்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் திருமுன், கருவறையும் முகமண்டபமும் கொண்டமைந்துள்ளது. கருவறையுள் கபோதபந்தத் தாங்குதளத்துடன் கூடிய மேடையொன்று அமைக்கப்பட்டுள்ளது. தற்போது வெறுமையாக இருக்கும் இந்திருமுன்னில் முன்பு சோமாஸ்கந்தரின் செப்புத்திருமேனி இருந்ததாகக் கோயிலார் கூறுகின்றனர். இத்திருமுன்னின் கூரைக்கு மேலே வேசர கிரீவமும், சிகரமும் காட்டப்பட்டுள்ளன. இத்திருமுன்னின் கருவறை வாயில் நிலைக்கால்களில் நாகபந்தமும் தாமரைவரியும் காட்டப்பட்டுள்ளன. வாயிலின் வெளியே வாயில் முழுவதற்குமாய் 13.5 செ.மீ. அகலத்தில் சட்டமிழைத்துப் பூப்பதக்கங்களால் அழகுபடுத்தியுள்ளனர். முகமண்டப வாயில் நிலைக்கால்களிலும் நாகபந்தம் காணப்படுகிறது.

கருவறை மட்டும் கொண்டுள்ள இரண்டாம் திருமுன்னின் வாயிற்கால்களிலும் நாகபந்தம் உள்ளது. கருவறையுள் பின் சுவரையொட்டிக் கபோதபந்தத் தாங்குதள அமைப்பிலான மேடை காட்டப்பட்டுள்ளது. இத்திருமுன்னும் வெறுமையாக உள்ளது. இவ்விரண்டு திருமுன்களுமே, கீழிருந்து மாளிகைப்பத்திக்கு வர வாய்ப்பாகப் படியமைப்பு கொண்டுள்ளன. திருமுன்னுக்கு முன்னுள்ள படியமைப்பு யானைத் துதிக்கை போன்ற பிடிச்சுவருடன் உள்ளது. இவ்விரு திருமுன்களும் பதினான்காம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட திருப்பணிகளாகலாம்.

மூன்றாம் திருமுன்னில் லிங்கத்திருமேனியும் தெற்குப் பார்வையாய்ப் பிற்காலத்து அம்மன் ஒருவரும் நிறுவப்

பட்டுள்ளனர். அம்மன் பின்கைகளில் பாசமும் அங்குசமும் கொண்டு முன்கைகளில் காப்பும் அருளும் காட்டி விசாலாட்சி என்ற திருப்பெயருடன் எழுந்தருளியுள்ளார். இறைவன் விசுவநாதர் என்று அழைக்கப்படுகிறார்.

நான்காம் திருமுன்னில் வலப்புறம் தெய்வானையும் இடப்புறம் வள்ளியுமாய்க் காட்சியளிக்கும் முருகப்பெருமானின் பின்கைகளில், இடப்புறம் அக்கமாலை; வலப்புறம் வஜ்ரம்; முன்கைகளுள் வலக்கை அபயம் காட்ட, இடக்கை ஊருஅஸ்தமாய் அமைந்துள்ளது. கரண்ட மகுடமும் சன்னவீரமும் கொண்டு வீரத்திருமகனாய் நிற்கும் முருகனின் இருபுறமும் பக்கத்திற்கொருவராய் வள்ளியும் தெய்வானையும் ஒரு கையில் மலரேந்தி, மறு கையை நெகிழ்த்தி நிற்கின்றனர். முருகனின் திருமேனி சோழர் காலத்ததாகலாம்.

இத்திருமுன்னும் முதல் திருமுன் போலவே கூரைக்கு மேலே வேசர அமைப்பிலான கிரீவமும் சிகரமும் கொண்டுள்ளது. கிரீவ சிகரத்தின் மகாநாசிகைக் கோட்டங்களில் தென்புறம் தென்திசைக் கடவுளாய்ச் சிவபெருமானும் வடபுறம் நான்முகனும் கிழக்கில் முருகனும் காட்டப்பட்டுள்ளனர். மேற்குக் கோட்டம் வெறுமையாக உள்ளது.

ஐந்தாம் திருமுன் மூன்று வாயில்களுடன் மிக நீளமாய் அமைந்துள்ளது. இதனுள் சம்புகேசுவரர், அண்ணாமலையார், காளத்திநாதர், சிதம்பரநாதர் என்னும் பெயர்களிலமைந்த நான்கு லிங்கத் திருமேனிகளும் கஜலட்சுமி சிற்பமும் அமைந்துள்ளன. கஜலட்சுமி சிற்பம் அமைந்திருக்கும் இடத்திற்கும் நேரே ஒரு வாயிலும் அந்த வாயிலையடையக் கீழிருந்து தனியே நான்கு படிகளும் காட்டப்பட்டுள்ளன. கஜலட்சுமி சிற்பம் பிற்காலத்தது. லிங்கத்திருமேனிகளின் காலத்தை அறியக் கூடவில்லை.

மேற்கு மாளிகைப்பத்தியில் அமைந்துள்ள இந்த மூன்றாம், நான்காம், ஐந்தாம் திருமுன்கள் முதலிரண்டு திருமுன்களுக்குக் காலத்தால் பிற்பட்டவை. கட்டமைப்புக்

கொண்டு இத்திருமுன்களின் காலத்தைப் பதினேழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகக் கொள்ளலாம். வடசுற்று மாளிகை, கட்டட அமைப்போ மேடையமைப்போ இன்றி வெறுமையாக உள்ளது. இதன் ஒரு பகுதியில் சிதைந்த மரங்கள் போடப்பட்டுள்ளன. இப்பகுதியின் வடகிழக்கு மூலையில் கற்பலகையொன்று உள்ளது. இதில் காணப்படும் கல்வெட்டு இதைத் திருமாலைக்கல் என்று குறிப்பதுடன் இதைத் தந்தவராகப் பாப்பி ரெட்டியார் பெயரையும் தருகிறது.[13]

மையக் கோயிலைச் சுற்றி எட்டுப் பரிவாரக் கோயில்களை அமைக்கும் பழக்கம் சோழர் காலத்தில் வழக்கிலிருந்தது. ஆலந்துறையார் கோயிலிலும் இப்பழக்கம் பின்பற்றப்பட்டமைக்கு இக்கோயிலின் வெளிச்சுற்றுச் சுவரில் கிடைத்த துண்டுக்கல்வெட்டு சான்றாகின்றது.[14] இங்கிருந்த அட்டபரிவாரத் தெய்வங்களுக்கு விளக்கெரிக்கத் தரப்பட்ட கொடையைச் சுட்டும் இக்கல்வெட்டு பத்தாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இக்கோயில் கற்றளியாக்கப்பட்ட காலத்திலேயே இங்கு அட்டபரிவாரத் திருமுன்களும் அமைக்கப்பட்டமை உறுதிப்படுகிறது.

இச்சுற்றுப் பரிவாரத் திருமுன்களுள் சண்டேசுவரர், முருகன், கஜலட்சுமி ஆகியோரின் திருமுன்களே இன்று பார்வைக்குக் கிடைக்கின்றன. தெற்கு மாளிகைப்பத்தியின் தென்மேற்கு மூலையில் இருக்கும் பிள்ளையார் சிற்பத்தைச் சோழர் வடிவமாகக் கொள்ளலாம். பிள்ளையார் திருமேனி இருக்கும் இவ்விடத்தில் கோயிலமைப்பு இல்லை. சுற்றுமாளிகையின் தென் மேடையிலுள்ள சிற்பங்களுள் சில சோழர் காலத்தவை. அவற்றுள் அன்னையர் எழுவர் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. அவை பரிவாரத் தெய்வங்களாகச்

---

13. இப்பலகைக் கல் களஆய்வின்போது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டதாகும்.
14. இது களஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட துண்டுக் கல்வெட்டாகும்.

சுற்றுமாளிகைத் திருமுன்னொன்றில் இடம்பெற்றிருந்திருக்க வேண்டும். உள் திருச்சுற்றின் கிழக்குப் பகுதியில் காணப்படும் சூரியன், சந்திரன், பைரவர் ஆகிய சோழர் காலச் சிற்பங்களும் ஒரு காலத்தில் இவ்வளாகத்திலிருந்த பரிவாரக் கோயில்களுக் குரியனவே எனத் துணியலாம்.

சண்டேசுவரர் திருமுன்

சண்டேசுவரர் திருமுன் உபானம், ஜகதி, கண்டம், மகாவாஜனம் ஆகிய உறுப்புகளோடு கூடிய துணைத்தளத்தின் மீது அமைந்துள்ளது. இத்துணைத்தளத்தின் மேல் உள்ளடங்கிய நிலையில் கம்பொன்று காணப்படுகிறது. அதன்மீது நாற்புறமும் நான்முக அரைத்தூண்களோடு கூடிய சுவர். போதிகைகளற்ற இத்தூண்களின் மீது சிறு வாஜனமும் வலபியும் அமைய, மேலே கபோதம். வலபி வரை கருங்கல்லாலான இக்கட்டடத்தின் மேற்பகுதி செங்கல் மற்றும் காரையால் அமைக்கப்பட்டுள்ளது. கபோதத்தின் மேலுள்ள வேதிகையின் நாற்புறமும் நந்திகள் அமர, கிரீவமும் சிகரமும் வேசரமாய் உள்ளன. கிரீவ நாசிகைகளில் சண்டேசுவரர், சுகாசனத்தில், சிதைந்த சுதை வடிவாய்க் காணப்படுகிறார். சிகரத்தின் மேலே தூபி காட்டப்பட்டுள்ளது. திருமுன்னுள் பிற்காலத்துச் சண்டேசுவரர் திருமேனியொன்று இடம் பெற்றுள்ளது.

மையக் கோயில்

கருவறை, முகமண்டபம், மகாமண்டபம் எனக் கிழக்குப் பார்வையாய் அமைந்துள்ள மையக் கோயிலின் நுழைவாயில் உள்திருச்சுற்றின் மண்டபப் பகுதியில் தொடங்குகிறது.

அ. மகாமண்டபம்

மகாமண்டபத்தின் தாங்குதளம் பத்ம உபானம், கம்பு, ஜகதி, ஊர்த்வ பத்மவரி, கம்பு, அதபத்மவரி, உருள் குமுதம், ஊர்த்வ பத்மவரி, கம்புகளின் தழுவலில் பாதங்களோடு கூடிய கண்டம், கபோதம் எனக் கபோதபந்தமாக அமைந்துள்ளது.

இத்தாங்குதளத்தின் மீது துணைக்கம்பும் அதன்மேல் நான்முக அரைத்தூண்களோடு கூடிய சுவரமைப்பும் காட்டப் பட்டுள்ளன. வட, தென் சுவர்களில் பக்கத்திற்கு இரண்டென ஆழமான தேவகோட்டங்கள். கிழக்குச் சுவரில் மகாமண்டப வாயிலின் இருபுறமும் பக்கத்திற்கொன்றென இரு தேவகோட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. இக்கோட் டங்களின் அணைவுத் தூண்களும் நான்முக அரைத் தூண்களே. இத்தூண்களின் விரிகோணப் போதிகைகள் கோட்ட உத்திரம் தொட, மேலே சிறு வாஜனமும் வலபியும் கூடுகளுடன் கூடிய கபோதமும் காட்டப்பட்டுள்ளன. கபோதத்திற்கு மேலே பூமிதேச அமைப்பும் அதற்கு மேல் ஒரு கண்டப்பகுதியும் அமைந்துள்ளன.

சுவர்களின் நான்முக அரைத்தூண்கள், தள உத்திரம் தாங்க, மேலே வாஜனமும் வலபியும். வலபியில் பூதவரி காணப்படுகிறது. இதன்மேல் கூரையின் வெளியிழுப்பாய்க் கூடுகளோடு கூடிய கபோதம். கிழக்குமுக வலபி சிதைந்துள்ளது. மகாமண்டப வாயிலின் தென்புறம் இரண்டு கணங்களும் வடபுறம் இரண்டு கணங்களும் மட்டுமே இவ்வலபியில் காணப்படுகின்றன. எஞ்சிய வலபிப்பகுதி எந்தவிதமான வரியமைப்பும் இல்லாது உள்ளது. வாயிலுக்கு மேற்பட்ட பகுதியில் இவ்வரியமைப்பு பெருஞ்சிதைவுக் காளாகியுள்ளது.

மகாமண்டபக் கோட்டங்களில் தென்புறம் ஆனந்தத்தாண்டவரும் யானையை அழித்தவரும் அமைய, வடபுறம் இயமனை அழித்தவரும் அம்மையப்பரும் காட்டப்பட்டுள்ளனர். கிழக்குக் கோட்டங்களில் மணவழகரும் கங்காளரும் காணப்படுகின்றனர். மகாமண்டபத்தின் கிழக்குமுகத்தில் உள்திருச்சுற்று மண்டபப்பகுதியின் தரையமைப்பு உயர்த்தப்பட்டிருப்பதால், கபோதபந்தத்

தாங்குதளத்தின் குமுதத்திற்கு மேற்பட்ட அடுக்குகளை மட்டும் காணமுடிகிறது. அதற்குக் கீழமைந்துள்ள ஜகதி, உபானம் போன்ற உறுப்புகள் உயர்த்தப்பட்ட தரையமைப்புக்குள் சிக்கிப் புதைந்துபோயுள்ளன.

இம்மகாமண்டபமும் இதன் கோட்டங்களிலுள்ள சிற்பங்களும் முற்சோழர் காலத்தவை. இங்குள்ள இரண்டு கல்வெட்டுகள்[15] இக்கோயில் உத்தம சோழரின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் (கி.பி.978) மறவன் கண்டனால் கற்றளியாக் கப்பட்டதாகத் தெரிவிக்கின்றன. உத்தம சோழர் காலப் பணியான இம்மண்டபம் பின்னாளில் சிதைவுற்றுத் திருப்பணிகளுக்கு ஆளாகியுள்ளமை, தாங்குதளத்திற்கு மேற்பட்ட இதன் கட்டட அமைவில் இன்று காணப்படும் மாறுதல்களாலும், இதன் கோட்டச் சிற்பங்களுக்கு நேர்ந்துள்ள பாதிப்புகளாலும் தெளிவாய்த் தெரியவருகிறது.

இம்மகாமண்டபத்தின் உட்புறத்தே தென், வட பக்கங்களில் பக்கத்திற்கு மூன்றென ஆறு தூண்களும் தென், வட சுவர்களில் புதைந்த நிலையில் ஆறு அரைத்தூண்களும் காணப்படுகின்றன. இவை சுற்றுமாளிகைத் தென்புறத் தூண்கள் போலவே மூன்று சதுரங்களும் சதுரங்களுக்கு இடையிலான இரண்டு கட்டுகளும் கொண்டுள்ளன. இந்திரகாந்தமாய் உள்ள கட்டுகளுக்கு மேலும் கீழும் பத்மகட்டுகள் காணப்படுகின்றன. இரண்டு தூண்கள் தவிர ஏனைய அனைத்தும் விரிகோணப் போதிகைகள் கொண்டு உத்திரம் தாங்குகின்றன. உத்திரத்தின் மேல் வாஜனம், வலபி, கூரை.

கிழக்கு மேற்காக 7.08மீ. நீளமும் தென் வடலாக 4.90மீ. அகலமும் கொண்டுள்ள மகாமண்டபத்தின் வடபுறத்தே மூன்றடுக்கு மேடையொன்று கட்டப்பட்டுள்ளது. இம்மேடையடுக்குகளில் இக்கோயில் சார்ந்த அறுபத்துமூவர் திருமேனிகளும் பிற செப்புத்திருமேனிகளும் நிறுத்தப்

15. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள், 296-297.

பட்டுள்ளன. தென்புறத்தே சற்று வெளிப் பிதுக்கமாய் நீண்டுள்ள சுவரருகே மற்றொரு திண்ணை. அதன்மீதும் செப்புத்திருமேனிகள். மண்டபத்தின் நடுவே கிழக்கிலிருந்து மேற்காகப் பலித்தளம், நந்தி, சதுரமான கற்பலகை ஆகியன காணப்படுகின்றன. 99.5 செ.மீ. பக்கமுள்ள இந்தக் கற்பலகையின் மீது கல்வெட்டொன்று காணப்படுகிறது. இதைப் புண்ணியாவசனக் கல்லு என்று அழைக்கும் கல்வெட்டு இதை அளித்தவராகப் பாப்புரெட்டியாரை அறிமுகப்படுத்துகிறது.

மகாமண்டபத்தின் வடபுறத்தே தவமிருந்த அம்மன் தென்பார்வையாய் எழுந்தருளியுள்ளார். இவரைச் சுற்றிலும் மகர திருவாசி.

ஆ. முகமண்டபம்

முகமண்டபம், கருவறை இரண்டும் ஒரே விதமான பாதபந்தத் தாங்குதள அமைப்புக் கொண்டுள்ளன. உபானத்தில் தொடங்கும் இத்தள அமைப்புப் பட்டிகையில் முடிகிறது. இடையில் மூன்று ஊர்த்வ பத்மவரிகளும் இரண்டு அத்பத்மவரிகளும் இரண்டு கம்புகளும் தள அமைப்பின் தலைமையுறுப்புகளுக்கு இடையில் அமைந்து, தளத்தின் உயரத்திற்குக் காரணமாகியுள்ளன. தலைமையுறுப்புகளாக உபானத்திற்கு மேல் ஜகதியும், உருள் குமுதமும், மேலும் கீழும் கம்புகள் கொண்டு பாதங்களோடு அமைந்த கண்டமும் இணைக்கப்பட்டுள்ளன. பட்டிகைக்கு மேல் ஓர் ஊர்த்வ பத்மவரியும் அதன் மேல் துணைக்கம்பும் காட்டப்பட்டுள்ளன. இத்துணைக்கம்பின் மீதே நான்முக அரைத்தூண்களுடன் கூடிய சுவர் எழுகிறது.

முகமண்டபத்தின் வடசுவரிலொன்றும் தென் சுவரிலொன்றுமாய் இரண்டு தேவகோட்டங்கள் உள்ளன. இவற்றுள் தென்கோட்டத்தில் பிள்ளையாரும் வடகோட்டத்தில் கொற்றவையும் காட்டப்பட்டுள்ளனர். இக்கோட்டங்களின் அணைவுத் தூண்களும் நான்முக அரைத்தூண்களாய் அமைந்துள்ளன. உரிய மேலுறுப்புகளுடன் கூடிய சுவர்த்

தூண்கள் தரங்கப் போதிகைகள் கொண்டு உத்திரம் தொடுகின்றன. உத்திரத்தின் மீது வாஜனமும் வலபியும் காட்டப்பட்டுள்ளன. வலபியில் பூதவரி செதுக்கப்பட்டுள்ளது. அடர்த்தியான சுதைப்பூச்சால் இப்பூதகணங்களின் செயற்பாடுகள் அறியுமாறில்லை. மேலே கூரையின் முன்னிழுப்பாய்க் கபோதம். கபோதக்கூடுகளில் முப்புர அழிப்பு, காளிங்க நர்த்தனம், குடக்கூத்து, இயமனை அழித்தமை, சிவபெருமானின் பிட்சாடனர் கோலம் போன்ற காட்சிகள் சிற்றுருவச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

முகமண்டபத்தின் நுழைவுவாயில், மேல், கீழ் நிலைகள் மற்றும் நிலைக்கால்கள் கொண்டுள்ளது. நிலைக்கால்களின் விளிம்பில் தாமரை இதழ்கள் காட்டப்பட்டுள்ளன. மேல்நிலைக்கு மேலாகக் கண்டப்பகுதியொன்று பாதங்களோடு காட்டப்பட்டுள்ளது. அதற்கும் மேலே பள்ளிகொண்ட பெருமாளின் சிற்பம் காணப்படுகிறது. வாயிலின் இருபுறத்தும் வாயிற்காவலர்கள் காட்டப்பட்டுள்ளனர்.

தென்வடலாக 2.25மீ. நீளமும் கிழக்கு மேற்காக 1.99மீ. அகலமும் கொண்டுள்ள முகமண்டபத்தின் உட்புறத்தே இரு தூண்கள் உள்ளன. தாமரை இதழ்களாலான சதுர பாதத்தின் மீது எழும் இத்தூண்களின் கீழ்ப்பகுதியும் சதரமாய் உள்ளது. இதன்மீது விஷ்ணுகாந்தமாய் எழும் உடலமைப்பில் பத்மகட்டு, கலசம், தாடி, கும்பம், கண்டம், பாலிகை, பலகை, வீரகண்டம் ஆகியன காட்டப்பட்டுள்ளன. இவற்றின் போதிகைகள் விரிகோணத்தில் திரும்பி உத்திரம் தாங்குகின்றன. மேலே வாஜனமும் வலபியும் காட்டப்பட்டுள்ளன. போதிகைகளின் கீழ்க்கைகள் மேற்கைகளைவிடப் பெரியதாக உள்ளன.

இ. விமானம்

4.48மீ. பக்க அளவுடன் சதுரமாய் அமைந்திருக்கும் இந்த இருதள விமானத்தின் புறச்சுவர்கள் மூன்று பத்திகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளன. நடுவிலமைந்துள்ள சாலைப்பத்தி பக்கங்களிலுள்ள கர்ணபத்திகளை விட நன்கு முன்னோக்கி

அமைந்துள்ளது. முகமண்டபம் போன்றே, அதே உறுப்புகளுடன் கூடிய பாதபந்தத் தாங்குதளத்துடன் எழும் இப்பத்திகளின் சுவர்களில் தூண்கள் ஏதும் இல்லை.

சாலைப்பத்திகளின் நடுவே முத்திசைகளிலும் கோட்டம் அமைத்துத் தெய்வத்திருமேனிகளை நிறுவியுள்ளனர். தென்புறம் ஆலமர் அண்ணலும் மேற்கில் லிங்கோத்பவரும் வடபுறத்தே நான்முகனும் இக்கோட்டங்களில் இடம்பெற் றுள்ளனர். இக்கோட்டங்களின் அணைவுத் தூண்கள் சிறிய அளவிலான நான்முக அரைத்தூண்களாகப் பத்மகட்டிலிருந்து மேலுறுப்புகள் அனைத்தும் பெற்று அமைந்துள்ளன. இவற்றின் போதிகை தொடும் உத்திரத்திற்கு மேல் வாஜனமும், வலபியும், அதன் மேல் மகரதோரணமும் காட்டப்பட்டுள்ளன. இம்மகரதோரணங்களில் தென்புறம் நடராசரும் மேற்கில் நரசிம்மரும் வடபுறத்தே யானையை அழித்த மூர்த்தியும் சிற்றுருவச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

சாலைப்பத்திகளின் அணைவுத் தூண்கள் சதுர பாதத்தின் மீதெழும் விஷ்ணுகாந்தத் தூண்களாக அமைந்துள்ளன. இவற்றின் பலகைகளுக்கு மேல் நின்ற நிலையிலான யாளிகள் கபோதம் வரை காட்டப்பட்டுள்ளன. இத்தூண்களிலிருந்து கிளைக்கும் குளவுடன் கூடிய தரங்கப் போதிகைகள் நடுவில் பட்டை பெற்று உத்திரம் தொடுகின்றன. மேலே வாஜனமும் பூதவரி செதுக்கப்பெற்ற வலபியும் சுதையால் அலங்கரிக்கப்பட்ட கூரையின் முன்னிழுப்பான கபோதமும் அமைந்துள்ளன. சாலைப்பத்திக்கான கபோதப் பகுதியில் இரண்டு கூடுகள், உச்சியில் சிம்மமுகம் பெற்றுக் குழிவுப் பகுதியில் பூப்பதக்கங்களுடன் காணப்படுகின்றன.

விமானத்தின் கர்ணபத்திகளில் பஞ்சரங்கள் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு பஞ்சரமும் இருநான்முகக் கால்களைக் கொண்டுள்ளது. இந் நான்முகக்கால்கள் (அரைத்தூண்கள்) பாதபந்தத் தாங்குதளத்தின் உருள் குமுதத்தின் மீதிருந்து தொடங்குகின்றன. உருள்குமுதத்தின் மீதுள்ள பத்மவரிக்கு மேலாகக் காணப்படும் அனைத்துத்

தாங்குதள உறுப்புகளையும் ஊடறுத்து எழும் இத்தூண்கள், இடைக்கட்டு, பத்மகட்டு, கலசம், தாடி, கும்பம், பாலிகை, பலகை, வீர கண்டம் என்னும் மேலுறுப்புகளோடு விரிகோணப் போதிகைகள் வழி உத்திரம் தாங்குகின்றன. மேலே வாஜனம், வலபி, கபோதம். ஒவ்வொரு பஞ்சரத்திற்கும் இரண்டு கூடுகளுடன் அமைந்த கபோதம் காட்டப்பட்டுள்ளது. அதன் மூலைகளில் கோடிப்பாளையும் கீழிறக்கத்தில் விளிம்பு மடிப்பும் காட்டப்பட்டுள்ளன. மேலே சிறிய அளவிலான பூமிதேசமும் வேதிகையும் காணப்படுகின்றன. தாமரை வடிவில் சிகரம் மற்றும் தூபி ஆகியன வடிவமைக்கப் பட்டுள்ளன.

சுவர்த் திருப்பங்களில் உள்ள விஷ்ணுகாந்த அரைத்தூண்கள் . உள்மண்டபத் திருப்பங்களில் அமைந்திருப்பன போலவே எழிலுற வடிக்கப்பட்டுள்ளன. குளவுடன் கூடிய இவற்றின் தரங்கப் போதிகைகள் தொடும் உத்திரத்தின் மேல் வாஜனமும் வலபியும். வலபியில் காணப்படும் பூதவரி குறிப்பிடும்படியாக இல்லை. மேலே உள்மண்டபம் போலவே அமைந்த கபோதம். கபோதத்திற்கு மேலே பூமிதேசமும் வேதிகையும் அதன் மீது கிரீவமும் உள்ளன.

கிரீவ தளமாய் உள்ள வேதிகையின் மீது நான்கு திசைகளிலும் அமர்ந்த நந்திகள் காட்டப்பட்டுள்ளன. கிரீவமும் அதன் மீதமர்ந்துள்ள சிகரமும் திராவிட முறையில் பட்டைகள் கொண்டமைய, கிரீவ மகாநாசிகைகள் நான்கு திசைகளிலும் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் கோட்டங்களில் தென்புறம் ஆலமர் அண்ணலும் மேற்கில் தேவியருடன் விஷ்ணுவும் வடக்கில் தேவியருடன் நான்முகனும் கிழக்கில் தேவியருடன் முருகனும் எழுந்தருளியுள்ளனர். இடைப்பட்ட கிரீவ பகுதியில் சிவபெருமானின் பல்வேறு திருத்தோற்றங்கள், அமர்ந்த மற்றும் நின்ற கோலங்களில் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் பல சிதைந்துள்ளன. சிகரத்தின் மீதுள்ள தூபி தாமரைத்தளத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

விமானத்தின் உட்புறத்தே 2.24மீ. பக்கமுள்ள சதுரமாக அமைக்கப்பட்டிருக்கும் கருவறையின் நடுவில் லிங்கத்திருமேனி, ஆலந்துறையார் என்ற பெயருடன் எழுந்தருளுவிக்கப் பட்டுள்ளது. இக்கருவறையின் வாயில் முகமண்டப வாயில் போலவே அமைந்துள்ளது.

2. சிற்பங்கள்

கோட்டச் சிற்பங்கள்

அ. கருவறைக் கோட்டச் சிற்பங்கள்

ஆலமர் அண்ணல்

கருவறையில் தென்புறக் கோட்டத்தில் ஆலமர் அண்ணலாய் வீராசனத்தில் சிவபெருமான் வீற்றிருக்கிறார். பின்கைகளில் அக்கமாலையும் தீச்சுடரும். தலைமுடியைச் சடைபாரமாய் இருபுறமும் விரித்துத் தொங்கவிட்டுள்ளார். பத்ர பீடத்தில் அமர்ந்துள்ள பெருமானின் வல முன்கை அபயக் குறிப்புக் காட்ட, இட முன்கை தொடை மீது இருத்தப் பட்டுள்ளது. வலச்செவியில் மகர குண்டலமும் இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் அணிந்து முப்புரிநூல், உதரபந்தம், அளவான அணிகலன்கள் என இளநகையோடு இருக்கும் ஆலமர் அண்ணலின் பின்னால் கல்லால மரம். மரத்தின் இடப்புறக் கிளையொன்றில் பொக்கணப்பை.[16]

---

16. இப்பொக்கணப் பை சிறப்புக்குரியதாகும். தேவாரத் திருப்பதிகங்களிலேயே இடம்பெற்றுவிடும் இப்பையை ஆலமர் அண்ணலுடன் தொடர்புடையதாக முதல்முறையாக முற்சோழர் கோயில்களிலேயே காணமுடிகிறது. தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்துக் கல்வெட்டொன்று இக்கோயிலுக்களிக் கப்பட்ட தட்சிணாமூர்த்தித் திருமேனியுடன் பொக்கணப் பையும் சேர்த்தளிக்கப்பட்டதாகக் கூறுகிறது. - இரா. கலைக்கோவன், பொக்கணம், கட்டுரை, கலைமகள், (திங்களிதழ்), டிசம்பர் 1992.

இலிங்கோத்பவர்

மேற்குத் தேவகோட்டத்தில் லிங்கோத்பவர் வடிவம்[17] காட்டப்பட்டுள்ளது. தூணாய்த் தீத்திரளாய் நான்முகனுக்கும் விஷ்ணுவுக்கும் இறைவன் காட்சியளித்த கோலம் இது.

லிங்கமேனியின் நடுவே ஒரு கோளத்திறப்பு. அதில் தலைமுதல் முழங்கால் வரையிலுமாய்ச் சிவபெருமானின் நின்ற திருக்கோலம். பின்கைகளில் மழுவும் மானும். இட முன்கை ஊரு அஸ்தமாய் உள்ளது; வல முன்கை சிதைந்துள்ளது; மேற்கைகளில் நாக கங்கணங்களும் மணிக்கட்டுகளில் வளைகளும் கொண்டுள்ள பெருமானின் வலச்செவியில் மகர குண்டலம்; இடச்செவியில் பனையோலைக் குண்டலம்; சடை மகுடமும் புலிமுகப் பதக்கம் கோத்த அரைப்பட்டிகையும் முப்புரிநூலும் கொண்டவராய் நிற்கும் அண்ணலின் மேற்புறம் அன்னமாய் நான்முகன். கீழே நிலத்தைத் தோண்டும் வராகமாய் விஷ்ணு. கோட்டத்தின் இருபுறமும் உள்ள சுவர்ப்பகுதியில் சிறிய வடிவினராய் விஷ்ணுவும் நான்முகனும் காட்டப் பட்டுள்ளனர். வலப்புறமுள்ள நான்முகன், பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் கொண்டு, வலமுன்கையால் போற்றி, இடமுன்கையை ஊரு அஸ்தத்தில் கொண்டு நிற்கிறார். விஷ்ணுவோ பின்கைகளில் சங்கும் சக்கரமும் கொண்டு, இட முன்கையை ஊரு அஸ்தமாய்க் கொண்டு

---

17. இலிங்கோத்பவர் வடிவத்தை முதல்முறையாகப் பாண்டியர், முத்தரையர் குடைவரைகளிலேயே காணமுடிகிறது. குன்றக்குடிக் குடைவரையொன்றிலும் பிள்ளையார்பட்டிக் குடைவரையிலும் திருமெய்யம் சிவன் குடைவரையிலுமே லிங்கோத்பவர் வடிவத்தின் தொடக்கக் காலத் தோற்றங்களைக் காணமுடிகிறது. பல்லவர் கற்றளிகளில் லிங்கோத்பவர் இடம்பெற்றாலும், கருவறையின் மேற்குக் கோட்டத்தில் அத்திருமேனி பெருமளவில் இடம்பெறுமாறு செய்த பெருமை சோழர்களையே சேரும். முதலாம் பராந்தகர் மற்றும் அவருக்குப் பிற்பட்ட சோழமன்னர்களின் காலத்தில் மேற்குக் கோட்டத்தில் இலிங்கோத்பவரை இடம்பெறச்செய்வது பெருவழக்காயிற்று.

வல முன்கையால் போற்றுகிறார். இருவருமே கணுக்கால் வரையிலான பட்டாடையும் தேவையான இடங்களில் அணிகலன்களும் அணிந்துள்ளனர். விஷ்ணு கிரீடமகுடம் கொள்ள, நான்முகன் சடைமகுடம் ஏற்றுள்ளார்.

நான்முகன்

கருவறை வடகோட்டத்தில் தாமரைத்தளத்தின் மீது சமபாதராய் நின்ற கோலத்தில் காட்சிதரும் நான்முகனின் பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும். வல முன்கை காக்கும் குறிப்பிலிருக்க, இட முன்கை ஊருஅஸ்தமாய் உள்ளது. கணுக்கால்வரை வரிவரியாய் நெளிந்து இறங்கும் பட்டாடை. சடையைச் சுற்றிக்கட்டி மகுடமாய்க் கொண்டுள்ளார். செவிகளில் மகர குண்டலங்கள். இடையில் புலி முகம் கோத்த அரைப்பட்டிகை; கழுத்தில் கண்டிகை.

ஆ. முகமண்டபக் கோட்டச் சிற்பங்கள்

பிள்ளையார்

முகமண்டபத் தென்புறக் கோட்டத்திலிருக்கும் பிள்ளையார்[18] தாமரைத்தளத்தில் லளிதாசனத்தில் இட முன்கையில் மோதகமும் பின்கையில் அக்கமாலையும் கொண்டு அமர்ந்துள்ளார். வல முன்கை கடகமாய் உடைந்த தந்தத்தைப் பற்றியுள்ளது. வலப் பின்கை, கருவிகளோ பொருள்களோ எதுவும் கொள்ளாது வெறுமையாக உள்ளது. இடம்புரியாய் உள்ள துதிக்கையில் மோதகம். கரண்ட மகுடமும் முப்புரிநூலும் கொண்டுள்ள இவரது உடலில் வழக்கத்திற்கு மாறாகப் பாதி வயிற்றின் மேல் ஒன்றும், வயிற்றின் மேல் ஒன்றுமாய் இரண்டு உதரபந்தங்கள். மேற்கைகளில் கங்கணங்கள், மணிக்கட்டருகே வளைகள்,

---

18. முகமண்டபத்தின் தென்புறக் கோட்டத்தில் பிள்ளையாரை இருத்தும் பழக்கம் பல்லவர் காலத்தில் தொடங்கப் பெற்றதாகும். முதலாம் பராந்தகரின் கோயில்களில் இப்பழக்கம் கால்கொண்டுவிட்டதைப் புள்ளமங்கை ஆலந்துறையார் கோயிலில் காணமுடிகிறது.

பாதங்களில் தாள்செறி, கழுத்தில் கண்டிகை என அணிகலன்கள் பூண்டு, அமர்ந்திருக்கும் இவரது தலைப்பகுதியின் மேலே குடையும் அதன் இருபுறமும் கவரிகளும் காட்டப்பட்டுள்ளன.

கொற்றவை

முகமண்டப வடபுறக்கோட்டத்திலுள்ள கொற்றவை,[19] எண்கரத்தராய் மகிடத்தலை மீது நிற்கிறார். கரண்ட மகுடம், மகர குண்டலங்கள், கங்கணங்கள், வளைகள், கண்டிகை என அணிவகைகள் உடலின் பல்வேறு பாகங்களையும் அணிசெய் கின்றன. வலக்கைகளுள் முன்கை உடைந்துள்ளது. பின்கை களில் கீழிருந்து மேலாக அம்பு, வாள், சக்கரம் கொண்டுள்ளார். இட முன்கை ஊருஅஸ்தமாக உள்ளது. பின்கைகளில் வில், கேடயம், சங்கு கொண்டுள்ளார். கொற்றவையின் தலைக்கு மேல் குடை காட்டப்பட்டுள்ளது. ஆனால் கவரிகள் இல்லை.

---

19. முகமண்டபத்தின் வடபுறக் கோட்டத்தில் கொற்றவையை இடம்பெறச் செய்வது முற்சோழர் காலத்தில் மேற்கொள்ளப் பட்ட ஒரு வழக்காகும். ஆனால் விமானக் கீழ்த்தளத்தின் வடபுறச்சுவரில் கொற்றவை இடம்பெறுவதைப் பல்லவர் காலத்திலேயே பார்க்கமுடிகிறது.

காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலின் விமானக் கீழ்த்தள வடபுறச் சுவரில் கொற்றவை சிம்மவாகினியாய் இடம்பெற்றுள்ளார். மாமல்லபுரம் கொற்றவைத்தளியின் முப்புறக் கோட்டங்களிலும் மகிடாசுரமர்த்தனியாய், மகிடனை வெற்றிகொண்டு அவன் தலை மீது நிற்பவராய்க் காட்சி யளிக்கிறார். மகாவராகர் குடைவரை, மும்மூர்த்திக் குடைவரை, சிங்கவரம் குடைவரை ஆகியவற்றில் கோட்டக் கொற்றவையாய், அம்மை காட்சிதருகிறார்.

பாண்டியர் பகுதிகளில் திருச்சிராப்பள்ளிக் கீழ்க்குடை வரையிலும் குன்றக்குடிக் குடைவரையொன்றிலும் கொற்றவையைக் கோட்டத் தெய்வமாய்க் காணமுடிகிறது.

முதலாம் ஆதித்தர் காலக் கோயில்கள் சிலவற்றில்தான் முறைப்படி முகமண்டப வடபுறக் கோட்டத்தில் கொற்றவை இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாகத் திருஎறும்பியூர் எறும்பீசுவரர் கோயிலைக் குறிப்பிடலாம்.

வாயிற்காவலர்கள்

முகமண்டப வாயிலின் இருபுறத்தும் நிற்கும் வாயிற்காவலர்கள் உடலைக் கருவறைக்காய்த் திருப்பி, நேர்ப்பார்வையராய் நிற்கின்றனர். வலப்புறத்தார் மழு கொண்டிருக்க, இடப்புறத்தார் மரத்தையே பிடுங்கிக் கருவியாகக் கொண்டுள்ளார். இவர்தம் கைகள் மழு மற்றும் மரம் மீது தாங்கலாய் இருத்தப்பட்டுள்ளன. வலக் காவலரின் வலக்கை தர்ஜனி காட்ட, இடக் காவலரின் வலக்கை விஸ்மயமாய் விரிந்துள்ளது. இருவருமே ஒரு காலை உயர்த்தியுள்ளனர். இருவருக்குமே அள்ளி முடித்த சடைமகுடத்தையும் மீறி இருபுறமும் சரிந்து பரவும் சடைப்புரிகள் உள்ளன. செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். இறுகக் கட்டிய சிற்றாடையும் சிம்மமுகம் பதித்த கங்கணங்களும் கோரைப்பற்களுமாய்க் கழுத்து நிறைய அணிகலன்கள் அணிந்து காட்சிதரும் இவர்களின் கைகளில் ருத்திராக்க வளைகள் உள்ளன. இடக் காவலர் பிடித்துள்ள மரத்தைப் பாம்பொன்று சுற்றியுள்ளது.

இ. மகாமண்டபக் கோட்டச் சிற்பங்கள்

விமானத்திற்கு முன்பாகப் பெரிய அளவிலான மண்டபமொன்றினை அமைக்கும் பழக்கம் பல்லவர் காலத்திலிருந்தே வழக்கிலிருந்து வருகிறது. இப்பழக்கம் முற்சோழர் காலத்திலும் பின்பற்றப் பட்டமைக்குக் கீழையூர் தென்வாயில் ஸ்ரீகோயிலே சிறந்த சான்றாகும். ஆனால் இவ்விரு மண்டபங்களின் புறப்பகுதிகளிலுமே தேவ கோட்டங்கள் காட்டப் பெறவில்லை. இது போன்ற மகாமண்டபங்களிலும் கோட்டங்கள் அமைத்துத் தெய்வத்திரு மேனிகளை இருத்தும் பழக்கம் உத்தம சோழர் காலத்தில்தான் தொடங்கப் பெற்றதென்பதற்கு இக் கோயிலே சிறந்த சான்றாகும். இக்காலத்தில்தான் முதல்

முறையாக முகமண்டபங்களின் புறச்சுவர்களில் கோட்ட எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டது என்பதும் இங்கு நினைக்கத்தக்கது.[20]

இவ்வாறு அதிகமாக்கப்பட்ட கோட்டங்களில் இடம் பெற்ற இறைத்திருமேனிகளில் நடராசரும் அம்மையப்பரும் ஆலந்துறையார் மகாமண்டபக் கோட்டங்களிலும் இடம் பெற்றுள்ளனர். இவர்களைத் தவிர கஜசம்காரர், கங்காளர், காலாரிமூர்த்தி, கல்யாண சுந்தரேசுவரர் திருத்தோற்றங்களும் இங்கு இடம்பெற்றுள்ளன. இவற்றுள் கங்காளரும் கல்யாணசுந்தரேசுவரரும் கருந்திட்டைக்குடி வசிஷ்டேசுவரர் கோயில் கோட்டங்களில் இடம்பெற்றுள்ளனர். திருப்புறம் பியம் சாட்சீசுவர சுவாமி கோயில் தேவகோட்டமொன்றில் காலாரிமூர்த்தியைக் காணமுடிகிறது. இந்நிலையில் கஜசம்காரர் மட்டுமே உத்தம சோழர் காலத்து எழுந்த பிறகோயில்களின் கோட்டங்களில் இடம்பெறாது ஆலந்துறையார் கோயில் கோட்டத்தில் மட்டும் இடம்பெற்றுள்ளார். இது பழுவூர்க்குக் கிடைத்துள்ள தனிச்சிறப்பெனலாம். கஜசம்காரர் அவனி கந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்துத் தென்வாயில் ஸ்ரீகோயில் மகரதோரணமொன்றிலும் இதே கோயிலின் நான்முகக் கோட்டத்திற்கு மேலுள்ள மகரதோரணத்திலும் இடம் பெற்றிருப்பது இங்கு நினைக்கத்தக்கது.

ஆலந்துறையார் கோயில் மகாமண்டபத்தில் அமைந் துள்ள ஆறு கோட்டங்களுள் இரண்டு அதன் தென்சுவரிலும் இரண்டு வடசுவரிலும் உள்ளன. ஏனைய இரண்டு கோட்டங்கள் கிழக்குச் சுவரில் வாயிலையொட்டிப் பக்கத்திற் கொன்றாக அமைந்துள்ளன. பொதுவாக வாயிலையொட்டி அமையும் கோட்டங்களில் வாயிற்காப்போர் சிற்பங்களே

---

20. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச்சோழர் கலையும் சிற்பமும், ப.407.

இடம்பெறுவது வழக்கமாகும். காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் மகாமண்டபத்தில், கோட்டங்கள் இல்லையாயினும் நுழைமுகங்களில் வாயிற்காப்போரே காட்டப்பட்டுள்ளனர்.

ஆலந்துறையார் கோயிலில், இதற்கு மாறாக மகாமண்டப வாயிற்கோட்டங்களில் சிவபெருமானின் தோற்றங்கள் காட்டப்பட்டிருப்பது புதிய முறையாகும்.

இம்முறை பின்னாளிலும் பின்பற்றப்படவில்லை என்பதற்கு நடுக்காலச் சோழர் கோயில்களான இராஜராஜீசுவரமும் கங்கை கொண்ட சோழீசுவரமும் எடுத்துக்காட்டுகளாக அமையும்.

நடராசர்

முதல் தென்புறக் கோட்டத்தில் இருப்பவர் நடராசர்.[21] சிதைந்திருக்கும் இவ்வடிவத்தின் வலப்பாதம் முயலகனை அழுத்த இடப்பாதம் தூக்கிய திருவடியாய் வலப்புறம் வீசப்பட்டுள்ளது. முன்னிரு கைகள் உடைந்துள்ளன.

பின்னிரு கைகளில் உடுக்கையும் தீச்சுடரும். வலச்செவி வெறுஞ்செவியாயிருக்க இடச்செவியில் பனையோலைச் சுருள் செருகப்பட்டுள்ளது.

---

21. ஆனந்தத் தாண்டவரான நடராசரை முதல்முதலாகத் தேவகோட்டத்திற்குக் கொணர்ந்த பெருமை செம்பியன் மாதேவியாரையே சேரும். இவ்வம்மையின் காலத்திற்கு முற்பட்ட கோயில்களில் தூண்களின் சதுரங்கள், கண்டபாதங்கள், மகரதோரணங்கள், கபோதக்கூடுகள் போன்றவற்றிலேயே நடராசர் வடிவத்தைக் காணமுடிகிறது. இவ்வம்மை திருப்பணி செய்த பெரும்பாலான கோயில்களில் நடராசர் வடிவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வம்மையின் காலத்தில் தொடங்கப்பட்ட இம்மரபு நடுக்காலச் சோழர்களாலும் பின்பற்றப்பட்டமைக்குத் தஞ்சாவூர் இராஜராஜீசுவரம், கங்கைகொண்ட சோழீசுவரம் போன்ற கோயில்கள் சான்றுகளாய் அமையவல்லன.

கஜசம்காரர்

மகாமண்டபத்தின் தென் கோட்டங்களுள் இரண்டாம் கோட்டத்தில் கஜசம்காரரின் சிற்பம் காட்டப்பட்டுள்ளது.[22] வலப்பாதம் சமபாதமாகத் தரையிலிருக்க இடப்பாதம் உயர்ந்து யானையின் தலைமீது அமுத்தப்பட்டுள்ளது. இடுப்புக்குக் கீழான உடற்பகுதி வலப்புறமாய்ச் சுழன்று திரும்பியிருக்க, மேற்பகுதி நேர்ப்பார்வையாய் உள்ளது. சடைபாரத்துடன் முப்புரி நூலும் வயிற்றுக்கட்டும் கொண்டுள்ள பெருமான் எண்கரத்தவராய்க் காட்டப்பட்டுள்ளார்.

வல, இடக்கைகளுள் முதலிரு கைகளும் கிழித்திருக்கும் யானையின் தோலைப் பற்றியுள்ளன. வலப்பின்கைகள் யானைத் தந்தமும் அம்பும் கொள்ள, இடப் பின்கைகளில் ஒன்று தலையோடு கொண்டுள்ளது. மற்றொரு கை சுட்டு முத்திரையில் காட்டப்பட்டுள்ளது. வழக்கமாக யானையை அழித்தவரின் இடப்புறம் உமையும் முருகனும் காட்டப்படுவது மரபு. இங்கு மூர்த்தி மட்டுமே இருக்கிறார்.

---

22. கஜசம்காரமூர்த்தி பல்லவர் கற்றளிகளிலேயே இடம்பெற்றுவிட்ட திருத்தோற்றமாகும். காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் முதல்முறையாக இத்திருத் தோற்றத்தைப் பார்க்கமுடிகிறது. முற்சோழர் காலக் கோயில்களில் இச்சிற்பம் கண்டபாதச் சிற்பமாகவும் மகரதோரணச் சிற்பமாகவும் இடம்பெற்றுள்ளது. இருக்குவேளிரின் கோயில்களிலும் இச்சிற்பத்தை மகாநாசிகையில்தான் பார்க்கமுடிகிறது. அதனால் தேவகோட்டச் சிற்பமாக கஜசம்காரம் முதல்முதலாக அமைந்துள்ள இடம் கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயிலே எனத் துணியலாம். கீழப்பழுவூரில் தொடங்கப்பட்ட இம்மரபு பின்னால் வந்த நடுக்காலச் சோழர்களால் பின்பற்றப் பட்டமைக்குத் தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும்.

காலாரிமூர்த்தி

மகாமண்டபத்தின் வடகோட்டத்தில் அமைந்துள்ள காலாரிமூர்த்தி[23] சிற்பம் பெருஞ்சிதைவுக்காளாகியுள்ளது.

இவ்வடிவத்தின் இடுப்புக்குக் கீழான பகுதிகளும் முன்கைகளும் சிதைந்துள்ளன. பின்கைகளில் வலப்புறம் திரிசூலம் கொண்டுள்ள இப்பெருமானின் இடக்கை விஸ்மய முத்திரையில் காட்டப்பட்டுள்ளது.

சடையை மகுடமாய்ப் புனைந்து வலச்செவியில் மகரகுண்டலமும், இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் கொண்டிலங்கும் இப்பெருமானின் இடக்காலின் கீழே, தரையில் விழுந்து துடிக்கும் இயமன் சித்திரிக்கப்பட்டுள்ளார். இச்சிற்பத்தின் சிதைந்த பகுதிகள் பின்னாளில் சிமெண்ட் பூச்சுக்கு ஆளாகியுள்ளன.

---

23. மார்க்கண்டேயனுக்காக இயமனை அழித்த சிவத்தோற்றமே காலாரிமூர்த்தியாக வணங்கப்படுகிறது. காலாரிமூர்த்தியின் வடிவம் பல்லவர் படைப்பாகக் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் இடம்பெற்றுள்ளது. முற்சோழர் கோயில்களில் சிற்றுருவச் சிற்பமாகக் கண்டபாதம், மகரதோரணம் போன்றவற்றில் இடம்பெற்றுள்ள இவ்வடிவம் இருக்குவேளிரின் கொடும்பாளூர்க் கோயில்களுள் ஒன்றான தென்தளியின் சாலை நாசிகையில் இடம்பெற்றுள்ளது. திருப்புறம்பியம் சாட்சி சுவரசுவாமி கோயிலில்தான் முதல்முறையாகக் காலாரி மூர்த்தியைத் தேவகோட்டச் சிற்பமாகப் பார்க்கமுடிகிறது. இத்தேவகோட்டம் அமைக்கப்பெற்ற காலம்பற்றி அய்யப் பாடுகள் உள்ளமையால் தேவகோட்டச் சிற்பமாகக் காலாரி மூர்த்தி முதல்முறையாக இடம்பெறுவது ஆலந்துறையார் கோயி லிலேயே என்று கொள்வது தவறாகாது. - எஸ்.ஆர். பாலசுப் பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், ப-ள் 177-178.

அம்மையப்பர்

முக்மண்டப வடகோட்டத்தில் இருத்தப்பட்டிருக்கும் அம்மையப்பர்[24] வடிவம் வலப்புறம் சிவபெருமானையும் இடப்புறம் உமையையும் காட்டுகிறது.

சடையை மகுடமாய் முடிந்து, காதணிகளும் கழுத்தணிகளுமாய் நிற்கும் அம்மையப்பரின் பின்னால் நந்தி காட்டப்பட்டுள்ளது. அதன் தலைமீது வல முன்கையை இருத்திப் பின்கையில் மழுவேந்தி நிற்கும் அம்மையப்பரின் வலக்கால் சிதைந்துள்ளது.

இடக்கால், பாதம்வரை பட்டாடையால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. வலச்செவியில் மகர குண்டலமும் இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் கொண்டுள்ள இவரது இடக்கையில் மலர் இடம்பெற்றுள்ளது.

---

24. பல்லவர் கோயில்களில் காணப்படும் அம்மையப்பர் வடிவம், முதலாம் ஆதித்தர் காலத்தில் கருவறைப் புறச்சுவரின் பின்கோட்டத்தில் வைத்துச் சிறப்பிக்கப்பட்டது. திருப்பராய்த்துறை தாருகாவனேசுவரர் கோயில், கோயிலடி திவ்யஞானேசுவரர் கோயில், உறையூர்த் தான்தோன்றீசுவரம் போன்ற பல கோயில்கள் இதற்குச் சான்றுகளாய்த் திகழ்கின்றன. இப்பழக்கம் சுந்தர சோழர் காலம்வரை ஆங்காங்கே சில கோயில்களிலேனும் பின்பற்றப் பட்டமைக்குப் பெருங்குடி பெருமுடியீசுவரர் கோயில் சான்றாகிறது. உத்தமசோழர் காலத்தில் தேவகோட்டங்கள் அதிகமாக்கப்பட்ட நிலையில், இச்சிற்பம் கருவறை அல்லது முகமண்டபக் கோட்டங்களுள் ஏதேனும் ஒன்றில் இடம்பெறலாயிற்று. இவ்வழக்கம் பின்வந்த சோழமன்னர்களாலும் பின்பற்றப் பட்டமைக்குத் தஞ்சாவூர் இராஜராஜீசுவரம், கங்கைகொண்ட சோழீசுவரம், மேலைக்கடம்பூர் அமிர்தகடேசுவரர் கோயில் போன்றன சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

கங்காளர்

மகாமண்டப நுழைவாயிலின் இடப்புறம் உள்ள கோட்டத்தில் கங்காளர் திருமேனி[25] காணப்படுகிறது. நடந்து கொண்டிருப்பவர், சற்று நின்று பார்ப்பது போல் இச்சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாதங்களின் கீழ் மிதியடிகள். பின்கைகளில் உடுக்கையும் கவரியும். முன்னிரு கைகளும் முத்தலை ஈட்டியின் தலையைப் பிடித்துள்ளன. அதன் மறு முனையில் உயிரற்ற உடல் ஒன்று செருகப்பட்டுள்ளது. வலச்செவியில் மகரகுண்டலமும் இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் அணிந்து சடைக்கற்றைகளை முடிந்து மகுடமாக்கிக் கங்கணம், வளைகள், கழுத்தணிகள் என அழகு பொலியத் தோன்றுகிறார் இறைவன்.

கல்யாணசுந்தரேசுவரர்

சிவபெருமானும் உமையும் திருமணக் கோலத்தில்[26] காட்சியளிக்கும் சிற்பம் இது. இருவருமே தீவலம் வரும்

---

25. சிவபெருமானின் பல திருத்தோற்றங்கள் முதன்முதலாக இடம்பெறும் மாமல்லபுரம் தருமராசரதத்தில் கங்காளர் திருமேனி உள்ளது. பிற்காலப் பல்லவர் கோயிலான திருவதிகை வீரட்டானேசுவரத்தில் கங்காளர் சிற்பத்தைக் கருவறைப் புறச்சுவரில் கோட்டச் சிற்பமாகப் பார்க்கமுடிகிறது. முற்சோழர் கோயில்களுள் கருந்திட்டைக்குடி வசிஷ்டேசுவரர் கோயில் கோட்டத்தில் கங்காளர் சிற்பம் காணப்படுகிறது.

26. கல்யாணசுந்தரேசுவரர் சிற்பம் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் இடம்பெற்றுள்ளது. திருவதிகை வீரட்டானேசுவரத்திலும் கல்யாணசுந்தரேசுவரர் காணப்படுகிறார். முற்சோழர் கோயில்களுள், கங்காளரைப் போல கல்யாணசுந்தரேசுவரரும் கருந்திட்டைக்குடி வசிஷ்டேசுவரர் கோயிலிலேயே முதல்முதலாகக் கோட்டச் சிற்பமாக இடம்பெறுகிறார். செம்பியன்மாதேவி காலத்துக் கல்யாண சுந்தரேசுவரர் செப்புப் படிமங்கள் சில இன்றும் பார்வைக்குக் கிடைக்கின்றன. இவையனைத்தும் கொண்டு பார்க்கும்போது, பல்லவர் காலத்தில் வழக்கிற்கு வந்த கல்யாணசுந்தரேசுவரர் வடிவம் செம்பியன்மாதேவி காலத்தில் கோயில்களில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றதென்று கூறலாம். முதலாம் இராசராசரின் இராஜராஜீசுவரம் திருக்கோயிலில் சிற்பமாகவும் ஓவியமாகவும் செப்புத் திருமேனியாகவும் கல்யாணசுந்தரேசுவரர் இடம் பெற்றிருக்கும் சிறப்பு, அத்திருத்தோற்றத்திற்குச் செம்பியன் மாதேவி காலத்தில் கிடைத்த பெருமை, நடுக்காலச் சோழர் காலத்திலும் தொடர்ந்ததென்பதை உறுதிப்படுத்தவல்லதாகும்.

கோலத்தில் ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி நிற்கின்றனர். உமையின் இடக்கை கடகமாய்க் கன்னத்தருகே. சிவபெருமானின் பின்கைகளில் பாகுவும் மானும். இடக்கை கடகமாய் இடுப்பருகே இருத்தப்பட்டுள்ளது. கங்காளரைப் போலவே செவியணிகள், தலைக்கோலம், சிற்றாடை கொண்டுள்ள இவரின் கழுத்தில் பதக்கம் கோத்த மாலை காட்டப்பட்டுள்ளது. உமையன்னை கரண்டமகுடமணிந்து அணிகலன்கள் பூண்டு, திருமண மங்கையாய்க் காட்சியளிக்கிறார்.

கபோதக் கூடுகளிலுள்ள சிற்பங்கள்

கருவறை மற்றும் முகமண்டபக் கபோதக் கூடுகளில் சிற்றுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பல சிதைந்த நிலையில் உள்ளன. தென்புறக் கூடுகளில் திரிபுரம் எரித்தவரும் லிங்கவடிவமும் பூதகணமொன்றும் ஆடல் தோற்றத்தில் சிதைந்த வடிவமொன்றும் காணப்படுகின்றன. இவற்றுள் திரிபுராந்தகர் சிற்பமே முழுமையாகவும் சிதைவின்றியும் உள்ளது. வடபுறக் கூடுகளில் பிட்சாடனர், குடக்கூத்தாடும் பெண் வடிவம், வணங்கிய நிலையில் ஒரு மனித வடிவம் ஆகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. இவையனைத்துமே கவனிப்பற்ற போக்கால் பெரிதும் சிதைந்துள்ளன.

திரிபுரம் எரித்த சிவபெருமானின் திருக்கோலக்காட்சி இடம்பெற்றுள்ள கபோதக் கூட்டில் வலப்புறம் இரண்டு குதிரைகள் இழுக்கும் தேர் காட்டப்பட்டுள்ளது. தேரின் முன்பகுதியில் நின்றபடி இத்தேரை ஓட்டும் நான்முகன் குதிரைகளின் கடிவாளக் கயிறுகளைப் பிடித்துள்ளார். பின்னால் சிவபெருமான் வில்லை வளைத்தபடி போருக்குத் தயாராவது போல் நிற்கிறார். இவரது வல முன்கை அம்பெய்வது போல் உயர்ந்திருக்க, வலப் பின்கையில் பரசு. சடையை மகுடமாக்கிச் செவிகளில் பனையோலைக் குண்டலங்கள் அணிந்துள்ள பெருமானின் மார்பில்

முப்புரிநூலும் கழுத்தில் மணிமாலையும் காட்டப்பட்டுள்ளன. இடுப்பில் சிற்றாடை. தேரின் முன்னால் கன்னத்தில் கை வைத்தபடி இருவர் முழங்காலிட்டு அமர்ந்துள்ளனர். பழுவூர்க் கோயில்களில் உள்ள கபோதக்கூடு சிற்பங்களில் இதற்கிணையானது இல்லையென்று சொல்லுமாறு எழிலுற அமைந்துள்ளது இச்சிற்றுருவச் சிற்பம்.

வடக்குக் கபோதக் கூட்டில், குடக்கூத்தாடும் பெண், மண்டல நிலையில், வலப்பாதத்தைச் சூசியிலும் இடப் பாதத்தைப் பார்சுவத்திலும் இருத்தி, வலக்கையை அர்த்தரேசிதத்தில் வீசியாடுகிறார். முழங்கையளவில் மடக்கி உயர்த்தப்பட்டிருக்கும் இடக்கையின் மேற்பகுதியில் குடமொன்றை நிறுத்தித் தலையை வலப்புறம் சாய்த்து ஆடுமாறு இவரது தோற்றம் செதுக்கப்பட்டுள்ளது.

அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்திலுள்ள வடவாயில் ஸ்ரீகோயிலின் பூதவரியில் காணப்படும் பூதமொன்று இதுபோன்ற குடக்கூத்தில் ஈடுபட்டுள்ளமை இங்கு நினைக்கத்தக்கது. முற்சோழர் காலத்தே பெருமளவு பயிலப்பட்ட ஊரக ஆடல் வடிவங்களுள் குடக்கூத்தும் ஒன்று போலும்.

மகரதோரணச் சிற்பங்கள்

மகரதோரணச் சிற்பங்களுள் ஆலமர் அண்ணலுக்கு மேலுள்ள நடராசர் சிற்பம் குறிப்பிடத்தக்கது. விரிசடையும் சடையில் செருகிய மலர்களுமாய் இறைவனின் ஆனந்தத் தாண்டவக்கோலம் இங்குச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இறைவனின் வலப்பாதம் முயலகன் முதுகின் மீது ஊன்றியிருக்க, இடக்கால் உயர்த்தப்பட்டு வலப்புறமாய் வீசப்பட்டுள்ளது. முன்கைகளில் வலக்கை அபயக் குறிப்பிலிருக்க, இட முன்கை கஜ அஸ்தமாக நீண்டுள்ளது. பின்கைகளில் வலப்புறம் உடுக்கை, இடப்புறம் தீயகல். சிற்றாடையும் பாதங்களில் தாள்செறிகளுமாய்க் காட்சி

யளிக்கும் ஆடவல்லானின் இந்தச் சிற்றுருவச் சிற்பம் கவனிப்பற்ற போக்கால் சிதைந்துள்ளது.

செப்புத் திருமேனிகள்

பழுவூர்க் கோயில்களுள் இக்கோயிலில் மட்டும் செப்புத்திருமேனிகள் இடம்பெற்றுள்ளன. அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் இங்குச் செப்புத்திருமேனிகள் உள்ளன. இவையனைத்துமே மிகப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாகும். இவற்றுள் சில திருமேனிகளில் தீப்பாஞ்சான் அழகியான் தர்மம் என்ற வெட்டெழுத்துகள் காணப் படுகின்றன. சோமாஸ்கந்தர், நடராசர் திருமேனிகள் சோழர் காலத்துக்குப் பின்னால் செய்தளிக்கப் பெற்றவையாகலாம்.

மறவனீசுவரம்

பழுவூர்க் கோயில்களிலேயே அளவில் சிறியதான இக்கோயில், ஆலந்துறையார் கோயிலுக்குத் தென்கிழக்கில் சற்று ஒதுங்கிய நிலையில் அமைந்துள்ளது. இதன் வடபுறம் கீழப்பழுவூர்க் காவல் நிலையமும், தென்புறத்தும் மேற்கிலும் வீடுகளும் அமையக் கிழக்கில் கீழப்பழுவூர்த் தஞ்சாவூர் நெடுஞ்சாலை அமைந்துள்ளது. இந்நெடுஞ்சாலையிலிருந்து கோயிலையடைய குறுகலான சந்தொன்று பயன்பாட்டில் உள்ளது. இச்சந்தின் முடிவே கோயிலின் முன்வளாகமாய் அமைந்துள்ளது.

விமானம், முகமண்டபமென அமைந்திருக்கும் மறவனீசுவரமே முற்சோழர் காலப் பழுவூர்க் கோயில்களில் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறது. பல இடங்களில் கற்கள் நழுவியுள்ளமையால், சுவர்கள் விரிசல்விட்டுத் தூண்கள் சிதைந்து கோயில் அழிவின் பிடியில் சிக்கியுள்ளது பல இடங்களில் மரங்கள் முளைத்துக் கிளைத்திருப்பதால் கோயில் கட்டுமானமே சீர்குலைந்துள்ளது.

1. *கட்டட அமைப்பு*

விமானம்

மறவனீசுவர விமானம் முதல் மூன்று உறுப்புகள் மட்டுமே கொண்டுள்ளது. மேல் மூன்று உறுப்புகள் இன்று காணுமாறு இல்லை. மூன்று பத்திகளாகப் பிரிக்கப்பட்டுள்ள கட்டுமானத்தின், பாதபந்தத் தாங்குதள ஜகதிப்பகுதி பெருமளவு மண்ணில் புதைந்துள்ளது. இதையடுத்து எண்பட்டைக் குமுதமும் மேலே கம்புகளின் தழுவலில் பாதங்கள் கொண்டமைந்த கண்டமும் அதன்மீது பட்டிகையும் காணப்படுகின்றன. கண்டபாதங்கள் வெறுமையாக உள்ளன. பட்டிகைக்கு மேலாக உள்ளடங்கிய கம்பொன்று காட்டப் பட்டுள்ளது. இதன்மீதெழும் சுவர்களில் உள்ள நான்முக அரைத்தூண்கள் அனைத்துறுப்புகளும் கொண்டு குளவுடன் கூடிய தரங்கப் போதிகைகளால் உத்திரம் தாங்குகின்றன. இத்தரங்கப் போதிகைகளின் நடுவில் பட்டை

காட்டப்பட்டுள்ளது. உத்திரத்தின் மீது வாஜனமும் அதன்மீது பூதவரியமைந்த வலபியும் இருக்க, மேலே கூரையின் முன்னிழுப்பாய்க் கபோதம். கபோதத்தின் கூடுகளில் சிற்பங்களேதும் இல்லை.

சுவர்களின் சாலைப்பத்திகளில் தேவகோட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் தென்புறம் ஆலமர் அண்ணல் அமர்ந்துள்ளார். பிற இரண்டு கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. வடபுறக் கோட்டத்தருகே சுவர் மீது சாய்ந்த நிலையில் திருமாலின் சிற்பமொன்று காணப்படுகிறது. தேவகோட்டங் களின் அணைவுத் தூண்கள் சிறிய அளவிலான நான்முக அரைத்தூண்களாக அமைந்து விரிகோணப் போதிகைகளால் கோட்ட உத்திரம் தாங்குகின்றன. உத்திரத்திற்கு மேல் சிறு வாஜனமும் வலபியுமிருக்க, மேலே மகரதோரணம். மகரதோரணக் குழிவுகளில் சிற்பங்களேதும் இல்லை.

கூரைக்கு மேல் இருக்க வேண்டிய பூமிதேசம், வேதிகை, கிரீவம், சிகரம், தூபி போன்ற கட்டட உறுப்புகள் அனைத்தும் இன்று காணுமாறு இல்லை.

முகமண்டபம்

விமானம் போன்ற அதே கட்டுமான அமைப்பு கொண்டுள்ள முன்மண்டபம் பத்திப் பிரிப்பின்றி, கோட்டங் களின்றிக் காட்டப்பட்டுள்ளது. இதன் சுவரில் காணப்படும் அரைத்தூண்கள் சதுர பாதமும் விஷ்ணுகாந்தக் காலும் கொண்டு எழுகின்றன. மேலே பத்மகட்டு, கலசம், தாடி, கும்பம், வீரகண்டம் என அனைத்துறுப்புகளும் அமைய, வீரகண்டத்திலிருந்து கிளைக்கும் விரிகோணப் போதிகைகள் உத்திரம் தாங்குகின்றன. மேலே வாஜனம், வலபி, கூரை. கூரையின் முன்னிழுப்பாய் உள்ள கபோதத்தில் கூடுகள் உள்ளன. மேலே தளமுடிவைக் காட்டும் பூமிதேசம். முகமண்டபத்தின் கிழக்குமுக நடுப்பகுதியில் வாயில் அமைந்துள்ளது. வாயிலின் இருபுறத்தும் வாயிற்காவலர்க்கான கோட்டங்கள் உள்ளன. ஆனால் சிற்பங்கள் இல்லை. கோட்டங்களின் அருகே இரு சிதைந்த வாயிற்காவலர் வடிவங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

முகமண்டபத்தின் வாயில், மேல், கீழ் நிலைகளும் திருநிலைக்கால்களும் கொண்டு அமைந்துள்ளது. நிலைக்கால்களில் நாகபந்தம் காட்டப்பட்டுள்ளது. வடபுற நிலைக்காலில் கல்வெட்டொன்று சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

வாயிலின் முன்னர் இரண்டு நந்திகள் மண்ணில் புதைந்த நிலையில் ஒன்றுக்கொன்று சற்று இடம் விட்டு முன் பின்னாக அமைந்துள்ளன. முதல் நந்தியின் கழுத்தில் ருத்திராக்க மாலை காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு மேற்காக 4.44மீ. நீளமும் தென்வடலாக 3.05மீ. அகலமும் கொண்டமைந்துள்ள முகமண்டபத்தின் நடுவில் நான்கு தூண்கள் இருந்திருக்க வேண்டும். இன்று ஒன்றுதான் உள்ளது. இது சுவர்த்தூண் போலவே கீழே சதுர பாதமும் மேலே விஷ்ணுகாந்தக் காலும் கொண்டு நன்கு வடிவமைக்கப்பட்ட மேலுறுப்புகளுடன் அமைந்துள்ளது.

இம்முகமண்டபத்துள் வடபுறச்சுவர் அருகே அம்மன் சிற்பமொன்றும் மேற்குச் சுவரின் தென்புறத்தே பிள்ளையார் சிற்பமொன்றும் உள்ளன. இரண்டுமே பிற்கால நிறுவல்கள். முன் கைகளை அபயத்திலும் வரதத்திலும் கொண்டு, பின்கைகளில் பாசமும் அங்குசமும் கொண்டுள்ள அம்மன் ஆவுடையாரின் மீது நிற்கிறார். பிள்ளையாரின் பின்கைகளில் அங்குசமும் பாசமும்; முன்கைகளில் வலப்புறம் உடைந்த தந்தம்; இடப்புறம் மோதகம். இவற்றைப் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட சிற்பங்களாகக் கொள்ளலாம்.

முகமண்டப மேற்குச் சுவரின் நடுப்பகுதியில் கருவறைக்கான வாயில் அமைந்துள்ளது. இதன் இருபுறத்தும் நெடிய நான்முக அரைத்தூண்கள் உரிய உறுப்புகளுடன் அமைந்து, குளவுடன் கூடிய தரங்கப் போதிகைகளால் உத்திரம் தாங்குகின்றன. மேலே வாஜனம், வலபி, கூரை. வலபி பூதவரியின்றி வெறுமையாக உள்ளது.

கிழக்கு மேற்காக 2.62மீ. அளவும் வடக்குத் தெற்காக 2.67மீ. அளவும் கொண்டமைந்துள்ள கருவறையில் லிங்கத்திருமேனி காணப்படுகிறது.

மறவனீசுவரத்துக் கருவறையும் முகமண்டபமும் பிற பழுவூர்க் கோயில்களுடன் ஒப்பிடும்போது சற்று உயரமானவையாகக் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது.

2. சிற்பங்கள்

மறவனீசுவரத்தில் தேவகோட்டச் சிற்பமாக ஆலமர் அண்ணல் சிற்பமும் தனிச் சிற்பங்களாகத் திருமால், வாயிற் காவலர்கள், ஜேஷ்டைதேவி ஆகியோர்தம் படிமங்களும் கிடைக்கின்றன.

ஆலமர் அண்ணல்

தெற்குக் கோட்டத்தில் வீராசனத்தில் காணப்படும் ஆலமர் அண்ணலின் முன்கைகள் சிதைந்துள்ளன. பின்கைகளில் வலப்புறம் அக்கமாலை; இடப்புறம் தீச்சுடர். சடைமகுடராய் இடச்செவியில் பனையோலைக் குண்டலம் கொண்டு வலச்செவியில் குண்டலமின்றி அமர்ந்திருக்கும் பெருமானின் தலைக்குப் பின் கல்லால மரம் காட்டப்பட்டுள்ளது.

திருமால்

வடபுறக் கோட்டத்தருகே சாய்ந்த நிலையில் காணப்படும் திருமால் சிற்பம் நின்ற திருக்கோலமாய் வடிக்கப்பட்டுள்ளது. கிரீடமகுடமும் பட்டாடையுமாய்ச் சமபங்கக் கோலத்தில் காட்சியளிக்கும் திருமாலின் பின்கைகளில் சங்கும் சக்கரமும்; முன்கைகளில் வலக்கை அபயத்திலிருக்க இடக்கை ஊருஅஸ்தமாக உள்ளது. ஆடையணிகலன்களும் சிற்பத்தோற்றமும் கொண்டு இச்சிற்பத்தைப் பிற்சோழர் காலத்ததாகக் கொள்ளலாம்.

ஜேஷ்டைதேவி

மண்ணில் புதைந்த நிலையிலிருக்கும் ஜேஷ்டைதேவியின் சிற்பத்தொகுதியில் தேவி நடுநாயகமாக அமர்ந்திருக்க, வலப்புறம் மகன் நந்திகேசுவரனும் இடப்புறம் மகள் அக்கினிமாதாவும் காணப்படுகின்றனர். தேவி பாதங்களைப் பார்சுவத்தில் அமைத்து வலக்கையில் மலரேந்தி இடக்கையைத் தொடை மீது ஊருஅஸ்தமாய் இருத்தியபடி அமர்ந்துள்ளார்.

நந்திகேசுவரர் தாயின் பக்கம் இலேசாய்த் திரும்பிய நிலையில், வலக்கையில் மலரேந்தி இடக்கையைத் தொடை மீது வைத்து அமர்ந்திருக்க, அக்கினி மாதா இடக்கையை கடிஅஸ்தமாக்கி, வலக்கையில் மலர் கொண்டு அமர்ந்துள்ளார். இவர்கள் இருவருமே உத்குடியாசனத்தில் அமர்ந்துள்ளனர். இச்சிற்பம் பிற்சோழர் காலத்ததாகும்.

வாயிற்காவலர் சிற்பங்கள்

வலப்புற வாயிற்காவலர் சிற்பம் ஏறத்தாழ முழுமையாக உள்ளது. இச்சிற்பக் காவலரின் இடப்புறத்தே பேரளவினதான மழுவொன்று நிறுத்தப்பட்டுள்ளது. பாம்பு சுற்றியுள்ள இம்மழுவின் மீது இடக்கையைத் தாங்கலாக நிறுத்தியிருக்கும் காவலரின் வலக்கை தர்ஜனீயில் உள்ளது. செவிகளில் கனமான பனையோலைக் குண்டலங்கள். யாளிமுக முகப்புப் பொறித்த சடை மகுடத்தையும் மீறிய முடிப்புரிகள் தோள்களில் தவழ்கின்றன. கழுத்தில் பட்டையான அணி; மேற்கைகளில் கங்கணங்கள்; மணிக்கட்டருகே வளைகள்; பூப்பதக்கங்கள் பொருந்திய முப்புரிநூல் மார்பில் இடப்புறமிருந்து வலப்புறமாகச் செல்கிறது. இடையில் நன்கு மடித்துக் கட்டிய சிற்றாடையும் அதன்மீது அரைப்பட்டிகையுமாய்க் கடைவாயில் கோரைப்பற்களுடன் காட்சியளிக்கும் இச்சிற்பம் பழுவேட்டரையர் காலத்துக் கலைவடிவமாகும்.

இடப்புறக் காவலர் சிற்பம் பாதியளவே உள்ளது. இவரது வலக்கை மழு மீது தாங்கலாக இருக்க, இடக்கை விஸ்மயத்தில் உள்ளது. செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். சடைமகுடப்புரிகள் இவருக்கும் தோள்களின் மீது தவழுமாறு காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பம் வலப்புறத்தாருக்குக் காலத்தால் பிற்பட்டதாகும்.

இக்கோயிலில் காணப்படும் சிற்பங்களுள் ஆலமர் அண்ணல் மற்றும் வலப்புற வாயிற்காவலர் சிற்பங்களே பழுவேட்டரையர் காலத்தனவாக அமைந்துள்ளன. ஏனையன பிற்சோழர் காலத்து வடிவமைப்பில் உள்ளன.

3. பழுவூர்ச் சமுதாயம்

முற்சோழர் காலப் பழுவூர்க் கோயில்களின் வளாகங்களிலிருந்து 1895, 1924, 1926 ஆகிய மூன்று காலகட்டங்களில் மைய அரசின் கல்வெட்டுத்துறை நூற்றுப்பதினெட்டுக் கல்வெட்டுகளைப் படியெடுத்து வெளியிட்டுள்ளது.[1] இவற்றுள் அறுபது கல்வெட்டுகளின் பாடங்கள் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதிகளில் வெளியிடப்பட்டுள்ளன. ஏனைய கல்வெட்டுகளின் சுருக்கமான செய்திகள் கல்வெட்டறிக்கைகளில் காணப் படுகின்றன.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் 1988இல் இக்கோயில்களில் ஆய்வு நடத்தியபோது முப்பத்திரண்டு புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தியது.[2] இவற்றின் பாடங்கள் அம்மையத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்விரண்டு நிறுவனங்களாலும் படியெடுக்கப்பட்ட நூற்றைம்பது கல்வெட்டுகள் தவிர, பழுவூர்க் கோயில்களின் வளாகங்களிலிருந்து இதுவரையும் படியெடுக்கப்படாத பதினைந்து புதிய கல்வெட்டுகள் வரலாற்றாய்வு மையத்தின் மறு ஆய்வின் போது கண்டறியப்பட்டுப் படியெடுக்கப் பட்டன.[3] இதனால் பழுவூர்க் கோயில்களிலிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் மொத்த எண்ணிக்கை நூற்றிறுபத்தைந்தாக உயர்கிறது. இவை தவிர சில துண்டுக் கல்வெட்டுகளும் புதியனவாகக் கண்டறியப்பட்டன.

---

1. A.R.E. 100-122 of 1895; A.R.E. 355-403 of 1924; A.R.E. 216-261 of 1926.
2. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள். 275-301
3. தினமணி 27.10.1994

இக்கல்வெட்டுகளுள் பெரும்பான்மையன மக்களுக்கும் கோயில்களுக்கும் இருந்த பிணைப்பைப் புலப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. இவற்றின் வழி பழுவூர்க் கோயில்கள் சமுதாயத்தில் பெற்றிருந்த செல்வாக்கை அறிந்துகொள்ள முடிவதுடன், கோயிலாட்சி, கோயில் நடைமுறைகள் போன்றனவும் தெரியவருகின்றன. இவற்றுடன் அக்கால வருவாய்ப் பிரிவுகளின் அமைப்பு, சமுதாய அமைப்புகள், மக்கள் வாழ்க்கை, வேளாண்மை, நீர்ப்பாசனம் எனப் பல்துறைச் செய்திகளும் பழுவூர்க் கல்வெட்டுகளால் தெரியவருகின்றன.

கோயில் நிர்வாகம்

பழுவூர்க் கோயில்களுள் சிறுபழுவூரிலிருக்கும் திருவாலந்துறைத் திருக்கோயிலே மிகப் பழைமையான கோயிலாகும். திருஞானசம்பந்தரின் பதிகம் பெற்ற இக்கோயில், மலையாளர்கள் பெரிதும் போற்றிக் கொண்டாடித் தொழுது வணங்கி வழிபாடு செய்திருந்த திருக்கோயிலாகும். இதைச் சம்பந்தரே,

"மண்ணின்மிசை யாடிமலை யாளர்தொழு தேத்திப்
பண்ணினொலி கொண்டுபயில் கின்றபழு வூரே"
"அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும்
பந்தமலி கின்றபழு வூரரனை"

என்று குறிப்பிடுகிறார்.[4] தம்முடைய மூன்று திருமுறைகளிலும் நூற்றுக்கணக்கான திருக்கோயில்களைப் போற்றிப் பரவியுள்ள சம்பந்தர் பெருமான், சிறுபழுவூர்த் திருக்கோயிலை மட்டுமே குறிப்பிட்ட ஒரு கூட்டத்தார் சிறப்போடு தொழுது வணங்கும் கோயிலாகச் சுட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்திருக்கோயிலை உத்தம சோழரின் ஆட்சிக்காலத்தே கற்றளியாக்கியவர் பழுவேட்டரையர் மறவன் கண்டன்.[5]

---

4. இரண்டாம் திருமுறை, பதிக எண் 34, பாடல் எண்கள் 4, 11.
5. S.I.I. Vol. XIX, Ins. No. 384.

இக்கோயில் தேவகன்மிகளாலும் மாகேசுவரக் கண்காணி களாலும் நிர்வகிக்கப்பட்டது.[6] கவுசிகன் நக்கன் மாறபிரான் என்பார் பழுவேட்டரையர் மறவன் கண்டன் காலத்தில் இக் கோயிலில் ஸ்ரீகாரியமாக இருந்து கோயிற் செயற்பாடுகளை ஆராய்ந்ததுடன் இத்திருக்கோயில் கற்றளியாக்கப்பட்டபோது தாமே முன்னிருந்து மேற்பார்வையிட்டு அப்பணியை நிறைவேற்றினார்.[7] முதலாம் இராசேந்திர சோழரின் ஆட்சிக்காலத்தில் உத்தமதானி உடையான் கோவிந்தன் மாதேவடிகள் என்பார் இக்கோயில் நாயகமாக இருந்தார்.[8]

அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகம் பல குழுவினரின் ஒன்றிணைந்த நிர்வாகத்திலிருந்தது. தேவகன்மிகள், பதிபாதமூலத்தார், பட்டுடையார், சமயத்தார், தளிப்பங்குடையார், நகரத்தார் என்னும் இக்குழுவினர் கோயில் சார்ந்த செயற்பாடுகளை ஒன்றிணைந்து நிறைவேற்றினர்.[9] கோயிலுக்கான அறக்கட்டளைகளுள் பெரும்பான்மையன பட்டுடையார் வழி நிறைவேற்றப்பட்டன. சில கொடைகள் நகரத்தாரிடம் ஒப்புவிக்கப்பெற்றன.

பழுவேட்டரையர் மறவன் கண்டனின் ஆட்சிக்காலத்தே இக்கோயிலின் ஸ்ரீகாரியமாக காடன் பரமேசுவரன் இருந்தார்.[10] இவரது ஏவலின் பேரில் நகரத்தார் இக்கோயிலில் மன்றுபாடு தொடர்பான கல்வெட்டொன்றை வெட்டிக்கொண்டனர். பழுவேட்டரையர் கண்டன் சுந்தர சோழரின் காலத்தில் நாவலூருடையான் கண்டன்தேவடி என்பார் இக்கோயில் ஸ்ரீகாரியமாகப் பணியாற்றினார்.[11] முதலாம் இராசராசரின் ஆட்சிக் காலத்தில் கோயில் கோனடிகள் என்பார்

---

6. S.I.I. Vol. V, Ins. No. 663
7. S.I.I. Vol. XIX, Ins. No. 384
8. S.I.I. Vol. V, Ins. No. 678
9. S.I.I. Vol. XIII, Ins. No. 236
10. மேலது., Ins. No. 344
11. S.I.I. Vol. XIX, Ins. No. 327

அப்பொறுப்பில் இருந்தார். இவர் கண்டன் மறவனுக்காக இக்கோயிலில் ஸ்ரீகாரியம் ஆராய்ந்ததாக மூன்று கல்வெட்டுகள் கூறுகின்றன.[12]

பகைவிடை ஈசுவரத்து அம்மன் திருக்கோயிலாக உருமாற்றம் பெற்றுள்ள திருத்தோற்றமுடையார் கோயில், பழுவேட்டரையர் கண்டன் மறவனால் செங்கல் தளியாக எடுக்கப்பட்ட கோயிலாகும்.[13] பழுவேட்டரையர்களுக்குப் பிறகு வழிபாடிழந்து சிதைந்த நிலையில் மக்கள் வரவின்றி இருந்த இத்திருக்கோயிலைக் கற்றளியாக்கி வழிபாட்டிற்குக் கொண்டுவந்தவர் வாணகோவரையன் சுத்தமல்லன் உத்தமசோழனான இலங்கேசுவரன். இவர் முதலாம் குலோத்துங்கரின் படைத் தலைவர்களுள் ஒருவர்.[14] கருணாகரத் தொண்டைமானோடு கலிங்கப்போருக்குச் சென்று வெற்றிபெற்ற வாணர்குலப் பெருவீரர்.

பழுவேட்டரையர் கண்டன் மறவன் காலத்தில் இத்திருக்கோயிலில் ஸ்ரீகாரியமாக கௌசிகன் நக்கன் மாறபிரானும் கண்காணியாகத் திருச்சிருவிளந்தை இளங்கோதி சூரியனும் இருந்தனர்.[15]

ஸ்ரீகாரியம் என்ற சொல் கல்வெட்டுகளில் பரவலாக ஆளப்பட்டுள்ளது. இதற்குரிய பொருளாகக் கோயில் மேலாண்மை, முகவர், தெய்வத்திற்கான பணி என்று பல பொருள் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.[16] இப்பொருள் விளக்கங்களுக்குப் பொருந்துமாறு பல கல்வெட்டுகள் அமைந்துள்ளன.

---

12. A.R.E. 363 and 384 of 1924; பு.க. 5.
13. S.I.I. Vol. XIII, Ins. No. 98 ,
14. A.R.E. 393 of 1924.
15. S.I.I. Vol. XIII, Ins. No. 98
16. S.I.I. Vol. XIII, p. XII (Management of Temples); S.I.I. Vol. XIX, P. XII (Agent); சி. கோவிந்தராசன், கல்வெட்டுக் கலைச்சொல் அகராதி, (மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1987), ப. 165

1. திருநெடுங்களத்து மகாதேவர்க்கு உத்தம சோழ பிரம்மாதராஜ கன்மி செம்பியன் வடபுறையூர் நாட்டு மூவேந்த வேளார்க்காய் ஸ்ரீகார்யம் ஆராய்கின்ற வெல்வெட்டிக் கோவிந்த பட்டன்,[17] (பரகேசவரிவர்மரின் பதினான்காம் ஆட்சியாண்டு - முகவர்).

2. ஸ்ரீராஜராஜீசுவரம் உடையார்க்கு ஸ்ரீகார்யம் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான்[18] (முதலாம் இராசராசரின் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டு-கோயில் மேலாண்மை, தெய்வத்திற்கான பணி).

3. திருக்காளத்தி மகாதேவர் ஸ்ரீகார்யம் செய்கின்ற வெளிபாக்கிழான் கோயில் மாராயநும்[19] (முதலாம் இராசேந்திரரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டு - கோயில் மேலாண்மை, தெய்வத்திற்கான பணி).

4. திருக்களாஞ்செடி உடையார் கோயில் ஆதிசண்டேசுவர தேவர் திருவருளால் இக்கோயில் ஸ்ரீமாகேசுவர கண்காணி செய்வார்களுக்கும் சிகாரியஞ் செய்வாற்கும் தேவர்கன்ம்மி கோயில் கணக்கற்கும்[20] (கோப்பெருஞ் சிங்கரின் பதினொன்றாம் ஆட்சியாண்டு - தெய்வத் திற்கான பணி).

கோயில்களும் மக்களும்

கோயில்களுக்குச் செல்லும் மக்கள் இறைவழி பாட்டிற்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் எடுத்துச் சென்றமையைச் சங்க இலக்கியங்கள் தெளிவுற உணர்த்துகின்றன.[21] பல்லவர் காலக் கல்வெட்டுகள்

17. S.I.I. Vol. III, Ins. No. 140
18. S.I.I. Vol. II, Ins. No. 26
19. S.I.I. Vol. XVII, Ins. No. 319
20. S.I.I. Vol. XII, Ins. No. 166
21. அர. அகிலா, ஸ்தபதி வே. இராமன், இரா. கலைக்கோவன், தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு, வரலாறு 3,4, ப-ள், 113-120, 118-128.

திருக்கோயில்களில் வழிபாடு, படையல், அறப்பணிகள், திருப்பணிகள் முதலியவற்றை மேற்கொள்ள வாய்ப்பாக அரச குடும்பத்தினரும் பிறரும் சில அறக்கட்டளைகளை நிலையாக அமைத்துத் தந்தமையை வெளிப்படுத்துகின்றன. கூரம் செப்பேடும் முக்தேசுவரம் கோயிலில் காணப்படும் தர்மமகாதேவியின் கல்வெட்டும் இதற்குச் சிறந்த சான்றுகளாகும்.[22] கோயில் சார்ந்த அன்றாடச் செயற்பாடுகளையும் விழாக்களையும் அறப்பணிகளையும் செவ்வையாக அமைத்திட நிலம், பொன், பொருள், கால்நடைகள் ஆகியவற்றைக் கோயில்களுக்கு வழங்கி அறக்கட்டளைகள் அமைக்கும் பழக்கம் சோழர் காலத்தில் பல்கிப் பெருகியது. பழுவூர்க் கல்வெட்டுகளுள் பெரும்பான்மையானவை மக்கள் இவ்வூர்க் கோயில்களுக்கு விரும்பியளித்த பல்வேறுவிதமான கொடைகளைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றன. இவற்றை விளக்குக் கொடைகள், பிற கொடைகள் என்று இரு பிரிவுகளாகக் காணலாம்.

1. விளக்குக் கொடைகள்

சங்க காலத்திலேயே திருக்கோயில்களில் நந்தாவிளக்குகள் ஏற்றப்பட்டதையும் அவற்றை ஏற்றிய பெண்கள் நன்னீரில் நீராடித் தூய்மை பெற்று அப்பணியை மேற்கொண்டதையும் அகப்பாடலொன்று சுட்டுகிறது.[23] திருக்கோயில்களை நாடிச்சென்ற பொதுமக்கள் மலர், வாசனைப் பொருள்கள் முதலியவற்றோடு, விளக்குகளையும் ஏந்திச் சென்றதாக இலக்கியங்கள் குறிக்கும்.[24] அப்பரடிகளும்

---

22. S:I.I. Vol. I, Ins. No. 151, Lines 83-88; S.I.I. Vol. IV, Ins. 827.
23. பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர்), பத்துப்பாட்டு மூலமும் உரையும், இரண்டாம் பகுதி, பட்டினப்பாலை, அடிகள் 246-249.
24. பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், நான்காம் பதிப்பு, (சென்னை, கபீர் அச்சுக்கூடம், 1956) அடிகள் 97-98.

திருக்கோயில்களில் விளக்கெரிக்கும் பழக்கத்தைப் பெரிதும் போற்றியுள்ளார். நாளும் மனிதர்கள் செய்யவேண்டிய கடமைகளுள் ஒன்றாய்த் திருக்கோயிலில் விளக்கேற்றுவதை அவர் குறிப்பார்.[25] பல்லவர் காலத்தில் திருக்கோயில்களில் விளக்குகள் ஏற்றவும் அவற்றைத் தொடர்ந்து பராமரிக்கவும் கொடைகள் வழங்கப்பட்டன.[26] சோழர்கள் காலத்தில் இவ்வறம் பெருகியது.

மக்களின் கோயிற் கொடைகளைச் சுட்டும் பழுவூர்க் கல்வெட்டுகளுள் பெரும்பான்மையன விளக்குக் கொடைகளைப் பற்றியே பேசுகின்றன. நந்தாவிளக்குகள், திருவிளக்குகள், சந்திவிளக்குகள் எனப் பல்வகை விளக்குகள்[27] பழுவூர்க் கோயில்களில் எரிக்கப்பட்டன. இரவும் பகலும் தொடர்ந்து எரிந்த விளக்குகள் நந்தாவிளக்குகள் எனப்பட்டன. இந்நந்தாவிளக்குகள் தொடர்ந்து எரிய நாள்தோறும் உழக்கு நெய் தேவைப்பட்டது. இந்த நெய்யைப் பெறுவதற்கு வாய்ப்பாகக் கொடையளித்தவர்கள் ஒவ்வொரு விளக்கிற்கும் இவ்வளவு ஆடுகள் எனக் கொடையளித்தனர். ஒரு நந்தாவிளக்கிற்குப் பொதுவாகத் தொண்ணூறு ஆடுகள் தரப்பட்டன.[28] கோயில் சார்ந்த மன்றாடிகள் (இடையர்கள்) தனியாகவோ, கூட்டாகவோ இவ்வாடுகளைப் பெற்றுக்கொண்டு இவற்றைப் பராமரித்துப் பால் பெற்று நெய்யளித்தனர். சில விளக்குகளுக்கு மன்றாடிகளே கொடையாளிகளாக இருந்துள்ளனர்.[29] விளக்கெரிப்பதற்கு ஆடுகள் போல் பசுக்களும் தரப்பட்டுள்ளன.[30] சில நேரங்களில்

25. நாலாம் திருமுறை, (தருமபுர ஆதீன வெளியீடு, 1957) பதிக எண். 77, பா. எ. 748.
26. S.I.I. Vol. XII, Ins. No. 39, 43, 47, 54, and 57.
27. A.R.E. 386 of 1924; A.R.E. 231 of 1926; S.I.I. Vol. V. Ins. No. 675.
28. A.R.E. 233, 236, 240 and 241 of 1926.
29. S.I.I. Vol. XIII, Ins. No. 209; S.I.I. Vol. XIX, Ins. No. 110.
30. A.R.E. 246 of 1926.

நிலக்கொடையும் பொற்கொடையும்கூடக் கோயில்களில் விளக்கெரிப்பதற்காகத் தரப்பட்டுள்ளன.[31] இவ்விளக்குகளை எரிக்க வாய்ப்பாகச் சில கொடையாளிகள் தரா விளக்கு, நிலைவிளக்கு என்பவற்றையும் தந்துள்ளனர்.[32]

பல்வேறு காரணங்களுக்காக இவ்விளக்குகள் எரிக்கப்பட்டன. வெள்ளூர்ப் போரில் கண்டன் அமுதன் பெற்ற பெருவெற்றியைப் பாராட்டிப் பரதூர் நக்கன் சாத்தன், திருவாலந்துறைத் திருக்கோயிலில் நந்தாவிளக்கொன் றெரித்தார்.[33] பாண்டிமாதேவியின் பணிப்பெண் அரிஞ்சிகை மாதேவடிகள் தன் மகள் அருமொழிதேவன் போகிபட்டன் கண்டராதித்தியின் நலத்திற்காக நந்தாவிளக்கு எரித்தார்.[34] சங்கராந்தித் திருநாளின்போதும் கார்த்திகையின்போதும் பிறந்தநாள் நட்சத்திரங்களின்போதும் விளக்குள் எரிக்கப்பட்டன.[35] குற்றங்களுக்குரிய தண்டனையாகவும் சில நந்தாவிளக்குகள் எரிக்கப்பட்டன.[36]

ஐம்பதுக்கும் மேற்பட்ட அன்புடைப் பெருமக்கள் பழுவூர்க் கோயில்களின் விளக்குக் கொடையாளர்களாக விளங்குகின்றனர். அரசர்கள், அரசியர், அரசு அலுவலர்கள், படைத்தலைவர்கள், வணிகப் பெருமக்கள், ஆடற்பெண்கள், பணிப்பெண்கள், மன்றாடிகள் எனச் சமுதாயத்தின் பல்வேறு அடுக்குகளிலிருந்தவர்களும் இவருள் அடங்குவர். ஐம்பதுக்கும் மேற்பட்ட நந்தாவிளக்குகளும் பன்னிரண்டு சந்திவிளக்குகளும் இரண்டு பகல்விளக்குகளும் ஒரு திருவிளக்கும் சோழராட்சியின்போது இக்கோயில்களுக்கு

---

31. A.R.E. 355, 357, 368 and 384 of 1924; S.I.I. Vol. V, Ins. No. 679; S.I.I. Vol. XIII, Ins. No. 153, and 154 and 201.
32. S.I.I. Vol. XIII, Ins. Nos. 154 and 279.
33. A.R.E. 231 of 1926.
34. A.R.E. 235 of 1926
35. A.R.E. 231 of 1926; S.I.I. Vol. XIX, Ins. No. 406.
36. S.I.I. Vol, V, Ins. No. 670 and 683; A.R.E. 372 and 1924.

ஒளியூட்டிக் கொண்டிருந்ததைக் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. இவற்றுள் நந்தாவிளக்குகளின் எண்ணிக்கையே உயர்நிலையிலிருப்பது கோயில்கள் இரவும் பகலும் நன்கு வெளிச்சமாக இருந்ததை உணர்த்தப் போதுமானதாகும்.

பிற கொடைகள்

பழுவூர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வாழ்ந்த பொதுமக்கள் பழுவூர்க் கோயில்களிலிருந்த தெய்வத்திரு மேனிகளுக்கான வழிபாடு, படையல், திருமுழுக்காட்டு போன்ற பல்வேறு அறச்செயல்களில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு பொன்னும் பொருளும், நிலமும் கொடுத்து அறக்கட்டளைகளை அமைத்திருந்தார்கள். ஆலந்துறையார் திருக்கோயிலில் இறைவன் திருப்புக் கைக்காகப் பழுவேட்டரையர் கண்டன் மறவனின் பெருந்தரம் அரையன் சுந்தர சோழன் நிலக்கொடையளித்திருந்தார்[37] உத்தராயன, தட்சிணாயன சங்கராந்தி நாள்களில் இறைவனுக்கு நெய்முழுக்காட்ட வாய்ப்பாக நக்கன் மாறபிரான், பரதூர் நக்கன் சாத்தன் போன்றோரால் ஆடுகள் கொடையாகத் தரப்பட்டன.[38] சங்கராந்தி நாள்களிலும் பிற திருவிழா நாள்களிலும் என்று மட்டுமல்லாமல் நாள்தோறும் இறைவனுக்குத் திருவமுது காட்டவும், பொன் மற்றும் நிலங்கள் கொடையாகத் தரப்பட்டன. போது இருநாழியாக மூன்று போதுக்கும் திருவாலந்துறை மகாதேவர்க்குத் திருவமுது படைக்கப் பழுவேட்டரையர் கண்டன் மறவனின் தேவியார் நெற்கொடையளித்திருந்தார்[39] மாறபிரான் நம்பி அதே கோயிலில் இறைவனுக்குத் திருவமுது, நெய்யமுது, கறியமுது, தயிரமுது ஆகியன படைக்கவும் கோயிலில் இருந்த

37. S.I.I. Vol, V, Ins. No. 677.
38. S.I.I. Vol. XIX, Ins. No. 384, A.R.E. 231 of 1924.
39. S.I.I. Vol. XIII, Ins. No. 171.

கணபதி திருமேனிக்குப் பங்குனித் திருவோணத் திருநாளன்று அவலமுது, தேங்காய் பத்து மற்றும் சர்க்கரை பத்துப் பலம் படைக்கவும் வெட்டக்குடியிலிருந்த வன்னிச்செய் ஒன்றைத் தானமாகத் தந்தார்.[40] இத்திருக்கோயிலிலிருந்த திரிபுவன சுந்தர தேவர் என்ற தெய்வத்திருமேனிக்கு உணவுப் படையல் அட்ட பத்துச்செய் நிலம் தரப்பட்டது.[41]

சித்திரை, ஐப்பசி விஷு திருநாட்களிலும் உத்தராயன, தட்சிணாயன நாள்களிலும் திருவாலந்துறை மகாதேவர்க்குத் திருமுழுக்காட்டவும் பெருந்திருவமுது படைக்கவும் முதலாம் இராசேந்திரரின் எட்டாம் ஆட்சியாண்டில் பழுவேட்டரையர் பணிப்பெண்ணான வீராணன் ஒற்றியூர் ஐம்பது காசுகள் தந்தார்.[42] திருவாலந்துறைப் பேரரையன் என்பார் இறைவியின் திருமுன் நாள்தோறும் ஒரு போதுக்குத் திருவமுது படையலிட நிலக்கொடையளித்தார்.[43] இறைவன் அடைக்காயமுது செய்தருள இலைத்தட்டு ஒன்றை நாராயணன் உமையாண்டாள் என்னும் பெண்மணி வழங்கினார்.[44] அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்து வளாகத்திலிருந்த இறைத்திருமுன்களில் திருவமுதிடுவதற்காக நக்கன் குமரக்கன் நிலக்கொடையும் நக்கன் வீரநானி பொற்கொடையும் தந்தனர்.[45] இவர்கள் இருவரும் தளிப் பெண்களாவர். இதே அறப்பணிக்குக் கோயிற் பண்டாரத்திலிருந்து பதினைந்து காசுகள் பெறப்பட்டன.[46] திருவீற்றிருந்தான் பஞ்சநடையின் மனைவி மோகன ஆண்டதிரு, தன் கணவர் மற்றும் மைத்துனர் நிலங்கள் அவர்தம் மறைவிற்குப் பிறகு தமக்கு வந்துற்ற

40. S.I.I. Vol. XIX, Ins. No. 406.
41. S.I.I. Vol, V, Ins. No. 664.
42. மேலது., Ins. No. 665.
43. மேலது., Ins. No. 678.
44. மேலது., Ins. No. 661.
45. A.R.E. 363 and 399 of 1924.
46. A.R.E. 227 of 1926

நிலையில், இறைவன் திருமேற்பூச்சுக்காக அவற்றை யளித்தார்.[47] திருவாலந்துறையார் திருக்கோயிலை மேனாயகமாக நின்று கற்றளியாக்கிய நக்கன் மாறபிரான், அத்திருக்கோயில் ஆண்டவனுக்கு மூன்று சந்திக்கும் தயிரமுது படைக்கக் கொடையளித்தார்.[48] அலையூர் சங்கரன் வடுகி நள்ளிரவுப் படையலுக்காக நிலக்கொடை தந்தார்.[49] திருக்கோயிலுக்கான தோட்டம், குளம் ஆகியவற்றைக் குரமலையனும், இறைவழிபாட்டிற்கான பூக்களைப் பெற வாய்ப்பாக நந்தவனம் ஒன்றமைக்க நிலமொன்றினைப் பூஞ்சூற்றூர் கிழவனும் கொடையாக வழங்கினர்.[50] பெயர் தெரியாத அருளாளர் ஒருவர் இலுப்பைத் தோப்பொன்றை ஆலந்துறையார் கோயிலுக்கு அளித்தார்.[51]

மல்லரசர் தனயக்க உடையார் என்பார் இறைவனுக்கு நாள் படையலுக்காகவும் தாம் எழுப்பிய தனயக்க உடையார் திருமண்டபத்தில் திருவிழா நாள்களில் இறைவன் திருமேனி எழுந்தருளும்போது படைக்கப்படும் காணிக்கைகளுக்காகவும் அதுசமயம் ஏற்றப்படும் புனித விளக்குகளுக்காகவும் பூஞ்சூற்றுக்குடி என்னும் ஊரையே சர்வமானியமாகத் தந்தார்.[52] சுத்தமல்லன் உத்தம சோழனான இலங்கேசுவரன் சிதைந்திருந்த திருத்தோற்றமுடையார் கோயிலை முதலாம் குலோத்துங்கர் நலத்திற்காகக் கற்றளியாக்கியபோது தில்லைக்குடி என்னும் குலோத்துங்க சோழநல்லூரையே இக்கோயிலுக்குரிய செலவினங்களுக்காக வழங்கினார்.[53] திருவாராதனையின்றி இச்செங்கற் கோயில்

---

47. A.R.E. 258 of 1926
48. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள், 296-297.
49. A.R.E. 234 of 1926
50. A.R.E. 260 of 1926; இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்க்ள், ப-ள், 289-290.
51. A.R.E. 377 of 1924
52. A.R.E. 252 of 1926
53. A.R.E. 390 of 1924

பழுதுற்றிருந்ததால், இதைக் கற்றளியாக்கி, அட்டபரிவாரக் கோயில்களும் திருச்சுற்றும் திருக்கோபுரமும் உண்டாக்கிக் கோயிலைத் தாம் வழிபாட்டுக்குக் கொணர்ந்ததாகக் கல்வெட்டு வழி இலங்கேசுவரன் தெரிவித்திருப்பது, அந்நாளைய அரசு அலுவலர்களின் இறைப்பணி ஈடுபாட்டை உணர்த்துவதுடன், பதினோராம் நூற்றாண்டுக் கோயிலமைப்பையும் புலப்படுத்துகிறது.[54]

தனியர்களைப் போலவே, பல்வேறு குழுவினர் ஒன்றிணைந்து இறைக்கோயில்களுக்கு அறச்செயல்களைச் செய்துள்ளனர். இது சமுதாய அமைப்பிலிருந்த கூட்டுறவு மனப்பான்மையைப் புலப்படுத்துகிறது. கூறுசெய்வார், நியமத்தார், ஐயதாந தெரிந்த கைக்கோளர் போன்றோர் ஒருங்கிணைந்து மடப்புறமாகப் பகைவிடை ஈசுவரத்திற்கு நிலமளித்துள்ளனர்.[55] இதேபோல் பலிசை, தண்டம் எனப் பல்வேறு வகைகளில் கிடைத்த பொன்னைத் திரட்டி இறைவனுக்குப் பட்டம் மூன்று செய்தளித்ததோடு தென்வாயில், வடவாயில் ஸ்ரீகோயில்களில் தளிக்கொரு நந்தாவிளக்கு எரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.[56]

பொன், வெள்ளி, செம்பு போன்றவற்றால் ஆன இறைத்திருமேனிகளும் அணிகலன்களும் பாத்திரங்களும் பழுவூர்க் கோயில்களுக்குப் பல பெருமக்களால் அளிக்கப் பட்டுள்ளன.

கண்டன் தேவடி என்பாரால் கோயில் திருவிழாவின் போது எழுந்தருளுவிக்கக் கணபதி திருமேனியொன்றும் அதற்கான தளம், திருவாசி, பொற்பூ ஆகியனவும் வழங்கப்பட்டன.[57] இக்கணபதியார்க்குத் திருமஞ்சனம் செய்விக்க செப்புப்பானையொன்று குணவன் வடவாயில்

54. A.R.E. 393 of 1924
55. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள், 277.
56. A.R.E. 378 of 1924
57. S.I.I. Vol. XIX, Ins. No. 327

என்பாரால் வழங்கப்பட்டது.[58] இதேபோன்று செப்புக்குடம் ஒன்று பழுவேட்டரையர் கண்டன் சுந்தர சோழராலும் தரப்பட்டது.[59] பழுவேட்டரையர் கண்டன் மறவனின் மகள் வெள்ளிக்கலசம், வெள்ளி மண்டை ஆகியவற்றை அளித்தார்.[60] இறைவனுக்குப் பொன்னாலான பட்டமும் பொற்பூவும் அளிக்கப்பட்டன.[61] வழிபாடுகளின் போது இறைவனுக்குத் தும்பைப்பூ மாலைகள் அணிவிக்க வாய்ப்பாகத் தும்பைச் செடிகள் வளர்க்கும் பொருட்டு நிலக்கொடைகள் அளிக்கப்பட்டன.[62] திருவாலந்துறைத் திருக்கோயிலிருந்த ஆடவல்லார் திருமேனியை ஊசலாட்டுவிக்க பழுவேட்டரையர் கண்டன் சுந்தர சோழர் செம்பொற்கூடம் ஒன்றை எழுப்பினார்.[63] இச்செய்தியால் உத்தம சோழர் காலத்திலேயே ஆடவல்லார் திருமேனி சிறுபழுவூர்த் திருவாலந்துறைத் திருக்கோயிலில் இருந்தமை தெளிவாகிறது.

அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்துத் தென்வாயில் ஸ்ரீகோயிலின் சிங்க மண்டபத்துத் தூண்களில் காணப்படும் பெயர்கள் அம்மண்டபம் உருவாகக் காரணமாயிருந்தவர்தம் பெயர்களாகலாம்.[64] ஆலந்துறையார் கோயிலுக்குப் பூப்பலகை ஒன்றளித்த சேரமானாரின் கைக்கோமாணி மாதேவன் பரமேசுவரன் அக்கோயிலில் கொல்லிப்பெரியான் என்ற பெயரில் திருச்சுற்றாலை அமைத்துத் தந்தார். இக்கல்வெட்டில் குறிக்கப்படும் சேரமானாரின் மனைவியே அக்காரநங்கை. பழுவேட்டரையர் மகளாக இவ்வம்மை அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகக் கோயில்களுக்கு விளக்கறம் செய்தவராவார்.

---

58. S.I.I. Vol. V Ins. No. 674
59. மேலது., Ins. No. 681
60. மேலது., Ins. No. 671
61. S.I.I. Vol. XIX., Ins. No. 327
62. S.I.I. Vol. V, Ins. No. 667; S.I.I. Vol. XIX, Ins. No. 384
63. S.I.I. Vol. V. Ins. No. 681.
64. A.R.E. 375 and 376 of 1924

சேரமானாரைக் குறிக்கும் இம்மூன்று கல்வெட்டுகளும் சுந்தர சோழர் காலத்தில் தமிழ்நாட்டிற்கும் சேரநாட்டிற்கு மிடையே நிலவிய நட்புறவை வெளிப்படுத்துவனவாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலந்துறையார் திருக்கோயிலின் விக்கிரம சோழன் திருவாசல் சீர்குலைந்து சிதைந்தபோது கச்சியரையர் என்னும் பெருமகனார் அதைச் சீரமைத்தார்.[65] முதலாம் பராந்தகர் காலத்தில் (கி.பி 943) இந்தளூருடையான் சாத்தன் திருவரசூரடிகள் என்பார் திருவாலந்துறையார் திருக்கோயில் சார்ந்த நந்தவனங்களில், கீழை நந்தவனத்தைத் திருத்தி, வேண்டுவன பயிரிட வாய்ப்பாகத் திருவேங்கைப் பனங்காட்டுக் கிணற்றில் ஏற்றமிட்டுத் தந்தார். திருவாலந் துறையாரைத் திருமுழுக்காட்டுவதற்கான நீர்பெற இவரே திருமஞ்சனக் கிணறு ஒன்றையும் தோண்டுவித்தார். இதில் ஏற்றமிட்டுக் கன்றுகாலிக்கு நீர் இறைக்கவும் அப்பெருமகனார் வழி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.[66] அக்காலத்து மக்களுக்குக் கால்நடைகள் மீதிருந்த பரிவுணர்ச்சியைப் புலப்படுத்த இக்கல்வெட்டு சிறந்த சான்றாகும்.

இதே போன்றதொரு திருமஞ்சனக் கிணற்றை ஆலந்துறையார் கோயில் வளாகத்தில் தோண்டுவித்த அரையன் விச்சாதிரன் என்பார் இக்கிணற்றுக்கு முடி கொண்டான் என்று பெயர் சூட்டியிருந்தார்.[67]

திருவாலந்துறைத் திருக்கோயிலில் கோயிலுக்குச் சட்டி, குடுவை செய்து தந்த வேட்கோவப் பெருமக்கள், வழிபாடு செய்த சிவாச்சாரியர்கள், நந்தவனத்திற்கு நீர் இறைத்தவர்கள், காளம் ஊதியவர்கள், திருவலகு இட்டு, நீர் தெளித்து

---

65. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள், 293-299.
66. A.R.E. 218 of 1926
67. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள், 298.

திருமெழுக்கிட்டவர்கள், திருப்பள்ளித்தாமம் பறித்தவர்கள், திருப்பதியம் பாடியவர்கள், ஸ்ரீகாரியம் செய்தவர் எனப் பல்வேறு வகையான அலுவலர்கள் பணியாற்றினர். அவர்கட்கு வாழ்வூதியமாக நிலக்கொடை தரப்பட்டிருந்தது.[68]

திருவாலந்துறைத் திருக்கோயிலில் காணப்படும் முதலாம் குலோத்துங்கரின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று அக்காலத்தே சோழ மண்டலத்தில் முந்நூற்றறுபது இறைக்கோயில்கள் இருந்ததாகக் கூறுகிறது.[69] இத்திருக்கோயில்களின் பயன்பாட்டிற்காகக் கோயிலுக்கு ஒரு வேலியென முந்நூற்று அறுபது கோயில்களுக்கும் முந்நூற்றறுபது வேலி நிலம் இறையிலித் தேவதானமாகத் தரப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ் ஆலந்துறையார் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலம் கருணாகரநல்லூரில் அமைந்திருந்தது.

கோயிலாட்சி பற்றியும் கோயில் நடைமுறைகள் பற்றியும் மக்கள் கோயில்களுக்களித்த பல்வேறு கொடைகள் பற்றியும் எடுத்துரைக்கும் பழுவூர்க் கல்வெட்டுகள், பழுவூர்க் கோயில்கள் இருக்கும் பகுதிகளின் அன்றைய பெயர்கள், அவற்றை நிர்வகித்த அமைப்புகள், அங்கு வாழ்ந்த வணிகப் பிரிவுகள், அவற்றின் செயலாக்கங்கள் போன்ற செய்திகளைத் தருவதுடன், அவ்வாட்சியமைப்புகளின் பிரதிநிதிகள், நிர்வாக அலுவலர்கள் போன்றோர் மைய அரசுடன் தொடர்பு கொண்டு தேவையான சூழல்களில் நிர்வாகச் சீரமைப்புகள் செய்து கொண்டதையும் தெளிவாய்ச் சுட்டுகின்றன.

பழுவூர்ப் பகுதிகளின் அன்றைய பெயர்கள்

சோழப் பேராட்சிக்கு உட்பட்ட சிற்றரச மரபினராகப் பழுவேட்டரையர்கள் இருந்தமையால் அவர்தம்

---

68. S.I.I. Vol. XIX, Ins. No. 238.
69. S.I.I. Vol. V, Ins. No. 662.

கல்வெட்டுகள் அனைத்தும் அவை வெட்டப்பட்ட காலத்தில் சோழப் பேரரசை ஆண்டுகொண்டிருந்த மன்னரின் பெயரிலேயே தொடங்கப்பட்டுள்ளன. பழுவேட்டரையர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டுகள் அவ்வக்கால ஆட்சியாளர்களின் பெயர்களுடன் தொடங்குகின்றன. இங்குக் கிடைக்கும் கல்வெட்டுகளுள் காலத்தால் முற்பட்டவை சோழ மன்னரான முதலாம் ஆதித்தருக்குரியவை. இவரது பன்னிரண்டாம் ஆட்சியாண்டிலும்[70] இருபத்திரண்டாம் ஆட்சியாண்டிலும்[71] வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டுகள் தற்போது கீழயூரில் காணப்படும் கோயில் வளாகத்தை அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகம் என்று பெயரிடுகின்றன.

அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகம் குன்றக்கூற்றத்தில் அமைந்திருந்ததாக இக்கல்வெட்டுகள் கொண்டு அறியமுடிகிறது. முதலாம் பராந்தகர் காலக் கல்வெட்டுகள் மேலும் சில விளக்கமான செய்திகளைத் தருகின்றன. இவை கொண்டு அவனிகந்தர்ப்பபுரத்தைக் குன்றக்கூற்றத்துத் தேவதானமாகவும், சிறுபழுவூரை அதே கூற்றத்தைச் சேர்ந்த பிரமதேயமாகவும் தெளியமுடிகிறது.[72] உத்தம சோழரின் காலத்தில்தான் மன்னுபெரும் பழுவூர்[73] என்ற சொல்லாட்சியைக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. இப்பெரும்பழுவூர் இப்போதைய கிழையூரான அவனிகந்தர்ப்பபுரத்தையும் பகைவிடை ஈசுவரம் இருக்கும் இப்போதைய மேலப்பழுவூர்ப் பகுதியையும் உள்ளடக்கியதாகலாம்.

முதலாம் இராசராசரால் சோழப் பெருநாடு பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டபோது பழுவூர்ப்பகுதி உத்துங்கதுங்க வளநாட்டில் அடக்கமானது.[74] கல்வெட்டுகள்

---

70. S.I.I. Vol. XIII, Ins. 235.
71. மேலது., Ins. No. 298; A.R.E. 355 of 1924
72. A.R.E. 369 of 1924; A.R.E. 230 of 1926
73. S.I.I. Vol. XIX, Ins. No. 140.
74. A.R.E. 243 of 1926.

உத்துங்கதுங்க வளநாட்டுக் குன்றக் கூற்றத்துச் சிறுபழுவூர் என்றும் உத்துங்கதுங்க வளநாட்டுக் குன்றக் கூற்றத்துப் பெரும்பழுவூர் என்றும் இவ்வூர்களை அழைக்கத் தலைப்படுகின்றன. இந்த அமைப்பு இறுதிவரை நிலைத்திருந்ததைச் சோழர் காலக் கல்வெட்டுகள் அனைத்தும் உறுதிசெய்கின்றன.

ஆட்சியமைப்புகளும் வணிகக்குழுக்களும்

1. நகரத்தார்

அவனிகந்தர்ப்பபுரம் நகரத்தார் நிர்வாகத்தில் இருந்தது. இவர்கள் மேலை நகரத்தார், கீழை நகரத்தார் என்று இரு பிரிவுகளாக இருந்தனர்.[75] நிர்வாகச் சீரமைப்பிற்காக நந்திபுரத்தில் வழக்கிலிருந்த பழங்கால முறைப்படியே பழுவூரிலும் வரியமைப்புகள் இருத்தல் வேண்டுமென இந்நகரத்தார் பழுவேட்டரையர் மறவன் கண்டனிடம் வேண்டி ஆணை பெற்றனர்.[76] இந்த ஆணை பழுவூர் முழுமைக்கும் ஏற்றவாறு அமைந்திருந்ததைத் தொதபத்திகாரச் செட்டிமார் களின் கல்வெட்டொன்றும் கோயில் ஆட்சியாளர்தம் கல்வெட்டொன்றும் எடுத்துரைக்கின்றன.[77] அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்திலிருந்த இரண்டு கோயில்களுக்கும் தரப்பட்ட கொடைகளுள் சில இந்நகரத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தன. இவற்றை அளித்தவர்கள் இக்கொடைகள் நகரத்தார் மேற்பார்வையில் நிறைவேற்றப் பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தனர். சில நேரங்களில் இக்கொடைகளின் பொறுப்பு மாற்றப் பட்டதையும் அறியமுடிகிறது.

உத்தம சோழரின் ஆட்சிக்காலத்தில் வீரசோழ அணுக்கரான சிறியப்பி மழபாடி என்பார் வடவாயில்

---

75. S.I.I. Vol. XIII, Ins. No. 201 and 215; S.I.I. Vol. XIX, Ins. No. 105.
76. S.I.I. Vol. XIII, Ins. No. 208.
77. மேலது., Ins. No. 344 and 215

ஸ்ரீகோயிலில் விளக்கொன்றெரிக்க நகரத்தாரிடம் பத்துக் கழஞ்சுப் பொன்னை ஒப்புவித்திருந்தார். முதலாம் இராசராசர் காலத்தில் இப்பொன்னைக் கோயில் பட்டுடையார்கள் பெற்றுக்கொண்டு தாமே விளக்கெரிப்பதாகப் பொறுப் பேற்றனர்.[78]

2. சங்கரபாடியார்

இதுபோன்ற கொடைப்பொறுப்புகள் சில, மேலை நகரத்துச் சங்கரபாடியாரிடமும் ஒப்புவிக்கப்பட்டிருந்தன. உத்தம சோழரின் ப்தினாறாம் ஆட்சியாண்டில்,[79] பழுவேட்டரையர் மறவன் கண்டன் தந்த கொடையைப் பெற்றுக்கொண்டு, அவரால் எழுப்பப்பெற்ற திருத்தோற்றமுடையார் திருக்கோயிலில் நந்தாவிளக்குகள் எரிப்பதற்கான நெய் வழங்கும் பொறுப்பை இச்சங்கரபாடியார் ஏற்றிருந்தனர்.

அக்காலத்து வாழ்ந்த பல்வேறு வணிகக் குழுவினர்களுள் சங்கரபாடியாரும் அடக்கம். தமிழகத்துக் கல்வெட்டுகள் சில இவர்தம் அறப்பணிகளைப் பற்றி விரிவாகப் பேசுகின்றன. இவற்றுள் ஒன்று மன்னுபெரும் பழுவூரைச் சேர்ந்த கணபதியான சூரசிகாமணிப் பல்லவரையன், உத்தரமேரூரிலிருந்த திருப்புலிவலத்து மகாதேவர் திருக்கோயிலுக்கு நந்தாவிளக்கெரிக்கப் பதினைந்து கழஞ்சுப் பொன் கொடையளித்ததைக் கூறுகிறது.[80] இக்கொடை உத்தரமேரூர்ச் சதுர்வேதி மங்கலத் தைச் சேர்ந்த வடக்கில் அங்காடி சங்கரபாடியாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச்சங்கரபாடியார் பல்லவர் காலத்திலிருந்தே வாழ்ந்திருந்தமைக்கு உத்தம சோழரின் சென்னை அருங்

---

78. S.I.I. Vol. XIII Ins. No. 201.
79. பு.க. 4.
80. S.I.I. Vol. VI, Ins. No. 363.

காட்சியகச் செப்பேடுகள் சான்றாகின்றன.[81] கச்சிப் பேட்டிலிருந்த இரணஜயப்பாடி, ஏகவீரப்பாடி, வானமசங்கரபாடி என்னும் மூன்று குடியிருப்புப்பகுதிகளில் சங்கரபாடியார் வாழ்ந்தனர். இவர்களிடம் இருபது கழஞ்சுப் பொன் வைப்புநிதியாக ஒப்புவிக்கப்பட்டது. அதன் வட்டி கொண்டு ஊரகம் கோயிலில் நந்தாவிளக்கொன்று ஏற்றும் பொறுப்பை இச்சங்கரபாடியார் ஏற்றிருந்தனர். இவர்கள் குடியிருந்த இரு குடியிருப்புகளின் பெயர்கள் பல்லவப் பேரரசர்களின் விருதுப் பெயர்களாகும். இச்சங்கரபாடியாரை நகரம் என்ற கட்டமைப்புக்குள் வாழ்ந்த வணிகக் குழுவினராக அறிஞர் குறிப்பர்.[82]

3. வளஞ்சியர்

அவனிகந்தர்ப்பபுரத்தில் சங்கரபாடியார் போலவே வளஞ்சியர் என்னும் தென்னிலங்கை சார்ந்த வணிகக் குழுவினரும் இருந்தனர்.[83] பழுவூர்ச் சங்கரபாடியான் குமிழிமனப்பன் விபத்தொன்றில் உயிரிழந்தபோது அவன் நினைவாகப் பழுவூர் வளஞ்சியர் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்து மகாதேவர்க்கு நந்தாவிளக்கொன்றெரிக்க வகைசெய்தனர்.

இவ்வளஞ்சியரைக் குறிப்பிடும் கல்வெட்டுகள் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் கிடைத்துள்ளன. தென்னிலங்கை சார்ந்த இவ்வணிகக் குழுவினர் தமிழ்நாட்டின் பல ஊர்களில் தங்கி வணிகம் செய்ததுடன், வணிக வழி கிடைத்த பொருளின் ஒரு பகுதியைத் தாங்கள் தங்கியிருந்த நாட்டின் நன்மைக்கான பல நற்செயல்களுக்காய்ச் செலவிட்டனர். இலங்கையிலுள்ள கல்வெட்டொன்று

81. மு. நளினி, சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள், வரலாறு 1. ப-ள், 60-71.
82. E.I. Vol. XXII, p. 146.
83. A.R.E. 372 of 1924

இவர்களை ஈழநாட்டவரென்றும் பௌத்த சமயத்தின ரென்றும் கூறுவதாகச் சதாசிவ பண்டாரத்தார் குறிப்பார்.[84] இவ்வளஞ்சியர் மற்றொரு வணிகக் குழுவினரான நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவருடன் இணைந்து கோயில் திருப்பணிகள் செய்தமைக்குத் திருவேள்விக்குடிக் கல்வெட்டொன்று சான்றாகிறது.[85] பொலன்னறுவைக்கு அருகில் கிடைத்த முதலாம் விஜயபாகுவின் சிங்களக் கல்வெட்டொன்று வளஞ்சியரும் நகரத்தாரும் இணைந்து திருக்கோயில் காப்புக்குப் பொறுப்பேற்ற தகவலைத் தருகிறது.[86]

4. சபையார்

சிறுபழுவூர் பிரமதேயமானதால் அந்தணர் சபையின் நிர்வாகத்தில் இருந்தது. இச்சபையின் உறுப்பினர்களுள் ஒருவராய்ப் பழுவூர்ச் சாந்திக்கூத்தன் நாராயணபட்டன் இருந்தார்.[87] பெருங்குறி சபையென்றும் அறியப்பட்ட இச்சபையின் நிர்வாகத்தில் நிலப் பரிவர்த்தனைகளும்கோயில் கொடைகளை நிர்வகித்தல் போன்ற பணிகளும் செவ்வனே நிகழ்ந்துவந்தன.

5. நாட்டார்

குன்றக் கூற்றம் நாட்டாரின் ஆட்சியின் கீழ் இருந்தது. உறத்தூரைக் கருப்பூர் எனப் பெயரிட்டு, வேங்கடவன் அரங்கனான செம்பியன் விறைநாட்டுக்கோனுக்கு ஜன்மபூமியாக வழங்கும்படி பழுவேட்டரையர் கண்டன் மறவன் குன்றக்கூற்றத்து நாட்டாருக்கு ஆணையிட்டதைக் கல்வெட்டொன்று எடுத்துரைக்கிறது.[88] இப்படி வழங்கப்பட்ட

---

84. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, ப.581.
85. S.I.I. Vol. XIX, Ins. No. 459.
86. A.R.E. 1913, Part II, Para. 27.
87. A.R.E. 256 of 1926
88. S.I.I. Vol. XIX, Ins. No. 378

ஜன்மபூமிக்கு ஆண்டு நிலைவரி விதிக்கப்பட்டதுடன் அதனைப் பெறும் உரிமை நாட்டாருடையதாய் இருந்தது. கோயில்களில் விளக்கெரிக்கும் அறங்களையும் இந்நாட்டார் மேற்கொண்டிருந்ததாகத் திருஆலந்துறைக் கல்வெட்டொன்று கூறுகிறது.[89]

பரிந்துரைகளும் பயன்தரு நடவடிக்கைகளும்

இவ்வாட்சியமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், கோயிலாட்சியாளர் போன்றோர் நிர்வாகத் தொடர்பான குறைகள் இருந்தபோது அவற்றை அரசுக்குத் தெரியப்படுத்தினர். அவற்றை அரசு கவனமாகக் கேட்டு, உரிய நடவடிக்கைகள் எடுத்து, உத்தரவுகள் பிறப்பித்ததை இங்குள்ள பல கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.

திருவாலந்துறைத் திருக்கோயில் இறைவழிபாட்டிற்கு அக்கோயில் சார்ந்த தேவதான நிலங்களின் வருமானம் போதுமானதாக இல்லையென்று, அரான்பரான் பணைக்காட்டி வாமகோவரையன் என்பார் அரசுக்கு எடுத்துச்சொல்ல, உடன் அரசு நடவடிக்கை மேற்கொண்டு இறையிலியாக நிலக்கொடை வழங்க உத்தரவிட்டது.[90]

இரண்டாம் இராசாதிராசரின் பதினோராம் ஆட்சியாண்டில் அரசு உயர் அலுவலர் பல்லவராசரின் வேண்டுகோளுக்கிணங்க அரசர் பிறப்பித்த ஆணையொன்று உத்துங்கதுங்க வளநாட்டுப் பகுதியைச் சேர்ந்த நிலக் குத்தகைதாரர்கள் இறையிலியாக்கப்பட்ட அவர்தம் நிலங்களில் உரிமையுடன் பயிரிட்டுக்கொள்ள வகைசெய்தது.[91] இதே போன்ற மற்றோர் ஆணை உத்துங்கதுங்க வளநாட்டுச் சிற்றூர்களிலிருந்த குத்தகைதாரர்கள் அவரவர்தம்

89. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள். 290-291.
90. A.R.E. 261 of 1926
91. A.R.E. 259 of 1926

நிலங்களுக்குச் செலுத்த வேண்டியிருந்த வரியினங்களை அளவிட்டு அறிவித்தது.[92]

காங்கேயராயர், சேதிராயர் எனும் அரசு உயர் அலுவலர்களின் பரிந்துரைகளை ஏற்று இரண்டாம் இராசாதிராசர் தம்முடைய பன்னிரண்டாம் ஆட்சியாண்டில், சிறுக்கண்ணமங்கலமுடையான் புகழன் என்பார் இராசராசப் பெருவிலையில் கொண்ட இருநூற்றி ஐம்பது வேலி நிலத்தை, இராசராச சிறுக்கண்ணமங்கலம் என்ற பெயரில் வழங்கிக்கொள்ள ஆணை பிறப்பித்தார்.[93] இதே போல் வாணாதராயர் வேண்டுகோளை ஏற்றுப் பெரியகுளப்பாடி நிலம் எழுநூற்றி அறுபத்தேழு வேலியைக் குலோத்துங்க சோழன் கூற்றூர் என்னும் பெயரால் ஜன்மபூமியாக்கி, கூற்றூருடையான் தெற்றிப் பெரியானுக்கு தம்முடைய முப்பதாம் ஆட்சியாண்டில் மூன்றாம் குலோத்துங்கர் வழங்கினார்.[94] குன்றக் கூற்றமான உத்துங்கதுங்க வளநாட்டுக் கூற்றூரிலும் இந்நாட்டுக் குளப்பாடியான குலோத்துங்க சோழன் கூற்றூரிலும் காணியுடைய கூற்றூருடையான் தெற்றிப் பெரியானான எதிரிலி சோழ மூவேந்த வேளான் என்று இவரை அழைத்துப் பெருமைப்படுத்தும் மூன்றாம் இராசராசரின் கல்வெட்டொன்று திருமழபாடி வைத்தியநாதசாமி திருக்கோயிலில் காணப்படுகிறது.[95]

இப்பெருமகனார் திருமழபாடி கோயிலில் ஆடரங்கு, நிருத்த மண்டபம், பெருமாள் கோயில், திருமண்டபம் ஆகியவை சிறுத்து ஸ்தான சங்கடமாயிருந்த நிலையை மாற்றி, அவற்றைப் பெரிதாக்கி, அழகுபடுத்தியதையும், ஊர் நடுவிலிருந்த சண்பங்குழியைத் தூர்த்து, விக்கிரம சோழன் திருவீதியாக மாற்றித் தந்ததையும், கொள்ளிடத்திற்குக்

---

92. A.R.E. 257 of 1926
93. A.R.E. 254 of 1926
94. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப. 292.
95. A.R.E. 91 of 1920

கரையெடுத்து ஊரைக் காப்பாற்றியதையும் திருமழபாடி கல்வெட்டு தெரிவிக்கிறது. இவ்வறச் செயல்களுக்காக இப்பெரியாரைப் போற்றிய திருமழபாடி கோயில் தானத்தார், இவர் இத்திருப்பதியிலேயே குடியிருக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டதுடன், இவர் குடியிருக்கக் கோயில் மனையொன்றையும் தந்தனர். இப்பெருமகனார் திருத்தவத்துறைக்கு அருகிலுள்ள நத்தமாங்குடி சிவன் கோயிலைக் கற்றளியாக்கியதாக அங்குள்ள கல்வெட்டொன்றால் அறியமுடிகிறது.[96]

அரசு அலுவலர்கள்

அரசரால் பல்வேறு ஆட்சியமைப்புகளுக்கு அனுப்பப்பட்ட ஆணைகள் திருமந்திர ஓலை என்னும் அலுவலரால் எழுதப்பட, அவற்றில் உயர்அலுவலர்கள் கையெழுத்திட்டனர். இரண்டாம் இராசாதிராசரின் காலத்தில் இராசேந்திரசிங்க மூவேந்த வேளார் திருமந்திர ஓலையாய்ப் பணியாற்ற, நீலகங்கரையர், தீபத்தரைசர், கனகராயர், நந்திபன்மர், வில்லவராசர், வாணாதராயர், நுளம்பராயர், மலையப்பிராயர், காங்கேயராயர், அமரகோன், சேதிகுலராயர், சேதியராயர் என்பார் உயர் அலுவலர்களாய்ப் பொறுப்பில் இருந்தனர்.[97] புரவுவரி ஸ்ரீகரணநாயகம், புரவுவரி ஸ்ரீகரணத்து முகவெட்டி, வரியிலார், வரிக்கூறு செய்வார், பெருந்தரம், பெருந்திணை என அரசு சார்புடைய அலுவலர்கள் பலர் இவ்வூர்க் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றனர்.[98]

அவனிகந்தர்ப்பபுரத்து மத்யஸ்தராக எறன் மழவாடியான பிரம்மபிரியனும், சிறுபழுவூர் மத்யஸ்தராக முடிகொண்டான் சொக்கனான மூவாயிரப் பிரியனும் பணியாற்றினர்.[99] அன்றைக்கு வழக்கிலிருந்த வரிகள், வளநாடு,

---

96. A.R.E. 153 of 1928-29
97. A.R.E. 254 of 1926; S.I.I. Vol. V, Ins. No. 663.
98. S.I.I. Vol. V, Ins. No. 662, 663 and 672; A.R.E. 356 of 1924
99. A.R.E. 236 of 1926; அ. அப்துல் மஜீத், மு. நளினி, கீழ்ப்பழுவூர்க் கல்வெட்டுகள், வரலாறு 2, ப. 37.

நாடு, கூற்றம், ஊர் போன்ற பிரிவுகள் மற்றும் அளவைகள் பற்றியும் பழுவூர்க் கல்வெட்டுகள் பல பயனுள்ள தகவல்களைத் தருகின்றன.

வரிகள்

காணிக்கடன், காராண்கிழமை, சிற்றிறை, புரவுவரி, உள்வரி, அந்தராயம், பாட்டம், இறைக்கட்டு எனப் பல வரிகள் தண்டப்பெற்றன.[100] பல்வேறு காரணங்களை முன்னிட்டு வரி விலக்கும், வரிச்சலுகையும் அளிக்கப்பெற்றன. மகாமண்டலேசுவர விட்டமசோழதேவ மகாராசர் பழுவூர்ப் பற்று, குன்றப்பற்று, உகளூர்ப்பற்று ஆகியவற்றைச்சேர்ந்த காணியாளர்கள் வழக்கமாகச் செலுத்தும் தொண்ணூறு பொன் காணிக்கைக்குப் பதிலாக, அறுபது பொன் செலுத்தினால் போதும் எனக் குன்றக் கூற்றத்து நாட்டாருக்கிட்ட ஆணைவழி வரிச்சலுகை அளித்துள்ளார்.[101]

வளநாடுகள்

வளநாடுகளின் பெயர்கள், ஆட்சியிலிருந்த சோழ மன்னர்களின் விருதுப் பெயர்களையும் அவர்தம் தேவியர் பெயர்களையும் ஏற்றிருந்தன. முதலாம் இராசராசர் காலத்தில் பொய்கைநாடு இருந்த வளநாட்டுப் பகுதி இராசேந்திரசிங்க வளநாடென்று அழைக்கப்பட்டது.[102] இவ்வளநாடு முதலாம் குலோத்துங்கர் காலத்தில் புவனமுழுதுடை வளநாடு என்றும் இரண்டாம் குலோத்துங்கர் காலத்தில் திரிபுவனமுழுதுடை வளநாடென்றும் பெயர் மாற்றம் பெற்றது.[103] இவ்வளநாடு தவிர நித்த வினோத வளநாடு, விருதராச பயங்கர வளநாடு, இருங்கோளப்பாண்டி வளநாடு, இராஜகம்பீர வளநாடு

---

100. S.I.I. Vol. XIII, Ins. No. 236; S.I.I. Vol. V, Ins. No. 662.
101. A.R.E. 251 of 1926
102. A.R.E. 385 of 1924
103. S.I.I. Vol. V, Ins.No. 662, A.R.E., 261 of 1926

என்னும் நான்கு வளநாடுகளின் பெயர்கள் பழுவூர்க் கல்வெட்டுகளில் காணக்கிடைக்கின்றன.[104]

பழுவூர்ப் பகுதியிலிருந்த குன்றக்கூற்றம் போல் பாம்புணிக்கூற்றம், விறைக்கூற்றம், வெண்ணிக்கூற்றம், மிறைக்கூற்றம், மிழலைக்கூற்றம், கிழார்க்கூற்றம் என்னும் பல கூற்றங்களின் பெயர்களும் பழுவூர்க் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.[105]

மிலாடு, விறைநாடு, மங்கலநாடு, மீகோழைநாடு, விளாநாடு, நென்மலிநாடு, பாண்டிநாடு, எரிகீழ்நாடு, தொண்டிநாடு, பொய்கைநாடு, இறையூர்நாடு, மிறைநாடு, பள்ளிநாடு, வைசாலிநாடு, சூனிமான்நாடு, இடதுறைநாடு, கானக்கிளியூர்நாடு என அக்காலத்தே இருந்த பல்வேறு நாட்டுப் பிரிவுகளின் பெயர்களுடன்,[106] எண்பத்திரண்டு ஊர்களின் பெயர்களும் பழுவூர்க் கல்வெட்டுகளிலிருந்து கிடைகின்றன.

இவ்வூர்ப் பெயர்களுள் மங்கலம் என்னும் பின்னொட்டுடைய பெயர்களாகப் பகைவிடை சதுர்வேதிமங்கலம், உத்தமதானி சதுர்வேதிமங்கலம், கண்டராதித்த சதுர்வேதிமங்கலம், பனமங்கலம், புள்ளமங்கலம், சாத்தமங்கலம், சிறுக்கண்ணமங்கலம் என்பனவும் புரம் என்னும் பின்னொட்டுடைய ஊர்ப்பெயர்களாகக் கவரிபுரம், நந்திபுரம், அவனிகந்தர்ப்பபுரம், சேனாபுரம், கங்கைகொண்ட சோழபுரம் என்பனவும் அமைந்திருந்தன. பாடி என்னும பின்னொட்டுடன் சங்கரபாடி, வரகுபாடி, வாணகப்பாடி,

---

104. A.R.E. 256, 253 and 254 of 1926
105. S.I.I. Vol. V, Ins. No. 674; S.I.I. Vol. XIII, Ins. No. 236, S.I.I. Vol. XIX, Ins. No. 226; A.R.E. 216 and 230 of 1926; இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள், 289-90.
106. S.I.I. Vol. XIII, Ins. No. 98; S.I.I. Vol. XIX, Ins. No. 378,394 A.R.E. 380-394 of 1924; A.R.E. 230, 233, 234 and 254 of 1926; இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள், 290-291, 300-301.

குறிஞ்சிப்பாடி தென்பாளன்பாடி, உம்பளப்பாடி, கூளப்பாடி, இருங்கோளப்பாடி என்னும் ஊர்களும் குடி என்னும் பின்னொட்டுடன் செம்புதற்குடி, கடலைக்குடி, தில்லைக்குடி, முதுகுடி, உரகன்குடி, வெட்டக்குடி, மணற்குடி என்னும் ஊர்களும் இருந்தன.

ஊர் என்னும் பின்னொட்டுடன் கூடிய ஊர்ப் பெயர்களே மிகுதியான அளவில் இருந்துள்ளன. அவை சிறுகலூர், பரதூர், கூற்றூர், அலையூர், பூவனூர், மருதூர், கடலூர், புத்தூர், கருப்பூர், ஆன்மூர், உறத்தூர், மணலூர், வரகூர், ஆதனூர், கிளியூர், காட்டூர், மல்லூர், மேலூர், இறையூர், நாவலூர், கோடனூர், கோட்டூர், வெள்ளூர், இந்தலூர், தத்தனூர், தஞ்சாவூர், பூஞ்சூற்றூர், நல்லாற்றூர், குளத்தூர், சாத்தனூர், மருதத்தூர், கற்காட்டூர், வடவகுகூர், சிறுகண்மூர், சிங்கானத்தூர், உம்பளக்கானத்தூர், பெரும்புலியூர், பசுங்குளத்தூர் என்பனவாம்.

நல்லூர் என்னும் பின்னொட்டுடன் பந்தணைநல்லூர், ஆரணிநல்லூர், திருநல்லூர், கருணாகரநல்லூர், திருவாலந்துறைநல்லூர், திருச்சிற்றம்பலநல்லூர், சுத்தமலிநல்லூர், ஆனைநல்லூர், திருவெண்ணெய்நல்லூர், குலோத்துங்க சோழநல்லூர் என்னும் ஊர்கள் இருந்துள்ளன. இதுபோன்ற பின்னொட்டுடன் இல்லாத ஊர்ப் பெயர்களாக உத்தமதானி, திருச்சிருவிளந்தை, வாரணவாசி, முன்பாலை, இடையாற்றுப் பாத்தி, கல்லகம், துடரி, மறவன்நெறி, கண்டனேரி, பசுங்குளம், திருத்தங்கால், நென்மலி, மால்வாயில், திருவையாறு என்பன அமைந்துள்ளன.

இவ்வெண்பத்திரண்டு ஊர்களுள் உரகன்குடி குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. பழுவூர்க் கோயில்களுக்குரிய தேவதான நிலங்கள் மிகுதியான அளவில் இருந்த ஊராக இவ்வுரகன்குடியையே கல்வெட்டுகள் சுட்டுகின்றன.[107] உரகன்குடியின் பெரும்பகுதி தரிசாகக்

107. S.I.I. Vol. XIII, Ins. Nos. 235 and 298; S.I.I. Vol. XIX, Ins. No. 402; A.R.E. 363, 380, and 386 of 1924.

கிடந்தது. இந்நிலப் பகுதிகளை ஊர் மக்கள் சிலர் பெற்று, உழுது, திருத்திப் பயிர் விளையச்செய்து, பிறகு இவற்றைப் பழுவூர்க் கோயில்களுக்குக் கொடையளித்தனர்.[108] முதலாம் ஆதித்த சோழர் காலத்திலிருந்து முதலாம் இராசேந்திர சோழர் காலம் வரை கொடையளிக்கப்பட்ட பல நிலப்பகுதிகள் உரகன்குடி நிலங்களாகவே அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. சில கல்வெட்டுகள் விறைக்கூற்றத்துப் பசுங்குளத்தூர், அவனிகந்தர்ப்பபுரம், மல்லநாதித்தன்குளம் போன்ற ஊர்களிலும் உரகன்குடி போலவே நிலப்பகுதிகள் தரிசாய்க் கிடந்தமையை உணர்த்துகின்றன.[109] சோழர்களின் ஆட்சிக் காலத்தில், அரியலூர் மற்றும் பழுவூர்ப் பகுதிகளிலிருந்து பல ஊர்களின் தரிசுநிலப் பகுதிகள் வேளாண்மைக்குக் கொணரப்பட்டு விளைநிலங்களாக்கப்பட்டமைக்குப் பழுவூர்க் கல்வெட்டுகள் சான்றாகின்றன. இந்த நிலச்செம்மையாக்கம் முற்சோழர் காலத்தே தமிழ்நாட்டின் பல இடங்களில் நிகழ்ந்துள்ளது.

அளவைகள்

கொடுக்கல், வாங்கலுக்கு, நெல், நாணயம், பொன் ஆயன பயன்படுத்தப்பட்டன. தாலச்செம்மைப் பொன், திப்பொக்குச் செம்பொன், நகர வாழ்ச்சிப் பொன், துளைப்பொன் என்று பல பெயர்களில்[110] பொன் அளிக்கப் பட்டுள்ளது. இப்பெயர்கள் தரத்தின் அடிப்படையில் அமைந்தனவாகலாம். பொன்னையளக்க மாடை, நகரக்கல் எனும் நிறுத்தலளவைகள் பயன்பட்டன.[111] குறுணி, தூணி, மரக்கால் என்னும் அளவைகள் நெல் அளக்கவும் உரி, நாழி, உழக்கு, ஆழாக்கு என்னும் அளவைகள் நெய் அளக்கவும்

---

108. S.I.I. Vol, XIII, Ins. Nos. 235, 298; A.R.E. 363, 380 and 386 of 1924.
109. A.R.E. 369 of 1924; S.I.I. Vol. XII Ins. No. 227.
110. S.I.I. Vol, XIX, Ins. No. 378; A.R.E. 359 and 378 of 1924.
111. A.R.E. 390 of 1924; S.I.I. Vol. V, Ins. 671.

பயன்பட்டன.[112] திருவையாறன். கீரன் இலக்குவணன், தேவர்கால், கோபிநாதன்கால் என்னும் பெயர்களுடன் கூடிய அளவு நிர்ணயிக்கப்பட்ட மரக்கால்களும்[113] தேவர்நாழி, இராசகேசரி என்னும் முகத்தலளவைகளும்[114] புழக்கத்திலிருந்தன. பழுவூரில் முதலாம் குலோத்துங்க சோழர் காலத்தில் நாணயச்சாலையொன்று இயங்கியது.[115] அன்றாடு நற்காசு, காசு என்னும் நாணயங்களைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

சமுதாயம்

பழுவூர்க் கல்வெட்டுகளில் அந்தணர்களே அதிக அளவில் இடம்பெற்றுள்ளனர். கொடையாளிகளாகவும், கொடையளிக்கப்பட்ட நிலப்பகுதிகளை அடுத்திருந்த நிலங்களின் உரிமையாளர்களாகவும் சபையமைப்பின் ஆட்சியாளர்களாகவும், கோயில் நிர்வாகம் சார்ந்த அலுவலர்களாகவும், அரசு அலுவலர்களாகவும், சமுதாயத்தின் பல நிலைகள் சார்ந்து அவர்கள் வாழ்ந்திருந்தனர். சாவாந்தி[116] பாலாசிரியன் என்னும் இருபிரிவுகள் சேர்ந்த அந்தணர்களே பழுவூர்க் கல்வெட்டுகளில் பெரும்பான்மையாகக் குறிக்கப்பட்டுள்ளனர். இவ்விரு பிரிவினருமே ஆலந்துறையார் மற்றும் மறவனீசுவரம் கல்வெட்டுகளில்தான் இடம் பெற்றுள்ளனர். இதற்குக் காரணம் இக்கோயில்கள் இருந்த பகுதி பிரமதேயமாக இருந்தமையேயாகும்.

---

112. S.I.I. Vl. XIX, Ins. No. 406; S.I.I. Vol. V, Ins. No. 665; S.I.I. Vol, XIII Ins. No. 236; A.R.E. 231 and 233 of 1926; S.I.I. Vol. XIII. Ins. No. 209.
113. A.R.E. 370 of 1924; S.I.I. Vol. V, Ins. No. 665; A.R.E. 372 of 1924; A.R.E. 253 of 1926
114. A.R.E. 363 and 399 of 1924; A.R.E. 245 of 1926; இரா. கலைக்கோவன், ஸ்ரீகண்ட் ஈசுவரம், கட்டுரை தமிழரசு, (திங்கள் இருமுறை இதழ்), 1 மே 1988, ப-ள். 33-34.
115. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப. 301.
116. S.I.I. Vol. V, Ins. Nos. 666, 668 and 669; A.R.E. 219, 234, 242, 243 and 248 of 1926.

புள்ளமங்கலம், சாத்தமங்கலம், தொழூர், சிறுபழுவூர், வாணவிச்சாதிரநல்லூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த பாலாசிரியர்களாக இலக்குவணன் கூத்தப்பன், கண்டன் திருவாலந்துறை, நாராயணன் இரவி, அக்கிரன், சடையன் கீரன், நக்கன் நாராயணன், மூவாயிரவன் குமாரன் உமாபதி, கவிசியன் குமரன் மூவாயிரவன், ரவி இரவி, கீரன் இலக்குவணன், நாராயணன் ஒலோகநாதன், குமரன் இரவி, கண்டன் ஸ்ரீகுவாலந்கோனை, ஸ்ரீகண்டன் அய்யாறன், லோகவணகேதி, இரவி சோழன், கௌசிகன் நமச்சிவாய திருச்சிற்றம்பலமுடையான், நமசிவாயர், சுத்தமல்லன் விநாயகபட்டன், மூவாயிரவன் அய்யாறன், நாராயணன் திருவாய்க்குலமுடையான், மூவாயிரவன் நக்கன், கீரன் கேசுவன், இராமன், கீரன் மகாதேவன் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர்.[117]

அந்தணர்களையடுத்த நிலையில் அரச மரபினர், அரசு அலுவலர்கள் ஆகியோர் பழுவூர்க் கல்வெட்டுகளில் கொடையாளிகளாகவும் நிர்வாகிகளாகவும் இடம்பெறு கின்றனர். சங்கரபாடியார், வளஞ்சியார் போன்ற வணிக அமைப்புகள் பொது நிலையிலும், சில வணிகர்கள் குறிப்பாகவும் இக்கல்வெட்டுகளில் சுட்டப்பெறுகின்றனர்.

அரண்மனைப் பணிப்பெண்கள், படைவீரர்கள், கோயில் அலுவலர்கள், ஆடற்பெண்கள், பொதுமக்கள் ஆகியோர் இதற்கடுத்த நிலையினராக அமைகின்றனர். மன்றாடிகள், வேட்கோவர்கள், உழுகுடிகள், குற்றேவல் செய்தோர் போன்ற தொழிலாளர்களையும்கூட பழுவூர்க் கல்வெட்டுகளில்[118] பார்க்கமுடிகிறது.

---

117. S.I.I. Vol. V, Ins. Nos. 666 and 673; S.I.I. Vol. XIX, Nos. 211 and 237; A.R.E. 218, 243, 246 and 256 of 1926; இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப. 300.

118. S.I.I. Vol. XIII, Ins. No. 209, S.I.I. Vol. XIX, Ins. No. 238.

மக்கட் பெயர்கள்

அக்கால மக்கள் பல்வேறு பெயர்களைக் கொண்டிருந்தனர். அவர்களுள் சிலர் அரசர் பெயரைத் தம் பெயரின் முதற்பகுதியாகக் கொண்டிருந்தனர். கண்டன் திருவாலந்துறை, ஸ்ரீகண்டன் மாறன், மனப்பெருமை சாமியான குன்றநாட்டு கண்டபெருந்திணையார், கண்டன் செட்டி, கண்டன் தேவடி, கண்டபிராட்டி, கண்டன் நெரியாள், நக்கன் ஸ்ரீகண்டன், கண்டன் ஸ்ரீகுவாலந்கோனை, ஸ்ரீகண்டன் ஐயாறன் ஆகியோர் கண்டன் என்ற அரசர் பெயரை இணைத்துக்கொண்டிருந்தனர்[119]

பழுவூருக்கு அருகிலுள்ள ஊரான திருமழபாடியின் பெயரைக் கொண்டவர்களாய்ப் பலர் காணப்படுகின்றனர். இவர்தம் பெயர்களின் முன் அல்லது பின்னொட்டாக மழுவாடி, மழபாடி எனும் சொற்கள் இணைந்துள்ளன. மிலட்டுடையான் புகழன் திருமழபாடி, குழலுடையான் குடிதாங்கி திருமழுவாடி, இதளக்குடையான் அணையன் திருமழுவாடி, கொப்பாடி மழபாடி அதிசூரன், கேசன் மழபாடி, திருமழுவாடி சோலைப் பிரான், சிறுகானத்தூருடைய பெருமான் மழபாடி, சிறியப்பி மழபாடி, ஏறன் மழவாடி, திருமழபாடி கிரமவித்தன் என்பார் அவருள் ஒருசிலர்.[120]

முக்கோக்கிழானடிகள், பஞ்சவன்மாதேவி, அரிஞ்சிகை மாதவடிகள், நாட்டின சேயாள் நங்கை, அழியாநிலை, காமன் கோவியார் என்பன இக்கோயில்களுக்குக் கொடையளித்த சில அரச மகளிர் பெயர்களாகும்.[121] இவர்களுள் பஞ்சவன்மாதேவி முதலாம் இராசராசரின் தேவியாவார்.

---

119. S.I.I. Vol. V. Ins. No. 673, 669 and 682; S.I.I. Vol. XIII, Ins. No. 344; S.I.I. Vol XIX, Ins. No. 308; A.R.E. 366 and 368 of 1924. ARE 234 and 246 of 1926.
120. S.I.I. Vol. V. Ins. No. 673; S.I.I. Vol XIX, Ins. No. 105, 308 and 378; S.I.I. Vol XIII, Ins. No. 201; A.R.E. 370 of 1924; இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப. 283.
121. A.R.E. 362, 372 and 385 of 1924; A.R.E. 235, 237 and 247 of 1926

இவர்கள் தவிர வீராணன் ஒற்றியூர், தேவடி புகழறை, குமிழி காணவல்லி, சங்கரன் வடுகி, கண்டராதித்தி, அறிஞ்சிகை மாதேவடிகள், நந்திங்கடத்தி, காடன் பொன்னசை, மோகன ஆண்டதிரு, மொகுலியள், ஊரன்சுவரி ஆகிய பெண்களும் பழுவூர்க் கல்வெட்டுகளில் கொடையாளிகளாகக் காட்சியளிக்கின்றனர்.[122] இது அக்காலத்துப் பெண்கள் பெற்றிருந்த உரிமை வாழ்க்கையைச் சுட்டுகிறது. இக்கொடையாளிகளுள் மோகன ஆண்டதிரு தம் கணவரும் மைத்துனரும் இறந்தமையால், தமக்கு வந்துற்ற சொத்துகளைக் கோயிலுக்குக் கொடையளித்திருக்கிறார்.[123] இக்கொடையால் அக்காலச் சொத்துரிமை பற்றித் தெளிவான நிலைகளையும், தனக்குரிய சொத்துகளை ஒரு பெண், தன் விருப்பம்போல் கையாளப் பெற்றிருந்த உரிமைச் சூழல்களையும் தெள்ளிதின் உணரலாம்.

திருக்கோயில் பணிகளில் தங்களை இணைத்துக் கொண்ட பெண்களாக அக்கார நங்கை, கிடந்த பெருமாள், மெரிய அரங்கபிரான், குமரக்கன், மானதிரி, கண்டபிராட்டி, பெற்றமை, வீரநானி, பஞ்சவன்மாதேவி, ஐயாற்றடிகள் ஆகியோர் பெயர்களைக் கல்வெட்டுகள் தருகின்றன.[124] இப்பெண்கள் தங்கள் பெயருக்கு முன் நக்கன் என்ற பொதுப் பெயரைக் கொண்டிருந்தனர். நக்கன் சிவபெருமானைக் குறிக்கும் சொல்லாகும். அப்பரும் சம்பந்தரும் திருமுறைகளில் இறைவனைக் குறிக்க இச்சொல்லைப் பெருவிருப்போடு பயன்படுத்தியுள்ளனர்.[125] இறைக்கோயில்களுக்குத் தங்களை முற்றிலுமாய் அர்ப்பணித்துக் கொண்டவர்களும் இறைக்

---

122. S.I.I. Vol. V. Ins. No. 665; S.I.I. Vol. XIX, Ins. No. 308, A.R.E. 358 of 1924; A.R.E. 234, 235, 241, 243 and 258 of 1926; இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப. 282.
123. A.R.E. 258 of 1926
124. S.I.I. Vol. XIII, Ins. No. 154; S.I.I. Vol XIX, Ins. No. 140; A.R.E. 363, 366, 384-386 of 1924
125. ஐந்தாம் திருமுறை, (தருமபுர ஆதீன வெளியீடு, 1961) பதிக எண், 75, பா. எ. 757

கோயில் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களும் இந்நக்கன் என்ற பொதுப்பெயரைக் கொண்டிருந்தனர். ஆண், பெண் இருபாலரும் இப்பெயரோடு திகழ்வதைப் பல சோழர் காலக் கல்வெட்டுகள் தெளிவுபடுத்துகின்றன.[126]

வேளாண்மை

முதன்மைப் பயிராக நெற்பயிரே அமைந்தது. நிலங்கள் அவற்றின் விளைச்சலுக்கேற்ப மதிப்பிடப்பட்டு அம்மதிப்பீட்டிற்கேற்ப வரி விதிக்கப்பட்டது. இவ்வரி நெல்லாகவே பெறப்பட்டது. சில நேரங்களில் பொன்னும் வரியாகப் பெறப்பட்டது. பழுவூர்க் கோயில்களுக்குத் தேவதானங்களாகத் தரப்பட்ட நிலப்பகுதிகளுள் பெரும்பான்மையானவற்றைக் குத்தகைதாரர்களே பயிர் செய்தார்கள். விளைவில் கோயிலுக்குரிய பங்கைக் கோயில் திருமுற்றத்திற்கே கொண்டுவந்து அளந்து தந்தார்கள்.[127] நில உரிமை மாற்றங்கள் நடந்தபோது எல்லைகள் மிகுந்த கவனத்துடன் ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டன.[128] நிலங்கள் குடிநீக்கியும், குடிநீக்காமலும் கோயிலுக்கு விற்கப்பட்டன்.[129] இவை முறையே குடிநீக்கிய தேவதானமென்றும் குடிநீங்காத தேவதானமென்றும் ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்றன.

நிலவிலை காலத்திற்கேற்ப மாறியிருந்தது. உத்தம சோழர் காலத்தில் எட்டுக் கழஞ்சுத் திப்பொக்குச் செம்பொன்னுக்கு இரண்டு மா நிலம் விற்கப்பட்டது.[130] முதலாம் இராசராசர் காலத்தில் ஒரு திப்பொக்குச் செம்பொன்னுக்கு அரைமா நிலம் விற்கப்பட்டது.[131] மிகக் குறுகிய காலத்தில் நிகழ்ந்த இந்த விலை

---

126. S.I.I. Vol. XIX, Ins. Nos. 10, 88, 133 and 137.
127. S.I.I. Vol. V. Ins. No. 678.
128. A.R.E. 216 of 1926
129. S.I.I. Vol. XIX Ins. No. 378; S.I.I. Vol. XIII, Ins. No. 236.
130 A.R.E. 216 of 1926
131. S.I.I. Vol V. Ins. No. 669.

மாற்றம் நிலத்தின் இருப்பிடம், அதன் பாசன வசதி, அதன் விளைவாற்றல் ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டதாகக் கொள்ளலாம். தோப்புகள் அக்கறையுடன் வளர்க்கப்பட்டன. அவை கொடையாகவும் தரப்பட்டன. ஆலந்துறையார் திருக்கோயில், அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகம் ஆகிய இரண்டு கோயில்களுமே தோப்புகளைக் கொடையாகப் பெற்றிருந்தன. இலுப்பைத் தோப்பு, பழமரத்தோப்பு என இத்தோப்புகள் பல்வகைப்பட்டனவாயிருந்தன.[132] புன்செய், நன்செய்ப் பயிர்களும் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன.[133] விளக்கெண்ணெய்ச்செய், வன்னிச்செய் என்று நிலங்கள் குறிக்கப்படுகின்றன.[134] அளவைகள் பெயர் கொண்டிருந்தாற் போலவே நிலங்களுக்கும் பெயர்கள் இடப்பெற்றிருந்தன.

பல ஊர்களில் தரிசுநிலங்கள் விளைச்சலுக்குக் கொணரப்பட்டன. குறிப்பாக உரகன்குடியிலிருந்த தரிசுநிலங்கள் பெருமளவிற்கு விளைநிலங்களாகத் திருத்தப்பட்டமைக்குப் பல கல்வெட்டுகள் சான்றாகின்றன.[135] இப்படித் தரிசுகளை விளைநிலங்களாக்கும் போக்கு கொடையாளர்களால் ஓர் அறப்பணி இயக்கமாகக் கருதிச் செய்யப்பட்டமையை நன்கு உணரமுடிகின்றது.

நீர்ப்பாசனம்

வேளாண்மைக்கு இன்றியமையாத நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவது ஆட்சியாளரின் தலையாய கடமையாக இருந்துவந்ததைச் சங்க காலத்திலிருந்தே பார்க்கமுடிகிறது.[136] குளங்கள், வாய்க்கால்கள் போன்றவற்

---

132. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள், 289-290; A.R.E. 377 of 1924.
133. A.R.E. 388 of 1924; S.I.I. Vol. V, Ins. No. 679.
134. S.I.I. Vol. XIII, Ins. No. 236, A.R.E. 244 of 1926.
135. S.I.I. Vol. XIII, Ins. Nos. 227, 235 and 298; S.I.I. Vol. XIX, Ins. No. 402, A.R.E. 363,369, 380 and 386 of 1924.
136. பொ.வே. சோமசுந்தரனார், (உரையாசிரியர்), பத்துப்பாட்டு மூலமும் உரையும், இரண்டாம் பகுதி, பட்டினப்பாலை, அடிகள் 283-286.

றோடு அணைகளும் சங்க காலத்தே கட்டப்பட்டிருந்தன என்பதைச் 'சிறையழி புதுப்புனல் பாய்ந்தென' என்னும் ஐங்குறுநூற்று அடியால் அறியமுடிகிறது. பல்லவர் காலத்தே சில இடங்களில் பேரேரிகள் அகழப்பட்டமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.[137] இவ்வேரிகளைக் கண்காணிக்க ஏரிவாரியமென்றே ஓர் அமைப்பு செயற்பட்டு வந்தது.[138]

சோழர் காலத்தும் இதுபோன்ற நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கும் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டன. பழுவூர்ப்பகுதியில் அந்நாளில் இருந்த பல்வேறு குளங்கள், ஏரிகள், இவற்றிலிருந்து வெட்டப்பட்ட நீரோடு கால்கள் பற்றிப் பல கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. இரண்டு கல்வெட்டுகள் இராஜேந்திர சோழப் பேராற்றைக் குறிக்கின்றன. ஒரு கல்வெட்டில் இந்த ஆறு ஸ்ரீகண்டராதித்த சதுர்வேதிமங்கலத்திலிருந்து பிரிந்த வரகுமை வாணவிச்சாதிர நல்லூரில் கொடையளிக்கப்பட்ட நிலமொன்றிற்கு எல்லையாகச் சுட்டப்பெறுகிறது.[139] காணியாளர்க்குச் சில நெறிமுறைகளை வழங்கும் இரண்டாம் இராசாதிராசரின் கல்வெட்டு,[140] இராசேந்திர சோழப் பேராற்றை, நாடுகளைப் பிரிக்கும் எல்லைக் கோடாகப் பயன்படுத்துகிறது. இராசேந்திர சோழப் பேராற்றுக்குத் தெற்குள்ளார், இராசேந்திர சோழப் பேராற்றுக்கு வடக்குள்ளார் என்னும் கல்வெட்டு வரிகள் இதனை மெய்ப்பிக்கும்.

பழுவூரில் பல ஏரிகள் இருந்தன. பன்மாகேசுவரப் பேரேரி, கருவிடை ஏரி, கண்டன் ஏரியான தீர்த்தக் குளம்,

137. மா. இராசமாணிக்கம் பிள்ளை, பல்லவர் வரலாறு (சென்னை, கழகவெளியீடு, 1977) ப. 238.
138. மேலது,. ப-ள். 238-239.
139. S.I.I. Vol. V, Ins. No. 673
140. A.R.E. 259 of 1926

பவித்திரமாணிக்கப் பேரேரி, மானதனப் பேரேரி, மலையவிச்சாதிரப் பேரேரி என இவ்வேரிகள் பெயரிடப் பட்டிருந்தன.[141] ஐயன் குளம், ஆண்டான் குளம், நம்பியார் குளம், பொன்னக் குளம், மல்லன் ஆதித்தன் குளம், பசுங்குளம், திருவாலந்துறைநல்லூர்க் குளம், செங்குளம், கருங்குளம் எனப் பல குளங்கள் பழுவூரிலிருந்தன.[142] மல்லன் ஆதித்தன் குளமே மல்லத்தான் குளம் என்று மருவி, கிழையூருக்கும் சிறுபழுவூருக்கும் இடைப்பட்ட பகுதியில் இன்றளவும் பயன்பாட்டில் இருந்துவருகிறது. மலத்தான் குளம் என்று அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்துக் கல்வெட்டு குறிப்பதும் இக்குளத்தைத்தான்.[143] வாய்க்கால்கள் அரிஞ்சயன், கொந்தக்க மாதேவி, தூரி, இராசேந்திர சோழன், இரணமுகராமன், கணத்தார், சுத்தமல்லி, திருவேங்கடம் என்னும் பெயர்களைக் கொண்டமைந்திருந்தன.[144] உள்சிறுவாய்க்கால், புறவாய்க்கால், பெருவாய்க்கால் என்று இடஞ்சார்ந்த பெயர்களுடனும் சில வாய்க்கால்கள் இருந்தன.[145] இவை தவிர திருவரங்க வதி, கண்டராதித்த வதி, சுத்தமலி வதி, பவித்திரமாணிக்க வதி என்னும் வதிகளும் இருந்தன.[146] 'முக்கோலக[ல*]த்தால் வதியட்டிக் கீழ்க்கடை நீர் போவதாகவும்' என்னும் கல்வெட்டின் துணை கொண்டு இவ்வதிகளை நீரோடும் கால்களாக அறியலாம்.[147]

---

141. S.I.I. Vol V, Ins. Nos. 664 and 677; A.R.E. 362 and 372 of 1924; இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள் 282,290
142. S.I.I. Vol V, Ins. Nos. 668 and 678; A.R.E. 234 and 248 of 1926; S.I.I. Vol. XIII, Ins.. No. 227; S.I.I. Vol. XIX, Ins. No. 384.
143. A.R.E. 377 of 1924.
144 S.I.I Vol. V, Ins. Nos. 662 and 673; A.R.E. 362 and 389 of 1924; இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள் 282, 289, 290
145. A.R.E. 216 and 234 of 1926.
146. S.I.I. Vol. V, Ins. No. 662; A.R.E. 362 of 1924; இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள் 290.
147. S.I.I. Vol. VI, Ins. No. 292.

மூடப்படாத திறந்த கால்வாயைக் குறிக்கும் மடை[148] என்ற சொல் பழுவூர்க் கல்வெட்டுகளில் இரண்டு இடங்களில் கையாளப்பட்டுள்ளது. நம்பியார் குளத்தில் மேலைமடை[149] என்னும் கல்வெட்டு வழி, அக்குளத்திற்குக் கீழை மடையொன்றும் இருந்ததை அறியமுடிகிறது. மற்றொரு கல்வெட்டில் சிறுபழுவூருக்கு மேற்கிலிருந்த கருங்குளத்துக் குழிச்செய் மடை குறிக்கப்படுகிறது.[150]

ஓடை, தூம்பு என்பனவும் பழுவூர்க் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன. ஒன்றுதிரண்ட நீர் ஓடுகின்ற பாதையை ஓடையென்பர்.[151] செம்புதற்குடி ஆண்டான் குளத்தின் வடபுறத்தோடிய ஓடையொன்று முதலாம் இராசேந்திர தேவரின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் நிலத்தெல்லையாகக் குறிக்கப்படுகிறது.[152]

தூம்பு என்னும் சொல், ஓட்டை என்னும் பொருள் கொண்டு தொடக்கத்தில் மடையைக் குறித்ததாகக் கூறும் கொடுமுடி ச. சண்முகன், பின்னர் இச்சொல் நீர்க் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகளுடன் கூடிய முழு மதகைக் குறித்ததாகக் கூறுவார்.[153] ஆனால் பழுவூர்க் கல்வெட்டுகளில் மடை, தூம்பு என்னும் இரண்டு சொற்களும் ஒரே காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

'பவித்திரமாணிக்கப் பேரேரியின் கீழ் நீர்நிலத்து இரணமுகராமன் தூம்பு', முதலாம் குலோத்துங்க சோழரின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலும்[154] செங்குளத் தூம்பு, உத்தம சோழருடைய எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள்

148. கொடுமுடி ச. சண்முகன், பண்டைப் பாசனப் பொறியியல், (சென்னை, தேனோலை, 1995) ப. 113.
149. S.I.I. Vol. V, Ins. No. 678.
150. A.R.E. 246 of 1926.
151. கொடுமுடி ச. சண்முகன், பண்டைப் பாசனப் பொறியியல், ப.98.
152. S.I.I. Vol. V, Ins. No. 678.
153. கொடுமுடி ச. சண்முகன், பண்டைப் பாசனப் பொறியியல், ப.115
154. A.R.E. 396 of 1924; A.R.E. 234 of 1926.

செங்குளத்துத் தூம்பு முதலாம் இராசராசரின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலும்[155] குறிக்கப்பெறுகிறது.

கலைகள்

அற்றைநாள் கோயில்கள் இறைவழிபாட்டுத் தலங்களாக விளங்கியதோடு கலை வளர்க்கும் நிலையங்களாகவும் திகழ்ந்தன. இசைக்கலைஞர்கள், ஆடற்கலைஞர்கள், சொற்பொழிவாளர்கள் எனப் பல்வேறு துறைசார்ந்த வல்லுநர்கள் கோயில்களோடு இணைந்து தமிழ்க் கலைகளைப் போற்றி வளர்த்தனர். கோயில்கள், கலைகளோடு பின்னிப் பிணைந்திருந்த இந்தச் சூழலைச் சங்க காலத்திலிருந்தே காணமுடிகிறது.[156] பல்லவர் காலத்திலேயே கோயில்களைச் சார்ந்து ஆடற்பெண்கள் இருந்ததைக் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.[157] கூத்திகள் என்றழைக்கப்பட்ட இவர்கள் தளிப்பரிவாரத்தின் ஓரங்கமாக விளங்கினர். இவர்களை, 'இத்தளிக் கூத்திகள்' என்று கல்வெட்டு குறிப்பிடும்.[158] கூத்தியரைப் போலவே திருப்பதியம் பாடுநரும் பல்லவர் கோயில்களில் பணியாற்றி இசை வளர்த்தனர்.

பல்லவமன்னரான விஜய நந்திவிக்கிரமவர்மரின் காலத்திலேயே திருவல்லம் திருக்கோயிலில் திருப்பதியம் ஓதுவார் இருந்தனர்.[159]

முதலாம் இராசராசரின் இராஜராஜீசுவரத்துக் கல்வெட்டொன்று அவர் காலத்தே சோழமண்டலத்துத் தளிச்சேரிகளிலிருந்து இராஜராஜீசுவரத்திற்கு வரவழைக்கப்பட்ட நானூறு ஆடற்பெண்களைப் பற்றிய தகவலைத்

155. A.R.E. 216 of 1926.
156. நற்றிணை நானூறு, பா.எ. 189, அடிகள் 3-10.
157. S.I.I. Vol. IV, Ins. No. 827
158. Indian Express, 19 November 1995.
159. S.I.I. Vol. III, Ins. No. 43.

தருகிறது.[160] இப்பெண்கள் கோயிற்சார்ந்த மற்றும் ஊரகத் தளிச்சேரிகளிலிருந்து வரவழைக்கப்பட்டவராவர். இவர்களுள் ஒன்பதின்மர்[161] பழுவூர்க் கோயில்களிலிருந்து சென்றவர்கள். இவர்களுள் நக்கன் ஆடவல்லாள், நக்கன் பழுவூர், நக்கன் ஆதித்தி, நக்கன் வானவன்மாதேவி, நக்கன் அரிகுலகேசரி, நக்கன் அரியாள் ஆகிய அறுவரும் பகைவிடை ஈசுவரத்துக் கோயிலிலிருந்து சென்றவர்கள். ஏனைய மூவரான நக்கன் பெற்றதிரு, நக்கன் துட்டி, நக்கன் பொற்கேசி ஆகியோர் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்திலிருந்து சென்றவர்கள்.

அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்து வடவாயில் ஸ்ரீகோயில் கருவறையின் கிழக்குப் புறச்சுவரில் காணப்படும் முதலாம் இராசராசரின் பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அந்நாளில் பழுவூரிலிருந்த பகைவிடை ஈசுவரத்துத் தளிச்சேரி பற்றி அறியமுடிகிறது. இத்தளிச்சேரி இரு சிறகுகளைக் கொண்டிருந்த உண்மையைப் 'பகைவிடை ஈசுவரத்துத் தளிச்சேரி வடசிறகில்' என்ற கல்வெட்டு வரி கொண்டு தெளியலாம்.[162] ஆடல் மகளிர் குடியிருப்புகளே அந்நாளில் தளிச்சேரிகள் என்றழைக்கப்பட்டன. தளி கோயிலையும் சேரி குடியிருப்பையும் குறிப்பதாக அறிஞர் கருதுவர்.[163]

பழுவூர்க் கல்வெட்டுகள் குறிப்பிடும் ஆடற் பெண்களுள் சிலர், தளித்தேவனார் மகள்களாகவும் குறிக்கப்படுகின்றனர். 'பகைவிடை ஈசுவரத்துத் தேவனார் மகள் நக்கன் வீரநானி'[164] என்ற கல்வெட்டு வரி இதற்குச் சான்றாகும். இவர்களுள் சிலர் 'இத்தளிக் கூத்தப் பிள்ளை'[165]

---

160. S.I.I. Vol. II. Ins. No. 66
161. மேலது.,
162. A.R.E. 384 of 1924.
163. இரா. கலைக்கோவன், மு. நளினி, தளிச்சேரிக் கல்வெட்டு, வரலாறு 5, ப-ள். 47-51.
164. A.R.E. 384 of 1924.
165. A.R.E. 358 and 386 of 1924.

என்று நேயமுடன் பெருமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுள் நக்கன் கிடந்த பெருமாள், நக்கன் வீரநானி ஆகிய இருவரும் பழுவூர்ப் பகைவிடை ஈசுவரத்துக் கல்வெட்டு களிலும் குமிழி காணவல்லி, நக்கன் அய்யாற்றடிகள் ஆகிய இருவரும் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்துக் கல்வெட்டுகளிலும் இடம்பெற்றுள்ளனர்.[166]

இத்தளிப்பெண்கள் கோயில் வழிபாடுகளின்போதும் திருவிழாக்களின்போதும் இறைத்திருமேனிகள் உலாவரும் போதும் ஆடல் நிகழ்த்தும் பொறுப்பேற்றிருந்தனர். இவர்கள் செல்வச் செழிப்புடன் விளங்கியமைக்குப் பழுவூர்க் கல்வெட்டுகளும் சமகாலச் சோழர் கல்வெட்டுகளும் சான்றாகின்றன. பழுவூர்க் கல்வெட்டுகள் குறிப்பிடும் நக்கன் கிடந்த பெருமாள், நக்கன் மெரிய அரங்க பிரான், நக்கன் குமரக்கன், நக்கன் மானதிரி, நக்கன் கண்டபிராட்டி, நக்கன் வீரநானி, நக்கன் பெற்றமை, நக்கன் அய்யாற்றடிகள் ஆகிய ஆடலரசியருள் சிலர்,[167] பழுவூர்த் திருக்கோயில்களில் விளக்கெரிப்பதற்கும், வேறு பலவற்றிற்குமாய்ப் பொன்னும் நிலமும் வழங்கியுள்ளமை அவர்தம் வாழ்க்கைத் தரம் விளக்கும் சான்றாகும்.

கோயில்களில் பல திருவிழாக்கள் கொண்டாடப் பட்டன. இத்திருவிழாக்களில் தேரோட்டங்கள் நிகழ்ந் தமைக்குத் தேர்போகும் வழியைச் சுட்டும் கல்வெட்டு சான்றாகிறது.[168] விழா வீதியென்றே ஒரு தெரு இருந்ததை மற்றொரு கல்வெட்டால் அறிகிறோம்.[169] இக்கோயில் திருவிழாக்களில் கூத்துகள் நிகழ்த்தப்பட்டன. சிறுபழுவூர்த் திருவாலந்துறைத் திருக்கோயிலில் ஐப்பசி அசுவினித்

---

166. S.I.I. Vol. XIX, Ins. No. 140; A.R.E. 384, 358 and 386 of 1924; S.I.I. Vol. XIX, Ins. No. 140.
167. S.I.I. Vol. XIX, Ins. No. 140; A.R.E. 363, 366, 384 and 386 of 1924.
168. A.R.E. 234 of 1926.
169. A.R.E. 384 of 1924.

திருநாளில் சாக்கைக்கூத்து மூன்றங்கம் ஆட அலையூர்ச் சாக்கை என்பார்க்குப் பொன் ஒன்றரைக் கழஞ்சும் நெல் மூன்று கலமும் வழங்கப்பட்டன்.[170] சாக்கைக்கூத்து மிக அரிதாகவே கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளது. பழுவூருக்கு அருகிலுள்ள காமரசவல்லியிலிருந்து படியெடுக்கப் பட்ட முதலாம் இராசேந்திரர் காலக் கல்வெட்டு[171] மார்கழி மற்றும் வைகாசித் திருவாதிரை நாள்களில் இறைத்திருமுன் சாக்கைமாராயன் விக்கிரம சோழன் என்பவரால் மூன்றங்கம் சாக்கைக்கூத்து நிகழ்த்தப்பட்ட தகவலைத் தருகிறது.

அவனிகந்தர்ப்பபுரத்தில் குணசீலன் சந்திரசேகரனான மூவேந்தசிகாமணி நிருத்த விழுப்பரையன், அவர் தம்பி சந்தன குணசீலன் ஆகிய இருவரும் நட்டுவ ஆசான்களாக விளங்கினர்.[172] இவர்களுக்கு நட்டவப்பங்காக நிலம் அளிக்கப்பட்டிருந்தது. சிறுபழுவூர்ப் பெருங்குறி மகாசபையின் உறுப்பினர்களுள் ஒருவராகச் சாந்திக்கூத்தன் நாராயணபட்டர் இருந்தார்.[173] ஆடற்கலைஞர்க்கு அக்காலச் சமுதாயம் அளித்திருந்த மதிப்பு இதனால் உணரப்படும்.

சுவடழிந்த கோயில்கள்

பல்வேறு காலகட்டங்களில், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக எழுப்பப்பெற்ற திருக்கோயில்களுள் பல அரசியல், பொருளாதார மற்றும் சமூகக் காரணங்களால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் வழிபாடிழந்து சிதைந்து அழிந்தன. இப்படி அழிவுற்ற கோயில்களுள் சிலவற்றிற்குத் தரப்பட்ட கொடைகளைச் சுட்டும் கல்வெட்டுகள், வாழும் கோயில்கள் சிலவற்றுள் இன்றளவும் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளின் துணைகொண்டு மறைந்துபோன

---

170. S.I.I. Vol. XIX, Ins. No. 171.
171. A.R.E. 65 of 1914
172. A.R.E. 361 of 1924.
173. A.R.E. 256 of 1926.

அக்கோயில்களைப்பற்றி ஓரளவு அறிந்துகொள்ளமுடிகிறது. கல்வெட்டுகளில் மட்டும் வாழும் இக்கோயில்களைச் சுவடழிந்த கோயில்கள் என்று அறிஞர் சுட்டுவர். இத்தகு சுவடழிந்த கோயில்களுள் சில பழுவூர்க் கல்வெட்டுகளிலும் காணக்கிடக்கின்றன.

திருத்தோற்றமுடையார் திருக்கோயில்

உத்தம சோழரின் ஆட்சிக்காலத்தில் மன்னுபெரும் பழுவூரில் பழுவேட்டரையர் கண்டன் மறவனால் திருத்தோற்றமுடையார் திருக்கோயில் என்ற பெயரில் செங்கல் தளியொன்று கட்டுவிக்கப்பெற்றது. இக்கோயில் இன்று காணுமாறு இல்லை. ஆனால் இக்கோயில் தொடர்பான பல கல்வெட்டுகள் பகைவிடை ஈசுவரத்து வளாகத்திற்குள் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன.

பகைவிடை ஈசுவரத்து அம்மன் கோயிலின் முகமண்டப அடித்தளத்தில் தொடங்கும் உத்தம சோழரின் பதினாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[174] திருத்தோற்றமுடையார் திருக்கோயிலில் நந்தாவிளக்கொன்று எரிப்பதற்காகப் பழுவேட்டரையர் கண்டன் மறவன் முப்பது கழஞ்சுப் பொன் தந்த செய்தியைத் தருகிறது. திருத்தோற்றமுடையாரைப் பற்றிப் பேசும் கல்வெட்டுகளில் முழுமையாக இருப்பது இது ஒன்றுதான்.

அம்மன் கோயில் கருவறையின் மேற்கு அடித்தளத்தில் காணப்படும் உத்தம சோழரின் மற்றொரு பதினாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும்[175] திருத்தோற்றமுடையார் கோயிலில் நந்தாவிளக்கொன்றெரிக்கப் பழுவேட்டரையர் கண்டன் மறவன் செய்த ஏற்பாட்டைப் பற்றிப் பேசுகிறது. இதே இடத்திலுள்ள முதலாம் இராசராசரின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயிலை எடுப்பித்தவர் பற்றி

174. பு. க. 4.

175. S.I.I. Vol. XIX, Ins. No. 403.

தெளிவான தகவலைத் தருகிறது. 'அடிகள் பழுவேட்டரையன் கண்டன் மறவனேன் எடுப்பித்த ஸ்ரீகோயில் திருத்தோற்ற முடையார் கோயில்' என்று எடுப்பித்தவரே சொல்வது போலமைந்த இக்கல்வெட்டு கோயில் நிர்வாகம் பற்றிச் சில செய்திகளைத் தருகிறது.[176]

திருத்தோற்றமுடையார் கோயிலில் ஸ்ரீகாரியமாக இருந்த கௌசிகன் நக்கன் மாறபிரான், பழுவேட்டரையர் கண்டன் மறவன் மலாடு நாட்டைச் சேர்ந்த சேனாபுரத்தில் தங்கியிருந்தபோது, அவரைச் சந்தித்துத் திருச்சிரு விளந்தைப் பட்டுடையான் இளங்கோதி சூரியனைத் திருத்தோற்ற முடையார் கோயில் கண்காணியாக நியமிக்க ஏற்பாடு செய்தார். இதனால் இக்கோயிலைச் சார்ந்த பட்டுடைக் காணிகளை இளங்கோதி சூரியனே மேற்கொள்ள வழி செய்யப்பட்டது. அக்காணிகளை விற்கவும் ஒற்றிவைக்கவும் இளங்கோதி சூரியனுக்குள்ள உரிமையும் நிலைநாட்டப் பெற்றது. இந்த உரிமை புகலும் ஆவணத்தில் கையெழுத்திட்டவர்களுள் ஒருவராக நென்மலிநாட்டுக் கோட்டூர் தச்சாச்சாரியர் ஆதித்தன் சிவபாதன் பெயர் கிடைக்கிறது.[177] அம்மன் கோயில் புறச்சுவர்களில் காணப்படும் முதலாம் குலோத்துங்கரின் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள், திருத்தோற்றமுடையார் கோயிலைப்பற்றிப் பயனுள்ள பல செய்திகளைத் தருகின்றன. இவற்றுள் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், ஆட்சியாண்டு தெரியாத மற்றொரு கல்வெட்டும் வாணகோவரையன் சுத்தமல்லன் உத்தம சோழனான இலங்கேசுவரன், திருத்தோற்றமுடையார் கோயிலுக்குச் செய்த நிலக்கொடைகளைச் சுட்டுகின்றன.[178] முப்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[179] குலோத்துங்க சோழரின் நலம் வேண்டி

176. S.I.I. Vol. XIII, Ins No. 98.
177. மேலது.
178. A.R.E. 396 and 389 of 1924
179. A.R.E. 392 of 1924

வாணகோவ்ரையன் சுத்தமல்லன் திருத்தோற்றமுடையார் கோயிலைக் கற்றளியாக்கிய செய்தியைத் தருகிறது. செங்கல் தளியாக இருந்த திருத்தோற்றமுடையார் கோயில், வழிபாடற்று ஒதுக்கப்பட்ட நிலையில், கவனிப்பாரற்று இருந்ததாகவும் குலோத்துங்கர் நலத்துக்காக வாண கோவரையன் இதைக் கற்றளியாக்கிக் குலோத்துங்க சோழ ஈசுவரம் என்று பெயரிட்டு, மீண்டும் வழிபாட்டிற்குரியதாய் மாற்றியதாகவும் ஆட்சியாண்டு தெரியாத குலோத்துங்கரின் கல்வெட்டொன்றால் அறியமுடிகிறது.[180] இக்கோயிலுக்குத் தில்லைக்குடி என்னும் குலோத்துங்க சோழநல்லூர், குலோத்துங்க சோழரின் முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டில்[181] வாணகோவரையனால் தேவதானமாகத் தரப்பட்டது. கங்கை கொண்ட சோழபுரத்து அகப்பரிவாரத்துத் தளியிலாள் இக்கோயிலுக்குப் படிக்கட்டுகளைக் கட்டித்தந்தார். மூன்றாம் இராசராசரின் சிதிலமான கல்வெட்டொன்றால் இக்கோயில் நிர்வாகிகளுக்கும் கோயில் நிலங்களைப் பயிரிட்ட குத்தகையாளர் ஒருவருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றிய செய்திகளை அறியமுடிகிறது.[183]

உத்தம சோழரின் காலத்தில் பழுவேட்டரையர் கண்டன் மறவனால் செங்கல் தளியாகக் கட்டப்பட்ட திருத்தோற்ற முடையார் திருக்கோயில், கட்டப்பட்ட நூறு ஆண்டுகளுக் குள் வழிபாடிழந்து சிதைந்துபோனமை பழுவேட்டரையர் மரபின் அரசியல் இறக்கத்தால் நிகழ்ந்ததாகும். இதைக் கற்றளியாக்கிக் கொடைகள் தந்து புத்துயிர் அளித்தவர் வாணகோவரையன். முதலாம் குலோத்துங்கரின் காலத்திலிருந்து மூன்றாம் இராசராசரின் காலம்வரை வழிபாட்டிலிருந்த இத்திருக்கோயில், சோழராட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு புரப்பாரின்றிச் சிதைந்து சுவடழிந்திருக்க வேண்டும்.

---

180. A.R.E. 393 of 1924
181. A.R.E. 390 of 1924
182. A.R.E. 400 of 1924
183. A.R.E. 388 of 1924

2. திருப்புலக்கீசுவரமுடைய மகாதேவர்

சிறுபழுவூரிலுள்ள மறவனீசுவரத்து முகமண்டப நிலைக்காலில் காணப்படும் கருத்துத் தொடர்ச்சியற்ற கல்வெட்டொன்றினால் இப்பகுதியிலிருந்த திருப்புலக்கீசுவரத்தைப் பற்றி அறியமுடிகிறது.[184] நந்தாவிளக்கெரிக்கத் தரப்பட்ட கொடை பற்றிப் பேசும் இக்கல்வெட்டு தொடர்ச்சியின்றியிருப்பதால் முழுச்செய்தியையும் அறியமுடியவில்லை. இது தவிர இக்கோயில் பற்றி வேறெந்தச் சான்றுகளும் கிடைக்காத நிலையில், காலப்போக்கில் இக்கோயில் உருக்குலைந்து போனதாகக் கொள்ளவேண்டியுள்ளது.

3. ஸ்ரீகண்ட ஈசுவரம்

சிறுபழுவூர் ஆலந்துறையார் கோயில் அலுவலகக் கட்டடத்தின் கிழக்குச் சுவரில் காணப்படும் இரண்டு துண்டுக் கல்வெட்டுகள்[185] பழுவேட்டரையர் கண்டன் மறவன் பழுவூரில் ஸ்ரீகண்ட ஈசுவரம் என்னும் பெயரில் பள்ளிப்படைக் கோயிலொன்றை எழுப்பி, அதற்குரிய கொடைகளையும் வழங்கியதைத் தெரிவிக்கின்றன. இறந்தவர்களைப் புதைப்பது பள்ளிப்படுத்துதல் எனப்படும். அப்படிப் பள்ளிப்படுத்தப்பட்டவர்கள் மீது எழுப்பப்படும் கோயிலே பள்ளிப்படைக் கோயிலாகும். சோழர் காலத்தில் இதுபோல் பல பள்ளிப்படைக் கோயில்கள் எடுக்கப்பட்டமையைக் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.[186] முதலாம் பராந்தகர் தம் தந்தையார் ஆதித்த சோழருக்குக் கோதண்டராமேசுவரம் என்னும் பெயரில் பள்ளிப்படையொன்றை அமைத்தார். முதலாம் இராசராசர் அரிஞ்சிகையீசுவரம் என்ற பெயரில் அரிஞ்சய சோழருக்காகப் பள்ளிப்படையெடுத்தார். பழையாறையில் காணப்படும் பஞ்சவன் மாதேவீசுவரம் முதலாம் இராசேந்திரரால் அவரது சிற்றன்னை பஞ்சன் மாதேவிக்காக எடுக்கப்பெற்றதாகும்.

---

184. A.R.E. 223 of 1926
185. இல. தியாகராசன், பழுவேட்டரையர் பள்ளிப்படைக் கோயில் கண்டுபிடிப்பு, கட்டுரை, தினமலர்' 27 டிசம்பர் 1987
186. S.I.I. Vol. VIII, Ins. No. 529; S.I.I. Vol. III, Ins. No. 15; A.R.E. 271 of 1927.

பழுவூரில் கண்டன் மறவனால் கட்டப்பட்ட ஸ்ரீகண்ட ஈசுவரம் கண்டன் என்ற இயற்பெயரை உடைய பழுவூர் மன்னர் ஒருவருக்கு எடுக்கப்பட்ட பள்ளிப்படையாகும். பழுவூர் மரபில் கண்டன் என்ற இயற்பெயருடன் வாழ்ந்த அரசர்கள் இருவரேயாவர். அவர்களுள் காலத்தால் முன்னவரான குமரன் கண்டன், முதலாம் ஆதித்தர் காலத்தில் பழுவூரை ஆண்டவர். இவரைப் பற்றிய விரிவான செய்திகள் கல்வெட்டுகளில் கிடைக்கவில்லை. ஆனால் கண்டன் என்ற இயற்பெயருடன் வாழ்ந்த மற்றோர் அரசரான மறவன் கண்டன் சுந்தர சோழர் காலத்திலும் உத்தம சோழர் காலத்திலும் பழுவூரை ஆண்டு, பல அருஞ்செயல்களைச் செய்தவர். திருஆலந்துறையார் திருக்கோயிலைக் கற்றளியாக்கியவர். மேலும் ஸ்ரீகண்ட ஈசுவரம் என்னும் இப்பள்ளிப்படையை எடுத்தவர், இவரது மகனான கண்டன் மறவன் என்பதால், இப்பள்ளிப்படை மறவன் கண்டனுக்குரியதே எனத் துணியலாம். சுவடழிந்துபோன இத்திருக்கோயில் தொடர்பான மற்றொரு துண்டுக் கல்வெட்டு பகைவிடை ஈசுவரம் கோயில் வளாகத்திலுள்ள சண்டேசுவரர் திருமுன் அடித்தளத்தில் காணப்படுகிறது.[187]

4. யோகவனீசுவர சுவாமி கோயில்

கீழப்பழுவூர் ஆலந்துறையார் திருக்கோயிலில் காணப்படும் பலகைக் கல்வெட்டொன்றால் திருப்பழுவூர் யோகவனீசுவர சுவாமிக்குத் திருவிளக்கேற்ற வாய்ப்பாகத் தோப்பு ஒன்று கொடையாகத் தரப்பட்ட செய்தியை அறிய முடிகிறது.[188] யோகவனீசுவர சுவாமியென்ற பெயரில் ஆலந்துறையார் திருக்கோயிலிலோ பழுவூரிலுள்ள பிற திருக்கோயில்களிலோ இறைத்திருமேனிகள் ஏதுமில்லை என்பதாலும், இப்பெயரில் அமைந்த கோயில் எதுவும் இப்பகுதியில் இந்நாளில் காணப்படாமையாலும் இது காலப்போக்கில் அழிவுற்றதாகக் கொள்ளலாம்.

---

187. இத்துண்டுக்கல்வெட்டு களஆய்வின்போது கண்டுபிடிக்கப் பட்டதாகும்.
188. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள். 289-290.

குற்றங்களும் தண்டனைகளும்

சமுதாயக் கட்டமைப்பில் கோயில்களுக்குக் கொடையளித்தல், கலைஞர்க்குச் சிறப்புச் செய்தல் போன்ற நற்செயல்களை ஒருபுறம் பார்க்க முடிந்தாலும் ஆங்காங்கே குற்றங்களும் சச்சரவுகளும் நிகழ்ந்ததையும் சில கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. பழுவூர்க் கோயில்களைச் சேர்ந்த ஐந்து கல்வெட்டுகள் ஆறு குற்றங்களை எடுத்துரைக்கின்றன.[189] இவற்றுள் நான்கு, சச்சரவின்போது நிகழ்ந்த கொலைகள். இக்கொலைகளைச் செய்தவர்கள் தாங்களாகவோ அல்லது அரசர் உத்தரவுப்படியோ பழுவூர்க் கோயில்களில் இறைத்திருமுன் நந்தாவிளக்குகள் எரிப்பதற்குக் கொடையளித்தனர்.

முதுகுடி வாழ் வீரகலி அரங்கனும் மாதேவடிகளும் சச்சரவிட்டுக் கொண்டபோது, வீரகலி அரங்கன் மாண்டு போனார். வீரகலி அரங்கனின் நினைவாகப் பழுவேட்டரையர் குமரன் மதுராந்தகன் சிறுபழுவூர்த் திருவாலந்துறையார் கோயிலில் நந்தாவிளக்கொன்றெரிக்கத் தொண்ணூறு ஆடுகள் தந்ததை உத்தம சோழரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறிய முடிகிறது.[190]

முதலாம் இராசராசரின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, பழுவேட்டரையர் கண்டன் மறவனின் ஆட்சிக்காலத்தில் நடந்த குற்றத்தையும் அதற்குத் தரப்பட்ட தண்டனையையும் தெளிவாக எடுத்துரைக்கிறது.[191] கண்டன் மறவனின் இளைய இரணமுகராமன் படையைச் சேர்ந்த கைக்கோளன் பலதேவன் வயிரியும், குன்றக் கூற்றத்து மல்லூரைச் சேர்ந்த வெள்ளானன் கிழவன் நம்பனும் உருவிய கத்திகளுடன் சண்டையிட்டுக்கொள்ள, பலதேவன் வயிரி

189. S.I.I. Vol. V, Ins. Nos. 670 and 683; A.R.E. 372 of 1924; இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள். 290, 291, 297, 298.
190. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப-ள். 297 - 298.
191. S.I.I. Vol. V, Ins. No. 670.

கொலையுண்டார். சிறுபழுவூர்த் திருவாலந்துறைத் திருக்கோயிலில் இறைத்திருமுன் நந்தாவிளக்கொன்று அமைக்குமாறு கிழவன் நம்பனுக்குப் பழுவேட்டரையர் கண்டன் மறவன் ஆணையிட்டார். கிழவன் நம்பன் அவ்வுத்தரவுப்படி இக்கோயிலில் விளக்கெரிக்க வாய்ப்பாகத் தொண்ணூறு சாவா மூவாப் பேராடுகளைக் கொடையளித்தார்.

முதலாம் இராசராசரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[192] பழுவேட்டரையரின் கைக்கோளனான குஞ்சிரமல்லன் முருக்கனைத் தென்பாளன்பாடி-அய்யாறன்கானன் உயிரிழக்கச் செய்ததை வெளிப்படுத்துகிறது. இக்குற்றத்திற்குத் தண்டனையாகச் சிறுபழுவூர்த் திருவாலந்துறைத் திருக்கோயிலில் குஞ்சிரமல்லன் நினைவாக நந்தாவிளக்கொன்று எரிக்க அய்யாறன் வகைசெய்தார்.

இம்மூன்று கல்வெட்டுச் செய்திகளையும் கூர்ந்து ஆராய்கையில் உயிரிழப்புச் செய்தவர்க்குத் திருக்கோயிலில் இறைவன் திருமுன்னில் நந்தாவிளக்கெரிக்க வகை செய்வதே பழுவூர் மண்டலத்தில் தண்டனையாகத் தரப்பட்டதை உணரமுடிகிறது. இம்மூன்று குற்றங்களில் இரண்டில் குற்றம் செய்தவர் விளக்கெரித்திருக்கிறார். ஒன்றில் குற்றமிழைத்தவரின் சார்பில் பழுவேட்டரையர் குமரன் மதுராந்தகனே விளக்கெரித்ததைக் காணமுடிகிறது. குற்றவாளி கிடைக்காமையால் இறந்தவர் சார்பாக அன்னாரது ஆன்ம சாந்திக்காக அரசரே விளக்கெரித்திருக்கக்கூடும். இந்நிகழ்ச்சியில் இறந்தவர்க்கும் அரசர்க்கும் இருந்த தொடர்பை அறியக்கூடவில்லை.

தென்வாயில் ஸ்ரீகோயில் தாங்குதளத்தில் காணப்படும் முதலாம் இராசேந்திரரின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு,[193] குற்றமொன்றையும், தற்செயலாக

---

192. மேலது., 683.
193. A.R.E. 372 of 1924.

நடந்த விபத்து ஒன்றையும் எடுத்துரைக்கிறது. இக்கல்வெட்டின் தொடக்கப்பகுதிகள் கட்டுமானத்திற்குள் சிக்கியிருப்பதால் கல்வெட்டின் முழுமையான பாடத்தைப் பெறமுடியவில்லையென்றாலும் இருப்பதுகொண்டு இவ்விரு நிகழ்வுகளைப் பற்றியும் ஓரளவிற்கு அறியமுடிகிறது. சோமன்புவனி இறக்குமாறு அவனைக் குத்திய அரங்கன் பட்டன், பழுவூர் நகரத்தார் பிடியிலிருந்து தப்பியதால், 'அவனைக் கண்டாரே கலக்கப் பெறுக' என்று ஆணையிட்டதுடன், பழுவூர்ப் பகைவிட ஈசுவரத்து மகாதேவர் திருக்கோயிலில் ஒரு நந்தாவிளக்கெரிக்கும் பொறுப்பையும் பழுவூர் நகரத்தார் ஏற்றனர்.

பழுவூர்ச் சங்கரபாடியான் குமிழிமனப்பன் கோலொன்றால் அடிபட்டு இறந்தான். இக்கோலை எய்தவர்கள் யாரென்பதை அறியமுடியாத நிலையில் அவன் நினைவாகப் பழுவூர் வளஞ்சியர், அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருகத்து மகாதேவர்க்கு ஐம்பது காசுகள் தந்து நந்தாவிளக்கொன்று எரிக்குமாறு செய்தனர். இவ்வறத்தை நிறைவேற்ற இத்தளிக் காணியுடைய பட்டுடையார் எழுவர் ஒப்புதல் தந்ததைக் கல்வெட்டால் அறியமுடிகிறது.[194] குமிழிமனப்பனைச் சேர்ந்த மனை, நன்செய், புன்செய் ஆகியவற்றை அவன் மனைவியும் சந்ததியாரும் சந்திராதித்தவல் இறையிலியாக அனுபவித்துக்கொள்ளும் வண்ணம் பழுவூர் நகரத்தார் ஏற்பாடுசெய்தனர்.

விபத்தொன்றால் இரு நாட்டாருக்கிடையே நேர்ந்த பகையையும், அது தீர்ந்த வகையையும் விக்கிரம சோழரின் ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு விரித்துரைக்கிறது. சூநிமான் நாட்டைச் சேர்ந்த சூநிமான் அரையன் ஒத்தனான வைசாலி நாடாழ்வானும் பள்ளி நாட்டாரைச் சேர்ந்த தழும்பனூர் பட்டன் தேவனான திருச்சிற்றம்பலனும் கோல் எறிந்து கொண்டிருந்த வேளையில், கைத் தவறுதலாக அக்கோல்பட்டு, பட்டன் தேவன் இறந்தான். இதனால் பள்ளி

194. A.R.E. 372 of 1924.

நாட்டாருக்கும் சூநிமான் நாட்டாருக்கும் இடையில் பகை மூண்டது. இப்பகையை நேர் செய்ய, இறந்தவன் நினைவாகத் திருவாலந்துறைத் திருக்கோயிலில் நந்தாவிளக்கொன்றெரிக்க சூநிமான் நாட்டார் முன்வந்தனர்.[195] இதைப் பள்ளி நாட்டார் ஒப்புக்கொண்டமையால் வைசாலி நாடாழ்வான் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் முகத்தான் விளக்கெரிக்க வாய்ப்பாக முப்பத்திரண்டு பசுக்களைக் கொடையாகக் கோயிலாரிடம் தந்தார். இவ்வைசாலி நாடாழ்வான் வடகரை இராசேந்திரசிம்ம வளநாட்டுக் காரைக்காட்டுச் செந்நிவலக்கூற்றத்து மிறைநாட்டைச் சேர்ந்தவராகக் கல்வெட்டில் குறிப்பிடப் படுகிறார்.

படையும் போரும்

பழுவூர் அரசர்கள் தங்களின் கீழ்ச் சில படையமைப்புகளைக் கொண்டிருந்தனர். இவற்றுள் கண்டன் மறவன் கொண்டிருந்த படை இளைய இரணமுகராமன் படை எனப்பட்டது.[196] இப்படைகளின் பயன்பாட்டிற்கெனச் சில நிலப்பகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இவை கல்வெட்டுகளில் படைப்பற்று என்று குறிக்கப்படுகின்றன.[197] பழுவேட்டரையர்களின் படைகளில் இருந்த சில வீரர்களைப் பழுவூர்க் கல்வெட்டுகள் வழி அறியமுடிகிறது. பழுவேட்டரையர் கண்டன் மறவனின் இளைய இரணமுகராமன் படைப்பிரிவைச் சேர்ந்த கைக்கோளன் பலதேவன் வயிரியைத் திருவாலந்துறைக் கல்வெட்டொன்றால் அறியமுடிகிறது.[198]

பழுவேட்டரையரின் கைக்கோளர்களாகக் குஞ்சிரமல்லன் முருக்கனையும் மாதேவன் இரணமுகராமனையும் ஆலந்துறையார் கோயிலில் காணப்படும் கல்வெட்டொன்றாலும்[199] அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக

---

195. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப- ள். 290 - 291.
196. S.I.I. Vol. V, Ins. No. 670
197. A.R.E. 257 of 1926.
198. S.I.I. Vol. V, Ins. No. 670
199. மேலது., 683.

வளாகத்தில் காணப்படும் கல்வெட்டொன்றாலும் அறியமுடிகிறது. இவர்களும் பழுவேட்டரையர்தம் படைப்பிரிவு சார்ந்த வீரர்களாகலாம்.

பழுவேட்டரையர்கள் தங்கள் வீரர்களிடத்துப் பேரன்பு கொண்டிருந்தனர். வீர விளையாட்டுகளில் ஈடுபட்ட காலங்களில் அவ்வீரர்களுள் சிலர் மரணமுற்றனர். சிலர் சச்சரவிட்டுக்கொண்டு மடிந்தனர். காரணம் எதுவாக இருந்தபோதும் மரணமுற்றவர் தம் வீரர் என்! தறிந்த காலத்துப் பழுவேட்டரையர்கள் அவர்கள் நினைவாகத் திருக்கோயில்களில் விளக்கெரித்தமையைக் கல்வெட்டுகளால் அறிகிறோம்.[200]

பாண்டியர்க்கும் சோழர்க்கும் இடையில் நிகழ்ந்த வெள்ளூர்ப் போர் திருவாலந்துறைத் திருக்கோயில் கல்வெட்டொள்றில் இடம்பெற்றுள்ளது. முதலாம் பராந்தகரின் :ன்னிரண்டாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டிருக்கும் இக்கல்வெட்டு, பழுவேட்டரையர் கண்டன் அமுதன் சோழப் பெருவேந்தர் சார்பாக இப்போரில் கலந்துகொண்டதைக் குறிப்பிடுகிறது.[201] இப்போரைப் பற்றித் திருப்பாற்கடல் கரபுரீசுவரர் கோயிற் கல்வெட்டொன்றும் செய்தி தருகிறது.[202] இக்கல்வெட்டும் முதலாம் பராந்தகரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ளது. பாண்டியர் இலங்கைப் படையின் துணையோடு வெள்ளூரில் சோழர்களை எதிர்த்துப் போரிட்டதைப் பழுவூர்க் கல்வெட்டு 'இவ்வாண்டு பெருமானடிகளோடு ஈழப்படை குணந்து வெள்ளூர் அஸ்திக் கடை செய்நான்று' என்று குறிப்பிடுகிறது.[203] இப்போரில் கலந்து கொண்ட பாண்டிய

200. S.I.I. Vol. V, Ins. No. 670; இரா. க லக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், ப. 297.
201. A.R.E. 231 of 1926.
202. S.I.I. Vol. III, Ins. No. 99.
203. A.R.E. 231 of 1926.

மன்னர் இராசசிம்மர் என்பதைப் பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் நூல் கொண்டு அறியலாம்.[204]

பழுவூர்க் கோயில்களில் காணப்படும் நூற்றறுபத்தைந்து கல்வெட்டுகள் வாயிலாக அறியப்படும் அக்காலச் சமுதாயம், கோயிற் செயற்பாடுகள் அரசியல் மற்றும் பொருளாதாரம் தொடர்பான இவ்வரலாற்றுச் செய்திகள் தமிழக வரலாற்றில் பழுவூருக்கும் பழுவேட்டரையர்களுக்கும் உரியதோர் இடத்தைப் பெற்றுத்தருகின்றன.

204. K.A. Nilakanta Sastri, The Colas, pp. 123 - 124.

முடிவுரை

முற்சோழ ஆட்சியின் கீழ்ப் பழுவூர்ப் பகுதியை ஆண்டுகொண்டிருந்த பழுவேட்டரையர்கள் காலத்தில் பெரும்பழுவூரிலும் அவனிகந்தர்ப்பபுரத்திலும் சிறுபழு ஊரிலுமாய் எழுப்பப்பட்ட திருக்கோயில்கள் இன்றளவும் நிலைத்து நின்று, பழுவேட்டரையர் காலக் கட்டட மற்றும் சிற்பக்கலை ஆற்றல்களுக்குச் சான்றுகளாய் மிளிர்கின்றன. பெரும்பழுவூர்ப் பகைவிட ஈசுவரமும் அவனிகந்தர்ப்பபுரத்து அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்துள்ள வடவாயில் மற்றும் தென்வாயில் ஸ்ரீ கோயில்களும் சிறுபழுவூரிலுள்ள ஆலந்துறையார் கோயிலும் மறவனீசுவரமும் முற்சோழர் கலைமுறையைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட திருக் கோயில்கள் என்றாலும் அவற்றில் பல்லவர் கலைமுறையின் தொடர்ச்சியும் பழுவேட்டரையர் தம் புதிய கலைமுத்திரைகளும் பொதிந்திருப்பதை அறியமுடிகிறது.

பழுவேட்டரையர் காலக் கற்றளிகளான இவ்வைந்து கோயில்களுமே பின்னாள்களில் பல்வேறு திருப்பணிகள் கண்டு புதிய இணைப்புகளைப் பெற்றிருந்தாலும், இவற்றின் விமானங்கள் பழைமைப் பண்பு மாறாமல் அமைந்திருப்பது சிறப்புக்குரியதாகும். இவ்வைந்து கோயில்களுள் திருப்பணி களால் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுப் பெரிதும் உருமாறிப்போயிருக்கும் திருக்கோயில் பகைவிடை ஈசுவரமேயாகும். முதலாம் ஆதித்தரின் கல்வெட்டொன்றில் இடம்பெறும் இத்திருக்கோயிலில், உத்தம சோழர் காலந்தொட்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. முற்சோழர் கலைமுறை தழுவிய கட்டுமானமாய்த் திகழும் இக்கோயில் விமானத்தின் ஆதிதளத்தில், பல்லவர் கலைமுறையின் தொடர்ச்சிக் கூறுகளைக் காணமுடிகிறது. தந்திவர்மர் காலக் கற்றளியான ஆலம்பாக்கம் வரதராசப் பெருமாள் கோயில் விமானச் சுவரமைப்பை ஒத்திருக்கும் வகையில் பகைவிடை ஈசுவரத்தின் விமானச் சுவரமைப்பு

காணப்படுகிறது. பாதபந்தத் தாங்குதளத்தின் மீதமைந்த நெடிய நான்முக அரைத்தூண்கள் இவ்விரண்டு திருக்கோயில் விமானங்களுக்குமுரிய சிறப்பான கட்டடக்கலைக்கூறாகும். இது போன்ற நெடிய தூண்கள் பிற பழுவூர்க் கோயில்களின் விமானங்களில் காணப்படாமை குறிப்பிடத்தக்கது.

பகைவிடை ஈசுவரத்தின் விமானம் சாந்தார அமைப்பில் இரு சுவர் விமானமாகக் கட்டமைக்கப் பட்டுள்ளது. இந்தக் கலைமுறையை முதல்முதலாக நடை முறைக்குக் கொணர்ந்தவர்கள் பல்லவர்கள். திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலும் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலும் உத்தரமேரூர்க் கயிலாசநாதர் கோயிலும் இவ்வகையின் முன்னோடிகளாகும். இச்சாந்தார விமானங்களைப் பின்பற்றி பழுவேட்டரையர் காலத்தே பகைவிடை ஈசுவரம் எழுப்பப்பட்டது. பழுவூர்க் கோயில்களுள் சாந்தார அமைப்புப் பெற்ற ஒரே விமானம் பகைவிடை ஈசுவரம்தான். திருவதிகையிலும் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலிலும் கருவறைச் சுவர்களுக்கு இடையே இச்சாந்தார அமைப்பால் உருவாகியுள்ள உள்திருச்சுற்று, பிற்காலத்தே சுவரெழுப்பித் தடுக்கப்பட்டுள்ளது. ஆனால் பகைவிட ஈசுவரத்தில் இத்திருச்சுற்று பயன்பாட்டில் இல்லையென்றாலும், சுவரால் தடுக்கப்படவில்லை. பகைவிடை ஈசுவரத்தின் ஆதிதள, முகமண்டபக் கட்டமைப்புகள் பல்லவர் கலைமுறையின் தொடர்ச்சிகளே என்பதை இச்சாந்தார விமான அமைப்பு மெய்ப்பிக்கிறது.

விமான ஆதிதளம் மற்றும் முகமண்டபம் தவிர, இக்கோயிலின் ஏனைய அனைத்துக் கட்டடப்பகுதிகளும் திருப்பணி மாற்றங்களுக்கு ஆளாகியுள்ளன. கி.பி. பதினாறாம் நூற்றாண்டளவில் ஒரு முறையும் அதற்குப் பின்னர் ஒரு முறையும் இக்கோயிலில் பேரளவிலான திருப்பணிகள் நடந்தமைக்கு மகாமண்டபம், முன்மண்டபம், சுற்றாலைக் கோயில்கள் போன்றவற்றின் கட்டட அமைப்புகளும், சுவர்களில் காணப்படும் சிதறிய கல்வெட்டுகளும்

சான்றுகளாகின்றன. பகைவிடை ஈசுவரத்தின் இப்போதைய அம்மன் கோயில், பழுவேட்டரையர் கண்டன் மறவனால் கட்டப்பட்டு, வாணகோவரையரால் கற்றளியாக்கப்பட்ட திருத்தோற்றமுடையார் கோயிலின் எஞ்சிய கற்களால் கட்டப்பட்டுள்ளது என்பதை, அக்கோயில் சுவர்களிலுள்ள தொடர்பற்ற கல்வெட்டுகள் தெளிவாக உணர்த்துகின்றன.

பகைவிடை ஈசுவரத்திலுள்ள சிற்பங்களுள் ஜேஷ்டை, உமாசகித மூர்த்தி, விஷ்ணு, ரிஷபாந்திகர், அன்னையர் எழுவர் தொகுப்பு, சண்டேசுவரர் போன்ற திருமேனிகள் பழுவேட்டரையர் காலச் சிற்பங்களாகும். இங்குள்ள அன்னையர் எழுவர் சிற்பங்கள், அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்திலுள்ள அன்னையர் எழுவர் சிற்பங்களைத் தோற்ற அமைப்பிலும் கலைநுணுக்கத்திலும் பெருமளவு ஒத்துள்ளமை இங்கு நினைக்கத்தக்கது. கருவிகள், ஆடையணிகலன்கள், அமர்வுமுறை, தலைக் கோலம், முக மற்றும் உடலமைப்புப் போன்ற அனைத்துக் கூறுகளிலும் இச்சிற்பங்கள் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்துச் சிற்பங்களை ஒத்துள்ளன. முற்பாண்டியர், முத்தரையர் மற்றும் முற்சோழர் கால அன்னையர் எழுவர் சிற்பங்களோடு இவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்தவிடத்து, இரண்டு சிறப்புக்குரிய வேறுபாடுகளை அறியமுடிந்தது. சாமுண்டி அன்னையின் மார்பில் காணப்படும் தலைமாலை மிக முக்கியமான வேறுபாடாகும். பொதுவாக முழு அளவிலான மண்டையோடுகளே சாமுண்டியின் மார்பை அலங்கரிக்கும் நிலையைத் திருக்கோளக்குடி (முற்பாண்டியர்), மலையடிப்பட்டி (முத்தரையர்), திருக்கோகர்ணம் (முற்பாண்டியர்), திருநெடுங்களம் (முற்சோழர்) ஆகிய கோயில்களில் காணமுடிகிறது. ஆனால் பகைவிடை ஈசுவரத்திலும் அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்திலும் உள்ள சாமுண்டியர் மார்பில் முழு மனிதத் தலைகள் மாலையாகக் கோத்து அணிவிக்கப்பெற்றுள்ளன.

இவ்விரு கோயில்களிலுமே அன்னையர் எழுவர்

தொகுதியிலுள்ள கௌமாரியின் பின் கைகளில் ஒன்றில் சூலமணி என்னும் கருவி காணப்படுகிறது. இக்கருவி மேற்பாதியில் முத்தலை ஈட்டியாகவும் கீழ்ப்பாதியில் மணியாகவும் அமைந்துள்ளது. இக்கருவியைப் பல்லவர், முற்பாண்டியர், முத்தரையர், முற்சோழர் காலக் கௌமாரியன்னை சிற்பங்களில் காணமுடிவதில்லை. இந்த அரிய கருவி பழுவூர்க் கோயில்களுள் இவ்விரண்டினில் மட்டுமே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்து முருகன் திருவுருவங்களும் இச்சூல மணியைக் கொண்டிருப்பது சிறப்புக்குரியதாகும். இம்முருகன் சிற்பங்களைப் பற்றி எழுதியிருக்கும் அறிஞர் பெருமக்கள் இச்சூலமணியை வஜ்ரம் என்று சுட்டியுள்ளமை சரியன்று. வஜ்ரம் என்னும் கருவி இருபுறமும் முத்தலை ஈட்டியமைப்புடைய கருவியாகும். இது இந்திரனால் முருகனுக்குத் தரப்பட்டதாகப் பரிபாடல் தெரிவிக்கிறது.[1]

பகைவிடை ஈசுவரத்திலுள்ள பழுவேட்டரையர் சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கது ஜேஷ்டையின் சிற்பமாகும். திருவள்ளுவர் காலத்திலிருந்தே தமிழ் மக்களுக்கு அறிமுகமான இந்தத் தெய்வத்தின் திருமேனியை, முதல்முறையாகக் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலிலேயே சிற்ப வடிவில் பார்க்கமுடிகிறது. ஆகம வரையறைகளுக்கு உட்பட்ட சிற்பமாகக் காட்சியளிக்கும் கயிலாசநாதர் கோயிலின் பல்லவர் ஜேஷ்டையிலிருந்து, பகைவிடை ஈசுவரத்தின் பழுவேட்டரையர் ஜேஷ்டை தோற்ற அமைப்பில் பெரிதும் மாறுபட்டுள்ளது. பெருவயிறும் கீழிறங்கிய மார்பகங்களும் சற்றே முதுமைத்தன்மை வாய்ந்த முகமுமாய்த் தோற்றம் தரும் பல்லவர் ஜேஷ்டையுடன் ஒப்பிடுகையில், பழுவேட்டரையர் ஜேஷ்டை முற்றிலும் மாறுபட்டு, இயல்பான வயிறும் அளவான திரட்சியான மார்பகங்களும் கொண்டு, இளமைபொலிய விளங்குவதை உணரமுடியும். இப்

---

1. பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், நான்காம் பதிப்பு, (சென்னை, 1956), ப.47.

பகுதியிலும் இதைச் சுற்றியுமுள்ள பிற முற்சோழர் கோயில்களிலும் காணப்படும் ஜேஷ்டை சிற்பங்கள் பல்லவர் சிற்பத்தை ஒத்திருப்பது இங்குக் கருதத்தக்கது. ஆகம வரையறைகளிலிருந்து விலகி ஜேஷ்டையை இளந்தேவியாகக் காட்டியிருக்கும் பழுவேட்டரைய மரபு பின்னாளில் முதலாம் இராசராசர் காலத்திலும், அதற்குப் பிறகும் வரவேற்புக் குள்ளாகிப் பின்பற்றப்பட்டமையைப் புதுக் கோட்டை மாவட்ட திருவிசலூர் மார்க்கசகாயேசுவரர் கோயில், திருச்சிராப்பள்ளி மாவட்ட அழுந்தூர் வரகுணீசுவரர் கோயில், கொடும்பாளூர் மூவர் கோயில் போன்றவற்றிலுள்ள ஜேஷ்டை சிற்பங்கள் கொண்டு தெளிவாய்த் தெரியலாம்.

தேவாரப் பாடல் பெற்ற திருஆலந்துறையார் கோயில் செங்கல் கட்டடமாக இருந்து பழுவேட்டரையர் மறவன் கண்டனால் கற்றளியாக்கப்பட்டது. இக்கோயிலின் விமானம், முகமண்டபம், மகாமண்டபம் ஆகிய மூன்றும் ஒரே காலகட்டத்தில் கட்டப்பெற்றவை. மறவன் கண்டன் காலத்தில் வழக்கிலிருந்த முற்சோழர் கலைமுறையை அப்படியே தழுவியமைக்கப்பெற்ற ஆலந்துறையார் கோயிலின் ஒருதள விமானம், பஞ்சரங்களால் அழகூட்டப்பெற்றுள்ளது. ஆதிதளத்தின் கர்ணபத்திகளில் இடம்பெற்றுள்ள இப்பஞ்சரங்கள் மிக அரிதாகவே முற்சோழர் கோயில்களில் காணப்படுகின்றன. புள்ளமங்கை ஆலந்துறையார் கோயிலும் கருந்திட்டைக்குடி வசிஷ்டேசுவரர் கோயிலும் இவ்வகையில் சிறந்த எடுத்துக்காட்டுகளாய்த் திகழ்கின்றன.

ஆலந்துறையார் கோயிலின் விமானமும் முகமண்டபமும் பாதபந்தத் தாங்குதளம் கொண்டிருக்க, மகாமண்டபம் கபோதபந்தத் தாங்குதளம் பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. ஒரே காலகட்டத்தில் எழுந்த கட்டட அமைப்புகள் மாறுபட்ட தாங்குதளங்களைப் பெற்று மிளிர்வதைப் பல்லவர் காலத்திலிருந்தே பார்க்கமுடிகிறது. மாமல்லபுரம் கடற்கரை வளாகக் கோயில்களுள்

இராசசிம்மேசுவரமும் க்ஷத்திரிய சிம்மேசுவரமும் பிரதிபந்தத் தாங்குதளம் கொண்டிருக்க, இடையிலிருக்கும் நரபதிசிம்ம விஷ்ணு கிருகம் பாதபந்தத் தாங்குதளம் பெற்றுள்ளது.

ஆலந்துறையார் கோயிலின் தேவகோட்டப் பங்கீடு, அவற்றில் இருத்தப்பட்டிருக்கும் இறைத்தோற்றங்கள் ஆகியவற்றில் முற்சோழர்தம் மரபுப் பின்பற்றல் இருந்தபோதும் பழுவேட்டரையரின் கலைமுத்திரையையும் காணமுடிகிறது. கஜசம்காரமூர்த்தியைத் தேவகோட்டச் சிற்பமாக அமைத்திருப்பதும், மகாமண்டப நுழைவாயிலின் இருபுறத்தும் அமைந்திருக்கும் கோட்டங்களில் வாயிற்காவலர்களுக்குப் பதிலாகச் சிவபெருமானின் இரண்டு இறைத்தோற்றங்களை இடம்பெறச் செய்திருப்பதும் பழுவேட்டரையர்தம் சிறப்புக்குரிய கலைமுறையாகத் திகழ்கின்றன. ஒப்பீட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட முற்சோழர் காலக் கோயில்கள் எவற்றிலும் இதுபோன்ற அமைப்புகள் காணப்படாமை இங்குக் குறிப்பிடத்தக்கது. இங்குள்ள கல்யாணசுந்தரேசுவரர் சிற்பம், செம்பியன் மாதேவிக் காலத்தே செய்தளிக்கப்பட்டதாகக் கருதப்படும் கல்யாணசுந்தரேசுவரர் செப்புத் திருமேனிகளைப் (திருமணஞ்சேரி, வேள்விக்குடி) பெரிதும் ஒத்துள்ளது. இதுபோன்ற அமைப்புடைய கல்யாணசுந்தரேசுவரர் சிற்பம் இடைச்சோழர் கோயில்களிலும் இடம்பெறவில்லை என்பது களஆய்வுகளின்போது கண்டறியப்பட்ட உண்மையாகும்.

பழுவூர்க் கோயில்களுள் திருஆலந்துறையார் கோயில் மட்டுமே பழுவேட்டரையர்களுக்குப் பின்னாலும் சோழர்களால் நன்கு புரக்கப்பட்டதென்பதற்கு, இக்கோயிலின் வளாகப் பெருக்கமும் இதன் கட்டமைவுகளில் காணப்படும் கல்வெட்டுகளும் சான்றுகளாகின்றன. மையக் கோயில் தவிர ஏனைய சுற்று வளாகக் கட்டடங்கள், நடுச்சோழர் மற்றும் பிற்சோழர் காலத்தே வடிவம் பெற்றன. அம்மன் கோயில் நாயக்கர் காலத்தும், நடை மண்டபம், வாகன மண்டபம், யாக மண்டபம் போன்றன பதினெட்டாம் நூற்றாண்டளவிலும்

கட்டப்பட்டன, சோழர்கால அடித்தளத்தையும் நாயக்கர் கால மேற்றளங்களையும் பெற்றுள்ள கோபுரம் பதினெட்டாம் நூற்றாண்டளவில் ஒரு திருப்பணிக்கு ஆளாகியுள்ளமையை இங்குள்ள சுதைச்சிங்கம் நிறுவுகிறது.

பழுவூர்க் கோயில்களிலேயே காலத்தால் பழைமையான ஆலந்துறையார் கோயிலின் கபோதக்கூடு சிற்பங்களும் மகரதோரணச் சிற்பங்களும் குறிப்பிடத்தக்கவையாகும். பல்லவர் காலத்துக் கபோதக் கூடுகளில் பொதுவாகக் கந்தருவர் தலைகளைக் காட்டும் பழக்கமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. முற்பாண்டியர் காலத்து இப்பழக்கம் சில இடங்களில் பின்பற்றப்பட்டிருந்தாலும், சில கோயில்களில் அருமையான சிற்பக் காட்சிகளைக் காணமுடிகிறது. முற்பாண்டியர் சுற்றளியான திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில் கபோதக் கூடுகளுள் குடக்கூத்து முதற்கொண்டு பல வகையான சிற்றுருவச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. இம்மரபு முற்சோழர் காலத்தே பெருமளவு பின்பற்றப்பட்டமைக்குப் பல கோயில்கள் சான்றுகளாய் நிற்கின்றன. திருப்பழனம் ஆபத்சகாயேசுவரர் திருக்கோயிலின் கபோதக்கூடுகளில் ஆடவல்லான் போன்ற அரிய சிற்பக் காட்சிகளைக் காணமுடிகிறது. திருவிசலூர் கற்கடேசுவரர் கோயிலின் கபோதக்கூடுகளில் கங்காவதரணம், பிட்சாடனர் போன்ற ஆடல் மற்றும் இறைக்கோலங்கள் வடிக்கப்பட்டுள்ளன. கபோதக்கூடுகளில் இத்தகு சிற்பக்காட்சிகளை அமைக்கும் முறை முற்பாண்டியர் காலத்துத்தோன்றி முற்சோழர் காலத்தே வளம் பெற்றதென்பது கண்கூடு. இம்மரபை அடியொட்டி ஆலந்துறையார் கோயிலிலும் கபோதக்கூடுகளில் பல்வகை இறைத்தோற்றங்களும் குடக்கூத்து போன்ற ஆடல் தோற்றமும் வடிவமைக்கப்பட்டன. இத்தோற்றங்களுள் தென்புறக் கபோதக்கூட்டில் காணப்படும் முப்புரம் எரித்த சிவபெருமானின் சிற்ப அமைப்பு தனித்தன்மை வாய்ந்ததாகும். பல்லவர், முற்பாண்டியர், முற்சோழர் காலக் கோயில்கள் எவற்றிலும் இத்தனை சிறிய அளவிலான திரிபுராந்தக வடிவம்

காணப்படவில்லையென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கலைநுணுக்கத்திலும் செதுக்கு நேர்த்தியிலும் தன்னிகரற்று விளங்கும் இத்திருத்தோற்றம் அமைப்புமுறையில், இக்காலத்தே, இப்பகுதியில் கட்டப்பட்ட பிற முற்சோழர் காலக் கோயில்களில் காணப்படும் முப்புரம் எரித்த சிவபெருமான் தோற்ற அமைவுகளிலிருந்து பெரிதும் மாறுபட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த மாறுதல்களை அடியொட்டி இச்சிற்பத்தைப் பழுவேட் டரையர்தம் கலைமுத்திரை பொதிந்த சிற்பமாகக் கொள்ளலாம்.

ஆலந்துறையார் கோயில் தெற்கு மகரதோரணத் திலுள்ள நடராசர் சிற்பம் முற்சோழர் காலத்தே சிறப்புப் பெற்று வளர்ந்துவந்த ஆனந்தத்தாண்டவத் திருக்கோலத்தின் பிரதிபலிப்பாகும். முற்சோழர் கற்றளிகளான பாச்சில் அமலீசுவரம், திருஎறும்பியூர்த் திருக்கோயில் ஆகியவற்றில் காணப்படும் மகரதோரண நடராச வடிவங்களையொத்த கலைநுட்பமும் செதுக்கு நேர்த்தியும் ஆலந்துறையார் நடராசரிலும் காணப்படுகின்றன. முக்கியமான வேறுபாடு, ஆலந்துறையார் நடராசர் இசைக்கலைஞர்களின்றிக் காட்டப்பட்டிருப்பதுதான். இவ்வகையில் முற்பாண்டியரின் திருத்தளிநாதர் கோயில் நடராசரினின்றும்கூட ஆலந்துறையார் நடராசர் வேறுபட்டுள்ளார். இசைக்கலைஞர்களற்ற தனி ஆடலராய்ச் சிவபெருமான், ஆனந்தத்தாண்டவக் கோலத்தில், சிற்றுருவ வடிவமாய்க் காட்சியளிப்பது மிகச் சில இடங்களில் மட்டுமே. அவற்றுள் ஆலந்துறையார் நடராசர் குறிப்பிடத்தக்க கலைவடிவமாகும்.

பழுவூர்க் கோயில்களிலேயே மிகுதியாகச் சிதைந்திருப்பது மறவனீசுவரம்தான். முற்றிலுமாக முற்சோழர் கலைமுறையைத் தழுவிக் கட்டப்பட்டுள்ள இக்கோயிலும் திருப்பணிகளுக்கு ஆளாகிப் பின்னாளில் கவனிப்பற்ற போக்கால் சிற்பங்களையும் கல்வெட்டுகளையும் இழந்துள்ளது. இன்றைக்கு முற்றிலும் பாதுகாப்பற்ற சூழலில்,

தன் சுற்றுப்பகுதிகள் அனைத்தையும் மனித ஆக்கிரமிப்புகளுக்கு இழந்துவிட்ட நிலையில், வரலாற்றின் எச்சமாய் நின்றுகொண்டிருக்கும் இத்திருக்கோயிலைக் காப்பாற்றும் முயற்சிகள் விரைந்து எடுக்கப்படாவிட்டால், பழுவூர் மன்னர்களின் மகத்தான நினைவுச் சின்னமொன்றைத் தமிழ்நாடு இழக்க நேரிடும். இக்கோயிலின் பெயர் கொண்டும், இங்குள்ள கல்வெட்டுகளின் காலம் கொண்டும் இதைக் கட்டியவராகப் பழுவேட்டரையன் மறவன் கண்டனைச் சுட்டலாம். தம் தந்தையாரான குமரன் மறவன் நினைவாக மறவன் கண்டன் இக்கோயிலை எடுப்பித்ததாகக் கொள்ளலாம்.

பழுவூர்க் கோயில்களுள், தன்னிகரற்ற கலைப் படைப்புகளாக அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்துள்ள வடவாயில், தென்வாயில் ஸ்ரீகோயில்களைத்தான் குறிப்பிடவேண்டும். முற்சோழர் கலைமுறையைப் பின்பற்றியே இவ்விரண்டு கோயில்களும் கட்டப்பட்டிருந்தபோதும் தென்வாயில் ஸ்ரீகோயிலின் கட்டமைப்பில் பல்லவர் கலைமுறையின் தொடர்ச்சிக் கூறுகளையும் பழுவேட்டரையர் காலக் கலைமுறையின் தனித்துவத்தையும் ஒருங்கே காணமுடிகிறது.

தென்வாயில் ஸ்ரீகோயில் ஆதிதளத்தின் மீதமைந்துள்ள ஆறங்கச் சாலைகள் பல்லவர் கலைமுறையின் தொடர்ச்சிக் கூறுகளாகும். இதுபோன்ற சாலைகள் திருச்செந்துறை சந்திரசேகரர், திருவேதிகுடி வேதபுரீசுவரர் போன்ற முற்சோழர் கோயில்களில் இடம் பெற்றிருந்த போதும், தென்வாயில் சாலைகள் அவற்றில் இடம்பெற்றுள்ள கோட்டச் சிற்பங்களாலும், சாலை சிகர வேலைப்பாடுகளாலும் தனித்துவம் பெறுகின்றன. இச்சாலைக் கோட்டச் சிற்பங்களுள் வடக்கில் அமைந்துள்ள லிங்கம் ஏந்திய சிவபெருமானின் தோற்றம் மிக அரிய சிற்பமாகும். இச்சிற்பத்தை முதல்முறையாகத் தென்வாயில் ஸ்ரீகோயிலிலேயே காணமுடிகிறது. இதன் மறுபதிப்பு, காலத்தால் தென்வாயில்

ஸ்ரீகோயிலுக்குப் பிற்பட்ட கொடும்பாளூர் நடுத்தளியில் காணப்படுவது நோக்க, பழுவேட்டரையரைப் பின்பற்றி இருக்குவேளிரும் இச்சிற்பத்தைக் கைக்கொண்டதாகத் துணியலாம். காஞ்சிபுரத்திலுள்ள பல்லவர் கற்றளிகளான ஐராவதேசுவரர், மதங்கேசுவரர் ஆகியவற்றில் காணப்படும் விஷ்ணு அனுக்கிரகமூர்த்தித் தொகுதியில் உள்ள சிவபெருமான், தம் தோளில் லிங்கமேந்தியிருப்பதாக ஏகாம்பரநாதன் குறிப்பிடுகிறார்.[2] இது போன்ற தொகுதி காஞ்சிபுரம் கயிலாசநாதர், இறவாதான் ஈசுவரம் கோயில்களிலும் காணப்படுகிறது.[3] ஆனால் இத்தொகுதிகள் அனைத்திலும் சிவபெருமான் உமையோடு காணப்படுவதும் கீழே விஷ்ணு மலர்களுடன் அமர்ந்திருப்பதும் இவற்றைத் தென்வாயில் சிற்பத்திலிருந்து முற்றிலுமாய் வேறுபடுத்துகின்றன. தனியராய் லிங்கமேந்தி அமர்ந்திருக்கும் தென்வாயில் சிவபெருமான் பழுவேட்டரையர் காலக் கலைமுறையின் தனிச்சிறப்பாகும்.

தென்வாயில் ஸ்ரீகோயிலின் மற்றொரு குறிப்பிடத்தக்க கட்டுமானம் அக்கோயில் விமானத்தின் முன் அமைந்துள்ள மகாமண்டபமாகும். இக்கோயிலின் சமகாலத்தில் எழுப்பப்பட்ட முற்சோழர் கோயில்களில் இது போன்ற தனியமைப்பாய் மகாமண்டபங்களைக் காணமுடிவதில்லை. விமானங்களின் முன், மகாமண்டபம் எடுப்பது பல்லவர் கலைமரபின் தொடர்ச்சியே என்றாலும் கட்டமைப்பில், இம்மண்டபம் தனித்துவம் வாய்ந்ததாய் அமைந்திருக்கும் சிறப்பு குறிப்பிடத்தக்கதாகும். பல்லவர் மரபும், முற்சோழர் கலைமுறையும், பழுவேட்டரையர் தனித்தன்மையும் மிக அருமையாக ஒருங்கிணைந்த நிலையில் இம்மண்டபம் உருவாக்கப்பட்டிருக்கிறது. பல்லவர்முறையில் தாங்குதளமும்

---

2. ஏ. ஏகாம்பரநாதன், தமிழகச்சிற்ப ஓவியக் கலைகள், (சென்னை, கழக வெளியீடு, (1984) ப.28.
3. Alexander Rea, Pallava Architecutre, (Varanari, Indological book house, 1970), plate CXVIII, fig.2.

சுவரும் பெற்றிந்தாலும், வேதிக்கண்டபாதங்களில் இடம்பெற்றிருக்கும சிற்றுருவச் சிற்பங்கள் முற்சோழர் கலைமரபின் வெளிப்பாடாக அமைந்துள்ளன. கண்டபாதங்களில் சிற்பங்கள் அமைப்பது முற்சோழர் காலத்தே கைக்கொள்ளப்பட்ட பொதுமரபாகும். பல முற்சோழர் கோயில்களில் இதைக் காணமுடிகிறது. இவ்விரண்டு மரபுகளையும் ஒட்டி உருவாக்கப்பட்ட இந்த மகாமண்டபத்தில் பழுவேட்டரையர்கள் தங்கள் கலைமுத்திரையையும் பதிக்கத் தவறவில்லை. தமிழகத் திருக்கோயில்களில் வேறெங்கும் காணமுடியாத கலைப்படைப்பாக இம்மண்டபம் அவர்களால் உருவாக்கப் பட்டிருக்கிறது.

முழு அளவிலான சிங்கத் தூண்களையும் யாளித் தூண்களையும் பல்லவர் மண்டப முகப்புகளிலும், சில கோயில்களின் மண்டப உட்பகுதிகளிலும் காணமுடிந்தாலும் தென்வாயில் மகாமண்டபம் போல், மண்டபம் முழுவதுமாய்ப் பரவிய நிலையில் தமிழகத்தின் எந்தத் திருக்கோயிலிலும் காணமுடிவதில்லை. விலங்கடித் தூண்கள் அமைப்பதில் பழுவேட்டரையர்கள் பல்லவர் மரபையே பின்பற்றியுள்ளனர் என்றாலும், இச்சிங்கத் தூண்களை மண்டபம் முழுவதுமாய்ப் பரப்பியமைத்ததிலும், தூண்களின் அமைப்பிலும், சிங்கங்களின் தோற்றத்திலும் பழுவூர்ச் சிற்பிகள் காட்டியிருக்கும் வேறுபாடுகள் பல்லவர் கோயில்களில் காணமுடியாத கலைநுணுக்கங்களாகும்.

அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்திலுள்ள சுற்றாலைக் கோயில்களும் மகாமண்டபமும் மணற்கற்களால் கட்டப்பட்டிருக்க, மையக்கோயில்கள் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளன. மையக் கோயில்களும் சுற்றாலைக் கோயில்களும் பிரதிபந்தத் தாங்குதளங்கொண்டு அதன் மேல் சுவர் பெற்றமைய, மகாமண்டபம் மட்டும் பிரதிபந்தத் தாங்குதளத்தின் மீது வேதிக்கண்டமும் வேதிகையும் பெற்று அதன்மீது சுவரெழும்புமாறு காட்டப்பட்டுள்ளது.

இக்கட்டமைப்பு மாற்றங்கள் இவ்வளாகத்திற்குத் தனித் தன்மையைத் தருகின்றன.

சிற்பத் தோற்றங்களில் முற்சோழர் கலைமுறை பெருமளவு பயிலப்பட்டிருந்தாலும், பழுவேட்டரையரின் தனி முத்திரையையும் பார்க்கமுடிவது குறிப்பிடத்தக்கதாகும். அன்னையர் எழுவர் சிற்பங்களில் ஒன்றான சாமுண்டி, தென்வாயில் ஸ்ரீகோயிலின் சாலைச் சிற்பங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன. சில சாலைச் சிற்பங்களை சிவபெருமானின் இன்ன தோற்றம் என்று சுட்ட இயலாதபடி பழுவூர்ச் சிற்பிகள் உருவாக்கியுள்ளனர். இவை அக்காலத்து வழங்கிய ஆகம மரபுகளையொட்டி எழுந்தவையாகலாம். இந்நாளில் பார்வைக்குக் கிடைக்கும் ஆகமங்களின் சிவத்தோற்ற வரையறைகளுக்குள் இவை உட்படாமை இவற்றின் தனித்தன்மையைத் தெளிவாக்குகின்றன.

வடவாயில் ஸ்ரீகோயில் ஆலமர் அண்ணல் சிற்பங்களின் அமர்வு நிலைகள் பல்லவர் வடிவங்களை அடியொட்டி அமைந்தவைதான் என்றாலும் கீழ்த்தளக் கோட்ட ஆலமர் அண்ணல் தனித்துவம் பெற்று விளங்குவதைக் குறிப்பிடவேண்டும். உடன்கூட்ட முனிவர்களின்றி, கல்லால மரமுமின்றிக் காட்சியளிக்கும் இப்பெருமான், பிற முற்சோழர் படைப்புகளிலிருந்தும் மாறுபட்டு விளங்குகிறார். இவரது சிறு கோரைப்பற்கள் இவரை உக்கிர தட்சிணாமூர்த்தியாகக் காட்டுவது பெருஞ்சிறப்பு. இதுபோன்ற அமைப்புடைய சிற்பம் இக்காலகட்டத்தைச் சேர்ந்த முற்சோழர் கோயில்கள் எதிலும் அமையவில்லை என்பது இச்சிற்பத்தின் தனித்தன்மையையும் இதை உருவாக்கிய பழுவேட்டரையர் காலச் சிற்பிகளின் திறத்தையும் புதுமை அவாவும் பண்பையும் தெளிவாக்கப் போதுமானதாகும்.

இங்குள்ள திருமால், முருகன் சிற்பங்கள் பழுவேட்டரையர் காலக் கலையாற்றலின் வெளிப்பாடுகளாய், அவர்தம் தனித்தன்மை சுட்டுமாறு அமைந்துள்ளன. வடவாயிலுக்குக் காலத்தால் முற்பட்ட எந்தத் திருக்

கோயிலிலும் முருகனின் அர்த்தபத்மாசன அமர்வுச் சிற்பத்தைப் பார்க்க முடிவதில்லை. மேலும் முருகப் பெருமானுக்கு நின்றகோலம், அமர்ந்தகோலம் என இருகோலங்களிலும் சிற்பங்கள் அமைத்து, முருகனின் கைக்கருவிகளுள் ஒன்றாய் வேறெங்கும் காணப்படாத சூலமணியைக் காட்டி, முருகனைச் சுற்றித் தீச்சுடர்கள் நிறைந்த திருவாசியைப் படைத்துள்ளது பழுவேட்டரையர்களின் முருக ஈடுபாட்டையும் முருக வடிவங்கள் அமைப்பதில் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் தனித்துவத்தையும் தெள்ளிதின் புலப்படுத்துகின்றன.

தென்வாயில் ஸ்ரீகோயிலின் பூதவரிச் சிற்பங்களும் மகரதோரணச் சிற்பங்களும் குறிப்பிடத்தக்கவை. பல்லவர், முத்தரையர், முற்பாண்டியர் மற்றும் முற்சோழர் கோயில்களில் பூதவரிகள் இடம்பெற்றுள்ளபோதும், தென்வாயில் பூதவரி பல புதுமையான நிலைகளில் கணங்களைக் கொண்டிருப்பது, அதைப் பிற பூதவரித் தொடர்களிலிருந்து வேறுபடுத்துவதாய் அமைந்துள்ளது. பாடும் கணங்களும் நான்கு திருக்கைகளுடன் ஆனந்தத்தாண்டவம் பயிலும் சிவகணநாதரும் திருவோட்டில் நீர் பருகும் கணங்களும் இக்காலகட்டத்தில் எழுந்த வேறெந்தத் திருக்கோயில் பூதவரியிலும் பார்க்கமுடியாத சிற்பங்களாகும்.

மகரதோரணச் சிற்பங்களுள் சிவபெருமானின் ஊர்த்வஜாநு சிற்பம் குறிப்பிடத்தக்கதாகும். பல்லவர் மற்றும் முற்பாண்டியர் கோயில் மகரதோரணங்களில் இடம்பெறாத இச்சிற்பம், தமிழகக் கலைவரலாற்றில் முதல்முறையாக மகரதோரணமொன்றில் காட்டப்பட்டுள்ள இடமாகத் தென்வாயில் ஸ்ரீகோயிலையே குறிப்பிட வேண்டியுள்ளது. சீனிவாச நல்லூர் குரங்கநாதர் கோயில், துடையூர் விஷமங்களேசுவரர் கோயில், திருச்செந்துறை சந்திரசேகரர் கோயில், உடையார்குடி அனந்தீசுவரர் கோயில் போன்ற சில முற்சோழர் கோயில்களில் இக்கரணச் சிற்பம் இடம் பெற்றிருந்தாலும் குடமுழவு, புல்லாங்குழல், இலைத்தாளம்,

செண்டுதாளம், மத்தளம் போன்ற பல்வகை இசைக்கருவிகளை இயக்கியவர்களாய்க் கணக் கலைஞர்கள் சூழ எண்கரத்தராய் இறைவன் ஆடுமாறு போல அமைந்துள்ள சிற்றுருவச் சிற்பம் இது ஒன்றுதான் என்று துணிந்து கூறலாம்.

பழுவூர்க் கோயில்களின் கட்டட அமைப்புகளும் அங்கு இடம்பெற்றுள்ள சிற்பங்களும் இரண்டு உண்மைகளைத் தெளிவாக்குகின்றன. கலைமரபுகளின் தொடர்ச்சி என்பது தவிர்க்கமுடியாதது என்பதைப் பல்லவர் மற்றும் முற்சோழர் மரபுகளைப் பழுவேட்டரையர்கள் பெருமளவு பின்பற்றியிருப்பதிலிருந்து அறியமுடிகிறது. பின்பற்றல் என்பது முந்தையதைப் போலச் செய்வதாக அமைந்துவிடக் கூடாது என்பதிலும் பழுவேட்டரையர்கள் கவனமாக இருந்துள்ளமை, மரபு மீறாத கட்டட அமைப்புகளுக்குள்ளும், சிங்க மண்டபம் போன்ற சில புதுமைகளை அவர்கள் கையாண்டிருப்பது கொண்டு தெளியலாம்.

இறைத்தோற்றச் சிற்பங்களை அமைப்பதில் பழுவேட்டரையர்கள் புதிய எல்லைகளைத் தொட்டுள்ளமை உள்ளங்கைக் கனியாகும். மரபு சார்ந்த வடிவங்களை உருவாக்கியிருப்பதுடன், ஆகம வரையறைகளுக்குள் வராத ஆனால் கலைநுட்பம் செறிந்த சிற்பங்களையும் தோற்றுவித்துப் பின்பற்றல்களுக்கிடையே சில உருவாக்கங்களையும் பழுவேட்டரையர்கள் செய்து காட்டியுள்ளனர்.

கோட்டங்களில் சிற்பங்களை இருத்துவதில் இவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள மரபு மாற்றங்கள் இவர்தம் புதுமை அவாவும் பண்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றன. தென்வாயில் ஸ்ரீகோயில் விமானத்தின் தெற்குக் கோட்ட சிவபெருமான், தெற்கு மற்றும் வடக்குச் சாலைக் கோட்டங்களில் உள்ள சிவ வடிவங்கள், வடக்குச் சாலை கிரீவத்திலுள்ள யோக தட்சிணாமூர்த்தி, வடக்கு மகாநாசிகை பிட்சாடனர், மேற்கு மகாநாசிகை

வீணாதரர் ஆகிய சிற்பங்களும், ஆலந்துறையார் கோயிலின் மகாமண்டபத்துக் கிழக்குக் கோட்ட கல்யாணசுந்தரேசுவரர், கங்காளர் சிற்பங்களும் இத்தகு மரபு மாற்றங்களை உணர்த்தி நிற்கின்றன.

பழுவூர்க் கோயில்களிலிருந்து கிடைத்துள்ள கல்வெட்டுகள் பழுவேட்டரையர்கள் காலத்தில் இக்கோயில்கள் மக்களால் சிறக்கப் புரக்கப்பட்டதையும் பழுவேட்டரையர்களுக்குப் பிறகு அந்த ஆதரவு ஓரளவு குறைந்துபோனதையும் சோழர் காலத்திற்குப் பிறகு இக்கோயில்கள் செல்வாக்கிழந்ததையும் சுட்டுகின்றன. உத்தம சோழர் ஆட்சிக்காலத்தே கண்டன் மறவனால் எழுப்பப்பட்ட திருத்தோற்றமுடையார் கோயில், முதலாம் குலோத்துங்கர் ஆட்சிக்காலத்தில் வழிபாடற்றுச் சிதைவுற்றுப் போனமைக்குப் பழுவூர் மரபின் ஆட்சியிழப்பே காரணமெனலாம். திருத்தோற்றமுடையார் கோயிலைக் குலோத்துங்க சோழ ஈசுவரம் என்னும் பெயரில் கற்றளியாக்கிய முதலாம் குலோத்துங்கரின் படைத்தலைவர் வாணகோவரையர், அக்கோயிலின் வளர்ச்சிக்காகப் பல நிதி ஆதாரங்களை உருவாக்கியிருந்தபோதும் மூன்றாம் இராசராசருக்குப் பிறகு குலோத்துங்க சோழ ஈசுவரம் செல்வாக்கிழந்தது.

இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலக் கல்வெட்டுகள் ஒன்றுகூட பழுவூர்க் கோயில்களில் இடம் பெறாமையை நோக்கும்போது, அந்தக் காலகட்டத்தில் பழுவூர்க் கோயில்கள் அனைத்துமே பெருஞ்சோதனைக்கு ஆளாகியிருக்கவேண்டுமெனக் கருதலாம். ஆலந்துறையார் கோயிலில் காணப்படும் விஜயநகர மற்றும் நாயக்கர் காலக் கல்வெட்டுகள், பாண்டியருக்குப் பின்னால் இக்கோயில்கள், ஓரளவு மக்கள் ஆதரவையும் ஆள்வோர் அரவணைப்பையும் பெற்றமைக்குச் சான்றுகளாகின்றன. இந்தக் காலகட்டத்தில் தான் இக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவேண்டும்.

உடையார்பாளையத்தையாண்ட பாளையக்காரர்

களான மழவரையர்கள் காலத்தில் இக்கோயில்களில் மற்றுமொரு திருப்பணி நடந்தமைக்குச் சான்றாய்க் கல்வெட்டொன்று பகைவிடை ஈசுவரத்தில் காணப்படுகிறது. இது மராத்தியர் ஆட்சிக்காலமாகும்.

பழுவூர்க் கல்வெட்டுகளால் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள் கிடைத்துள்ளன. முதலாம் ஆதித்தர் காலத்திலிருந்து முதலாம் இராசராசர் காலம்வரை தழைத்தோங்கிய சோழர், கேரளர் நட்புறவை விளக்கும் கல்வெட்டுகள் பழுவூர்க் கோயில்களிலேயே மிகுதியான அளவில் கிடைத்துள்ளன. சோழர்களின் தலைமையை ஏற்று, அவர்களுடன் மண உறவும் கொண்டிருந்த கேரளத்துப் பழுவேட்டரையர்களுடன், சேரர்கள் நட்புப் பாராட்டி மண உறவு கொண்டமைக்கும் பழுவூர்க் கல்வெட்டுகள் சான்றாகின்றன. பழுவேட்டரையர் மகளான அக்காரநங் கையைச் சேரமான் மணந்து கொண்டதும், பழுவேட்டரையர் மறவன் கண்டன் எடுப்பித்த கற்றளியில் சேரமானின் கைக்கோமாணி, கொல்லிப் பெரியான் என்ற பெயரில் திருச்சுற்றாலை எடுப்பித்துப் பூப்பலகை வழங்கியதும் பழுவூர்க் கல்வெட்டுகளால் தெரியவரும் செய்திகளாகும்.

மதுரை கொண்ட பரகேசரியான முதலாம் பராந்தகருக்கும் பாண்டிய மன்னர் இராசசிம்மருக்கும் இடையில் நிகழ்ந்த போரைப்பற்றி இரண்டு கல்வெட்டுகளே செய்தி தருகின்றன. அவற்றுள் ஒன்று சிறுபழுவூர் ஆலந்துறையார் கோயிலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பாண்டியரும் ஈழத்தவரும் இணைந்து சோழரை எதிர்த்த இப்போரில் பழுவேட்டரையர் கண்டன் அமுதன் பங்கேற்றுக்கொண்ட செய்தியும் இக்கல் வெட்டினால் தெரியவந்துள்ளது. இதனால் பழுவேட்ட ரையர்கள் சோழர்களுடைய போரில் பங்கேற்று அவர்தம் வெற்றிக்காகப் பேருழைப்பை நல்கியதை அறியமுடிவதுடன்,

பழுவேட்டரையர்களின் வீரத்தையும், அவர்தம் படை நடத்தும் திறத்தையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

பழுவூர்க் கல்வெட்டுகளால் இப்பகுதிகளிலிருந்து சுவடழிந்து போன பல கோயில்களை அடையாளம் காணமுடிவது குறிப்பிடத்தக்கதாகும். பழுவூர் அரசர்களுள் கண்டன் எனும் இயற்பெயர் கொண்ட மன்னர் ஒருவர் பெயரால் பள்ளிப்படைக் கோயிலொன்று ஸ்ரீகண்ட ஈசுவரமாய் எடுப்பிக்கப்பட்டதை ஆலந்துறையார் கோயில் வளாகத்துத் துண்டுக் கல்வெட்டுகளும் பகைவிடை ஈசுவரத்துச் சண்டேசுவரர் திருமுன் பட்டிகைப்பகுதியில் காணப்படும் துண்டுக் கல்வெட்டுகளும் எடுத்துரைக்கின்றன. கிடைத்திருக்கும் சான்றுகள் கொண்டு இப்பள்ளிப்படைக் கோயில் மறவன் கண்டனுக்காக எடுப்பிக்கப்பட்டதாகக் கொள்ளலாம்.

பழுவூர்க் கல்வெட்டுகள் இவை போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைத் தருவதுடன், கோயில் நடைமுறைகள், கோயிலாட்சி, அக்கால மக்கள் வாழ்க்கை, அவர்தம் நம்பிக்கைகள், சமுதாய அமைப்பு, வேளாண் முறைகள், வரியமைப்பு முறைகள், நாட்டுப் பிரிவுகள் என இப்பகுதி சார்ந்த பல பயனுள்ள அரசியல், சமுதாய மற்றும் பண்பாட்டுச் செய்திகளையும் வழங்குகின்றன. சரியான கவனிப்பின்மையால், இக்கல்வெட்டுகளுள் பல சிதையத் தொடங்கியுள்ளமை கவலை தரும் நிலையாகும். பொதுவாகப் பழுவூர்க் கோயில்கள் அனைத்துமே மிகவும் புறக்கணிப்பட்ட நிலையில் உள்ளன.

இப்பழுவூர்க் கோயில்களுள் சிறுபழுவூர் ஆலந்துறையார் கோயில், இந்து சமய அறநிலையத்துறை ஆட்சியின் கீழ் இருந்தபோதும் முறையான பராமரிப் பின்மையால் நலிந்த நிலையில் உள்ளது. அவனிகந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகம் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ்ப் பாதுகாக்கப்பட்ட நினைவுச்

சின்னமாகக் கொள்ளப்பட்டிருந்தும் போதிய நிதி ஆதாரங்கள் இன்மையால் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. ஊருக்கு நடுவில் இருந்தும் பகைவிடை ஈசுவரம் எப்போதும் பூட்டப்பட்ட நிலையிலேயே இருப்பதால் இங்குப் பாம்புகள் பெருகியுள்ளன. இக்கோயிலும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் உள்ளது என்பது துன்பம் தரும் உண்மையாகும். சிதைந்து சீர்குலைந்து நிலையிலுள்ள மறவனீசுவரம் தன் இறுதி நாட்களை எண்ணிக் கொண்டுள்ளது.

போதிய கவனிப்பின்மையால் மெல்ல அழிந்துகொண்டிருக்கும் பழுவேட்டரைய மரபின் கலைக்கொடைகளான இக்கோயில்களை முறையான பராமரிப்பின் கீழ்க் காப்பாற்றிப் போற்ற வேண்டியது சமூகப் பொறுப்புள்ள அனைவர்க்கும் கடமையாகும்.


Siva